விலை: 40 பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 266 ஆவணி 03ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 19 ஓகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

மகாராஜா பொதிகள் சேவை
வெளிநாட்டு பொதிகள் சேவை
லண்டன் 450/-
கனடா 550/-
சுவிஸ் 450/-
GTV Express இல. 325 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
021 4925024
021 2224338

## வெடுக்குநாறி மலையை காக்க 21இல் திரள்வோம்

வவுனியா, ஓக. 19
வவுனியா, ஒலுமடுவில் உள்ள வெடுக்குநாறி மலையைத் தொல்லியல் திணைக்களம் உரிமை >> 06

## முட்டாள்

### பிரத்தியேகச் செயலரை திட்டிய மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஓக. 19
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தனது பிரத்தியேகச் செயலர் உதித் லொக்குபண்டாரவை 'முட்டாள்' >> 53

## காங்கேசன்துறை கடலில் மிதந்த 83 கிலோ கஞ்சா

### கடற்படையினர் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், ஓக. 19
காங்கேசன்துறை கடற்பரப்பில் 83.5 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். >> 53



## கோபி அன்னான் மறைவு



கொழும்பு, ஓக. 19
ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலரும், நோபல் பரிசு பெற்றவருமான கோபி அன் >> 53

வடக்கில்

## காணிகளை விடுவிக்கும் முடிவு முட்டாள்தனமானது

### இராணுவத் தளபதியைச் சாடுகிறார் பீல்ட் மார்சல் பொன்சேகா

கொழும்பு, ஓக. 19
வடக்கில் பொதுமக்களின் காணிகளைமீள ஒப்படைப்பதற்காக இராணுவ முகாம்களை மூடி, முகாம்களின் அளவைச் சுருக் >> 52

### கடலட்டை பிடித்தோர் கைதாகி விடுவிக்கப்பட்ட விவகாரம்

# மைத்திரி வருகையின் போது போராட்டம் நடத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19
வடமராட்சி கடற்பரப்பில் கடலட்டை பிடித்த 81பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சில மணிநேரங்களிலேயே விடுவிக்கப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன >> 53


கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த படகுகள்.

## கடற்படை முகாம் முன்பாக கொந்தளித்த மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 19
இரவுவேளை கடலட்டை பிடித்த மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை விடுவிப்பதற்கு >> 52

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் இடைக்கால அறிக்கை வெளியீடு

ஓ.எம்.பி. அறிவிப்பு >> 06

## குற்றச் செயல்களை கட்டுப்படுத்திவிட்டோம்

### வடக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்ப்பாணத்தில் அதிகரித்த குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த சிறப்புப் பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டன. சுற் >> 52

## வாக்குறுதியை மீறியது கொழும்பு அரசு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19
வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கி நின்று கடலட்டை பிடிப்பதற்கு எதிராக உள்ளூர் >> 53

## வயோதிபத் தம்பதியை தாக்கி நகை கொள்ளை

### ஊரெழுவில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்ப்பாணம் ஊரெழுவில் வயோதிபத் தம்பதிகளை வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களால் தாக்கி நகை மற்றும் பெறுமதி >> 50

திருட்டு முயற்சி முறியடிப்பு

## பல லட்சம் ரூபா பெறுமதியான உந்துருளியைக் கைவிட்டு ஓட்டம்

### மந்திகையில் சம்பவம்

வடமராட்சி, ஓக. 19
மந்திகையில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள அலைபேசி விற்பனை நிலையத்தில் ஓடு பிரித்து திருட >> 06

## வடக்கு நிர்வாகத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்பத் தகுதியானவர்கள் இங்கு இல்லை

இப்படிச் சொல்கிறார் வடக்கு முதல்வர் விக்கி >> 53

## ஆவாக் குழுவிலுள்ள மகனை மீட்டு தாருங்கள்

தாயார் ஒருவர் கோரிக்கை விடுத்தாராம் >> 06




SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு,
13 மாதங்களுக்கு
13.00%
வ.தே.வ. 12.93%
05வருடங்கள்
14.00%
வ.தே.வ. 11.20%
06 மாதங்கள்
11.00%
வ.தே.வ. 11.30%
அழையுங்கள்: 0115 411 411
கவர்ச்சிகரமான வட்டி
SDB வங்கி

வானூர்தியில்

# மக்கள் பிரதிநிதிகள் மதுபோதையில் குழப்பம்

## கருணாநிதியின் இறுதி ஊர்வலத்துக்கு சென்று நாடு திரும்பியபோது சம்பவம்

கொழும்பு, ஓக. 19
முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் இறுதி ஊர்வலத்துக்குச் சென்றநாடாளுமன்றஉறுப்பினர்கள் குழு மதுபோதையில்வானூர்தியில்தகராறு செய்ததாகக்கூறப்படுகிறது. மலையகத்தைப்பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்கள்.நாடாளுமன்றஉறுப்பினர்கள் அடங்கியகுழு.நாடு திரும்பும் போது வானூர்தியில் கடும் போதையில் அட்டகாசம்செய்ததாகக்கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தி விட்டு கொழும்புக்கு வருவதற்காக வானூர்தி நிலையத்துக்குச் சென்றுள்ளனர். இந்த குழுவில் இருவர், மதுபானம் அருந்தியிருந்தனர்.வானூர்தி கொழும்பு வரத் தயாராக இருந்த போது மது அருந்த ஆரம்பித்துள்ளனர். மது போதை தலைக்கு ஏறியதும் இருவரும் வானூர்தியில் கத்தி கூச்சலிட்டுள்ளனர். அவர்கள் வாயில் இருந்து வரும் வார்த்தைகள்என்னாஎன்பதுகூட.அருகில் இருந்தவர்களுக்குப் புரியவில்லை.

கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தித் தளத்தில், வானூர்தியிலிருந்து இறங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு மது போதையில் மயங்கியிருந்துள்ளனர். இருவரில் ஒருவர் கொழும்பைச் சேர்ந்தவர் எனவும் மற்றைய நபர் மலையகத்தைச் சேர்ந்தவர் எனவும்கூறப்படுகின்றது. (5)



# வரி செலுத்துவதை இலகுவாக்கியுள்ளோம்

## இறைவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 19
உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரிசெலுத்துபவர்களின்நன்மைகருதிஇணையம் ஊடாககோவையிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளதாக உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ்ப்பாண ஆணையாளர் பந்துலகப்புதந்திரிக்கே தெரிவித்தார்.

உள்நாட்டுஇறைவரித்திணைக்களத்தின் புரவுபெருமக்கள் விருது விழா கொக்குவிலில் உள்ள செல்வா பலஸ் மண்டபத்தில்நேற்றுமாலைஇடம்பெற்றது. இந்தநிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது..

வரி செலுத்துபவர்கள் நன்மை கருதி இணையம் ஊடாக கோவையிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். வரி செலுத்துபவர்கள் திணைக்களத்துக்கு நேரடியாக வந்துதான்பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்என்றில்லை. தொழில்துறையில்உள்ளவர்கள் அநேகமாகநேரப்பிரச்சினையை எதிர்கொள்வார்கள். அவர்களின் நன்மை கருதி நாம் இணைய வழி கோவையிடல் வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். அதில் கோவைகளைப் பேணி உங்கள் வரிகளை வங்கிகளில் செலுத்த முடியும். நேரம் சேமிக்கப்படும் - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் இவன் டிஸாநாயக்க தெரிவித்ததாவது.

2015-2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துக்கு வரிசெலுத்தியவர்கள் [illegible] சதவீதமாக இருந்தது. 2016-2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அது99.8சதவீதமாகஅதிகரித்துள்ளது. இதுபெருமைப்படக்கூடிய விடயம். உங்களின் பங்களிப்புத்தான் இதற்குக் காரணம் - என்றார். (5.8)

துப்பாக்கிச்சூட்டில்

# சாவடைந்தோர்நினைவாக கைதடியில் தூபி திறப்பு





தென்மராட்சி, ஓக. 19
1984ஆம்ஆண்டுஒகஸ்ட்மாதம்13ஆம்திகதி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக அமைக்கப்பட்ட தூபி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், பணியாளர்களான வே. சிவசுப்பிரமணியம், க. சிதம்பரப்பிள்ளை, சி. சூரியகுமார் ஆகியோரும் அங்கு பொருள்கள் கொள்வனவுசெய்யவந்திருந்தசி. சிவபாலன், மா. கந்தசாமி, க. குகேந்திரன், ஆ. செல்வரத்தினராஜா, அ. நடனசபேசன் ஆகிய பொதுமக்களும் சாவடைந்திருந்தனர். இவர்களின்நினைவாகசங்கமுன்றலில்நினைவுத் தூபி அமைக்கப்பட்டது.

சங்கத்துக்கு முன்பாக உள்ள கடைத்தொகுதிகள் விரிவாக்கும்போது நினைவுக் கல் இடமாற்றம் செய்யப்பட்டது. பின்னர் புதிய தூபி அமைக்கப்பட்டது.

நினைவுத் தூபியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசோ. சேனாதிராசாதிரைநீக்கம்செய்து வைத்தார். வடக்குமாகாணசபைஉறுப்பினர் கேசவன் சயந்தனுடன் இணைந்து நினைவுத்தூபிக்குப்பின்னர்மலர்மாலைஅணிவித்தார். சங்கப்பணியாளர்கள் மற்றும் பிரதேசத்தில் போர்க் காலத்தில் சாவடைந்தவர்களின் நினைவாக ஈகைச்சுடரினை மாவை. சோ. சேனாதிராசா ஏற்றிவைக்க சாவடைந்தவர்களின் நினைவு ஈகச்சுடரினை சாவடைந்தவர்களின் உறவினர்களும் சங்கப்பணியாளர்களும் ஏற்றி வைத்தனர்.

சங்கத் தலைவர் இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றநிகழ்வில்நாடாளுமன்றஉறுப்பினர்களானமாவை. சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான கேவசன்சயந்தன், பா. கஜதீபன் மற்றும்சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், நாடாளுமன்ற உறுப்பினர்ஈ. சரவணபவனின் இணைப்பாளர்செ. பிரதாப்ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில்மதிப்புறுவிருந்தினர்களாகக்கலந்து கொண்ட கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் ப. செல்லத்துரை, சங்கப் பொது முகாமையாளர் ப. பாலச்சந்திரன், சாவகச்சேரிபிரதேசசபைஉறுப்பினர்களான இ. ஜானகி, செ. ஜெயபாலன், தி. தங்கவேலு, சு. கேதீஸ்வரன், வை. விக்கினேஸ் வரன், கைதடி கைத்தொழில் வணிகர் மன்றப் பிரதிநிதி க. பிரபாகரன், கைதடி முன்பள்ளி களின் இணைப்பளர்த. சுபத்திராதேவி, மாதர்கிராம அபிவிருத்திச் சங்க ஒன்றியச் செயலர் ம. நிர்மலா உள்ளடபலர் கலந்து கொண்டனர். (5.9.159)

# யாக்கரு பகுதியிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 19
யாக்கரு வெட்டைப் பகுதியிலிருந்து, துன்னாலை மத்தியைச்சேர்ந்த 60வயதுமுதியவரின்சடலம்மீட்கப்பட்டுள்ளது. உடலில்அடிகாயங்கள்எதுவும்காணப்படவில்லை என்றும், தவறான முடிவு எடுத்து உயிரிழந்தமைக்கான தடயங்கள் எதுவும் இருக்கவில்லைஎன்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வேலைக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார். மாலை வீடு திரும்பாததையடுத்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாக்கரு வெட்டைப் பகுதியில் குப்பை கொட்டும்இடத்துக்குஅருகில், காணாமற்போனமுதியவர் சடலமாக நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளார். சடலம் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5.26)



சீன - இலங்கை

# 19 இணைகளுக்குத் திருமணம்

கொழும்பு, ஓக. 19
சீனா மற்றும் இலங்கையைச் சேர்ந்த 19 இணைகள் நீர்கொழும்பில் உள்ள ஆடம்பர விடுதியில் கடந்த வியாழக்கிழமை பெரியளவில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிகழ்வில் திருமணம் செய்து கொண்டனர். 12 சீன இணையர்களுக்கும், 7 இலங்கை இணையர்களுக்குமே திருமணம் செய்து வைக்கப்பட்டது. இவர்கள் அனைவரும், இலங்கையில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள சீனாவின் அரச கட்டுமான பொறியியல் நிறுவனத்தின் பணியாளர்களாவர். (5)

# நாயாற்றுக்கு தொடர் பாதுகாப்பு

முல்லைத்தீவு, ஓக. 19
முல்லைத்தீவு நாயாற்றில் தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் தற்போது 400இற்க்கும் அதிகமான தெற்குமீனவர்கள்தொழிலில் ஈடுபடுவதால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றுதெரிவிக்கப்படுகின்றது.

நாயாற்றில் தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமான வாடிகள், படகுகள், வலைகள் எரிக்கப்பட்டதை அடுத்து அங்கு கொந்தளிப்பு நிலமை ஏற்பட்டிருந்தது. அந்தச் சம்பவம் தொடர்பில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 3 பேர் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டனர். அதையடுத்துகடந்த 16ஆம் திகதி அந்தப் பகுதியில் தெற்கைச் சேர்ந்த ஒருவரின் கீழ் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் 30க்கு மேற்பட்ட படகுகளுடன் அங்கிருந்து வெளியேறினர்.

தற்போதும்அங்குதெற்குமீனவர்கள் தொழிலில் ஈடுபடும் நிலையில்முறுகல்நிலைமையைக் கருத்தில் கொண்டு பொலிஸார் இரவு, பகலாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி3)

# முதியவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஓக. 19
புதுக்குடியிருப்பு, 2ஆம் வட்டாரம்கோம்பாவில் தோட்டக் கிணற்றிலிருந்து வயோதிபரின் உடல்நேற்றுமீட்கப்பட்டுள்ளது.

கோம்பாவில், இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சு. கார்திகேசு (வயது-78)என்பவரே சடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

அந்தப்பகுதியில்நேற்று உழவுக்குச் சென்றவர் துர்நாற்றம் வீசியதை அடுத்து கிணற்றைப் பார்த்துள்ளார். கிணற்றுக்குள் உடல் இருப்பதைக் கண்டு புதுக்குடியிருப்புப்பொலிஸாருக்குத்தகவல்கொடுத்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டனர். இறப்பு விசாரணை அதிகாரி முன்னிலையில்உடல் மீட்கப்பட்டு உடற்கூற்றுச் சோதனைக்காக மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டது.

இதுதொடர்பானவிசாரணைகளைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி3)

# சந்நிதியில் வழிபாட்டுக்கு சென்றவர் மயங்கிச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 19
செல்வச்சந்நிதிஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்ற ஒருவர் திடீரென மயக்கமுற்று வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

செல்வச்சந்நிதி முருகன்ஆலயவருடாந்தப் பெருந்திருவிழா நடைபெற்று வருகின்றது. அங்கு தொடர்ச்சியாக வழிபாட்டுக்கு வரும் பக்தர்ஒருவர்நேற்றும் வந்துள்ளார். வழிபாட்டின் பின்னர் அங்கு ஓரிடத்தில்அமர்ந்திருந்தபோது திடீரென மயங்கிவிழுந்துள்ளார். அவர் உடனடியாக ஊறணி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மந்திகை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பரிசோதித்த மருத்துவர்கள் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

உடல் உடற்கூற்றுச் சோதனைக்காக மந்திகைஆதாரமருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. (ற-26.114)

# பெற்றோரும் பிள்ளைகளும் சினேகபூர்வமாக இருக்கவேண்டும்

## மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரம் தெரிவிப்பு

திருகோணமலை, ஓக 19

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சிநேகபூர்வமாக பேசுவது குறையும்போது பிள்ளைகள் தீயவழிகளில்செல்லவும், தவறான சினேகிதர்களுடன்பழகுவதும், இளவயது காதல்வயப் படுவதும் ஏது வாகின்றது. எனவே பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான உறவு நெருக்க மாக வேண்டுமென மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரம் தெரிவித்துள்ளார்.

அதனை தடுக்க பெற்றொர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் எவ்வளவு பணிச்சுமையில் இருந்தாலும் பிள்ளைகளிடம் அன்பாக பேசி சிநேகபூர்வமாக பழக நேரம் ஒதுக்க வேண்டும் என சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரம் தெரிவித்தார். நேற்று முன்தினம் 17 ஆம் திகதி மாலை திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே அதிகரித்து வரும் உடல் பருமன் அதிகரிப்பால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் தொடர்பாக நடைபெற்றகலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எதிர்கால சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டு பட்டணமும்சூழலும் பிரதேசசபைத் தலைவர் மருத்துவ கலாநிதி ஜி. ஞானகுணாளன் தலைமையில் பிரதேசசபை கலந்துரையாடல் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றிய மருத்துவ கலாநிதி முரளி வல்லிபுரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்றைய காலகட்டத்தில் குடியிருப்பு காணியில் அளவு மிகக் குறைவாக உள்ளமையினாலும் தேவையற்ற உணவுப் பழக்கம், நவீன தொழில் நுட்ப யுகம் காரணமாக உடலுக்குத் தேவையான பயிற்சிகள் எம் மத்தியில் மிகவும் குறைவடைந்து செல்கிறது. அதன் காரணமாக உடல் பருமன் ஏற்பட்டு இறுதியாக பெண் பிள்ளைகள் தாய்மையடையாமல் போகும் சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் சனத்தொகை குறைவடைகிறது. அந்தநிலையில் நாம் விழிப்படைந்து எமது ஆரோக்கியத்தை பாதுகாப்பதுடன் எதிர்கால இருப்பு தொடர்பாகவும் சிந்திக்கவேண்டும் எனதெரிவித்தார். மற்றும் பிள்ளைகளை பொது விளையாட்டு மைதானங்களுக்கு விளையாட விடுவதன் மூலம் அவர்கள் தவறான நண்பர்களுடன் சேர்ந்து தீய பழக்கங்களில் ஈடுபடுவார்கள் என்று எண்ணினால் அது தவறு வீட்டுக்குள் பாதுகாப்பாக வைத்து வளர்க்கும் பிள்ளைகளே இலகுவில் இவ்வாறான தீய போதைப்பொருள் பாவனைகளுக்கு அடிமையாகின்றனர். எனவே பொது இடங்களில் பிள்ளைகளை விளையாட விட்டு அதனை பெற்றோர்கள் சரியான கண்காணிப்பு செய்தால் அவ்வாறான பிரச்சினைகளை தவிர்க்க முடியும் எனவும் சமுதாய மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி முரளி வல்லிபுரம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் ஊடகவியலாளர் போன்றோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (40)

# கிளிநொச்சியில் 7 ஆயிரத்து 147 அபாயகரமான வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, ஓக 19

கிளிநொச்சிமாவட்டத்தில்பளைப் பகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் இயங்கி வரும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரசசார்பற்றநிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 147 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் . கிளிநொச்சிமாவட்டத்தில் பச்சிலைப் பள்ளிபிரதேசசெயலகத்தின்கீழ் உள்ள முகமாலையிலும் ஐந்து இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து நூற்றியேழு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து ஏழாயிரத்து நூற்று நாற்பத்து ஏழு அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

மேலும் இந்த நிறுவனம் இரண்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக அரசிடம் கையளித்துள்ளது.

கண்ணிவெடியகற்றுதல்செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசகர் றொலி இவன்ஸ், மற்றும் தேசிய, கண்ணிவெடி அகற்றுதலுக்கான பொறுப்பதிகாரி மகிந்த விக்ரமசிங்க அடங்கிய குழுவினர் இம்மாதம் 4 ஆம் திகதி இந்த நிறுவனத்திற்கு வருகைதந்ததுடன் நிறுவன அலுவலகம் மற்றும் கண்ணிவெடியகற்றும் தளம் என்பவற்றைபார்வையிட்டனர்.

தொடர்ந்து இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (214)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு செயல் திட்டம்

வவுனியா, ஓக 19

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயாளர்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் நேற்றைய தினம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் டெங்கு பரவும் இடங்களை அடையாளங்காணும் செயற்றிட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர், வவுனியா சுகாதார மருத்துவ பணிமனையும், ஒமேக்கா லைன் ஊழியர்களும் இணைந்து முன்னெடுக்கப்பட்டிருந்த இந்த விழிப்புணர்வு செயற்றிட்டமானது, வவுனியா நகரை அண்டிய கற்குழி, தோணிக்கல் போன்ற டெங்குத் தாக்கம் அதிகமாக உணரப்பட்ட பிரதேசங்களிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையை சேர்ந்த 50 பேரும் ஆடைத் தொழிற்சாலையை சேர்ந்த 250 பேருமாக டெங்கு தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டத்திலும், டெங்கு பரவும் இடங்களை அடையாளங்காணும் செயற்றிட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். (110)

SPOKEN ENGLISH
குறுகிய காலத்தில் சரளமாக ஆங்கிலம் பேச விரும்புபவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
100% பேச்சுப் பயிற்சிகள்
ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர் களினால் சிறந்த பயிற்சிகள்
நீங்கள் விரும்பும் நேரத் தெரிவு
5 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கை
பயிற்சி முடிவில் உங்களால் ஆங்கிலம் பேச முடியாதிருந்தால் நீங்கள் செலுத்திய முழு பணமும் மீளளிக்கப்படும்.
WINSTAR CONSULTANTS (Pvt) Ltd
45, Vembadi Street, Jaffna
021 300 4641

Ceylinco General Insurance Ltd
Ceylinco VIP இல் வேலைவாய்ப்பு
பதவி :- Marketing Executive
ஆண்/ பெண்
Basic Salary - 15,000/-
Fuel - 5500/-
Allowance - 10,000/-
30,500/-
நிரந்தர வேலைவாய்ப்பு
Additional Income :- Commision
Company Motor Bike - ஆண்களுக்கு Hero CD Deluxe New Bike
பெண்களுக்கு TVS Scooty pep+ New Bike
தகைமை :- O/L & A/L
பதவி வெற்றிடம் :- Jaffna, Atchuvely, Chavakachcheri, Chunnakam, Nelliyadi.
நேர்முகத் தேர்வு திகதி :- 20th, 21st August 2018 9.00am
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் :-
Jaffna Branch, 173, Stanly Road, Jaffna.
021 222 6257
(IN/7556)(11,17)

நல்லைக்கந்தனுக்கு
இன்று (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை
நான்காம் திருவிழா

எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள் கந்தா, கதிர்வேலவனே, உமையாள் மைந்தா, குமரா, மறை நாயகனே.
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
பரிமளா ஸ்ரோர்ஸ்
V.S.P
Special Gingelly Lunch oil
26 A, Manipay Road, Jaffna.
021 222 4135, 9165

SINGER FINANCE இடமிருந்து
மோட்டார் சைக்கிள் லீசிங் உடன்
பெறுமதிமிக்க சிங்கர் மின்விசிறி ஒன்று
அல்லது தலைக்கவசங்கள் இரண்டு

077 4 357 919
077 7 391 449
077 9 357 124
இல.86, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்



கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு சிறி மகாகணபதி பிள்ளையார் ஆலய கொடியேற்றத் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (159)

## கலை நிகழ்வும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஓக 19

நீர்வேலி புனித பரலோக மாதா சனசமூக நிலையம், முன்பள்ளி மற்றும் கலை அரங்கு திறப்பு விழாவை முன்னிட்டு இடம்பெறும் கலை நிகழ்வும் பரிசளிப்பும் இன்று சுவாமி ஞானப்பிரகாசர் கலை அரங்கில் மாலை 6 மணிக்கு இடம்பெறும்.

நிலையத் தலைவர் செபமாலை பிறின்ஸ் செல்வக்குமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ம.யேசுரட்ணம் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

*சுற்றுலாத்துறையில்*

## தனியார் துறைச் செயலாற்றலை மேம்படுத்தும் 3 செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

சுற்றுலாத் தொழிற்றுறையில் சேவை வழங்கும் தனியார் துறையினரின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. இதே பயிற்சி எதிர்வரும் 22ஆம், 26ஆம் திகதிகளும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பொது நூலக கேட்போர் கூடத்தில் காலை 8.30தொடக்கம் 5 மணிவரையும் இது இடம்பெறவுள்ளது.


சுற்றுலாத் துறையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அந்தத்துறை சார்பாக ஆரம்பப் படிநிலையில் தொழில் புரியும் தனியார் துறையினருக்கு அவர்களது தொழில்களைத் திறம்பட ஆற்றுவதற்கான செயலாற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 நாள்கள் செயலமர்வு இடம்பெறுகிறது.

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சால் இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4.147)



கணிதம் நரம் - ஒட்டிய பாடத்திட்ட நூல் வெளியீடும் அன்பளிப்பும் கரவெட்டி சிறி பரமானந்த சிறுவர் முதியோர் இல்லத்தில் ஓய்வுநிலை யோகதிக மாவட்டச் செயலர் எஸ். ஸ்ரீனிவாசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் கலந்துகொண்டார்

## சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை காரையில் திறப்பு



யாழ்ப்பாணம், ஓக. 19

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் இலங்கை வங்கிக்கு அருகாமையில் உள்ள தனியார் ஒருவரது வீட்டில் தற்காலிகமாக இது திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு என்று இதுவரை உரிய கட்டடம் இல்லாத நிலையில் புதிதாகக் கட்டடம் அமைக்கும்வரை இந்த இடத்தில் பணியகம் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தை காரைநகர் பிரதேசசபை தவிசாளர், பிரதேச செயலர் மற்றும் காரைநகர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பா.நந்தகுமார் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் முருங்கைகன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (4.114)

## உழவியந்திரப் பெட்டி தடம்புரள தப்பிக்க முயன்றவரின் காலைக் குத்திக் கிழித்தது பெட்டி

தென்மராட்சி, ஓக. 19

மணல்ஏற்றிச்சென்றஉழவுஇயந்திரப்பெட்டி குடைசாய்ந்த போது அதனருகே பயணித்த உந்துருளி மீது வீழ்ந்தது. உந்துருளியில் பயணித்தவர் தப்பிப்பதற்காகக் குதித்தபோதும் இயந்திரப் பெட்டியின் கம்பி காலைக் குத்திக் கிழித்தது.

சம்பவம் கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்று இடம்பெற்றது. உழவியந்திரத்தை உந்துருளி முந்திச் செல்லமுற்பட்டபோது உழவியந்திரம் தடம்புரண்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வீதியோரத்தில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாடு வீதிக்குவந்த போது அதனைக் காப்பாற்றும் நோக்கில் வீதியின் நடுவே உழவு இயந்திரத்தைச் செலுத்தியபோது அதனை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளி முற்பட்டதால் உழவியந்திரத்தைச்சடுதியாகத்திருப்பியபோது அதன் பெட்டி குடைசாய்ந்து உந்துருளி மீது வீழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த 24 வயதுடைய இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெல்வயல்களில் விதைப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னரே மாடுகள் வீதியோரங்களில் மேய்ச்சலுக்கு நீளமான கயிற்றில் கட்டுவதால் வீதிவிபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மாடுகளை வளர்ப்போர் பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மேய்ச்சலுக்கு வெற்றுக் காணிகளில் கட்டுமாறும் சாலையோரத்தில் மாடுகள் கட்டுவதைத் தடுக்க உள்ளூராட்சி சபையினர் நடவடிக்கை எடுக்கத் தவறின் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில் வாகன விபத்துக் கள் அதிகம் இடம்பெறலாமெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (4.9)

## நல்லைக்குமரன் மலர் வெளியீடும் வெற்றிபெற்றோருக்கு பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினரின் ஏற்பாட்டில் 26 ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 வலயங்களிலும் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சமய அறிவையும் பேச்சுத்திறனையும் வளர்க்கும் நோக்கில் மூன்று பிரிவுகளாகப் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பதக்கங்களைப் பெற்றுக்கொண்டோர் விபரம் பின்வருமாறு:

கீழ்ப் பிரிவு முதலாம் இடம் யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி மாணவன் ஜீ.ஓம்ஷியாம்சங்கர். இரண்டாமிடம் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவி கோ.தர்சனா. மூன்றாமிடம் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி ஜெ. சுபேதினி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மத்திய பிரிவில் முதலாம் இடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ந.அபிநாத். இரண்டாமிடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி அ. மேனகா, மூன்றாமிடம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் கு.மோகிதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மேல்ப் பிரிவில் முதலாம் இடம் யாழ்ப்பாணம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவி கா. மதுரா. இரண்டாமிடம் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவி ச. ஜானகி. மூன்றாமிடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஜெ.கிசோக் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## ஜேசுராசாவின் 'நிழல்கள்' நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

அ.ஜேசுராசா எழுதிய திரைப்படக் கட்டுரைகள் கொண்ட 'நிழல்கள்' என்ற நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் குருநகர் பாங்ஷால்வீதி - மவுண்ட் கார்மேல் வீதிச் சந்தியில் உள்ள கார்மேல் மண்டபத்தில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இது இடம்பெறும்.

மருத்துவர் எம்.கே.முருகானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரையை ஜோண்சன் ராஜ்குமார் நிகழ்த்துவார். மதிப்பீட்டுரைகளை சி.சித்திராதரன், கலாநிதி சி.ரகுராம் ஆகியோர் நிகழ்த்துவர். (4)

## நல்லூரில் இன்று

நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று குழுஇசை மற்றும் இசைக்கச்சேரி என்பன இடம்பெறும்.

குழுஇசை நெறியாள்கைதிருமதி விக்னேஸ்வரி நரேந்திரா, பாட்டு இ.பிரபு, கு.அனுசன், வை.பிரதீபன், பா.செந்தூரன், செ.பாலமுருகன் வயலின் ஜெயராமன், மிருதங்கம் ம.லோகேந்திரன், கடம் அ.செல்வரட்ணம்

இசைக்கச்சேரி பாட்டுசந்திரிக்கா ரவிக்குமார், வயலின்கே.வேலதீபன், மிருதங்கம் வ.ரமணா, முகர்சிங் சி.செந்துரன் ஆகியோரும் நிகழ்தவுள்ளனர். நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்

★★★★

நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் "தர்மம் தலைகாக்கும்" என்ற தலைப்பில் சொற்பொலிவு இடம்பெறும். பொன்னருவி க.ஜெசிந்தன் சொற்பொழிவாற்றுவார். நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்.

## செல்வச்சந்நிதியில்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில், இன்று மாலை பேச்சு- "விநாயகர்" திஷாழினி திருச்செல்வம் நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை தும்பளை, "நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்" சினோஜா திருச்செல்வம் நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை தும்பளை, இசைக்கச்சேரி- திருமதி கஸ்தூரி பிரபாகரன் பி.எப்.ஏ. நுண்கலைமாணி ஆகியோரின் நிகழ்வுகள் இடம்பெறும். மாலை 4 தொடக்கம் 7 மணிவரை இவை இடம்பெறும்.

## மதிப்பளிப்பு நிகழ்வு

ஆனைக்கோட்டை, ஓக 19

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினால் தில்லையம்பலம் கந்தையா கதிரேசுவின் சமய, சமூக, கலவிப் பணிகளைப் பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று மூத்த நயினார் ஆலய இரட்ணசபாபதி திருமண மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

சங்கத் தலைவர் ஏ.வி.கனேசலிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் ஆசியுரையை மூத்தநயினார் ஆலய முதன்மைக் குரு சிசசிறி க.கிருஸ்ணேஸ் வரக் குருக்கள் வழங்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## அனுபவப் பகிர்வு

யாழ்ப்பாணம், ஓக 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் ஏற்பாட்டில் எவரஸ்ட் மலையில் ஏறிய முதலாவது இலங்கைப் பெண், ஆண் ஆகியோரது அனுபவப் பகிர்வு நாளை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணி வரை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

## முல்லைத்தீவில் பசு மாடுகளை வெட்டி மரை இறைச்சி என்று ஏமாற்றி விற்பனை

முல்லைத்தீவு.ஓக19

முல்லைத்தீவு மாவட்டத்தில் களிக்காடு.கோடாலிக்கல்லு பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களில் 15 வரையான கால்நடைகள் களவாக சுடப்பட்டு மரை இறைச்சிஎனவிற்கப்படுவதாக கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

இந்த விடயம்குறித்துமுல்லைத்தீவு நெடுங்கேணி வீதியில் உள்ள களிக்காடு.கோடாலிகல்லு.காஞ்சுரமோட்டை.நீராவி.குஞ்சுக்கோடாலிக்கல்லு. குளத்துவயல்வெளிகளை நம்பி கால்நடைவளர்த்து வரும்ஐந்துபண்ணையாளர்களின் 15 கால்நடைகள். கடந்தஇரண்டுமாதங்களுக்குள் களவாக சுடப்பட்டு இறைச்சிக்காக விற்பனைசெய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்ரூபா பெறுமதியான 15 பால் மாடுகளே இவ்வாறு இறைச்சிக்காக களவாடப்பட்டுள்ளது.

மாடுகளைக் கொன்று மரைஇறைச்சிஎன்றுநகர் புறங்களுக்குள்விற்பனை செய்யும் ஒரு குழு செயற்பட்டுவருவதாககால்நடை பண்ணையாளர்கள் குற்றம்சாட்டியுள்ளார்கள்.

இவ்வாறு வெடிவைத்து கொல்லப்படும் மாடுகள் காட்டுஓரங்களிலும்வயல் நிலங்களிலும் வைத்து இறைச்சியாக்கப்படுகிறது.

அதன் எச்சங்களையும் தலைகளையும் வைத்தே நாங்கள் எங்கள் மாடுகளை இனம் காண்கின்றோம்எனப்பண்ணையாளர்கள் கூறுகின்றனர்.இவ்விடயம் குறித்து முள்ளியவளை பொலிஸ்நிலையத்தில் முறையிட்டும்வழக்கு பதிவு செய்யாத நிலையில் சரியானசாட்சியங்கள்இல்லாமல் எவரையும் நாம் கைதுசெய்யமுடியாது என்றுபொலிஸார்தெரிவித்துள்ளனர். என்றும் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். (ரி3)

# முள்ளிக்குளம் பகுதி மக்களுக்கு இலவசமான மருத்துவ உதவிகள்

**மன்னார்,ஒக 19**

**மீளக்குடியேறிய முள்ளிக்குளம் கிராம மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் இலவசமருத்துவ முகாம் ஒன்று இடம்பெற்றது.**



முள்ளிக்குளம் கிராம மக்கள் இடம் பெயர்ந்து சென்று மீண்டும். தமது சொந்தக்கிராமத்தில்மீள்குடியேறியுள்ளனர். தற்போதுவரைநூறுகுடும்பங்கள் தற்காலிக கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் வயோதிபர்கள் என நூறு குடும்பங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் தற்காலிகக் கூடாரங்களினுள் வாழ்ந்துவருகின்றனர்.குறித்தமக்கள் மருந்து வசதிகளை பெற்றுக்கொள்ள சிலாவத்துறை வைத்தியசாலைக்கே சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் முள்ளிக்குளம் கிராம மக்கள் மற்றும் முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோறன்ஸ் லியோ ஊடாக தமது கிராமத்தில் மருந்துவ சிகிச்சைகளை மேற்கொள்ள வடமாகாண சுகாதார அமைச்சரிடம்வேண்டுகோள்விடுத்தனர். இந்த நிலையில் வடக்கு சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளரிடம்குறித்தகிராமத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை மேற்கொள்ள ஆலோசனைகளை வழங்கினார்.

குறித்த ஆலோசனைகளுக்கு அமைவாக மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பணியாளர்கள்.மற்றும்மருத்துவவசதிகளுடன் நேற்று சனிக்கிழமை காலை முள்ளிக்குளம் கிராமத்துக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள பாடசாலை ஒன்றில் இலவச மருத்துவ முகாமை மேற்கொண்டனர்.

வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனுடன் இணைந்து மடு சுகாதாரமருத்துவஅதிகாரிமருத்துவர் ராஜன் லெம்பேட் மருத்துவ பரிசோதனைகளைமேற்கொண்டதோடு.மருந்துப் பொருள்களையும் வழங்கி வைத்தனர். குறித்த மருத்துவ முகாமின் போது கிராமத்தில்மீள்குடியேறியுள்ள அதிகளவான மக்கள் பயனடைந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (56)

## ரூ.7 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் இலவச கணினிப்பயிற்சி நிலையம்

கிளிநொச்சி.ஓக19

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் கிளிநொச்சிவன்னேரிக்குளம்கிராமத்தில்சுமார்ஏழுஇலட்சத்து ஐம்பதுஆயிரம்ரூபாசெலவில்இலவசகணனிவகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளது.

நியூசிலாந்தில்இயங்கிவரும்'வன்னிநேயம்' அமைப்பின் நிதிப்பங்களிப்பில் இளவாலை வருத்தப்படாத வாலிபர்சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கணனி வகுப்புகள். போரில் பாதிக்கப்பட்டு நலிவடைந்த குடும்ப பொருளாதாரசூழலில்வாழும்மாணவர்கள்பயனடைய இலவசமாக கற்பிக்கப்படவுள்ளது.



## உதைபந்தாட்டத்துக்கான சப்பாத்துகள் வழங்கி வைப்பு

மன்னார்,ஓக..19

மன்னார்மாவட்டச்செயலர்கிண்ணம்.உதைபந்தாட்டத்தில் கலந்துகொள்ளும்நானாட்டான்பிரதேசசெயலகஉதைபந்தாட்ட அணிக்குத் தேவையான சப்பாத்துக்களை. மாந்தை உப்பு கூட்டுத்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஜன் மார்க் . டில்சான்கூசை மற்றும் நானாட்டான் பிரதே சபை உறுப்பினர் ரஞ்சன் குருஸ் போன்றோரது நிதிப்பங்களிப்பினால் கடந்த 16 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டது. (213)

மாந்தை கிழக்கில்

## ஆசிரியர்கள் பற்றாக்குறையுடனும் மாணவர்கள் சித்தி வீதம் அதிகரிப்பு

மன்னார்.ஓக19

மாந்தைகிழக்குபிரதேசத்தில்சில பாடசாலைகளில் ஆசியர் வெற்றிடங்கள் காணப்பட்டாலும். கல்விப்பொதுத்தரா தரம் மற்றும்உயர்தரப்பரீட்சையில்மாணவர்கள் சித்தியடையும் வீதம் அதிகரித்து காணப்படுவதாக துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்தி ரன் தெரிவித்துள்ளார்.

13.ஆம்திகதிஇடம்பெற்றமாந்தை கிழக்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கல்வி தொடர்பிலான கருத்துக்களை தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 2015ஆம்ஆண்டுசாதாரணதரத்தில் 496 மாணவர்கள் பரீட்சை எழுதி 244 பேர் உயர்தரம் படிக்க சித்தியடைந் துள்ளார்கள். இது மாவட்டத்தில் 49.19 வீதமாக காணப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு 462 மாணவர்கள் சாதாரணதரப்பரீட்சைஎழுதி239பேர் உயர்தரம் படிக்க சித்தியடைந்துள்ளார்கள். இது 51.73 வீதமாக சித்தியடைந்துள்ளார்கள்.

2017ஆம்ஆண்டு606மாணவர்கள் சாதாரண தரப்பரீட்சை எழுதி 339 பேர் உயர்தரம் படிக்க சித்தியடைந்துள்ளார்கள் 55.94 வீதமாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு உயர்தரத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு 202 பேர் உயர்தரபரீட்சையில்தோற்றி126 பேர்பல்கலைக்கழகத்துக்குதகுதி பெற்றுள்ளார்கள் இது 62.37 வீதமாககாணப்படுகின்றது.

2016ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில்158பரீட்சையில்தோற்றி 82 பேர் பல்கலைக்கழகத்துக்கு தகுதிபெற்றுள்ளார்கள் இது 51.89 வீதமாக சித்திய டைந்துள்ளார்கள்.2017 ஆம் ஆண்டு 151பேர் பரீட்சையில் தோற்றி 96 பேர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளார்கள்63.57வீதமாகசித்தியடைந்துள்ளார்கள்.

மாந்தைகிழக்கில்கல்விப்பொதுத்தராதர சாதாரண தரத்திலும் மற்றும் உயர்தரத்திலும் சித்தியடைவோரின் வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மாந்தைகிழக்கில்உள்ளசிலபாடசாலைகளுக்கு ஆசிரியர்களுக்கானவெற்றிடங்கள்காணப்பட்டாலும் அதற்காக ஆசிரியர்களை நியமித்துள்ளார்கள். அவர்கள் கடமையினை ஏற்கவில்லை மீண்டும் அதற்கானகோரிக்கையினை முன்வைக்கவேண்டும் என்று துணுக்காய் வலயக் கல்விப்பணிமனைஅதிகாரி தெரிவித்துள்ளார். (ரி3)



## தகரங்கள் கழன்ற நிலையில் முல்லைத்தீவுச் சந்தை

முல்லைத்தீவு.ஓக19

முல்லைத்தீவு நகர்பகுதியில் அமைந்துள்ள சந்தைக்கட்டடத்தைப் பிரதேசசபைசரியாகப் பராமரிப்பதில்லை என வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

முல்லைத்தீவு நகர் சந்தை கட்டடத்தொகுதியில் மேற்கூரைக்கு கீழ் அடிக்கப்பட்டுள்ள தகரங்கள்அண்மையில்வீசியகடும்காற்றினால் கழற்றப்பட்டநிலையில்.எப்போதுகீழேவிழும் என்ற நிலையில் காணப்படுவதாக வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாகக் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளரிடம் உதயன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இரண்டொரு தகரங்கள்கழன்றுஇருக்கின்றன. அவைவிரைவில் சீராக்கப்பட உள்ளதாகவும். அங்கேஇருக்கும் மின்பிறப்பாக்கி,நீண்டநேர மின்தடங்கலுக்கு மாத்திரம் பாவிப்பதற்க்கே அனுமதி உள்ளதாகவும். குறுகிய நேர மின் தடங்கலுக்கு பாவிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் .மலசல கூட பேணுகைக்கு 80 ஆயிரம்ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் செயலர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார் .

மாதாந்தம்ஐம்பதுஇலட்சத்திற்கும்அதிகமான வருமானத்தை பெற்றுக்கொள்ளும் கரைதுறைப்பற்றுபிரதேசசபையினர்.முல்லைத்தீவு சந்தையினை சரியாகச் சீர்பார்த்துதரவேண்டும் என்று, கோரிக்கைவிடுத்த சந்தை வியாபாரிகள்.

முல்லைத்தீவுசந்தையில்பாரியளவிலானநிதி செலவளிக்கப்பட்டுள்ளபோது . அதன் பராமரிப்பு சரியாக செய்யப்படுவதில்லை . சந்தைக்குள் உள்ள மலசல கூடங்கள் துப்பரவு செய்வதில் அக்கறையின்மை. மற்றும் மின்சாரம் நிற்கும்நேரங்களில் இயங்குவதற்காக பாரிய மின்பிறப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது அதுஇயங்காதநிலையில்காணப்படுகின்றது. என சந்தை வர்த்தகர்கள் கவலை தெரிவித்திருந்தனர். (ரி3)



## கிளிநொச்சி நகரின் உள்ளக வீதிகள் சீரமைப்பு

கிளிநொச்சி.ஓக 19

கிளிநொச்சி நகரில் மிக மோசமான உள்ளக வீதிகள் பல சீரமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகர், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் காணப்பட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான பல உள்ளக வீதிகள் முதற்தடவையாக சீரமைக்கப்பட்டுள்ளன .சபையின் ஆளணி மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி இந்தச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன . (214)

# எங்களைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை

## சிவசக்தி ஆனந்தனைப் போட்டுத் தாக்கிய முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மயூரன்

வவுனியா. ஓக. 19

தமிழ்த் தேசியத்துக்காக வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் ஒற்றுமையாகப் பயணிக்கின்றார்கள். இடையிலே குழப்பி விட்டு வெளியில் சென்றவர்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு எந்தத் தகுதியும் இல்லாதவர்கள். தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தைப் பார்த்து நீங்கள் (நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன்) நடந்து கொள்ளுங்கள். நீங்களும் மீண்டும் எங்களோடு இணைந்து தேசியத்தைக் காக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் மயூரன் தெரிவித்தார்.

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 20ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இந்தச் சங்கம் வெளிப்படைத் தன்மை, சரியான நிதி அறிக்கை மற்றும் பல்வேறுபட்ட கட்டுப்பாடுகளுடன், சமூகவேலைகளை செய்து வருவதையிட்டு நாம் பெருமிதமும், மகிழ்சியும் அடைகின்றோம். உங்களைப் பார்த்து நாம் பொறாமைப்படுவர்களாக இருக்கிறோம்.

நாமும் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இனத்தின் விடுதலைக்காக கூட்டமைப்பாக இருந்தோம். ஆனால் 15 ஆண்டுகளில் இதுபோல ஒரு கணக்கு அறிக்கையைக்கூட எம்மால் பார்க்க முடியவில்லை. இந்தச் சங்கத்துக்கு ஒரு யாப்பு, வங்கிக் கணக்கு இருக்கின்றது. அதனைவிட ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்படுகின்ற நிர்வாகம் இருக்கின்றது. ஒரு போக்குவரத்துச் சங்கத்துக்கு இருக்கக் கூடிய இந்த விடயங்கள் இனத்தின் விடுதலைக்கு தலைமைதாங்குகின்ற தலைமைகளிடம் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை. ஒரு சர்வாதிகாரப் போக்கான நிலமையே அங்கு இருக்கின்றது. தமிழ்த் தலைமைகளுக்கு உங்களுடைய சங்கம் முன்மாதிரியாக இயங்குவதையிட்டு மகிழ்சியடைகின்றோம் - என்றார்.

**மயூரன்**

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மயூரன். உங்களுடைய சங்கத்தைப் பார்த்து வியப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தன் கூறினார். அதனை நாம் வரவேற்கின்றோம். 20ஆண்டுகளாக இந்த தனியார் பேருந்துச் சங்கம் உடையாமல் தனித்துவமான முறையிலே பயணிக்கின்றது. நீங்கள் உடைத்துவிட்டுச் சென்றுவிட்டீர்கள். அவர்கள் உடைத்துவிடவில்லை.

**விக்கியின் பலவீனம்**

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தற்துணிவோடு செய்த ஒரேவிடயம் வவுனியாவில் பேருந்து நிலையத்தை இடமாற்றியது மட்டுமே. போக்குவரத்து அமைச்சு டெனீஸ்வரனிடம் இருந்து முதலமைச்சரிடம் செல்கின்றது. இனி உங்களினுடைய பாடு அதோகதிதான் என்று கடந்த பொதுக் கூட்டத்தில் நான் உங்களுக்குக் கூறியிருந்தேன். டெனீஸ்வரன் தனது நிர்வாகத்தில் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார். முதலமைச்சர் தனது ஆட்சிக் காலத்தில் பேச்சோடு மாத்திரம் நில்லாமல், செயலாற்றிய விடயமாக இந்தப் பேருந்து நிலையத்தை மாற்றியதை மாத்திரமே குறிப்பிட முடியும். அவர் நன்மைகளைச் செய்திருந்தாலும் பல இடங்களிலே தவறுகளைச் செய்திருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் அவருக்கு எவ்வளவு தூரம் செல்வாக்கு இருக்கிறதோ அதே அளவு வீழ்ச்சி வவுனியா மாவட்டத்தில் இருக்கிறது - என்றார்.

(5.110)

# சமய நல்லிணக்கக் குழு தொடக்க நிகழ்வு

மன்னார் ,ஓக 19

சமயங்களினூடாக நல்லிணக்கம் காணுதலும் , உளவள பயிற்சி கருத்தரங்கமும் முசலி பிரதேச சமய நல்லிணக்க குழு அமைக்கும் நிகழ்வும் முசலி பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடை பெற்றது

முசலி சிலாவத்துறை சந்தியில்அமைக்கப்பட்டிருந்த அந்தோனியார் சிலை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

இதனால் அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் முரண்பாடுகள் தோன்றி தொடர்ச்சியாக அது நீடித்தபடி இருந்தது .

எனவே இந்த முரண்பாடானது நீடிக்கப்படாமல் நடுநிலைப் படுத்தும் நோக்கில் ஒற்றுமை விட்டுக்கொடுப்புகளுடனும் புரிந்துணர்வுகளுடனும் வாழ்வதற்கு மன ரீதியாக பொது மக்கள் எவ்வாறு தங்களை தயார்படுத்திக் கொள்வது என்று உளவள ஆற்றுப்படுத்தலுக்காக

மன்னாரில் உள்ள சர்வமத பேரவையுடன் இணைந்து ஓபன் நிறுவனத்தின்அனு சரணையுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குரிய உளவியல் வளவாளராக மருத்துவர் ஆர்.புஸ்பகாந்தன் வவுனியாவிலிருந்து வருகை தந்து உளவியல் பயிற்சிகளை மேற்கொண்டார்.

சமயங்களினூடாக எவ்வாறு நல்லிணக்கம் காணுதல் பற்றியும் அதே சமயங்களினூடாக சமாதானத்தைக் கட்டி எழுப்புதல் போன்ற செயற்பாடுகளுக்கு இளைஞர்கள் மற்றும் மதத் தலைவர்களின் பங்குகள் பற்றியும் கருத்துக்கள் பகிரப்பட்டது

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட சர்வமத பேரவை தலைவர்கள் முசலி பிரதேச இளையோர் சமூக அமைப்புகள் முசலி பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வின் இறுதியில் முசலிப் பிரதேச சமய நல்லிணக்க குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது இந்தப்பிரதேசத்தில் முஸ்லிம்க்ள் பெரும்பான்மையாக இருப்பதால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கபப்பட்டது.

(213)

## வெடுக்குநாறி...

கோருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்களால் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா வடக்குப் பிரதேச செயலம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவுசக்தி ஆணந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியா, வெடுக்குநாறி மலையும், ஆதி லிங்கேஸ்வரரும் எமது அடையாளம். அவற்றை ஆக்கிரமிக்க எடுக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த நாளைமறுதினம் காலை 9 மணிக்கு வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் முன்பாகக் கூட வேண்டும் என்று தனது முகநூல் பக்கத்திலேயே இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

தமிழரின் பூர்வீகக் கன்னியா வெந்நீர் ஊற்றைத் தாரைவார்த்துக் கொடுத்ததைப் போன்று எமது வன்னியின் அடையாளத்தை, எமது வடக்கின் அடையாளத்தைத் தொல்பொருள் திணைக்களத்திடம் தாரை வார்க்கத் தயாரில்லை. வெடுக்குநாறி மலையும், ஆதி லிங்கேஸ்வரரும் எமது அடையாளம். எமது மக்களின் அடையாளம்.

எமது அடையாளத்தைப் பாதுகாத்து ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த கட்சி பேதமின்றித் தமிழராய் அனைவரும் ஒன்றிணைந்து எமது எதிர்ப்பை வெளிக்காட்டுவோம் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் உள்ள வெடுக்குநாறி மலை மீது ஆதி லிங்கேஸ்வரன் ஆலயம் அமைந்துள்ளது. அங்கு மக்கள் காலங்காலமாக வழிபடுகின்றனர். தற்போது அது தொல்லியல் திணைக்களத்துக்குச் சொந்தமானதென அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி குறித்த ஆலயத்தை சேர்ந்தவர்களை நெடுங்கேணி பொலிஸார் அழைத்து விசாரணைக்கும் உட்படுத்தியிருந்தனர். ஆலயத்துக்குச் செல்ல வேண்டாமென்றும் மீறிச் சென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். அதற்கு மறுநாள் ஆடி அமாவாசை திதி என்பதால் தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் அனுமதியுடன் அங்கு சென்று பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

கடந்த 12ஆம்திகதி மீண்டும் ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார், ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளத் தடையில்லையெனக் குறிப்பிட்டனர்.

ஆனால், ஆலயத்தில் மாற்றங்கள் செய்தல், கட்டடங்களை அமைத்தல் போன்ற எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாதென அறிவுறுத்தியுள்ளனர். ஆலயத்தை சூழவுள்ள காட்டுப் பகுதி தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அங்கு செல்லக் கூடாதென்றும் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழர்களின் எல்லைக்கிராமப் பகுதியில் காணப்படும் இந்த ஆலயத்தை காலங்காலமாக தரிசித்து வந்த நிலையில், அதனை அபகரிக்க முயல்கின்றனர் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ந)

## காணாமல் ...

கொழும்பு, ஓக. 19

காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிநாடுகளில் இருப்பதாக எவ்விதமான தகவல்களும் எமக்குக் கிடைக்கவில்லை என்று காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார். இதேவேளை பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் பன்னாட்டுத் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ளதோடு அன்றைய தினம் இடைக்கால அறிக்கையொன்றும் அரசிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரில் பலர் வெளிநாடுகளில் பெயர் மாற்றங்கள் செய்து வாழ்ந்து வருவதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். அவ்வாறான தகவல்கள் எவையும் காணாமல் ஆக்கப்பட்டோர்பணியகத்துக்குகிடைத்துள்ளனவா என்று கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகமானது எதிர்வரும் 30ஆம் திகதி பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பன்னாட்டுத்தினத்தைக் கடைப்பிடிக்கவுள்ளது. அந்தத் தினத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பல்வேறுபட்ட பிரச்சினை தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்கும் வகையில் இடைக்கால அறிக்கையொன்றையும் அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

அநாகரிக தர்மபால மாவத்தையிலுள்ள ஜே.ஆர்ஜயவர்தன மண்டபத்தில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை நடைபெறும் நிகழ்வில் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் சமூக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி தீபிகா உடுகம முதன்மை உரை ஆற்றவுள்ளதோடு காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் உறவுகள் தங்களது கருத்துகளையும் தெரிவிக்கவுள்ளனர் - என்றார்.

(5.31)

## பல லட்சம்...

முயன்றபோது, கடை உரிமையாளர் விழித்துக் கொண்டதால் திருட்டு முயற்சியைக் கைவிட்டு திருடன் ஓட்டம் பிடித்துள்ளான். அவர்கள் வந்த பல லட்சம் ரூபா பெறுமதியான உந்துருளியையும் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடையில் ஓடு பிரித்து இறங்குவதற்கு திருடன் முயற்சித்துள்ளான். அந்த வேளை கடைக்குள் கடையின் உரிமையாளர் படுத்திருந்துள்ளார். சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட அவர், அயலிருந்தவர்களுக்கு அலைபேசியில் தகவலைத் தெரிவித்துள்ளார். அவர்கள் அங்கு வந்ததும், கூரையில் ஏறிய திருடன் தப்பித்து ஓடியுள்ளான். மற்றொருவர், கடையின் பின்புறமாகவுள்ள பனங் காணியினுள் உந்துருளியுடன் நின்றுள்ளார். கூரையில் ஏறிய திருடன் தப்பித்துச் செல்லும்போது உந்துருளியைக் கைவிட்டு அந்தத் திருடனும் தப்பித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உந்துருளியை மீட்ட பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(5.173)

## ஆவாக்...

யாழ்ப்பாணம், ஓக. 19

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் விநியோகித்த துண்டறிக்கைக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. துண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எனது அலைபேசி இலக்கத்துக்கு அதிகளவான முறைப்பாடுகளும், தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தாய் ஒருவர் அண்மையில் தொடர்பு கொண்டு தனது மகன் ஆவாக் குழுவினருடன் இணைந்து செயற்படுகின்றார் என்று தெரிவித்தார். மகனைக் காப்பாற்றத் தான் முயன்றும் முடியாது போனது என்று கூறிய அந்தத் தாய் எப்படியாவது தனது மகனை அந்தக் குழுவிலிருந்து காப்பாற்றி தம்முடன் ஒப்படைக்கவேண்டும்என்று கோரினார். இது போன்ற பல தகவல்கள் எமக்குக் கிடைக்கின்றன. அவற்றை இரகசியமான முறையில் விசாரித்து நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

(5,8,106)

# நில அபகரிப்பைத் தடுக்குமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை

*சாள்ஸ் எம்.பி. தலைமையிலான குழுவினர் கலந்துரையாடினர்*

முல்லைத்தீவு, ஓக.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் நில அபகரிப்பு மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான குழு வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனைக் கடந்த வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியது.

முல்லைத்தீவுமாவட்டத்தின் ஒரு பகுதி மகாவலி எனவும் மறுபக்கம்மீன்பிடித்தொழில் எனும் பெயரில் தென்னிலங்கைஆக்கிரமிப்பும்இடம் பெறுகின்றது. எஞ்சிய இடங்கள் தொல்பொருட் திணைக்களம் சொந்தம் கொண்டாடுகின்றது. அனைத்துவழிகளிலும் ஆக்கிரமிக்கப்படும் முல்லை த்தீவு மாவட்டம் அழிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தை ஆக்கிரமித்து சில சிங்களக்குடும்பங்கள்அத்துமீறிக் குடியேறுகின்றனர். அவர்களுக்கு எதிராகப் பிரதேசசெயலர்மாவட்டநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வழக்கு நடைபெறும் நிலையில் மகாவலி அதிகார சபை காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளது. இது எதிர்காலத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். இப்படியானநடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வடக்கு முதலமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்றஉறுப்பினர்தலைமையிலானகுழுவினர்வேண்டுகோள் விடுத்தனர். இந்த விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படும். மகாவலி அமைச்சுக்கு உடனடியாக இதுதொடர்பில்கடிதம்அனுப்பப்படும்.

மீனவர்கள் விவகாரத்திலும் கவனம்செலுத்தப்படும்என்று வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பதிலளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன், பிரதேச பங்குத் தந்தை, மாவட்டப்புத்திஜீவிகள்எனப் பலரும்கலந்துகொண்டுள்ளனர். (ஐ-105)



# சிவனொளிபாதமலை பெயர் மாற்றத்தை நிறுத்தவேண்டும்

*கொழும்பு அமைச்சர்களிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஓக. 19

சிவனொளிபாதமலை என்ற பெயர் கௌதம புத்தரின் பெயர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. மாற்றப்பட்ட பெயரை நீக்கி முன்னைய பெயரைப் பதிவிடக் கொழும்பு அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைவ மகாசபை கோரியுள்ளது.

சைவர்களால் நீண்டகாலமாக வழிபடப்பட்டு வந்த சிவனொளிபாதமலைஅண்மையில்கௌதமபுத்தரின்பாதஸ்தானம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு சைவ அமைப்புக்களும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. இந்த விடயம் சார்பில் உரியநடவடிக்கைகள்விரைந்துமேற்கொள்ளவேண்டும் என்று சைவமகா சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பன்னெடுங்காலமாக சைவத் தமிழர்களால் சிவனொளி பாத மலையாக போற்றி வழிபடப்பட்ட சிவனின் பூதம் தற்போதுதமிழிலும்சிறிபுத்தரின்பாதம்என்றுபொறிக்கப்பட்டுக்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதைசைவ மகாசபை மறுதலிக்கின்றது.

இராவணன் ஆண்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிலேயே சிவபூமி என்று அழைக்கப்பட்ட மண்ணில் பிற்காலத்தில் ஒவ்வொருவரும் தம் விருப்புக்கேற்ப பெயர்களைத் தாங்கள் மொழியில் மாற்றியபோதும் சைவத்தமிழர்கள்சகிப்புத்தன்மையுடன்தாங்கிக்கொண்டனர். தமிழ் மொழியில்தமிழர்கள்பலஆயிரம்வருடங்கள்வழங்கிய பழைய பெயர் தற்போது மாற்றப்பட்டு காட்சிக் கல்லில் பொறிக்கப்பட்டு இருப்பது இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த சைவத் தமிழர்களையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது. அரசு உடனடியாகத்தமிழில்பெயரைச்சிவனொளிபாதம் எனப் பொறிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சைவ மகா சபை கோருகின்றன.

இந்து கலாசார அமைச்சர் சுவாமிநாதன் மற்றும் தேசிய சகவாழ்வு மற்றும்மொழிக்கொள்கை அமைச்சர் மனோ கணேசன் ஆகியோர்தங்கள்அதிகாரங்களைஉரியமுறையில் பயன்படுத்தி உடனடியாகச் சைவத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்குத் தீர்வை வழங்க வேண்டும்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (4,114)

# வாளியால் தண்ணீர் அள்ளாதுவிடும் கிணறுகளில் பெருகுகின்றன டெங்கு

*இதைத் தவிர்க்க வாளி மூலமாக அள்ளுமாறு பூச்சியியல் ஆய்வுப் பிரிவினர் அறிவுறுத்தல்*



**தென்மராட்சி, ஓக. 19**

**மின்மோட்டர்கள் மூலமாக மட்டும் தண்ணீர் எடுப்பதால் கிணறுகளில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகின்றன என்று கொழும்பிலிருந்து வந்துள்ள பூச்சியியல் உதவியாளர்கள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டனர்.**

இதைத்தடுக்க குடியிருப்பாளர்கள் நாளாந்தம் ஒருதடவையாவது கிணற்றிலிருந்து வாளி மூலமாகத் தண்ணீர் அள்ளவேண்டும். தண்ணீர் அள்ளும் போது கிணற்று நீர் அசைவதாலும், நகர்வதாலும் நீர்மட்டம் குழம்புவதாலும்தண்ணீரில்டெங்குக்குடம்பிஉருவாவதைத் தடுக்க முடியும் என்று எச்சரிக்கையுடன் அறிவுறுத்தப்படுகின்றனர்

தேசியடெங்குஒழிப்புநாடுமுழுவதும் இரண்டுநாள்கள் நடத்தவேண்டும் என்றுகொழும்புஅரசுபணித்திருந்தது. அதன்படி மீசாலை கிழக்குப் பகுதியில் சாவகச்சேரிச் சுகாதாரப் பகுதியினர் நேற்றுமுன்தினம் டெங்குப் பரிசோதனைகளைமேற்கொண்டனர். பரிசோதனைக்காக அவர்களுடன் சென்ற பூச்சியியல்உதவியாளர்கள்அங்குள்ள கிணற்றுநீரைஎடுத்துச்சென்றுபரிசோதனைக்கு உட்படுத்தினர். அதன் போதே அவற்றுள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் குடம்பிகள் உருவாகியுள்ளமையும் குடம்பிகள் டெங்கு நுளம்புகளாகியுள்ளமையும்தெரியவந்தது.

அந்தப் பிரதேசத்தில் சோதனையிட்ட போதுபாவனையில்உள்ளபெருமளவு கிணறுகளில்டெங்குநுளம்புக்குடம்பிகள் காணப்பட்டுள்ளன. டெங்குக்குடம்பிகள் காணப்பட்ட கிணறுகளிலிருந்து மின் மோட்டர் மூலமாகவே தண்ணீர் பெறுவதால் கிணற்று நீர் அசைவின்றிக் காணப்பட்டு டெங்கு நுளம்புகள் அதனுள் முட்டையிட்டுள்ளன எனவும் தெரிவித்தனர்.

மின் மோட்டர் பாவனையில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை வாளி மூலமாகஅள்ளிப்பயன்படுத்தாதுவிடுவதால் நுளம்புகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளன என்றும் சுகாதாரப் பகுதியினர்தெரிவித்தனர்.

இந்தவாரம்மீசாலைப்பகுதியிலிருந்து டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாகக்கருதப்பட்டஐவரின்குருதிமாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் ஐவருக்கும் டெங்கு காய்ச்சலால் ஏற்பட்டுள்ளமைஉறுதிப்படுத்தப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பெருமழை பெய்ததால் டெங்குவின் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று கூறியுள்ள சுகாதாரப் பகுதியினர் வீட்டி லுள்ளோருக்குக் காய்ச்சல்ஏற்பட்டால்உடனடியாகஅருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று குருதிப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

அத்துடன்மின்மோட்டர்மூலம்கிணறுகளிலிருந்து தண்ணீர் பெறும் குடியிருப்பாளர்கள் தினமும் ஒருவேளையாவது கிணற்றில் வாளி மூலமாகத் தண்ணீர் எடுக்கவேண்டும். வாளி மூலமாகத்தண்ணீர்அள்ளும்போதுகிணற்று நீர் அசைவதாலும், நகர்வதாலும் நீர் மட்டம் குழம்புவதாலும் தண்ணீரில் டெங்குக் குடம்பி உருவாவதைத் தடுக்க முடியும். மீறிக் குடம்பி உருவானாலும் அது நுளம்பாக மாறுவதை இல்லாமல் செய்ய முடியும்.

ஆகவே குடியிருப்பாளர்கள் தமது வீட்டுக் கிணறுகளில் நாளாந்தம் குறைந்தது ஒரு தடவையாவது வாளி மூலமாகத்தண்ணீர்அள்ளுங்கள். இதனைக் கட்டாயமாக ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். தவறின்நுளம்புஉருவாகி அவற்றின்தாக்கம், அவற்றினால்ஏற்படும் இழப்பு உங்களுக்கும் உங்கள் குடும்பத்தவர்கள், அயலவர்களுக்கும் தான்என்பதைஉணர்ந்துகொள்ளுங்கள் என்று சுகாதாரப் பகுதியினர் எச்சரித்து அறிவுறுத்துகின்றனர். (4,9)



# தேசிய தமிழ் மொழித்தின போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக19

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய தமிழ் மொழித்தினப் போட்டியில் தனி இசைப் பிரிவு -5 இல் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் சு.க. அனந்த நாராயணன் சர்மா முதலா மிடத்தைப் பெற்றுள்ளார்.

பிரபல மிருதங்க வித்துவானாகிய பிரம்மஸ்ரீ க. சுவாமி நாதன் சர்மா தம்பதியரின் புதல்வனும் .பன்னாட்டுப் புகழ் பெற்ற மறைந்த பிரபல மிருதங்க வித்துவான் கலாபூசணம் அ. கணே சர்மாவின் பேரனும் ஆவார்.

# ஆபாசப் பாடல்களை பேருந்தில் ஒலிபரப்பாதீர்

*முதலமைச்சர் விக்கி கோருகிறார்*

யாழ்ப்பாணம், ஓக. 19

பயணிகள் பேருந்தில் இரட்டைஅர்த்தம் கொண்ட, ஆபாசசிந்தனைகளைத்தூண்டக்கூடிய நவீனம் என்ற பெயரில் பாலியல் கலாசாரங்களையும்பாலியல்சிந்தனைகளையும் தூண்டக்கூடியபாடல்களை ஒலிபரப்புவதை அனைத்து பேருந்து உரிமையாளர் சங்கங்களும் ஒன்றாக இணைந்து தடுக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

வவுனியாமாவட்டதனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் 20ஆம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் வவுனியாவில் நேற்றுமுற்பகல் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேருந்துகளில்பயணிகளின்சௌகரியத்துக்காகவும், மகிழ்ச்சியானபயணத்துக்காகவும் சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவதும் சினிமாப் படங்களைக் காட்சிப்படுத்துவதும் வரவேற்கத்தக்கதே. ஆனால் இப் பாடல்கள் மக்களுக்கு நல்லசிந்தனைகளை ஏற்படுத்தக்கூடிய அறிவு சார்ந்த பாடல்களாக அமைந்திருப்பதேபொதுவாக மக்களால்எதிர்பார்க்கப்படுகிறது. மாறாக வாள்வெட்டுக் கலாசாரங்கள், ரவுடித்தனங்கள், சோம்பல் தன்மைகளைப் பிரதிபலிக்கும்படங்களைத்தவிர்த்துகருத்தாழம் மிக்க நகைச்சுவைகளுடன் கூடிய பல நல்ல படங்களைக் காட்சிப்படுத்துவதையே எமதுமக்கள்விரும்புகின்றார்கள்என்பதைக் கூறிவைக்கின்றேன்.

தற்போதையபேருந்துகளில்புறப்படும்இடம் சேரும் இடம் இரண்டு இடங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் எங்கிருந்து புறப்பட்டுஎங்குசெல்கின்றது என்பதைக்கண்டுபிடிப்பதற்கான வழிமுறைகள் என்னவென்று தெரியவில்லை. உதாரணமாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கின்ற பேருந்தில் வவுனியா-யாழ்ப்பாணம்என்றபெயர்ப்பலகைகாணப்படும். மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குச் செல்கின்றபோதும் அதே பெயர்ப் பலகையான வவுனியா-யாழ்ப்பாணம் என்கிற பெயர்ப் பலகையே காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் கவனம் எடுக்கவேண்டும்.

மக்களின் உணர்வுபூர்வமான நினைவு தினங்களிலும்அஞ்சலிக்கடமைகளைநிறைவேற்றக்கூடியபகுதிகளுக்கானபோக்குவரத்துச் சேவைகளுக்கு எதுவிதமறுப்புமின்றி இலவச சேவைகளை ஆற்றி ஒருபடி விஞ்சி உங்கள் சேவைகளை வழங்கியமை பொது மக்கள்பால் நீங்கள் கொண்டுள்ள கரிசனையையும் அன்பையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

எமது வித்துவச் செருக்கும் தேவையற்ற பிளவுகளும் தன்மானம் என்றபெயரில் எழுந்த அகந்தையுமே எம்மைப் பல பிரிவுகளாக்கி நலிவடையச் செய்திருக்கின்றன.

தனியார்போக்குவரத்துச்சேவைகள்மற்றும் அரச போக்குவரத்துச் சேவைகள் ஆகியவற்றின் சேவைகளுக்கான நேரஅட்டவணை 60:40 என்றவகையில் தயாரிக்கப்பட்டபோதும் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண போக்குவரத்து ஆணைக்குழுஇந்தவிடயங்களைச்சீர்தூக்கிஆராய்ந்து இலங்கைப் போக்குவரத்துச் சபையுடனும் பேச்சு நடத்தி நல்லமுடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார். (4)



## யாழ். போதனா மருத்துவமனையில் மீள்வாழ்வு சிகிச்சை நிலையம் ரூ.530 மில்லியனில் அமைகிறது

யாழ்ப்பாணம், ஓக. 19

குவைத் நாட்டினது செம்பிறைச் சங்கத்தின் நன்கொடையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அமையவுள்ள மீள்வாழ்வு சிகிச்சை நிலையத்துக்கு 530 மில்லியன் இலங்கை ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை அமைக்கும் திட்டம் 3 பகுதிகளைக் கொண்டதாக இருக்கும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டட வடிவமைப்பு மற்றும் அதனை அமைத்தல், மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கல், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் இயன் மருத்துவர் ஆகியோருக்கான பயிற்சி வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையத் திட்டம் செயற்படுத்தப்படுத்தப்படவுள்ளது. தவிர, என்பு முறிவு, மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பு, நீண்டகாலமாகப் படுக்கையில் உள்ளவர்களுக்கான சிகிச்சைகள் இயன் மருத்துவர்களின் உடற்பயிற்சிகள், என்பு முறிவு, உடல் அவயவப் பாதிப்புக்குள்ளானவர்களுக்குச் செயற்கை அவயவ வடிவமைப்பு நிபுணர்களின் சேவைகள், சிறப்புத் தேவை உள்ளோருக்கான தொழில் வழிகாட்டு நிபுணர்களின் உடற்பயிற்சிகள், சிகிச்சைகள் என்பன வழங்கப்படும்.

குவைத் செம்பிறைச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிலால் முசெய்ட் அல்சேயர் இந்த நன்கொடையானது "மெடிசொலூசன்" வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு "மெடிசொலூசன்" நிறுவனத்தின் ஊடாக இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த மீள்வாழ்வு சிகிச்சை நிலையக் கட்டட அமைப்பு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2019 செப்ரெம்பரில் நிறைவடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. 2019 ஒக்ரோபரில் முழுமையாக்கப்பட்ட முழுமையான உபகரணத் தொகுதிகளுடன் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும். 2021 ஓகஸ்ட் மாதத்தில் நிறைவுறும் வகையில் 3 வருட சிறப்புப் பயிற்சி நெறியும் இந்தத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த மீள்வாழ்வுச் சிகிச்சை நிலையம் செயற்பட ஆரம்பித்ததும் விபத்து மற்றும் இடர்களின் போது பாதிப்புக்குள்ளானவர்களுக்கான சிகிச்சைக்குப் பிந்திய இயன் மருத்துவர்கள், தொழில்வழிகாட்டும் சிறப்பு நிபுணர்களின் சேவைகள், நவீன மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் சிறந்த முறையில் வழங்கப்படும் என்று போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன, பிரதி சுகாதார அமைச்சர் பைசல் காசிம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் முதலான பலர் கலந்துகொண்டனர். (4)



யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தின் புதிய கலைப்பீட கட்டடத் தொகுதியிலுள்ள கலைக்கூடத்தில் நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் இளம் ஓவியர்களான கீதா கந்தவேள், சுந்தரம் அனோஜன், மனோகரன் பிரசாத், சிவஞானம் கிருஸன் ஆகிய நான்கு ஓவியர்களின் காண்பியற்காட்சி கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் 17 ஆம் திகதி வரை நடைபெற்றது. அதில் ஒரு காட்சி. (13)

# படைவசமுள்ள காணிகளை மறைத்தால் கூட்டமைப்பு அதைப் புட்டுக்காட்டிவிடும்

## அரசை எச்சரிக்கிறார் சாந்தி எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக. 19

**ஐ.நாவில் கணக்கிடுவதற்காக அயலுறவு அமைச்சர் மாவட்ட ரீதியில் படையினரின் பிடியில் உள்ள மக்களின் நிலங்கள் தொடர்பான தகவலைத் திரட்டுகிறார். முல்லைத்தீவு மாவட்டத்தின் படைவசமுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மறைக்கப்பட்டுள்ளதாகவே கருதுகின்றோம். அரசு உண்மைத் தகவல்களை மறைத்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதனைப் பன்னாடுகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லும்.**

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட 2 ஆண்டுகள் முடிவுறவுள்ளன. வடக்கு - கிழக்கில் தமிழர்களின் வாழ்வியலில் இயல்புநிலைகளை ஏற்படுத்தியதாகப் பட்டியல் இடவேண்டிய நிலைமை அரசுக்கு உள்ளது. இதற்காக வடக்கு-கிழக்கின் சகல மாவட்டங்களுக்கும் நேரில் பயணிக்கும் அயலுறவு அமைச்சர் படையினர் வசம் உள்ள மக்களின் வாழ்விடங்கள் எவ்வளவு என்று தகவல் திரட்டுகின்றார்.

தகவலைத் திரட்டுவது தவறு அல்ல. திரட்டப்படும் தகவல்கள் துல்லியமானதாக இருக்கவேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது மக்களுக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் நிலங்கள் படையினர் வசமுள்ளன என்று மாவட்டச் செயலரிடம் சகல பிரதேச செயலர்களும் விபரம் சமர்ப்பித்துள்ளனர்.

அவ்வாறானால் அந்த ஆயிரம் ஏக்கரையும் படையினர் சமர்ப்பித்தால் இதுவரை முல்லைத்தீவு மக்கள் நிலம் தொடர்பில் எழுப்பிய பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க முடியும் என்று மாவட்டச் செயலரால் உத்தரவாதம் வழங்க முடியுமா? நிச்சமாக முடியாது. ஏனெனில், முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்விட நிலங்களின் அளவு மட்டுமே இந்த ஆயிரத்துக்கு உட்பட்ட 991 ஏக்கர் நிலங்கள்.

அதேபோன்று மக்களின் வாழ்வாதார வயல்நிலங்கள் எத்தனை ஆயிரம் ஏக்கர் படையினர் வசமுள்ளன. வயல் செய்கைக்குரிய 8 குளங்கள் படையினரின் பிடியிலேயே இன்றும் உள்ளன. மக்கள் வாழும்போதும் நின்மதி இல்லை இறந்தாலும் முல்லைத்தீவில் நின்மதியாகப் போகமுடியாது என்பதனை எடுத்தியம்பும் வகையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மயானத்தை இராணுவம் அபகரித்துள்ளது.

இதனைப்போன்று இருவாழ்வாதாரக் குளத்தை மூடி படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு எவ்வாறு தீர்வு காண்பது.

அரச திணைக்களங்கள் இயங்கினாலே மக்களின் பணிகளை முன்னெடுக்க முடியும். அரச திணைக்களங்களுக்குரிய நிலங்கள் எவ்வளவு படையினர் வசம் உள்ளன? அவற்றை மாவட்டச் செயலகம் கோரவில்லை என்றால் அவை அனைத்தையும் படையினருக்குக் கையளித்து விட்டீர்களா? மக்களின் உண்மை நிலையை மறைத்து அற்ப விபரத்தை மட்டுமே வெளியிட அரசு முனையும் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் உண்மை விவரத்தைப் பன்னாடுகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் - என்றார். (4,105)





## இரணைமடுக் குளக்கட்டின் சீரமைப்பு முழுமைபெற்றது

கிளிநொச்சி, ஓக. 19

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தினுடைய சீரமைப்புப் பணிகள் முழுமை பெற்றுள்ளன என்று வடக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் வீ. பிறேம்குமார் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக் குளத்தினுடைய புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்:

'வடக்கு மாகாணத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளமாகக் காணப்படும் கிளிநொச்சி இரணைமடுக்குளம், 1975ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் காரணமாக எந்தவிதச் சீரமைப்பு வேலைகளும் செய்யப்படவில்லை. 2016ஆம் ஆண்டு சிறு போக நெற்செய்கையும் இடைநிறுத்தப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் இருகுடன் திட்டத்தின் கீழ் குளத்தின் அணைக்கட்டு ஏற்கனவே உள்ளதைவிட மேலும் இரண்டு அடியால் உயர்த்தத் திட்டமிடப்பட்டது.

இதன்படி 13எம்.சி.எம். நீர் கொள்ளளவைக் கூட்டுவதற்கான திட்டவரைபும் அதனுடன் இணைந்த ஏனைய கட்டுமானங்களும் வான், பாலம் அமைப்பு வேலைகளும் திருவையாறு ஏற்று நீர்ப்பாசன வேலைகளும் முன்மொழியப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்களும் சுமார் 2 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குளத்தின் சீரமைப்புப் பணிகளுக்குச் சமாந்தரமாகக் குளத்தின் கீழ் அமைந்திருக்கும் 21ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்கின்ற முதன்மை வாய்க்கால், உபவாய்க்கால், வயல் வாய்க்கால், கழிவு வாய்க்கால் மற்றும் விவசாய வீதிகள் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஐ.எப்.ஏ.டி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2ஆயிரத்து 890 மில்லியன் ரூபா இலகு கடனிலும் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை அரசால் வழங்கப்பட்ட 310 மில்லியன் ரூபா நிதி உதவியுடனும் இந்தத் திட்டம் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் பெப்ரவரி மாதத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் வேலைத்திட்டங்களை நிறைவு செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டன" என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

## அங்கப்பிரதிஷ்டை செய்யும் இடங்களில் நடக்கவேண்டாம்

யாழ்ப்பாணம், ஓக. 19

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர்க் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு அங்கப்பிரதிஷ்டை செய்யும் பக்தர்களின் வசதிக்காக அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கூடியளவு பக்தர்கள் நடந்து செல்வதை தவிர்க்க வேண்டும் என்று மாநகர சுகாதாரப் பிரிவு கேட்டுள்ளது.

தினமும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தைச் சுற்றி அங்கப்பிரதிஷ்டை செய்து வருகின்றனர். அங்கப்பிரதிஷ்டை செய்வதற்காகவும், பலநோக்கங்களுக்காகவும் ஆலயத்தைச் சுற்றி கிருமித் தொற்று இல்லாத மணல் பரவப்பட்டுள்ளது.

நாகர்கோயில் பிரதேசத்தில் இருந்து இதற்கென எடுத்துவரப்பட்ட மண் மாதிரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. கிருமி தொற்று இல்லாத மணல் என்று உறுதி செய்யப்பட்ட பின்னரே அந்த மணல் பரவப்பட்டுள்ளது.

எனவே இவ்வளவு செய்ததன் நோக்கத்தின் தன்மையை உணர்ந்துகொண்டு பக்தர்கள் செயற்படவேண்டும். அடியவர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர். (4,17)


அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
LG | HiFi
பிரம்மாண்ட சத்தம்...
PMPO 6,500W
USB playback
Portable In
DVD
15 மாதங்களில் செலுத்துங்கள்
DM5540
ரூ.52,999
விசேட விலை
ரூ.45,999
ரூ. 10,000 வரை
நீங்கள் விரும்பும் எந்தவொரு பொருளையும்
இலவசமாக
வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்!!!
PMPO 2,600W
DVD VIDEO
HDMI
DOLBY DIGITAL
Bass Blast
Portable In
USB playback
Bluetooth
12 மாதங்களில் செலுத்துங்கள்
ரூ. 7,000 வரை
இலவசமா
DM5360
ரூ.32,999
ரூ.26,499
PMPO 9,000W
USB playback
Portable In
DVD
12 மாதங்களில் செலுத்துங்கள்
DM7630
ரூ.55,999
4,480/-
15 மாதங்களில் செலுத்துங்கள்
PMPO 20,000W
Bluetooth
Portable In
Party Thruster
Smart & Auto DJ
DJ98
ரூ.69,999
விசேட விலை
ரூ.64,999
4,506 /-
PMPO 32,500W
Bluetooth
USB playback
Dance Lighting
DJ Effects
Party Thruster
Wireless Party Link
DJ Loop
12 மாதங்களில் செலுத்துங்கள்
CJ88
ரூ.79,999
6,400/-
PMPO 39,000W
CD/MP3
Portable In
USB playback
Bluetooth
Dance Lighting
Voice Recording
Auto DJ
DJ Effects
Shared Jukebox
12 மாதங்களில் செலுத்துங்கள்
CJ98
ரூ.99,999
8,000/-
0115999000
Abans.com
அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.
Abans


CDB தங்க
CDB தங்க நகை அடகுச் சேவையினை பெற்று
கொழும்பில் பெறுமதி மிக்க காணி ஒன்றை வெல்லுங்கள்
நீங்களும் CDB தங்க நகை அடகுச் சேவையினைப் பெற்று இரண்டாம் கட்டத்தின் வெற்றியாளராகுங்கள். கொழும்பில் பெறுமதிமிக்க காணி ஒன்றை வெல்லுங்கள்.
1ம் கட்டத்தின் வெற்றியாளர்
திருமதி. சுமித்ரா நிர்மலீ
அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!
தங்க நகை அடகுக்கான
நம்பகமான இடம்
பவுண் ஒன்றிற்கு ரூ. 52,200/-*
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
பர்னாட் - 0770590788
துரித அழைப்பு 0117 388 388
CDB
உங்கள் நண்பன்
www.cdb.lk

# அரசு பழிவாங்குவதாக நினைத்து தனக்குத்தானே குழிதோண்டுகிறது

## பந்துல குணவர்தன தெரிவிப்பு

**கொழும்பு,ஓக19**
**முன்னாள்அரசதலைவரைப்பழிவாங்குவதாகநினைத்துக்கொண்டு தற்போதை அரசு தனக்கு தானே பாதாளக் குழியைத் தோண்டிக் கொள்கின்றது. அரசின்ஒவ்வொருசெயற்பாடுகளும்அரசிற்கேஎதிர் விளைவுகளைஏற்படுத்தும்என்றுநாடாளுமன்றஉறுப்பினர்பந்துல குணவர்தன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது.
"குற்றப்புலனாய்வுப்பிரிவினர் நேற்றுமுன்தினம் மகிந்த ராஜபக்சவிடம் பொய்யான குற்றச்சாட்டுத் தொடர்பில்விசாரணைகளைமேற்கொண்டனர். இவ்விடயத்தின் பின்னணியில் அரசின் இராஜதந்திரங்களே காணப்படுகின்றது. எமக்கு எதிராக அரசுகடந்தமூன்றுவருடகாலமாகக் குற்றச்சாட் டுக்களை மாத்திரமே மேற்கொண்டுள்ளது. முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் காரணமாக இன்றுபொதுமக்கள் குறிப்பாகநடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அரசு கவனம் செலுத்துவதைவிடுத்து எம்மீது குற்றம் சுமத்து கின்றது. கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பெறுபேறுகள் அரசிற்கு பாரிய பதிலடியினை ஏற்படுத்தியது. அன்றிலிருந்து அரசு தனது வேலைத்திட்டங்களிலும், அமைச்சரவையிலும் பெரும் மாற்றங்களை எற்படுத்தியது.
சர்வதேசத்தின் குப்பையாக இன்று இலங்கைமாற்றப்பட்டுவருகின்றது. சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பெரும் விளைவுகளைஏற்படுத்தும்என்று தெரிந்தும் அரசுஅதனைஅமுல்படுத்தும்நோக்கத்திலே செயற்படுகின்றது. கடந்த காலங்களில் இந்த உடன்படிக்கையைக் கைவிட வேண்டும் என்று பல்வேறு தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தியும் அரசு அவற்றைக் கவனத்திற் கொள்ளாமல் தான்தோன்றித்தனமாகசெயற்பட்டு வருகின்றது. இடம் பெறவுள்ள மாகாணசபை மற்றும் அரச தலைவர் தேர்தல்களில் பொது எதிரணிக்கே வெற்றி என்ற விடயத்தை நன்கு அறிந்தே தற்போது அரசு எமக்குஎதிராககாய்நகர்த்திவருகின்றது. எமக்குஎதிராகஅரசுசெயற்படும் பட்சத்தில்அதுஅரசுக்கேஎதிர்விளைவுகளை ஏற்படுத்தும்" -என்றார்.

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 100 பேர் கைது

கொழும்பு, ஓக19
இலங்கைமின்சார சபையினர் நடத்திய சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாகமின்சாரம் பெற்ற நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.
தொட்டலங்க, ஹஜிமா வத்தைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை மின்சார சபையின் சுற்றிவளைப்பு பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
முதன்மை மின் விநியோகக் கம்பியின் மூலம் சட்டவிரோதமாகமின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக மின்சார சபையின் சிறப்பு சுற்றிவளைப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மகிந்த ராஜபக்சவுக்கு சேறு பூசுகின்றனர்

*சீறுகின்றார் ஜி. எல். பீரிஸ்*



கொழும்பு, ஓக. 18
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குசேறுபூசவேவிசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று சீறியுள்ளார்முன்னாள்அயலுறவுத்துறைஅமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ்.
கூட்டு எதிரணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுநடைபெற்றது. அதில்கருத்துத்தெரிவித்தபோதே ஜி. எல். பீரிஸ் இவ்வாறு சீற்றத்துடன் கருத்துத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் இன்று (நேற்று) குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைநடத்தியது. முன்னாள் அரசதலைவர் மீது சேறு பூசவே இவ்வாறு செய்யப்படுகின்றது.
மக்கள் நேரடியாக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. அரசு தற்போது மக்களின் உரிமைகளை எப்போதுமில்லாதவாறு மீறிச் செயற்படுகிறது.
குற்றப்புலனாய்வுப்பிரிவின் விசாரணைசேறு பூசும்நடவடிக்கையாகும். குற்றப்புலனாய்வுப் பிரிவு அரசின் கையாளாகச் செயற்படுகிறது.
குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ராஜபக்ச குடும்பத்தினர் மற்றும் கூட்டுஎதிர்க்கட்சிஉறுப்பினர்கள் தொடர்பில் அரசு அச்சமடைந்துள்ளது. அதனால்தான் அவர்களுக்கு எதிராக இவ்வாறான கெடுபிடிகளை முன்னெடுக் கின்றது. சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படக்கூடியது. அந்த உடன்படிக்கை இறுதியானது இல்லையெனவும்தேவைப்படுமிடத்துஒருவருடத்தின் பின்னர் அதில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அவரின் கருத்து யதார்த்தத்துக்குப் புறம்பானதாகும்.
சிங்கப்பூரின்அனுமதியின்றிஅந்தஉடன்படிக்கையில் திருத்தம் மேற்கொள்ள முடியாது.
மக்களின் வாக்களிக்கும் உரிமையை அரசு இல்லாது செய்துள்ளது. எந்தத் தேர்தலையும் உரிய காலப்பிரிவில் நடத்துவதாக இல்லை. மக்கள்ஆட்சிஅடிப்படைத்தத்துவங்களில்ஒன்றான வாக்களிக்கும் உரிமையை இல்லாது செய்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால்தான் கூட்டரசு வீடு செல்ல வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக நாம் தெரிவிக்கிறோம் - என்றார். (ந-5)

### கேலிச்சித்திரம்




## கூட்டு எதிர்க்கட்சி பொய்களைக் கூறி அரசின் மீது அதிருப்தியை ஏற்படுத்த முயற்சி

கொழும்பு,ஓக19
கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் பொய்களைக் கூறி, அரசின்மீதுமக்களுக்குஅதிருப்தியைஏற்படுத்தமுயற்சித்து வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் குணசேகர தெரிவித்தார். கம்பஹாபிரதேசத்தில்நடைபெற்றகூட்டம்ஒன்றில்உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
கூட்டு எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்துக்குள் சபாநாயகருக்குமரியாதைகொடுக்காதுநடந்துகொள்கின்றனர். கூட்டு எதிர்க்கட்சியில் இருக்கும் அரைவாசிக்கும் மேற்பட்டோர், நாட்டின் சொத்துக்களை சூறையாடிய வர்கள் என்பதுடன் மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தியவர்கள்.
ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்த எந்த தலைவரும் இப்படி நாட்டுக்கு சேதங்களை ஏற்படுத்தவில்லை - என்றார்.

## ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகை



கொழும்பு, ஓக19
ஜப்பான்பாதுகாப்புஅமைச்சர்இது சுனோரிஒனோஜெரா எதிர்வரும் திங்கட் கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.
அவர் இந்த பயணத்தின் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகளைச்சந்தித்துபேச்சுநடத்தவுள்ளார். ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் இதுவாகும்.

## ராஜபக்சவினர் ஊடகங்களை சுதந்திரமாக இயங்கவிடவில்லை

*முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவிப்பு*

கொழும்பு, ஓக19
ராஜபக்சவினரிடம் ஊடக சுதந்திரம் இல்லை. கடந்த காலத்தில் அவர்கள் ஊடகங்களைக்கையாண்டவிதம்பற்றிஎனக்கு நன்குதெரியும்என்றுமுன்னாள்அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
கொழும்பில் உள்ளமேர்வின் சில்வாவின் வீட்டில்நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்புஇடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
"ராஜபக்சவினரிடம்எங்கேஊடகசுதந்திரம் இருந்தது? ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். இந்த கொலையின் மூலமே அவர்களின் ஊடக சுதந்திரம் எப்படியானது என்பதை அறியலாம். கடந்த அரசில் இருந்த தலைவர்கள் இதனை அறிவார்கள். இந்த சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், பெயர் விபரங்களை கூற மாட்டேன்.
அன்று ஊடகங்கள்நடந்துகொண்டவிதம், நடத்தப்பட்ட விதம், அழுத்தங்கள் கொடுப்பட்டவிதம்எனக்குதெரியும். ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தில் வைத்து என் மீது தாக்குதல்நடத்திஎனக்கு அவமதிப்பை ஏற்படுத்துமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரே ஆலோசனைவழங்கியிருந்தனர். அப்படிசெய்துவிட்டு,மறுபுறம்'உனக்கு வேண்டியதைநீசெய்'என்றுஎன்னையும் தூண்டி விட்டனர். அவர்களின் தூண்டுதலில்நான் அகப்படவில்லை. தனியார்தொலைக்காட்சிஒன்றுடன்நான்நேரடியாக மோதினாலும், ஊடகங்களுக்கு எதிராகஎதனையும்செய்யவில்லை. ராஜபக்சவினர்ஊடகங்களை சுதந்திரமாக இயங்கவிடவில்லை. ராஜபக்சவினரிடம் ஊடக சுதந்திரம் என்பது கிடையாது." - என்றார்.

## காணி விற்பனைக்கு

யாழ் - கந்தர்மடம் அரசடி வீதியில், 1-3/4 பரப்புள்ள வெற்றிடக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 1742305

## MASSIVE vehicles AUCTION SALE

**21st of August**

LOLC Vehicle Facility Centre
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,
**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Prashanthini - 0245 11 81 81

On View - 18th, 19th & 20th August
(Please refer the Veerakesari On 17th of August 2018 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 126 Years of Service Excellence

Head Office & Showroom: 24, Torrington Road, Kandy. Tel: 081 2227593, Fax: 081 2224371, Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom: No.8A, Fairfield Gardens, Colombo 8. Tel: 011 2502980, 2585408, Tel / Fax: 011 2588170, Email: schokman@samera1892.com
Web: www.sandalanka.com

Hero Cup — South Africa Sri Lanka

ரூ. 15,000/- விசேட தள்ளுபடி

Hero

MAESTRO EDGE

ஹீரோ கிரிக்கெட் சலுகைகள்

புதிய வர்ணங்கள்

BS IV STANDARD

5 WARRANTY



110cc
~~ரூ. 245,000/-~~
விசேட விலை
ரூ. 230,000/-

சிகப்பு / கறுப்பு
நீலம் / கறுப்பு

இந்த சிறப்பு விலைகள் குறுகிய காலத்திற்கானது.

☎: 011 5 777 000
R.G. ட்ரேடர்ஸ் - 0777 340056
Abans

இலங்கையில் எங்கு சென்றாலும்
வீட்டு Wi-Fi+



4G
Sri Lanka Telecom Mobitel

## 11.5%

6 மாத கால நிலையான வைப்புகளுக்கு இப்போது HNB யிடமிருந்து உயர் வட்டி!

குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே.

அழையுங்கள்: 0112 462462 அல்லது அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்தினை நாடுங்கள்

ஆ.வ.வீ (ஆண்டு வட்டி வீதம்) 11.83%
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

பிச் ரேட்டிங் AA-(lka)
Hatton National Bank PLC - PQ 82

HNB

# ATC நிறுவன கல்விச்சேவையில் (40) மாணிக்கவிழா மற்றும் நிறுவன அதிபர் இரா. அருட்செல்வம் அவர்களின் மணிவிழாவும் சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

## வாழ்த்துச் செய்தி

பிரபல ஆசிரியரும் சமூக சேவையாளருமான இணுவையூர் திரு.இரா.அருட்செல்வம் அவர்களது 40 வருட கால ஆசிரிய சேவையினைக் கௌரவிக்கும் முகமாகவும் 60 வயதை பூர்த்தி செய்து இன்று மணிவிழாக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

40 ஆண்டு காலமாக ஆசிரியர் பணியினை சிறப்புறச் செய்து வருவதென்பது பாராட்டுதற்குரிய விடயமாகும். "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பர். எனவே ஆசிரியப்பணி என்பது இறை பணியாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற வகையில் இறைவனிலும் முன்நிற்கும் பதவி குருவாகும். எனவே கற்பித்தற சேவையினை வழங்குதல் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வகையில் ஆசிரியராக மட்டுமன்றி இணுவையூர் பிரதேச வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்து பணியாற்றுகின்ற ஓர் சமூக சேவையாளராகவும் திகழும் திரு.இரா. அருட்செல்வம் அவர்கள் போற்றப்பட வேண்டியவரே.

இவ்விழாவினை நடாத்துகின்ற தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். வெளியிடுகின்ற மலர் சிறப்புற வெளிவரப்பிரார்த்திக்கின்றோம். விழா நாயகர் திரு.இரா. அருட்செல்வம் அவர்களின் பணி மென்மேலும் தொடரவும் நடைபெறுகின்ற விழா சிறப்புற அமையவும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



## இதழாசிரியர் இதயத்திலிருந்து...

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே
நல்லாரோடும் இணங்கி இருப்பதுவும் நன்றே
நலமிக்க நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே"

என்பர் நற்றமிழ் வல்லோர். கல்வித்துறையிலே செல்வப்புலத்திலே, சமூகச் செயற்பாடுகளிலே, நல்லவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் தாங்கள் சொந்த அலுவல்களுக்கு அப்பாற் சென்று, மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் கருதாது தன்நலமறுப் போது பொதுப்பணியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். இவர்களை வாழ்த்தி வளமூட்ட வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

இவர்களை வாழ்த்துவது வாழ்த்துபவர்களுக்கே பெருமையைச் சேர்க்கும். வாழ்த்தைப் பெறுபவர் மென்மேலும் உற்சாகமடைந்து, மேலும் மேலும் சமூகப்பணியில் முனைந்து பணியாற்றுவர். வாழ்த்திய சமூகத்தினரே இதனால் பயன் பெறுவர்.

இந்த வகையில் எமது ஊரான இணுவிலில் அமைந்துள்ள "அருள் கல்வி நிலைய" (ATC) அதிபரும், சிறந்த புலமைமிக்க கணித, விஞ்ஞான ஆசிரியருமான உயர்திரு. இரா.அருட்செல்வம் அவர்கள் கல்வித் துறையில் மட்டுமல்ல ஏனைய விடயங்களிலும் ஊரவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் தாராள மனதுடன் சேவையாற்றி வருகிறார். சிறப்பாகக் கூறுவோமானால் அவரது கல்விச் சேவையில் அவர் 40 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை இம்மலரினூடாக நீங்கள் அறிவீர்கள். அவரின் சேவையை அறிந்தவர்கள் ஆசிகள் கூறியும், வாழ்த்துக்கள் வழங்கியும் கவிதை, கதை என்பவற்றை வழங்கியும் இம்மலருக்கு அணி செய்துள்ளனர். இவற்றை விட விழாவினைச் சிறப்புறச் செய்ய செலவுகளை மனமுவந்து பொறுப்பேற்றுள்ளனர். சிறந்த ஆலோசனைகள் வழங்கியும், விழா ஏற்பாடுகளைத் தாங்கள் தாங்கள் சொந்தக்கருமமாக எண்ணியும் தோளோடு தோள் நின்று உதவி, ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளனர்.

மலர் வெளியீட்டிற்கான முயற்சியில், எழுத்துப் பிழைகளைத் திருத்தியும் மலர் அமைப்பிற்கான நல்ல ஆலோசனைகளையும் தந்துள்ளீர்கள். இம்மலர் சிறப்புற அமைய வேண்டுமென மலராக்கல் பணிக்கு மனமொன்றித் தினம்தினம் செயற்பட்டீர்கள். மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு மலர் மணம் பரப்பவும், நுகரவும் உள்ளன்போடு உதவியுள்ளீர்கள்.

இவை எல்லாமே ஒரு நல்ல மனிதரை வாழ்த்த வேண்டுமென்று கொண்ட நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகவே நாம் கருதுகின்றோம். துன்பமும் துயரமும் நிறைந்த சூழல் என்றாலும், காலத்தினால் செய்யப்பட்டதற்கு காலந்தவறாது வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும். அந்தக் கடமை உணர்விற்கே இந்த மலர் இந்த விழா என்பதனை அறியத்தந்து நிறைவடைகின்றோம்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே
தன்கடன் அடியேனையும் தாங்குதல்"

தேசகீர்த்தி ஞான.திருக்கேதீஸ்வரன்
மலராசிரியரும்,மணிவிழா அமைப்பாளரும்.

## வாழ்க வளமுடன்...

இரா. அருட்செல்வம் அவர்களினது மணிவிழா அத்துடன் அவருடைய 40 வருடகால பிரத்தியேக வகுப்புக்களின் சேவையைப் பாராட்டி வெளியிடவிருக்கும் மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அருட்செல்வம் ஆசிரியர் அவர்கள், ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் (இணுவில் இந்துக்கல்லூரி) உயர் கல்வியை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் பயின்றார். இணுவில் இந்துக்கல்லூரியின் தரம் 7ஆம் வகுப்பில் நானும், அருட்செல்வமும் ஒரே வகுப்பில் படித்தோம். அவர்தன் உயர்கல்வியின் பின் அரசாங்கத்தில் வேலை செய்வதை விரும்பாமல் அவருடைய வீட்டில் பிரத்தியேக வகுபுக்களை தொடங்கி தரம் 6 தொடக்கம் 11ம் தரம் வரை மாணவர்களிற்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் பயிற்றுவித்தார். இணுவில் கிராமம் அதனை சூழவுள்ள கிராமங்களிலிருந்து மாணவர்கள் இவருடைய கல்வி நிறுவனத்துக்கு வந்து கற்றுச் சென்றார்கள். அத்துடன் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளையும் பெற்றார். இவருடைய கற்பித்தல் திறனினால், மாணவர்கள் இவருடைய கல்வி நிறுவனத்தை நோக்கி தங்கள் கல்வியைத் தொடர்கிறார்கள்.

இவருடைய அர்ப்பணிப்பான சேவை தொடர்ந்தும் மாணவர்களிற்கு கிடைக்க வேண்டும் என்று நொச்சியெல்லை கந்தனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் இ.விக்னேஸ்வரர்
துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்

## வாழ்த்துச் செய்தி

கல்விப் பணியால் பலர் வாழ்வை மேம்படுத்திய ஆசிரியர் திரு.அருட்செல்வம் அவர்கட்கு, எடுக்கப்படும் மணி விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். இணுவில் கிராமத்தில் பிறந்து, பக்தியோடு வளர்ந்து கணித, விஞ்ஞானத்துறையில் தனக்கென முத்திரை பதித்த நல்லாசிரியரை நன்றியோடு வாழ்த்த வேண்டியது சமூகத்தின் கடமையாகும். 1977 இல் யான் யாழ் இந்துக் கல்லூரியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கற்கும் வேளையில் நண்பன் திரு.இ.கயிலாசபிள்ளையும் யானும் உயர்தர பரீட்சை எடுத்துவிட்டு, பெறுபேற்றுக்காக காத்திருந்த சகோதரன் அருட்செல்வம் ஆசிரியரிடம் சில மாதங்கள் கற்கச் சென்றோம். அன்றைய பசுமையான நினைவுகள் மறக்க முடியாது. அன்று முதல் இன்றுவரை அன்பாகப் பழகும் இப்பெருந்தகைக்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். யானும் எனது நண்பனும் இலவசமாகவே இவரிடம் கற்றோம். சிறந்த புலமையாளன் என்பதை யான் அன்றே அறிந்து கொண்டேன். அன்றைய காலம் தொட்டு இன்றுவரை பல மாணவர்களின் உள்ளம் கவர்ந்த ஆசிரியராக இவர் விளங்குகிறார். எவரையும் குறை கூறாது எல்லோரையும் இனிய உறவாகப் பேணும் நற்பண்பு நிறைந்த சகோதரனின் மணிவிழாச் சிறக்க தெல்லிநகர் துர்க்காதேவியை வேண்டுவதோடு, அவர் சகல நலங்களுடன் நிறைவாக வாழ இதயபூர்வமாக வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.
சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.

## பன்முக ஆளுமைகொண்ட ஆசிரியர் அருட்செல்வம்

உயர்திரு. இராசரத்தினம் அருட்செல்வம் ஆசிரியரது மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதிலும் அவ் விழாவிற்கு தலைமை தாங்குவதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். சிறு வயதிலிருந்தே அவரைத் தெரிந்தவன் என்ற வகையில் அவரின் உயரிய குணங்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்திருக்கின்றேன். மிகச் சிறந்த கணித ஆசிரியராக, நல்ல கவிஞராக, ATC கல்வி நிலையத்தின் இயக்குநராக, சமூக முன்னேற்றத்திற்கான ஆலோசகராக, இணுவில் பொது நூலகத்தின் போஷகராக என பல்பரிமாணம் கொண்ட பணிகளை ஆற்றும் ஆளுமை கொண்டவராக இப்பிரதேசத்தில் வலம் வரும் நண்பர் இராசரத்தினம் அருட்செல்வம் அவர்களுக்கு எடுக்கப்படும் மணி விழாவானது பெருமைக்குரியது என்பதில் ஐயமில்லை.

திரு.இராசரத்தினம் அருட்செல்வம் அவர்கள் இளைஞராக இருந்த காலத்திலே கணிதத்தைக் கற்பிப்பதில் ஆளுமை கொண்டவராக காணப்பட்டமையால் அவரது வகுப்பில் கற்றுக்கொண்டிருந்த நண்பர்களே இவரிடம் பாடம் சம்பந்தமான சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொள்ள முண்டியடித் தமையைக் கண்டிருக்கின்றேன். கணித பாடத்தில் அவருக்கிருந்த தெளிவு விஞ்ஞான பாடத்தை இணைத்து கற்பிக்கும் ஆற்றலை அவரிடம் ஏற்படுத்தியது. இதன் காரணமாக க.பொ.த சாதாரண தரத்தில் கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் கற்பிக்கும் ஒரே ஆசிரியர் இவரே என்ற புகழ் அவருக்கேற்பட்டது. அருள் கல்வி நிலையமென்ற பெயரில் தனது வீட்டிலேயே ஒரு நிறுவனத்தை ஆரம்பித்த அருட்செல்வம் ஆசிரியர் அதன் வளர்ச்சி கண்டு பெருமிதமடைந்தார். இவரது பேரும் புகழும் உயர்வடைந்த காரணத்தினால் யாழ் குடாநாட்டிலுள்ள பல தனியார் கல்வி நிலையங்கள் இவரை ஆசிரியராகப் பெற்றுக்கொள்ள போட்டி போட்டமையை நான் நன்கு அறிவேன்.

உயர்திரு அருட்செல்வம் அவர்கள் மாணவர்களைக் கையாள்வதில் வல்லமை கொண்டவராக விளங்கினார். அவர் கற்பித்த மாணவர்களில் பலர் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டவர்களாக மாறிய வேளையிலேயே அவரின் பெருமை பலருக்குத் தெரிய வந்தது. அவரிடம் கல்வி கற்க பல மாணவர்கள் முண்டியடித்து அவர் கல்வி கற்பிக்கும் கல்வி நிலையங்களுக்கு படையெடுத்தனர். மொத்தத்தில் மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் அளவுக்கு அவரின் கற்பிக்கும் ஆற்றல் இருந்தது என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

திரு. இராசரத்தினம் அருட்செல்வம் அவர்கள் மாணவர்களிடையே கொண்டிருந்த செல்வாக்கின் காரணமாகவே அவர்கள் கல்வியை நிறைவு செய்த பின்னரும் ஆசிரியர் மீது அளவுகடந்த பாசம் கொண்ட பழைய மாணவர்களாகக் காணப்படுகின்றனர். இவரிடம் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்வதனால் அவருக்கு முன்கூட்டியே கல்வி நிலையத்திற்கான வெள்ளி விழாவையும் இப்பொழுது மணிவிழாவையும் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன். இவரது மணி விழாவில் கலந்து கொள்ளவெனப் பல பழைய மாணவர்கள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் இணுவிலில் ஒன்றுகூடத் தயாராகிவிட்டனர். 2018 ஆகஸ்ட் 19 ஆம் திகதி இந்திர விழா போல் திரு. அருட்செல்வம் அவர்களின் மணிவிழா ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதனை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். திரு. இராசரத்தினம் அருட்செல்வம் அவர்கள் மிகச்சிறந்த கவிஞர் என்பதை எல்லோரும் அறிவர். அவரால் எழுதப்பட்ட பல கவிதைகளையும் வாழ்த்துப்பாக்களையும் நான் பார்த்து வியந்திருக்கின்றேன். அவரது தமிழ் அறிவு என்றுமே போற்றுதற்குரியதாகும். அதேபோல் நல்ல சமூக சேவையாளராக அவர் சமூகத்தில் வலம் வருவதையும் எம் மக்கள் நன்கறிவர். குறிப்பாக இணுவில் பொது நூலகத்தின் போஷகராக இருந்து இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக ஆலோசனை வழங்கும் அதேநேரம் இந்நிறுவனத்தின் மூலம் மாணவர்களுக்கான கருத்தரங்குகளை முன்னின்று நடாத்தி மாணவர்களுக்கு பரீட்சையில் எழக்கூடிய சந்தேகங்களை நிவர்த்தி செய்வதனைக் கண்டிருக்கின்றேன். சமூக, சமய விழாக்களை முன்னெடுப்பதிலும் அவற்றைச் சிறப்புற நடாத்துவதிலும் அவர் காட்டி வரும் ஆர்வம் பாராட்டுதற்குரியதாகும்.

நிறைந்த கடவுள் பக்தியும் உயரிய ஒழுக்கமும் கொண்ட திரு.இராசரத்தினம் அருட்செல்வம் ஆசிரியர் அவர்கள் இன்று மணிவிழாக் காண்பதுபோல் எதிர்காலத்தில் பவளவிழா, நூற்றாண்டு விழா ஆகியவற்றையும் கண்டு மகிழ வேண்டும் என வாழ்த்துவதுடன் அவர் குடும்பத்தினருடன் நல்ல உடலாரோக்கியம் பேணி மகிழ்வாக வாழவேண்டுமென எல்லாம் வல்ல பரராஜசேகர விநாயகப்பெருமானை இறைஞ்சுகின்றேன்.

"வாழ்க வளமுடன் என வாழ்த்தும்"

பேராசிரியர்.க.தேவராஜா,
தலைவர், மணிவிழாச்சபை.

**அருள் மணிவிழாச்சபை இணுவில்**

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கமணி வேலாயுதபிள்ளை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிதங்கமணி வேலாயுதபிள்ளை கடந்த 17.08.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான பன்னாலை சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் கதிரமலைநாதன், கலைவாணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தா மற்றும் ஞானஸ்கந்தராஜா, ஞானஸ்கந்தா, ஸ்ரீராணி, தங்கராணி, சிவாஸ்கந்தா, ஸ்கந்ததாசன், குமாரதாசன் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற சிவஞானசோதி மற்றும் விக்னேஸ்வரி, இராஜேஸ்வரன், இரத்தினலிங்கம், சாந்தினி, சுஜாதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திரும்கள் - சதீஸ்குமார், காலஞ்சென்ற பாலமுருகன் மற்றும் ஸ்ரீவெங்கடேசன் - தர்சினி, ஸ்ரீரங்கநாயகி - இராகுலன், கலையரசி - இராமலிங்கம், ரஞ்ஜனி-எழில்வேள், பிரசாந்-பிருந்தி, அகல்யா-முத்துக்குமாரன், சசி, சரண்யா, சுகன்யா, விஸ்ணுகா, கீர்த்தனா, கீரன் ஆகியோரின் பேர்த்தியும், டிவேஸ்வர், அனந்திகா, அக்ஷயா, தணிகா, ஸ்ரீவட்சன், பிரசாந்தினி, மஞ்சரி, மிதிலன், தரண் அஸ்வின், லோகேன் ரித்தன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்: சு.வே.ஞானஸ்கந்தா,
மற்றும்
ஏனைய குடும்பத்தினர்.

தாவடி தெற்கு,
கொக்குவில்

(CS/19104)(11,17)

**021 205 3152**

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் லோகநாதன் ஜெகநாதன்

தாயின் மடியில் 25.01.1979
மண்ணின் மடியில் 31.07.2017

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றேன்

(CS/19052)(11)

M. குணரட்ணம் – சித்தப்பா

## ஆண்டுகள் ஒன்பது ஆனபின்பும் ஆறவில்லை உம் நினைவு



மண்ணோடு 06.07.1951
கண்ணோடு 28.08.2009

அமரர்

### சின்னத்தம்பி செல்வராஜா

(மாயவன் பாரவூர்தி உரிமையாளர்)

**திதி - நவமி (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை**



எம்மை பெற்று வளர்த்து பேணிக்காத்து
அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்து
தரணியிலே வாழ வைத்த - எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள்
எம்மை விட்டுப்பிரிந்து ஒன்பது
ஆண்டுகள் ஆனபோதும் எம் நெஞ்சத்தில்
உங்கள் நினைவுகள் என்றும்-பசுமையாய்
நித்தம் உங்களை அழைக்கின்றோம்
ஒன்பது ஆண்டுகள் என்ன நூறாண்டுகள் ஆனாலும்
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா? - எம்மை விட்டு
என்றும் உங்கள் நினைவுடன் நாம்

சங்கானை வீதி,
அச்சுவேலி.

என்றும் எம்மோடு இருப்பாய்
குடும்பத்தினர்.

## தேவை

வேலைவங்கி மனித சக்தி, கழிவு முகாமைத்துவம் ஆகிய தொழில் முயற்சிகளில் நிர்வாக அனுபவமுள்ள பங்காளர் தேவை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நுவரெலியா, பதுளை ஆகிய இடங்களுக்கு தேவை. சிங்களம் அல்லது ஆங்கிலம் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது. வாராந்தம் சிறந்த வருமானம். வயதுக் கட்டுப்பாடு இல்லை. - 071 865 2505

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு கல்வியங்காடு / இருபாலை / கோண்டாவில் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு - 071 96 92 192**



## மணிவிழா வாழ்த்து

**என் கணிதத்தின் தந்தையே**

கணிதம் என்பது வாழ்க்கை என்பதனை
காலமெல்லாம் உணரச் செய்தவர்
கணிதத்தினை நேசிக்கச் செய்து - என்னை
கற்பித்தலில் மிளிரச் செய்தவர்
கணிதத்தினை இலகுவாக்கி - கனிவுடன்
காலை, மாலை, இரவு என கற்பித்தவர்
கற்பித்தலில் 40 வருடங்கள் (மாணிக்கவிழா)
சேவையாற்றியமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இணுவையூர்
உயர்திரு
**இரா. அருட்செல்வம்**

அன்பான மாணவன்
திரு.குணராஜா - கந்தரூபன்
(கணிதபாட ஆசிரியர்)
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.

## வெற்றிகரமான வியாபாரத்தின் பங்குதாரராக எம்முடன் இணையுங்கள்

EDNA

# Rs.200,000/- மேலான மாத வருமானம்

எம்முடன் இணைவதற்கு
கீழ்வரும் பகுதிகளில் வெற்றிடங்கள் உள்ளன

## யாழ்பாணம் / திருகோணமலை

**E I & M (PVT) LTD**

நீங்கள் பங்குதாரராக இணைவதற்கு தேவையானவை

- ★ வியாபாரம் பற்றிய அறிவு
- ★ வங்கி உத்தரவாதம்
- ★ களஞ்சியசாலை மற்றும் காரியாலய வசதி (குறைந்தது 15'×15' இட வசதி)
- ★ பொருட்களை விநியோகிப்பதற்கு அலுமினியம் தகடால் மூடப்பட்ட (Aluminium Body) 10 1/2 அடி லொறி வசதி
- ★ அனுபவமுடைய காரியாலய உத்தியோகத்தர் மற்றும் பண வசூலிப்பவர் (Cash Collector)
- ★ பொருட்கள் விநியோகிப்பதில் போதிய அறிவு

விற்பனை முகாமையாளர், எட்னா தனியார் நிறுவனம்,
இல-257 கிரேன்பாஸ் வீதி, கொழும்பு
தொலைபேசி இல - 0703053909

Edna GOLD | Edna RED COLLECTION | Edna CRUNCHY CRISPY | BUNTY SMACKER | Edna Cashew | Edna Chef's Choice | Edna JOY CHOCO | Edna Choco Fingers

உங்களது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை
E Mail: eimsales@edna.lk என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம்

## வேலையாள்கள் தேவை

எமது Hotel இற்கு கீழ் குறிப்பிட்டுள்ள வேலையாள்கள் தேவை.
தகுதியும், அனுபவமும் உடையவர்கள் நேரில் வரவும்.

1) Hotel Manager - விடுதி முகாமையாளர்
2) Hotel Rooms Cleaner - விடுதி அறை சுத்திகரிப்பாளர்
3) Female cook - பெண் சமையலாளர்
4) Receptionist - வரவேற்பாளர்.
(Computer knowledge) - கணினி அறிவு
5) Security (Night) - பாதுகாப்பு உத்தியோகத்தர்

**உடனடியாகத் தேவை.**

SAI HOLIDAY INN 132, Kachcheri Nallur Road, Jaffna.
077 607 8888

## முன்னணி அச்சகம் விற்பனைக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்வதால் வவுனியாவில் 17 வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களை வாடிக்கையாளராக கொண்ட முன்னணி அச்சுக்கலையகம் விற்பனைக்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொடர்பு - 077 3435 877**

## ஆஸ்பத்திரி உபகரணங்கள் விற்பனைக்குண்டு

- 4 Examination Beds
- 2 Medicine Trolley
- 1 Streacher
- 1 Wheel Chair
- 2 Ward Screens

Contact No
077 607 8888 / 075 564 6895

## காணி, வீடு விற்பனை

யாழ்ப்பாணம் நெடுங்குளம் சந்திக்கு அருகில் A9 பாதையில் 15 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு.

**077 607 8888, 075 564 6899**


யாழ். அரியாலையில் கனகரட்ணம் சந்தியில் உள்ள மலர்மகள் வீதியில் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக் காணியும், வீடு கிணற்றுடன் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**077 607 8888, 075 564 6899**




"எனது வாழ்வு பூரணமாவது அன்பான தகப்பன், சிநேகமான கணவன், விசுவாசமுள்ள நண்பன் போன்றே இந்த அனைத்து பாத்திரங்களினூடாவாகும். வெற்றிக்கு எனக்கு சக்தி கிடைப்பது Biovita 40+ இன் மூலமாகும்."

உங்கள் வயது 40 ஐத் தாண்டும் போது தலைமயிர் வெண்மையாதல் மூலம் முதிர்ந்த தோற்றத்தைக் காட்டும். வயது முதிர்வடைவதுடன் விட்டமின் B 12, போலிக் அமிலம், விட்டமின் C, B5, Calcium போன்ற போஷாக்குப் பிரிவுகள் உடலில் தேங்கி நிற்பது குறைவாகின்றது. ஆகையால் அவ்வாறான உள்ளீடு கொண்ட Biovita 40+ மேலதிமான போஷாக்கினால் அந்த சிக்கலைத் தீர்த்துக் கொள்ள முடியும்.





ஆயுபாமா மற்றும் நியூட்ரா (தனியார்) கம்பனி,
இலக்கம் 981/4/1, மாளவிடி, ஜா எல,
உடனடி அழைப்பு: 0770 103 796

## அறை வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத்தெருவில் அறை வாடகைக்குண்டு. (மாணவர்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)
**077 321 3490**

## பணியாளர்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்திருக்கும் பிரபல உணவகத்துக்கு சகல வேலைகளும் செய்யக்கூடிய பணியாளர் தேவை.
**021 224 1555**

## காணி விற்பனைக்கு
யாழ்.அரியாலையில் புங்கன்குளம் ஸ்ரேசனுக்கு முன்பாக 3½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
**077 607 8888**

## Vacancy
- Jaffna, Chunnagam
- Show Room Girls
- Business Development Officer

(அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
**077 884 8873**

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த அச்சுவினி நட்சத்திரம், 7இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
**075 039 3610**

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் (ஸ்ரீ கொழும்பில் பிறந்தவர்), 19.03.1973 இல் பிறந்த, உத்தர நட்சத்திரம், கன்னிராசி, UK பிரஜாவுரிமை, விரைவில் இலங்கை வரவிருக்கும் மண மகனுக்குப் படித்த, ஆங்கில அறிவுள்ள, அழகிய, குடும்பப் பாங்கான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
**031 222 7552, 077 815 4858**

## வேலையாள்கள் தேவை
1. **மேசன்** சம்பளம் 1500/=
2. **உதவியாளர்** சம்பளம் 1200/=

தேவைப்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

3. **உப ஒப்பந்தகாரர்** (சப் கொன்றாக்ரர்ஸ்)

**தொடர்பு : 077 813 9761**
(காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.)

## இலவச கணினி ஆங்கில வகுப்புக்கள் பிரிவு 14
**க.பொ.த. (சா.த), (உ.த) மாணவர்களுக்கான**
**I. Diploma in Spoken English**
**II. Diploma in Information Technology**
**ஆரம்பம் :- 25,26.08.2018 10.00 AM**
- காலம் :- 3 மாதங்கள்
- பெறுமதி மிக்க சான்றிதழ்

**IPS** இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
**076 685 2529**

## விற்பனைக்கு
சவுக்கு, தேக்கு, மருது, நாவல், மலைவேம்பு, இலுப்பை, புங்கை, சமண்டலை, கயூ, கறுவா, கராம்பு, அன்னமுன்னா, சீதாபழம், வேம்பு, சித்திர வேம்பு, முழுநெல்லி, அரி நெல்லி, விலும்பி, கோப்பி, கஜ், பாலை, முதிரை, நல்ல இன தென்னங்கன்று, மாங்கன்று வகை, தேசி, தோடை, பலா, கொய்யா, மாதுளை, செவிழை, தென்னை, கமுகு, வெற்றிலை, பெசன்புறுட், ஈரப்பலா, ரெட்லேடி பப்பா, முருங்கை, யம்பு, கமுகு, கத்தாளை, முந்திரிகைக்கன்று, அம்பறலாங்கன்று மேலும் பல இன பூங்கன்றுவகை றோசா (ஒட்டு) சாடி வகைகளும் விற்பனைக்கு உண்டு.
**077 612 9343/ 077 279 0431**
**நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு, கணேசா பாடசாலைக்கு அருகில்
கிளை, கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

## வேலையாள்கள் தேவை
கிளிநொச்சி நகரப் பகுதியில் புதிதாக திறக்கப்படவுள்ள ஸ்ருடியோ (Studio Lab) ஒன்றுக்கு அனுபவமுள்ள Graphic Dishing இற்கு 18 - 30 வயதுக்குட்பட்ட பெண் வேலயாள்கள் தேவை.
**077 816 1709**

## ஜெயகுமார் திருமண சேவை
ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் உள்ள மணமகள், மணமகன்களுக்கு இலங்கையில் உள்ள படித்த மணமகள், மணமகன் தேவை.
**Viber மட்டும் - 0094 7672 50144**
**075 568 5766**

## விற்பனைக்கு
டாசோன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், ஸ்பொக்கட்ஸ் பெனியர் 2 மாத டாசோன் குட்டிகள், மணிதாரா வன்ரம், ஊர்க்கோழி வெள்ளடியன்.
**தொடர்பு - லி.மயூரன் ஆயக்கடவை பிள்ளையார் கோவில் முன்பாக, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பூதராயர் கோயிலடி, டயலொக் ரவர் அருகில். 075 459 7540**

## வாடகைக்குண்டு
பருத்தித்துறை வீதியில் சகல வசதிகள் கொண்ட ரெஸ்ரோறண்ட் வாடகைக்குண்டு.
**077 486 0517, 077 595 2245**

## வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கோயில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.
**077 503 5549, 077 500 7960**

## வீடு விற்பனைக்கு
குளமங்கால், மல்லாகத்தில் அழகிய வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.
**076 244 2892,**
**416 269 5221 (ஆவணிக்குப் பின்)**

## Vacancy
We need office clerk for frieght forwarding office import & export office with good knowledge in computer and Accounts. Age below38 years. (Female)
**229/5, Main Street, Colombo 11 (Santhash Plaza)**
**Con. MP Saravane Seelan - 077 303 4606,**
**Yogaraja - 072 270 2148**

## பணி நிலை வெற்றிடம்
யாழில் பிரபலமான Hotel & Restaurants, இற்கு பின்வரும் பணிகளுக்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்
வயது 20 தொடக்கம் 35 வயதுவரை
- சமையல் உதவியாளர் (Kitchen Helper)
- உணவு பரிமாறுபவர்கள் (Waiter)
- சுத்திகரிப்பாளர் (Cleaners)
- காசாளர் (Cashier) ( A/L Commerce கற்றவர்கள் விரும்பத்தக்கது)

**021 432 3000**

## வேலையாள்கள் தேவை
**சுஜித் என்டர்ப்பிறைசஸ்**
**நிறுவனத்தில் பணியுரிய விற்பனை முகவர்கள்**
(Sales ref. - ஆண், பெண்) சம்பளம்
(50,000 - 75,000 வரை பெறலாம்)
**பட்டா வாகனங்களும்** தேவை.
(50,000 - 100,000 வரை பெறலாம்)
**077 904 1258, 021 227 0586**

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை
யாழ். நகரத்தில் வசிக்கும் சிறிய குடும்பத்தினருக்கு வீட்டில் வேலை செய்வதற்கு 45 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை.
**தொடர்பு - 076 120 2765**

## தேவை
அரைக்கும் ஆலைக்கு வேலை தெரிந்தவர், பழக விரும்புபவர், பில் கிளாக், பொதியிடல் உதவியாளர், சமையல் என்பவற்றுக்கு பெண்கள் தேவை. **- 077 174 6101**

## காணி விற்பனைக்கு
சாவகச்சேரி நகரிலுள்ள நீதிமன்றத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் புகையிரத நிலைய வீதியில் 1.7 பரப்பு உறுதிக்காணி உடன் விற்பனைக்குண்டு.
( விலை பேசித் தீர்மானிக்கலாம் )
**076 660 0205**

## அனெக்ஸ் வீடு வாடகைக்குண்டு
நல்லூர் கோயிலுக்கு அருகில் ஒரு அறையும், சமையலறையும் கொண்ட வீடு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு உண்டு.
**077 719 1432**

## வாடகைக்கு அறைகள்
யாழ்.நகர் பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
**077 633 3000,**
**070 566 7892**

## விற்பனைக்கு
திருநெல்வேலியில் உள்ள ஆலயம் ஒன்றின் கூரையில் பாவித்த ஓடுகள், தீராந்திகள், பனை மரங்கள் என்பன விற்பனைக்குண்டு.
**077 967 2152**

## Best Wishes பாராட்டி வாழ்த்துகின்றோம்


**திரு.எம்.எம்.சியான்**
**(BA , Hons (Econ)**
**MEd,MSC in Edu,**
**Mgt,PGDE, PGDEM, SLEAS**


தேசியப்பாடசாலை அதிபராகவும் வடமாகாணக் கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றி தேசிய கல்வி நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகங்களில் வருகை தரு விரிவுரையாளராகவும் கடமையாற்றும்
**திரு.எம்.எம்.சியான்**

அவர்கள் 01.01.2013 ஆம் திகதி முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) முதலாம் தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றமையிட்டு மகிழ்வுடன் வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

Congratulations

**வட்டு.வடக்கு, சித்தங்கேணி.**
வாழ்த்துவோர்:- **நண்பர்கள்.**

# MODERN City Inn
WiFi Available




Comfortable Air Conditioned Rooms with Attached Toilets and Hot & Cold Water
**Very Moderate Room Charges**
Single or Double Occupancy and Family Apartment
Wedding / Small Group Conferance All Kind of Parties
**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
For inquiries and Reservations
Contact No:- 031-2233967 / 031 2231 961 / 076 205 3302
moderncityinn@yahoo.com moderncityinn.com

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 02 . 06 . 1942

இறப்பு 19 . 08 . 2013

**அமரர் நாகன் எட்வேட் (கிளி)**

ஆண்டு ஐந்து ஓடியும் ஆறவில்லை எம் துயரம்
குறைவில்லா அன்பைநிறைவுடன் தந்தீர்.

உயிருக்குள் உறைந்து போயிருக்கும் உம் உருவம்
கண்முன்னே நிழலாடுகிறது உயிரும் உணர்வும்
உரசிவரும் அழுகையை
கட்டுப்படுத்த வழிதேடி தோற்றுவிட்டோம் தந்தையே..

215/ 16, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை



அன்னையின் மடியில் 08.10.1948 ஆண்டவன் அடியில் 15.08.2018

திக்கானை, குருக்கள் பகுதி, கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை 15.08.2018 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-மனோரஞ்சிதம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (இராசாத்தி) அன்புக் கணவரும், யமுனா, யசோ, யனதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனதாஸ், காந்தீஸ், மதிராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவித்திரா, கிஷானி, மாதுளன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2018) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லன் கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கானை, குருக்கள் பகுதி,
கரணவாய், கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

0776447390



### வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

*(காரைநகர் களவிலிப்பிட்டி)*

காரைநகர் களவிலிப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மத்திய வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தர்) 17.08.2018 வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும், சிவகுமார், சிவசக்தி, சிவபத்தன், காலஞ்சென்ற சிவகங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தமோமணி, காமாட்சிப்பிள்ளை, புஸ்பலீலாவதி, நடராசா மற்றும் பத்மாவதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். காரைநகர் களவிலிப்பிட்டியில் உள்ள **அன்னாரின் இல்லத்தில் இன்று (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படும்.**

களவிலிப்பிட்டி,
காரைநகர்.

தகவல் : நடராசா விஜயகுமார்
(பெறாமகன்)

077 869 7415 (c.12914)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **வீரசிங்கம் கருணாநிதி**
(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)

மலர்வு 12.07.1931

உதிர்வு 30.08.1998

திதி: அட்டமி (19.08.2018)

இருபது ஆண்டுகள் கடந்தாலும்
என்றும் எம் இதயத்தில் வாழும்
தெய்வத்துக்கு எமது அஞ்சலிகள்

கொல்லங்கலட்டி வீதி,
அம்பனை, தெல்லிப்பழை.

குடும்பத்தினர்

## 46ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **ந. ராஜா**
(கிளை முகாமையாளர் - அல்பா இன்டஸ்றீற் - யாழ்ப்பாணம்)

தோற்றம் 01 . 12 . 1986

மறைவு 05 . 07 . 2018

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
நாள்கள் நாற்பத்தாறு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

M.S.லேன்,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி சிவப்பிரகாசம்

(கருணா)

சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி சிவப்பிரகாசம் நாகேஸ்வரி அவர்கள் நேற்று (18.08.2018) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சபாரத்தினம் விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு சிவப்பிரகாசம் (முன்னாள் ஆசிரியர் - யாழ் இந்துக்கல்லூரி / முன்னாள் பொது முகாமையாளர் - யா.ப.நோ. கூ. சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி இலட்சுமிப்பிள்ளை பரமானந்தம் அவர்களின் அன்புச்சகோதரியும் சத்தியா (பிரான்ஸ்), கோதை (லண்டன்), பிரணவன் (பிரதேச விற்பனை முகாமையாளர் - Kevilton Electrical Product Pvt Ltd) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீபன் (பிரான்ஸ்), இராதேயன் (வைத்தியர்-லண்டன்), வர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுலோச்சனா (கனடா), பிரபாகரன் (அமெரிக்கா) ஆகியோரின் சிறியதாயாரும் சின்னத்தம்பி பரமானந்தம், நகுலாம்பிகை, திலகவதி ஆகியோரின் மைத்துனியும் மிருதுளா, ஆயிசன், கஜீபன், மானசா, ஆதிரை, நிருத்தன், சிவப்பிரகா, நித்திலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

20/3, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 3604486

தகவல்:
சி. பிரணவன் (மகன்)

### வேலையாள்கள் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

**தொடர்பு - 077 546 0028**

### வீடு வாடகைக்கு

நாவலர் ஒழுங்கை, நல்லூரில் சிறிய குடும்பத்திற்கு உகந்த ஓர் அறை, இணைந்த குளியறையுடன்கூடிய வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு. - 076 216 0099

### நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

### கடை வாடகைக்கு உண்டு

K.K.S. வீதியில் அமைந்துள்ள கடையுடன்கூடிய வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும். (பண்டிக் கோட்டுப் பிள்ளையார் கோவிலடி) மற்றும் பொற்பதி வீதியில் அமைந்துள்ள வீடு மாதாந்த வாடகை அடிப்படையில் கொடுக்கப்படும்.

**தொடர்பு - 077 54 51 358, 077 610 5771**

### பணியாளர் தேவை

யாழ். நகரில் உள்ள கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு பின்வருவோர் தேவை. * விற்பனையாளர் * கணக்காளர் * உதவியாளர் * கணினி அறிவுடையவர்கள் ஆகியோர் தேவை. (சம்பளம் 15000 தொடக்கம் 25000 வரை)

**தொடர்பு - 077 3611282**

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண்கள் தேவை. (சம்பளம் 18000 - 25000 வரை)

**தொடர்பு - 076 8514296**

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பழைய AGA Office க்கு முன்னால் 6 பரப்பு 8 1/2 குளி காணி விற்பனைக்கு உண்டு. (இரண்டாக பிரித்தும் கொடுக்கப்படும்.)

**தொடர்பு - 075 248 0527**

### விற்பனைக்கு

TATA Batta ஒன்று விற்பனைக்கு உண்டு.
நல்ல பராமரிப்பு 2010 Model PP - XXXX
விலை 650, 000 /=

**தொடர்பு - 077 159 7587, 077 210 6324**

### விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் 15 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட மூன்று கடைகளும் 34 அடி அகலமும் 200 அடி நீளம் கொண்ட இரு கடைகளும் யாழ். காக்கை தீவு முன்பாக கல்லுண்டாய் வீதியில் 120 பரப்பு வெற்றுக் காணியும் யாழ். கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 0777 23 25 35**


ES Printers




# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.com

# மனோதிடமே வெற்றியின் ஆயுதம்

## பலவீனங்களை பலமாக சமத்துவம் செய்வோம்

சி.நற்குணலிங்கம்

**தனித்துவம்**

படைப்பார்ந்து ஆறறிவுடைய தனிமங்களாக சிறந்து விளங்கும் மனிதர்கள் தனித்துவமானவர்கள். பகுத்தறிவின் பால் ஆளுமைச் செறிவுடையவர்கள். பலம், பலவீனம் என்ற நேர் எதிர்மறைச் சமத்துவங்களை இயல்பாய் உடையவர்கள்.

**செயல்வினை**

இதன்வழியே பலத்தை உணர்ந்துகொண்டு செயலாற்றவும் பலவீனங்களை அலட்சியப்படுத்தவும் கற்றுக்கொள்ள வேண்டும். பலவீனங்களைக் கண்டு ஒருபோதுமே பய உணர்வுகொள்ளக் கூடாது. பலத்தை செயல் வினையாக்கும் போது பலவீனங்கள் மறைந்துபோகும். சாதனைகள் தாமாகவே நிலைபெறும். சான்றோரின் வாழ்க்கைப் பயணங்கள் இதனையே எடுத்துரைத்து நிற்கின்றன. ஆக, எமை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்கின்ற பலவீனங்களை உணர்ந்துகொண்டால் அவற்றிலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும். பலவீனங்களை வளர்த்துக்கொள்ளாது அவற்றைச் சாதகமான வழிமுறைகள் ஊடு பலம் பெறச் செய்ய வேண்டும்.


**உயர்வு**

இந்தநிலையிலே அவமானத்தை பலவீனமாக கருதியவர்கள் பலரும் வாழ்வில் பலவீனமடைந்தவர்களாக மாற்றங்கண்டுள்ளனர். உணர்ச்சியுள் கட்டுண்டு போய்விடக்கூடாது. சிந்தனைத் திறன் கொண்டு மீண்டெழ முயற்சிக்க வேண்டும். ஆம், "சிறுவன் ஒருவன் தந்தையாரோடு நகரிலுள்ள பிரமாண்டமான கடைத் தொகுதிக்குச் சென்றான்.

அதன் அமைவு கண்டு அதுவரையும் கண்டு கொள்ளாத வியப்பையும் ஆதங்கத்தையும் தந்தையாரிடம் வெளிப்படுத்தினான். மறுநாள் தாயாரின் பிறந்த தினம் என்பதை தெரிந்துகொண்டு பரிசுப் பொருளை வாங்கித் தாயாரை ஆச்சரியத்தில் ஆழ்த்த விருப்பம் கொண்டான். அவன் பார்த்து வியந்த கடைத் தொகுதிக்கே தாயாரை அழைத்துச் சென்றான். கடையிலுள்ள பொருள்களை விழித்து விழித்துப்பார்த்தான். ஆனாலும் விருப்பமான பொருளை வாங்குவதற்கு போதுமான பணம் இருக்கவில்லை. ஏது செய்வதென்று அறியாது தடுமாறினான்.

பின்பு தன்னை ஆசுவாசப்படுத்தியவனாய் தன் குடும்ப நிலை தொடர்பில் கடை முதலாளியிடம் விளக்கம் தந்தான். ஆனாலும் திருட வந்தவன் சாமர்த்தியமாக கதை சொல்லி தப்பிக்க முயற்சி செய்கிறான் என எண்ணி உதவியாளர்களைக் கொண்டு அவனை நையப்புடைத்து, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார் முதலாளி. அவமானத்தோடு வீதியில் வந்து விழுந்தான். தான் கண்டுகொண்ட அவமான உணர்வை முயற்சியாக்கினான்.

மலிவுவிலையில் பொருள்களை விற்பனை செய்யும் கடைகளை நாடெங்கும் உருவாக்கினான். கால ஓட்டத்தில் பெரிய கோடீஸ்வரனானான். நியூயோர்க் நகரிலும் பொருள்களை விற்பனை செய்யும் பல மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்தான். அமெரிக்க அரச அதிபர் வூட்ரோவில்சன் அந்தக் கடைத் தொகுதியை ஆரம்பித்து வைத்தார்." என்பது நடந்து முடிந்த உண்மைச் சம்பவம். இங்கு அந்தச் சிறுவன் தான் கண்ட அவமானத்தை தாழ்வு மனப்பான்மையாக கொண்டிருந்தால் இவ்வளவு பெரிய சாதனையை நிலைநாட்டியிருக்க முடியாது. ஆகவே பகுத்தறிவான சிந்தனையும் செயற்றினும் வலுப்பெறும் போது நாமும் வெற்றியை அடைந்துகொள்ளலாம்.



> “தோல்வியைக் கண்டு ஒருபோதுமே துவண்டு போகாதே. தோல்வியைப் பலவீனமாகக் கருதாதே. தோல்விகள் தற்காலிகமானவை. தோல்வி வெற்றிக்கான முதல்படி என்பதை உணர்ந்துகொள்ளத் தலைப்படுவோம். தோல்வி உன்னை சந்திக்க முன்பு நீ சிந்தனை கொண்டால் தோல்வி உன்னை சந்திக்கச் சிந்திக்கும். முடியுமா என்பது தோல்விக்கு முன்வரும் தயக்கம். முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கான தொடக்கம். இதனை மனம்கொண்டால் பலவீனம் பலவீனமாகும்.”

**வலிதான செயல்**

இங்கு அழுகை என்ற மிகை உணர்வின் வெளிப்பாட்டை ஒருபோதுமே பலவீனமாக கருதிவிடக்கூடாது. சோகத்தில் வார்த்தைகள் மொழியின்றி உறங்கினும், உணர்வுகள் உணர்திறனின்றி கிடப்பினும் வலிகொண்ட இதயம் மன மோகனங்களை ஆர்ப்பரித்து கதறி அழவும், கண்ணீர் சிந்தவும் பின்நிற்பதில்லை. பலரது அனுபவ வாக்காக இது அமைந்துள்ளது. ஆப்ரகாம் லிங்கன் தன்னுடைய மகனுக்கு பாடம் சொல்லித் தருகின்ற ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடும் போது, "நீங்கள் அவனுக்கு கற்றுக் கொடுக்கும் விடயங்களில், துயரமான வேளைகளில் கண்ணீர் சிந்துவதில் தவறில்லை என்றும் கற்றுக் கொடுங்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். அழுகை உடலுக்கு ஆரோக்கியம் தரும் என விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அழுகையை ஒருபோதும் பலவீனம் என தப்பாக எடைபோடக்கூடாது. ஏனெனில் அது அன்பின் வெளிப்பாடாகவும் அமைவுபெறுகிறது.

திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள். மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொண்டுவர முயற்சியுங்கள். மன தைரியம் பலவீனங்களை உடைத்தெறியும் வல்லமை கொண்டது. வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு பலவீனம் ஒரு தடையாக அமையாது. முயற்சியே பக்கபலம். அந்த முயற்சியே வெற்றிப் பாதையின் இரகசியம். பலவீனத்தைத் தவிர்க்க ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு நம்மை பழக்கப்படுத்தியும் வழக்கப்படுத்தியும் கொள்ள வேண்டும்.

**மெய்யுணர்வு பெறுவோம்**


கோபம் என்பதும் பலவீனத்தின் வெளிப்பாடே. சுயநலம் மற்றும் நிறைவேறாத ஆசையின் வெளிப்பாடாகவும் இது முன்னிலை பெறுகிறது. கோபம், எரிச்சல், வெறுப்பு, சிடுசிடுப்பு போன்ற உணர்வெழுச்சிகளை அடைவதால் சக்தி அனைத்தையும் இழந்துவிடுகிறோம். இவை மனதில் தோன்றி உடலியல் மாற்றங்களையும் அதன்வழி பாதிப்புகளையும் ஏற்படுத்திவிடுகின்றன. இத்தகு உணர்வுகளின் மேலீடு உச்சம் பெறும் போது வன்சொற்களைத் தவிர்த்து, நயமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்த சமுதாயத்திலிருந்து புறமொதுக்கப்படும் நிலை உருவாகும். கோப உணர்வு கொந்தளிக்கும் போது தலைகுனிந்து கொள்பவன் வாழ்க்கையில் நிமிர்ந்து நடக்கிறான். மாறாக கோப உணர்வு கொந்தளிக்கும் போது செந்தளிப்பாய் நிமிர்ந்து நடப்பவன் வாழ்க்கையில் தலைகுனிந்தே நடக்கிறான்.

பலவீனங்கள் தலைவலி, தலைச்சுற்று, உடல் நடுக்கம், உறக்கமின்னை, சோர்வு என்பவற்றை இலவசமாக தரக்கூடியன. பலவீனங்கள் குடும்ப மகிழ்ச்சியை, சமூக நேசிப்பை, சமூக மதிப்பை, முன்னேற்றத்தை, தனி மனித மகிழ்ச்சியை, குடும்ப உறவை, உறவினர் உறவை, உளவளத்தை, உடல் ஆரோக்கியத்தை பொதுவாகவே பாதிக்கக்கூடியவை. பலவீனங்கள் எந்த வடிவில் வந்தாலும் அது இறுதியில் பலவீனமான சமூகத்தையோ அல்லது நாட்டையோ உருவாக்கிவிடும்.

ஆக, 'விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, எதற்கும் அடிமையாகாதிருத்தல், தீய பழக்கங்களை நாடாதிருத்தல், கூடா நட்பைத் தவிர்த்தல், முரண்பாட்டில் ஈடுபடாதிருத்தல், பொறுமையைச் கையாளுதல், என்னால் முடியும் என்ற நம்பிக்கை, மனித நேயத்துடன் நடத்தல், பலவீனத்தை பலமாக மாற்றும் திறன்' ஆகியவற்றை மனதில் நிலை பெறச்செய்து வாழப் பழகுவோம்.

**பலம் என்ற புயங்களை உயர்த்துவோம்**

அதுவிதமே தோல்வியைக் கண்டு ஒருபோதுமே துவண்டு போகாதே. தோல்வியைப் பலவீனமாகக் கருதாதே. தோல்விகள் தற்காலிகமானவை, தோல்வி வெற்றிக்கான முதல்படி என்பதை உணர்ந்துகொள்ளத் தலைப்படுவோம். தோல்வி உன்னை சந்திக்க முன்பு நீ சிந்தனை கொண்டால் தோல்வி உன்னை சந்திக்கச் சிந்திக்கும். முடியுமா என்பது தோல்விக்கு முன்வரும் தயக்கம். முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கான தொடக்கம். இதனை மனம்கொண்டால் பலவீனம் பலவீனமாகும்.



## நல்லூர் கந்தன் 4 ஆம் நாள் திருவிழா

### வண்ண மயிலேறும் வடிவழகன்

வண்ண மயிலேறும் வடிவழகன்
அன்பர் நெஞ்சத்தில் வாழும் ஆறுமுகன்
தேவர் சிறைமீட்ட செந்தூரன்
முத்தமிழ் சேர்ந்த இனிய தமிழின் தலைவன்
பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனின் மருமகன்
சேல்ஆர் வயல் பொழில் சூழ் செங்கோடன்
வாரி குளித்த வேல் கொற்றவேலைக்
கைகளில் ஏந்தியவன்
தந்தைக்கு பிரணவத்தை உரைத்த குருநாதன்
வானோர் கொடியவினை தீர்த்த வரதன்
மக்களின் ஊழ்வினை தீர்ப்பதற்கு
மரகதமயிலேறி வள்ளி தெய்வானை அழகியலொடு
சக்தியின் சீர்கொண்டு விதிவலம் வருகிறான்

வ. ஸ்ரீநாகபூசணி, *திருநெல்வேலி*

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பயங்கரவாத எண்ணக்கருவும் அமெரிக்காவின் நகர்வுகளும்

ஒரு தலைநகர் அதிகளவில் தாக்குதலுக்கு உட்படுகிறது என்றால், அது காபூலாகத்தான் இருக்கமுடியும். ஒருநாடு ஒவ்வொருநாளும் ஓயாது பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்கொள்கிறது என்றால், அது ஆப்கானிஸ்தானாகத்தான் இருக்க முடியும். எவருக்கும் இம்மியளவும் பாதுகாப்பு இல்லை என்கிற நிலைதான் தற்போது ஆப்கானிஸ்தானிலும் அதன் தலைநகர் காபூலிலும் உள்ளது.

இந்த வருடத்தில் மட்டும் சுமார் 90 தாக்குதல்களை காபூல் மட்டும் எதிர்கொண்டுள்ளது. இது உத்தியோகபூர்வமான தகவல். ஆங்காங்கே நடக்கும் குறுநேர துப்பாக்கிச்சூட்டுக்களையும்கணக்கெடுத்தால்இந்த எண்ணிக்கை சுமார் 200இனை எட்டும் என்கின்றன பதிவுகள். ஆப்கானிஸ்தானில் சுமார் 80 பாடசாலைகள், கல்விநிறுவனங்கள்இந்தவருடம்தாக்குதலுக்கு உட்பட்டுள்ளன. கடந்தபுதன்கிழமைகூட ஒருகல்விநிறுவனம்அங்குதாக்குதலுக்குஉட்பட்டது. இதனால் 48 மாணவர்கள் குருதிச்சகதியில் மடிந்து போயினர். இதன்விளைவாகசுமார்ஆயிரம்பாடசாலைகள்ஆப்கானிஸ்தானில் தற்போது மூடப்பட்டுள்ளன. சில பாடசாலைகளில் துப்பாக்கி முனைகளின் பாதுகாப்புக்கு மத்தியில் மாணவர்கள் பேனா முனைகளைப் பிடிக்கின்றனர். ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற தாக்குதல்களில் சுமார் 90 வீதமான தாக்குதல்களில் தலிபான் ஆயுதக் குழு தொடர்புபட்டுள்ளது. இத்தனைக்கும் இந்த அமைப்புக்கு எதிராக அமெரிக்கா போரை அறிவித்துச் செயற்பட்டு வருகிறது என்பது கசப்பான உண்மை.


2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர்மாதம் 11 ஆம்திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள், அமெரிக்க இராணுவத்தலைமையகமானபென்டகன்ஆகியவற்றின் மீது அல்குவைதா அமைப்பு வானூர்திகளால் மோதித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலையடுத்து 'பயங்கரவாதம் என்ற எண்ணக்கருவுக்கு எதிரானபோரை' அறிவித்துச்செயற்பட்டது அமெரிக்கா. அல்குவைதாவுக்கு ஆதரவுநிலைப்பாட்டைப்பேணியதற்காக, தலிபான்களுக்கு எதிராகவும் அமெரிக்கா போரை அறிவித்தது. ஆனால் இந்தப் போர் இன்று எந்தளவுதூரம் வெற்றியளித்துள்ளது என்பதை சிந்திக்க வேண்டியது இன்றியமையாததாகிறது.

ஆப்கானிஸ்தானின் அதிபர் அஸ்ரப் கானி, தலிபான்கள் ஆயுதத்தைக் கைவிட்டு அரசியல் கட்சியாக பரிணாமம் அடையவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ஒருவேளை அவரின் அழைப்பை தலிபான்கள்ஏற்றுக்கொண்டால்அது அமெரிக்காவுக்குப் பெரியதொரு தோல்வியாகவே அமையும். சுருங்கச் சொல்லின், சுமார் இரண்டு தசாப்த காலமாகப் போரிட்டு இறுதியில்தலிபான்களுக்குஓர்அந்தஸ்தை அமெரிக்கா தேடிக்கொடுத்ததுபோல் அமையும்.

ஒருசில ஆபிரிக்க நாடுகளிலும், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்ஆகியவற்றிலும்புரையோடியிருந்த இந்தப் பயங்கரவாதம் இன்று ஆசிய வட்டகையிலும், மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும் இவ்வளவு ஏன், ஐரோப்பாவிலும்கூட வேரூன்றியுள்ளது, எனின் அமெரிக்கா அறிவித்த பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கும்அதன்தொடர்ச்சியாக, சுமார்இருதசாப்த காலமாக முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளுக்குமான பயன்தான் என்ன? ஆக, 'ஆயுதகலாசாரம்' என்பது இன்று 'உலகப் பரவலாக்கம்' என்கிற நிலையை எட்டியுள்ளது. கட்டுக்குள் அடங்காத நிலையை அது கண்டுள்ளது என்பது நிதர்சனமானதும், கசப்பானதுமான உண்மை.

# பொதுமக்களைப் பற்றியும் படையினர் சிந்தித்து பார்க்க வேண்டும்

சேரலாதன்



பொதுமக்கள் தொடர்பாகச் சிந்தித்தால், இராணுவம் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிநேரிடும். இவ்வாறு கூறியிருப்பவர் வேறு எவருமல்லர். முன்னாள் அரசதலைவரான மகிந்த ராஜபக்சதான் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

இறுதிப்போரை நடத்தி வெற்றி கண்டவர் என்ற வகையில் அது தொடர்பாகக் கூறுவதற்கு இவரைத் தவிரப் பொருத்தமானவர்கள் வேறு எவரும் இருக்க இயலாது. பொதுமக்களுக்குச் சிறு பாதிப்புக்கூட இல்லாமல், இறுதிப்போரை நடத்தி வெற்றி பெற்றதாகக் தமக்குத்தாமே புகழாரம் சூட்டியவரும் இவர்தான். ஆனால் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் இறுதிப்போரின்போது உயிரிழக்க நேர்ந்தமைக்கான காரணம் என்ன என்பதை இவர் விளக்கிக் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

> இறுதிப்போர் இடம்பெற்ற வேளையில், நாட்டின் வட பகுதி தாங்க முடியாத சோகத்தில் மூழ்கிக் கிடந்தது. எங்கு பார்த்தாலும் அழுகைக் குரல்கள் கேட்டன. வடக்கு ஒரு பிணக் காடாகவே மாறியது. இந்த நிலையில் தெற்கில் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அங்குள்ள மக்கள் தமது பாரம்பரிய வழக்கப்படி பாற்சோறு தயாரித்துப் பலருக்கு வழங்கித் தமது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர். அப்போது அரச தலைவராக இருந்த மகிந்த ஒரு வெற்றி வீரன் போன்று வலம் வந்து கொண்டிருந்தார்.

### இறுதிப்போரின்போது பொதுமக்களது பாதுகாப்புக் குறித்து படையினர் அக்கறை காட்டவில்லை

ஒரு போர்க்களத்தில் இரு வேறு தரப்பினர்களும், தமக்கிடையே ஆக்ரோசமாகப் போரிடுவது வழக்கமான ஒன்றுதான். இங்கு பொது மக்களின் பிரசன்னம் இருக்க மாட்டாது. ஆனால் மக்கள் நெருக்கமாகக் குடியிருந்த குடியிருப்புப் பகுதிகளில்தான் இறுதிப்போர் இடம்பெற்றது. இதனால் இலங்கைப் படையினர் புலிகளுக்கு எதிராக நடத்திய விமானத் தாக்குதல்களிலும், எறிகணை வீச்சுக்களிலும் சிக்கி ஏராளமான பொதுமக்களே கொல்லப்பட்டனர். பொதுமக்களைக் குறிப்பிட்ட இடத்தில் பாதுகாப்பாகத் தங்குமாறு கூறிவிட்டு, அந்த இடங்கள் மீதும் நடத்தப்பட்ட படையினரின் தாக்குதல்களில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். இது மட்டுமல்லாது, போர் உக்கிரம் அடைந்தபோது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினரின் பகுதிக்குள் அடைக்கலம் தேடிச் சென்ற பல இளைஞர்களின் நிலை தொடர்பாக இதுவரை ஒன்றுமே தெரியவில்லை. அவர்களது உறவினர்கள் அவர்களை இன்னமும் தேடிக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

வெள்ளைக்கொடிகளை ஏந்தியவாறு படையினரிடம் சரணடையச் சென்றவர்களுக்கு என்ன நடந்தது? இசைப்பிரியாவுக்கு நேர்ந்த கொடுமையும், அவலமும் நிறைந்த சாவுக்கு யார் பொறுப்பு? விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரது மகன் என்ற ஒரே காரணத்துக்காக, ஒன்றுமறியாத அப்பாவிச் சிறுவனான பாலச்சந்திரனைப் படுகொலை செய்தமை நியாயமானதா? படையினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் நிலையென்ன? படையினர் வசம் சிக்கிக்கொண்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் குரூரமான முறையில் கொல்லப்பட்டமை சர்வதேச விதிமுறைகளுக்குள் அடங்குகின்றதா? இவ்வாறெல்லாம் பல நூற்றுக்கணக்கான கேள்விகள் எழுகின்றன. ஆனால் இவற்றுக்கெல்லாம் ஒருபோதுமே விடை கிடைக்கப் போவதில்லை.

### இறுதிப்போர் வேளையில் நாட்டின் வடபகுதி சோகத்தில் மூழ்கிக்கிடந்தது

இறுதிப்போர் இடம்பெற்ற வேளையில், நாட்டின் வட பகுதி தாங்க முடியாத சோகத்தில் மூழ்கிக் கிடந்தது. எங்கு பார்த்தாலும் அழுகைக் குரல்கள் கேட்டன. வடக்கு ஒரு பிணக் காடாகவே மாறியது. இந்த நிலையில் தெற்கில் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அங்குள்ள மக்கள் தமது பாரம்பரிய வழக்கப்படி பாற்சோறு தயாரித்துப் பலருக்கு வழங்கித் தமது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர். அப்போது அரச தலைவராக இருந்த மகிந்த ஒரு வெற்றி வீரன் போன்று வலம் வந்து கொண்டிருந்தார். இந்த வேறுபட்ட நிலை, போர்கள் இடம்பெற்ற வேறுநாடுகளிலும் காணப்படவில்லை. ஒரு நாட்டின் இரண்டு வெவ்வேறு பகுதிகளில்தான் இந்த அழுகைக் குரல்களும், வெற்றிக் கோசமும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களைப் பாதுகாப்பதற்காகவே படைப் பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன. படைவீரர்கள் மக்களின் நலன்களைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டவேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்கள். இனரீதியான பாகுபாடு அவர்களிடம் இருத்தல் ஆகாது. சகல மக்களையும் சமனாகப் பார்க்கின்ற மனப்பக்குவம் அவர்களிடம் இருக்க வேண்டும். ஆனால் இவையெல்லாம் இந்த நாட்டில் காணக் கிடைக்காதவை.

அன்று இங்குள்ள தமிழர்கள் அனைவருமே புலிகளாகத்தான் பார்க்கப்பட்டனர். இதனால் அவர்களைக் கொல்வது புலிகளைக் கொல்வதற்குச் சமனானது என்ற எண்ணமும் நிலவியது.

### இறுதிப்போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் எவரும் இன்றுவரை தண்டிக்கப்பட்டதில்லை

இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் பொறுப்பானவர்களில் ஒருவர் தானும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இவர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளில் தற்போதைய அரசு முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகும். கலிங்கத்துடனான போரின்போது அசோகச் சக்கரவர்த்திக்குக் கிடைத்த ஞானம் இறுதிப் போரின்போது மகிந்தவுக்குக் கிடைத்திருந்தால், நாட்டில் எத்தனையோ நல்ல மாற்றங்களைக் கண்டிருக்க முடியும். ஆனால் சகலதும் தலைகீழாக இங்கு நடந்து முடிந்துவிட்டன.

பௌத்ததர்மக் கொள்கைகள் கடைப்பிடிக்கபட்டிருந்தால், இறுதிப்போரின்போது ஏராளமான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால் ஒரு பௌத்த நாட்டில் அது நிறைவேறாமல் போனமை வேதனைக்குரியது.

மகிந்த போன்ற பெரிய தலைவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு இனியாவது மதிப்பு வழங்க வேண்டும். கொடிய அந்தப்போரை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகின்றமை அவரது தகுதிக்குப் பொருத்தமான ஒன்றல்ல.

பொதுமக்கள் தொடர்பாகவும் படையினர் பொறுப்புடன் செயற்படவேண்டுமென்பதை அவர் புரிந்து கொண்டால் அதுவே போதுமானது.

# வாஜ்பாயும் கருணாநிதியும்

தேவநாயகம் தேவானந்த்


இந்தியா கண்ட சிறந்த பிரதமர்களில் ஒருவர் அடல் பிகாரி வாஜ்பாய். கடுமை, கருணை, நிர்வாகத்திறன் போன்றவை வாஜ்பாயை சிறந்த தலைவராக இந்திய வரலாற்றில் நிலைநிறுத்தின.

**நாட்டுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் வாஜ்பாய்**


மத்திய பிரதேசத்தில் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதியன்று ஆசிரியரொருவரது மகனாகப் பிறந்தவர் அடல் பிகாரி வாஜ்பாய். தனது 93வது வயதில் சாவடைந்தார். கருணாநிதியின் மறைவுக்குப்பின்னர் கடந்த 16ஆம் திகதி அவர் சாவடைந்தார். கருணாநிதி போன்று நீண்ட காலம் அரசியலில் பணியாற்றி ஓய்ந்திருக்கிறார். இந்திய நாட்டுக்காக, தனது வாழ்நாள் முழுமையையும் தனிமரமாக இருந்து, அர்ப்பணித்திருக்கிறார். திருமணம் செய்துகொள்ளாது அவர் இந்தியத் தேசிய அரசியலில் தமக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தவர். கருணாநிதி தனது பெருத்த குடும்பத்துடன் நீண்ட காலம் மாநில அரசியலில் பணியாற்றியவர். அதன் வழி தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்தியவர். இந்த இரு தலைவர்களும் அரசியலில் இணைந்து பணியாற்றியிருக்கிறார்கள். வாஜ்பாயின் மறைவை அண்டிய இந்த நாள்களில், கருணாநிதிக்கும் வாஜ்பாய்க்குமான தொடர்பு இங்கு விவரிக்கப்படுகிறது..

வாஜ்பாய் விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்றதன் மூலம் இந்திய அரசியலுக்குள் நுழைந்தவர். 1942 ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்குபற்றியதன் மூலம் அரசியலில் நுழைந்தார்.

இந்தயாவில் மூன்று முறை பிரதம மந்திரியாகப் பணியாற்றியிருக்கிறார். இந்திய தேசிய காங்கிரஸ் அல்லாத அரசொன்றின் பிரதமராக ஐந்தாண்டுகால ஆட்சியைப் பூரணப்படுத்தியவர் என்ற பெருமை இவருக்குண்டு. 1996ம் ஆண்டு மே 16ஆம் திகதி, முதல் முறையாக வாஜ்பாய் பிரதமராகப் பதவி ஏற்றார். ஆனால் அவரது அரசு 13 நாள்கள் மட்டுமே நீடித்தது.



தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-II



பின்னர், இரண்டாவது முறையாக, 1999ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது. இந்திய மத்திய அரசு ஒன்று, நம்பிக்கை வாக்கெடுப்பில் கவிழ்க்கப்பட்டது அதுதான் முதன் முறை. வாஜ்பாயின் இரண்டாவது ஆட்சி 13 மாதங்கள் மட்டுமே நீடித்திருந்தது.

**தமது ஆட்சிக் காலத்தில் பல்வேறு அரசியல் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டவர் வாஜ்பாய்**

வாஜ்பாய் தனது ஆட்சிக்காலத்தில் அதிரடி நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டார். 1998ம் ஆண்டு மே மாதம் பதினொராம் தேதி பொக்ரானில் உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி இந்தியா அணுகுண்டுச் சோதனை நடத்தியது. அது இந்தியாவின் இரண்டாவது அணுகுண்டுச் சோதனையாகும். பாகிஸ்தான் ராணுவம், கார்க்கில் பகுதியில் ஊடுருவித் தாக்குதல் நடத்தியது. இதற்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்து, பாகிஸ்தான் இராணுவத்தை விரட்டியது. இந்தப் போரில் வாஜ்பாய் தலைமையிலான அரசு வெற்றி கண்டது.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 2002ஆம் ஆண்டு குஜராத்தில் மதக் கலவரம் ஏற்பட்டது. அப்போது குஜராத் முதல்வராக இருந்தவர், தற்போதைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியாவார். அப்போது 'ராஜ தர்மத்துடன் நடந்து கொள்ளுங்கள்' என்றுமோடியை எச்சரித்தார். கலவரத்துக்குப் பொறுப்பேற்று முதல்வர் பதவியிலிருந்து தாமாக முன்வந்து விலகிக் கொள்ளுமாறு மோடிக்கு நெருக்கடி கொடுத்தார். ஆனால் அப்போது மோடிக்குப் பக்கபலமாக இருந்து அவரைப் பாதுகாத்தவர் பா.ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானி.

வாஜ்பாயைப் பிடிக்காத மனிதர்களே இருக்க முடியாது என்று தான் சொல்ல வேண்டும். பா.ஜ.க வினுடைய பரம எதிரிகள்கூட வாஜ்பாயை ஏற்றுக் கொண்டார்கள். எல்லோர் மனதையும் ஈர்த்த ஒரு தலைவர்.. அப்படிக் கூறக் காரணம் அவருடைய அமைதியான, அதே சமயம் ஆக்கப்பூர்வமான, நடவடிக்கைகள்தான். திருமணம், குடும்பம் என்றில்லாமல் தன்னுடைய வாழ்க்கையை முழுமையாக இந்திய சமூகத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டவர். 1986 ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் திகதி மதுரையில் கருணாநிதி தலைமையில் 'டெசோ' என்ற அனைத்துக்கட்சி ஈழஆதரவு மாநாடு நடைபெற்றது. இதில் வாஜ்பாய் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தினார்.

**எவரது அழுத்தத்துக்கும் தலைசாய்க்காது துணிச்சலாகச் செயற்பட்டவர் வாஜ்பாய்**

1999 ஆம் ஆண்டு, இந்திய அரசியல் அமைப்பின் 356 வது பிரிவைப் பயன்படுத்தி, தமிழகத்தில் இருந்த தி.மு.க அரசைக் கலைக்க வேண்டுமென்று ஜெயலலிதா வாஜ்பாய்க்கு அழுத்தம் கொடுத்தார். ஆனால் அதற்கு வாஜ்பாய் சம்மதிக்கவில்லை. இதனால் ஜெயலலிதா, பா.ஜ.க.வுக்குத் தாம் கொடுத்துவந்த ஆதரவை விலக்கிக் கொண்டார். பா.ஜ.க ஆட்சி கவிழ்ந்தது. தனது ஆட்சி கவிழ்ந்தாலும் தவறான வழியில் கருணாநிதியின் ஆட்சியைக் கலைக்கமாட்டேன் என்ற உறுதியோடு இருந்தார் வாஜ்பாய். இதற்குக் காரணம், கருணாநிதியும் வாஜ்பாயும் ஒருவர் மீதொருவர் வைத்திருந்த நம்பிக்கையும் மரியாதையும் தான் என்று கூறப்படுகிறது. பா.ஜ.க. மதவாதக் கட்சியாக தன்னை நிலைநிறுத்திய கட்சி. தி.மு.க பகுத்தறிவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கட்சி. அதிலும் கடவுள்மறுப்புக் கொள்கையை அதன் அடிப்படையாகக் கொண்ட கட்சி. இருந்த போதிலும், இரண்டு கட்சிகளும் கூட்டணி வைத்துக்கொண்டன. அதற்கு அடிப்படைக்காரணம் வாஜ்பாய் என்ற ஆளுமை எனலாம். 'பா.ஜ.க. என்னும் கெட்ட மரத்தில் காய்ந்த ஒரு நல்ல கனிதான் அடல் பிகாரி வாஜ்பாய்' என்று அவரைப்பற்றி கருணாநிதி அப்போது குறிப்பிட்டார்.

## ஆசிரியருக்கான கடிதம்

# இளைய சமுதாயத்தவர்களுக்கு எமது மூத்தோர்களது நல்வழிகாட்டல் அவசியம்

இன்றைய வடபுல வாழ்வியலில் இளையோர் நெறிகெட்டு விட்டார்கள். தடம் மாறிப் பயணித்து தலை கீழாய் வாழ்கிறார்கள் என்ற விமர்சனத்தை எல்லோரும் எடுத்த எடுப்பிலேயே வெளிப்படுத்தி மகிழ்கிறார்கள்.

இந்த நிலைக்கு எவர்தான் காரணம்? மூன்று தசாப்தகாலப் போர், அதன் பின்னரான நாட்டுச் சூழல், வெளிநாட்டுப் பொருளாதாரம், தென் இந்தியத் திரைப்படங்களின் ஈர்ப்பு, இணையத்தளங்கள், பாடசாலைகளின் கட்டமைப்பில் ஏற்பட்ட தோல்விகள், மதம் சார்ந்த செயற்பாடுகளில் பின்னடைவுகள், போதைப் பொருள்களின் செல்வாக்கு என்று இன்னோரன்ன காரணங்களை நாம் முன்வைக்கலாம்.

இவற்றிற்கு அப்பால், எமது பாரம்பரியங்களில் ஒன்றான 'மூத்தோர் சொல் அமிர்தம்' என்ற நிலை இன்று என்ன நிலையில் உள்ளது?. அதற்கு ஏற்ப பெரியோர்கள், மூத்தோர்கள், தமது வாழ்வை ஒழுங்குபடுத்திப் பயணிக்கிறார்களா? என்ற கேள்விகளை எவரிடம் சென்று கேட்பது என்றே தெரியவில்லை. சமூகத்தில் 'இளையோருக்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டிகளாகவும், நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் வாழ்ந்துகாட்ட வேண்டியவர்கள், தத்தமது வகிபாகங்களுக்கு உரிய பொறுப்பை நிறைவேற்றுகிறார்களா? என நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, சமூக நலனுக்கு முன்னுரிமை வழங்கல் போன்ற பண்புகள் இன்றைய மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், ஆலய அறங்காவலர்கள், கல்வித் துறையினர், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள், போக்குவரத்து சேவையினர், வைத்தியத் துறையினர், ஓய்வூதியர்கள் என பொறுப்பான இடங்களில் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் பெரியோர்களிடம் காணப்படுகின்றனவா என எண்ணத் தோன்றுகிறது. இன்றைய இளையோர்களுக்கு சரியான தீர்க்க தரிசனம் நிறைந்த பாதையை காட்ட இவர்கள் தவறி வருகிறார்களா? சமூகத்தில் தமது இடத்திற்கான மதிப்பை இழந்து போவதற்கு தாமே காரணர்களாகி விட்டது ஏன்?

எமது சமூகத்தில் இளையவர்களுக்கு முன்னுதாரணம் காட்டக்கூடியதாக எத்தனை அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், கல்வித் துறையினர் இன்னமும் சுருங்கச் சொல்லப்போனால், தமது பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக நடக்கக்கூடிய பெற்றோர்களே இன்று எம் மத்தியில் இல்லாத பரிதாப நிலை மாற வேண்டும். இளையோர்க்கு சரியான வாழ்க்கைப் பாதையைக் காட்டி, அவர்களை வாழ்க்கையில் உயரவைக்க எமது மூத்தோர் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.

காரை யோகா, *காரைநகர்*



378


# நித்திய சுகம்

உடலே கோயில்

# நீரிழிவு தொடர்பான அறிவைப் பெறுதல்

ச.சுதாகரன்

- அடிக்கடி சிறுநீர் கழித்தல், தண்ணீர் குடித்தல், தேகம் மெலிந்தும் சோர்ந்தும் காணப்படுதல் போன்ற அறிகுறிகளை கிரேக்க மொழியில் 'டயபிற்றீஸ்' என அழைக்கின்றனர். அதன் தொடர்நிலையாக அனைத்து மொழிப் பயன்பாடுகளிலும் இதேவிதமாகவே நீரிழிவை பெயர் குறிப்பிடுகின்றனர்.
- சதையியில் உள்ள 'ஐலட்கலன்' (லன்கர் கான்ஸ்) இல் இருந்து இன்சுலின் என்ற ஓமோன் சுரப்பு வெளிவருகிறது.
- இவை குருதியில் உள்ள குளுக்கோசை உடலில் உள்ள கலங்களுக்கு உட்செலுத்துவதில் உதவிபுரிகின்றன. உடல் உறுப்புக்களுக்கு சக்தியை உருவாக்க குளுக்கோஸ் அவசியமானது. இன்சுலின் இல்லாதுபோனால் உடல் இயக்கத்துக்கான சக்தி உருவாக்கம் தடைப்படும்.
- புரத மூலக்கூறான இன்சுலின் 51 அமினோ அமிலங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இருசல்பைட்டு இணைப்பு மூலம் 'ஏ' எனும் சங்கிலியை 21 அமினோ அமிலங்களும், 'பி' எனும் சங்கிலியை 30 அமினோ அமிலங்களும் இணைந்து வடிவமைப்பு பெற்றுள்ளன.
- கலங்களுக்கு வெளியே இருக்கும் உள்வாங்கியான பூட்டை இன்சுலின் என்ற திறவுகோலின் உதவி கொண்டு திறந்து குளுக்கோசை கலங்களுக்கு செலுத்தி சக்தியை கொடுக்கிறது.
- இன்சுலின் நாம் உண்ணும் உணவை கொழுப்பாகவும் புரதமாகவும் மாற்றுவதற்கும் உதவிபுரிகிறது.
- உடற்பயிற்சி செய்யும்போது உடற்கலங்கள் புதுப்புது உள்வாங்கிகளை ஆயிரக்கணக்கில் பெருக்கிக் கொள்கின்றன. இவை கலங்களுக்கு வெளியில் இருக்கும் இன்சுலினை எதிர்பார்த்து காத்திருக்கின்றன. இதனால் இன்சுலினின் எதிர்ப்பு குறைகின்றது. இன்சுலின் றெசிஸ்ரென்சினால் குளுக்கோஸ் உள்ளே செல்ல இன்சுலின் உதவிபுரிகிறது. இதன்மூலம் சக்தி உண்டாகி தசைநார்கள் செயற்படுகின்றன.
- $BMI = \frac{Weight\ (Kg)}{Height^2\ (M)}$
- Severelly Under Weight 16Kg/$m^2$
  Under Weight 16 - 18.5Kg/$m^2$
  Normal 18.5 - 22.9Kg/$m^2$
  Over Weight 23 - 24.9Kg/$m^2$
  Obece 25Kg/m2 இற்கு மேல்
- மனித உடலானது எவ்வளவு கலோரி சக்தியை உணவின் மூலம் பெறுகின்றதோ அவ்வளவு கலோரிகளையும் நாம் வேலை செய்து விரயம் செய்ய வேண்டும். இல்லாது போனால் அவை கொழுப்பாக மாற்றம் பெற்று உடலில் சேர்வதால் நிறை அதிகரிக்கிறது.
- மன அழுத்தம், கவலை, பயம் ஏற்படும்போது இன்சுலினை எதிர்க்கக்கூடிய பல ஓமோன்கள் உடலின் வேறு பாகங்களில் இருந்து சுரக்கின்றன. உதாரணமாக அட்றினலின், கோட்டிசோல், குளுக்கோகோன் என்பவற்றை குறிப்பிட முடியும். இவை இன்சுலினின் செயற்பாட்டை குறைத்துவிடுகின்றன. இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வடைகிறது.
- ஆரோக்கியமான உணவை உள்ளெடுப்பதன் மூலம் நீரிழிவு நோயிலிருந்து விடுபடலாம். ஆரோக்கியமான வாழ்வை கண்டுகொள்ளலாம்.
- முழுத்தானிய மாச்சத்து உணவுகளை நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்துவது நன்று.
- கொழுப்பை போலவே உப்பையும் சிறிதளவாக உண்பது உடல் ஆரோக்கியம் தரும்.
- உண்ணும் உணவில் உங்கள் விருப்பத்துக்கு உகந்த பதார்த்தங்கள் இருக்க வேண்டும். அவை வாழ்க்கை முறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பொருத்தமான மட்டங்களில் குளுக்கோசின் அளவு இருக்கவேண்டும். உடல் எப்போதும் ஆரோக்கிய நிலையில் இருக்க வேண்டும்.
- சிறுநீரகத்தில் குறைபாடு உடையோர் மருத்துவ ஆலோசனைக்கு ஏற்ப புரத உணவு வகைகளை பயன்படுத்த வேண்டும்.
- உடற்பயிற்சியில் ஈடுபடாத சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளாக உடற்பருமன், எலும்பு தேய்வடைதல், அதிக குருதி அழுத்தம், இருதய நோய்கள் என்பன அமையும்.
- நீரிழிவு நோயாளர்கள் ஏரோபிக்ஸ் உடற்பயிற்சிகள், வேகமாக நடத்தல், நீந்துதல், சைக்கிள் ஓட்டம், மின் உயர்த்திக்கு பதிலாக படிகளில் நடத்தல், வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்தல், யோகாசனம் போன்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.




- உடலை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ளுதல் நன்று. உதாரணமாக பாரம் தூக்கும் செயற்பாட்டை குறிப்பிடலாம்.
- நீரிழிவினால் பாதங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளாக, 'நிறம் மாறுதல், சிறிய புண்கள், தோற்றம் மாறுதல், கால் ஆணி, தொற்றுக்கள் ஏற்படுதல், வெட்டுக்கள், எரிவு, அதிக வேதனை, உணர்வின்மை, பஞ்சுமீது நடப்பது போன்ற உணர்வு வெளிப்பாடு' போன்றவற்றை குறிப்பிடலாம்.
- அதிக நிறை உடையோருக்கு நீரிழிவு நோய் மட்டுமல்லாது இதயம் சம்பந்தமான நோய்கள், உயர் குருதி அழுத்தம், குருதிக் குழாய் அடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.
- இன்சுலின் இல்லாது போனால் குருதியில் உள்ள குளுக்கோஸ் சக்தியாக மாற்றமடையாது. உடலானது சக்தியின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய கொழுப்பில் இருந்து சக்தியை எடுக்கத் தொடங்கும். இதன்போது குருதியில் 'கீற்றோன்' என்ற ஒருவகைப் பதார்த்தம் சேர்ந்து விடுவதால் இறுதியில் நீரிழிவானது 'கீற்றோ அசிடோசிஸ்' என்ற நிலையை அடையும். சில சந்தர்ப்பங்களில் நினைவிழந்த நிலைக்கும் செல்ல வாய்ப்புகள் உண்டு. நீரிழிவு வகை ஒன்று நோயாளருக்கு குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கும் போது இந்த நிலை ஏற்படலாம்.

"நீரிழிவு நோயாளி ஒருவர் புகைப்பிடிக்கும் போது புகையிலையில் இருக்கும் 'நிக்கொட்டின்' எனும் இரசாயனப் பதார்த்தம் குருதியில் குளுக்கோசின் அளவை சீரான அளவில் பேணுவதற்கான சந்தர்ப்பங்களை குறைக்கும். அத்துடன் தோலின் கீழான குருதிச்சுற்றோட்டத்தை சீராக இயங்க விடாது தடுக்கிறது. மேலும் இன்சுலின் உறிஞ்சுவதைக் கூட தடுத்து குருதியில் குளுக்கோசின் அளவை சீராக பேணவிடாது மாரடைப்பு, நரம்பியல் பாதிப்பு, விழித்திரை பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு போன்றவற்றை ஏற்படுத்தும்.

### நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்புள்ளோர்

- பருமனுடன் வயிறு தொந்தி பெருத்தவர்களாக இருப்பவர்கள் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளை உள்ளெடுத்து தேக அப்பியாசம் இன்றி வாழ்பவர்கள்.
- குருதி அழுத்தம் உடையோர்.
- குருதியில் கொழுப்பு உடையோர்.
- நீரிழிவு நோய் உடைய குடும்ப அங்கத்தவர்கள்.
- இன்சுலின் எதிர்ப்பு சக்தி உள்ளவர்கள்.
- நீரிழிவு நோயாளி ஒருவர் புகைப்பிடிக்கும் போது புகையிலையில் இருக்கும் 'நிக்கொட்டின்' எனும் இரசாயனப் பதார்த்தம் குருதியில் குளுக்கோசின் அளவை சீரான அளவில் பேணுவதற்கான சந்தர்ப்பங்களை குறைக்கும். அத்துடன் தோலின் கீழான குருதிச்சுற்றோட்டத்தை சீராக இயங்கவிடாது தடுக்கிறது. மேலும் இன்சுலின் உறிஞ்சுவதைக் கூட தடுத்து குருதியில் குளுக்கோசின் அளவை சீராக பேணவிடாது மாரடைப்பு, நரம்பியல் பாதிப்பு, விழித்திரை பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு போன்றவற்றை ஏற்படுத்தும்.
- குருதிச் சிறுதட்டுக்கள் நீரிழிவு நோயாளர்களின் நாடிகளில் பசைபோல் ஒட்டிக் கொள்வதால் நீரிழிவு நோயாளிகளுக்கு 'அஸ்பிறின்' மருந்து குறைந்த அளவில் வழங்கப்படும். இந்த சந்தர்ப்பத்தில் இதயம், மூளைக்கு குருதி கொண்டு செல்லும் நாடிகளில் அடைப்பு ஏற்படும். இதனால் மாரடைப்பு, பாரிசவாதம் போன்றவை ஏற்படும். அஸ்பிறின் மருந்தை மருத்துவரின் ஆலோசனைப்படியே பயன்படுத்த வேண்டும். நீரிழிவு நோயாளி ஒருவருக்கு அஸ்பிறின் குளிகை அவசியமானதா இல்லையா என்பதை பரிசோதனைகளின் அடிப்படையில் மருத்துவர் தீர்மானிப்பார்.

*கட்டுரையாளர்: தாதிய உத்தியோகத்தர், நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா மருத்துவமனை.*

19.08.2018


சூரியகாந்தி

உதயன்

கட்டுரை

ந.லோகதயாளன்

பா.குமுதன்







# இனம், மதம், மொழி

# அரச அணுகுமுறைகளில் அவதானம் தேவை

கடந்த 10ஆம் திகதி, வெள்ளிக்கிழமையன்று அறியப்பட்ட தடை அது. வவுனியா வடக்கிலுள்ள ஒலுமடுக்கிராமத்தின் வெடுக்குநாரி மலையில் அமைந்துள்ள சிவாலயத்தில் வழிபாடுகளை நடத்துவதற்குப் பொலிஸார் தடை பிறப்பித்திருந்தனர். தொல்லியல் திணைக்களத்தின் உத்தரவுக்கு அமைய மேற்படித் தடை உருக்கொண்டது. பரம்பரை பரம்பரையாக அந்தச் சிவாலயத்தில் அந்தப் பகுதியிலுள்ள இந்துக்களால் வழிபாடியற்றப்பட்டு வந்தது. போர்ச் சூழல் காரணமாக இடையில் அது நலிவடைந்திருந்தாலும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட சில காலங்களில் மீண்டும் அங்கு வழிபாடுகள் ஆரம்பமாயின. இப்போது அவற்றுக்குத் தடை...!

வவுனியாவில் இருந்து 20மைல்கல் தொலைவில் அமைந்துள்ள நெடுங்கேணிப் பிரதேசம் அடர் காடாகவும், தமிழர் வசிப்பிட எல்லலைப் பகுதியாகவும் காணப்படுகிறது. இதனால். பல சர்ச்சைகளுக்குச் சொந்தக் காரப்பிரதேசமாக இது மாறிவிட்டது. ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பிராந்தியத்தில், தற்போது புதிதாக உருவெடுத்துள்ளது வெடுக்குநாரி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயவழிபாட்டுக்கான தடை.


செல்லும் பாதை

### பழமை மிக்க ஆலயம் இது

நெடுங்கேணி நகரின் கிழக்குப் புறமாக உள்ள ஒலுமடுவிலிருந்து காட்டுபாதை வழியாகஒரு மைல்தொலைவில் அமைந்துள்ளது வெடுக்குநாரிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம். முற்றிலும் ரம்மியமான சூழலில் சுற்றிலும் பச்சை போர்த்திய வனாந்திரத்தைக் கொண்டு நிமிர்ந்து நிற்கின்றது வெடுக்குநாரிமலை. பரப்பளவில் சிறியதாக இருந்தாலும் சிகிரியாக் குன்றுடன் ஒப்பிடும் அளவுக்கு அதன் அமைப்புருவாக்கம் இருக்கிறது. மலையின் அடிவாரத்தில் பிள்ளையார் மற்றும் முருகனது விக்கிர கங்களும், மேலே செல்லச் செல்ல வைரவர், நாகதம்பிரான் உட்பட பல கடவுளர்களின் சிலைகளும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. மலை உச்சியில் இந்துக்களின் முழுமுதல்கடவுளான சிவபெருமானின் இலிங்கவடிவம் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆலயத்துக்கு அருகில் ஒரு குளம் உள்ளது. அந்தக் குளமானது நாகர் காலத்தில் கட்டப்பட்டமையால், 'நாகர் குளம்' என்று அழைக்கப்படுகின்றது என்கிறார்கள். நாகர் காலத்தில் இந்தக் குளம் அமைக்கப்பட்டது மாத்திரமன்றி இங்கே சிவ வழிபாடுகள் இடம்பெற்றதற்கான அடையாளங்கள் ஆரம்ப காலங்களில் இருந்து காணப்பட்டுள்ளன. கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகக் குறித்த மலையைச், சூழவுள்ள மக்கள் குறித்த ஆயலத்தில் பூசை வழிபாடுகளை



மேற்கொண்டு பராமரித்து வந்துள்ளனர். போர்ச்சூழல் காரணமாக அழிவடைநத்திருந்த ஆலயச சூழலைப் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மீள்குடியேறிய மக்கள் மீண்டும் சீரமைத்து நேர்த்தியாக வழிபாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்த நிலையில்தான் கடந்த ஏழாம் திகதி இலங்கைத் தொல்பொருள் திணைக்களம் குறித்தமலை மற்றும் அதைச் சூழவுள்ள காட்டுப் பகுதி என்பவற்றைத் தன்னுடையதாக்கியிருக்கிறது. வழிபடுவதற்குத் தடை விதித்துள்ளது.

### வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிடுகிறார்கள்...

குறித்த மலையை அண்மித்த பகுதிகளில் வெடுக்குநாரி என்று அழைக்கப்படுகின்ற ஒருவகை மரங்கள் பரந்தளவில இருந்தமையால்தான் குறித்த பகுதி "வெடுக்குநாரி" என்று அழைக்கப்படுகின்றது. வரலாற்றுக் காலங்களுடன் தொடர்பு பட்டுள்ளமைக்கான தொன்மைச் சான்றுகள் இருப்பதால் இங்கு அமையப் பெற்றுள்ள சிவலிங்கமானது ஆதி லிங்கேஸ்வரர் எனப் பெயர்பெற்றது. கிராமத்தில் எஞ்சியிருக்கும் மூத்தகுடிமக்கள் இந்தச் சான்றை வலுப்படுத்துகின்றனர். மலையடியில் செதுக்கப்பட்டுள்ள பிராமிய எழுத்துகள், சிறியகுகை ஆகியன இதையெல்லாம் உறுதிப்படுத்தும் விதமாகக் கட்டியம் கூறி நிற்கின்றன. ஒரு பகுதிப் பாறையில் 7அடி ஆழம் வரையில் குடையப்பட்டதாக அமைந்துள்ள நீர்த்தேக்கம் மற்றும் சில நில உருவ அமைப்புகள் ஆகியன பல காலங்களுக்கு முற்பட்ட மலையின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கின்றன. இந்த ஆலயம் மற்றும் அதன் சூழலில் காணப்படுகின்ற வரலாற்று ஆதாரங்களினது தொன்மையைப் பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதியிருக்கின்ற கட்டுரை (Tamil Brahmi Inscriptions From Vedukkunarimalai) மூலமும் புரிந்து கொள்ளலாம்.

மலையின் உச்சிப்பகுதிக்கு ஏறுவதற்கு ஏற்றவாறான படிக்கட்டுகள் இல்லாமையால் [illegible] பயன்படுத்தி, தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஏணியின் உதவியுடனேயே மேலேசென்று வழிபாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். பூசைப் பொருள்களை மிகவும் சிரமத்துக்கு மத்தியிலேயே மலை உச்சிக்கு எடுத்துச் சென்றாலும் சிவனைத் தரிசிக்கவேண்டும் என்ற ஆவல். அவர்களுடைய கஸ்டங்களைப் புறந்தள்ளுவதாகப் பக்தர்கள் புழகாங்கிதம் அடைகிறார்கள். இனிவரும் காலங்களில் அனைவரும் சிரமமின்றிச் சென்று வழிபடுவதற்கு வசதியாகப் படிக்கட்டுகளை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளார்கள். இந்த நிலையிலேயே தொல்பொருள் திணைக்களத்தின் குறித்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

### 'திட்மிட்ட சதி' மக்கள் சந்தேகம்

குறித்த பகுதியில் புதையல் இருப்பதாகக் கூறியே அதைத் தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த மலைப்பகுதி தமிழர்களின் பழமைகளோடு மிகவும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. அந்தப் பழமையை மறைத்து அங்கு புத்தர் கோவிலை அமைப்பதை நோக்காகக் கொண்டே அரசு தனது ஏவல் திணைக்களம் மூலம் குறித்த தடையை விதித்திருப்பதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர். வன்னிப் பிரதேசங்களிலும், வடக்கின் எல்லைப் பகுதிகளிலுமாக நடைபெற்றுவருகின்ற சிங்களக் குடியேற்றங்கள், காணி கையகப்படுத்தல்கள் எனப் பல சம்பவங்களையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள். குறிப்பாக நெடுங்கேணியின் கிழக்குப் பகுதியில் மகாவலி 'எல்' வலயம் என்ற போர்வையில் தமிழரின் பூர்விக நிலங்கள் அபகரிக்கபபட்டு. போகஸ்வெள, சபுமலதன்ன, நிகவெள எனப் பரவலாகச் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. குறித்த மலைப் பகுதியில் புத்த சிலையை நிறுவுவதே அரசின் உள்நோக்கமாக இருக்கிறது என்று மக்கள் கருத்துரைக்கின்றனர். ஏற்கனவே திருகோணமலையில் உள்ள கோணேசர் ஆலயம், வெந்நீர் ஊற்று, மன்னாரில் உள்ள கேதீஸ்வரம் ஆகிய இந்துக்களின் புராதன ஆலயங்களுககு அருகில் பௌத்த வழிபாட்டுதலங்களை அமைத்துச் சிங்களமயமாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுவந்திருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

### தொல்பொருள் தேடும் போர்வையில் அபகரிப்புக்கள்!

வடக்கைப் பொறுத்தவரை அரசால் நேரடியாகச் செய்ய முடியாத சில விடயங்களை வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியன மூலம் செவ்வனே செய்துவருகின்றது. குறிப்பாக வன்னிப்பகுதியில் வனவளத் திணைக்களம் மக்களுடன் நடந்துகொள்ளும் விதம் பற்றிப் பலரும் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். மக்களின் காணிகளைக் கையகப்படுத்தித் தமக்குரியதாக்குகின்ற வேலைத்திட்டங்கள் முழுவீச்சில் நடைபெற்றுவருகின்றன. போர்க் காலப்பகுதிகளில் பல இடங்களுக்கும் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்தும், இடம்பெயர்ந்தும் சென்றமையால் பல அவர்களுடைய நிலங்கள் கவனிப்பாரின்றிப் பற்றை மண்டிக் காணப்படுகின்றன. மீளத் திரும்பிய மக்கள் அவற்றைத் துப்புரவு செய்ய முனைகின்றபோது வனவளத்திணைக்களத்தால் அது தடுக்கப்படுவதுடன் மக்களுடன் முரண்படும் பல சந்தர்ப்பங்களும் நடந்தேறியவண்ணம் உள்ளன. மக்களின் பாரம்பரிய வசிப்பிடங்களைத் தனது பகுதி எனக் கூறும் வனவளத் திணைக்களம், நெடுங்கேணிப்பகுதியில் ஏக்கர் கணக்கில் காடுகளை அழித்துச் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துகின்றமை தொடர்பாகக் கரிசனை காட்டுவதில்லை.

ஆனால். மன்னார் மாவட்டத்தில் உள்ள உப்புக்குளம் கோந்தைபிட்டிப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருக்கிறது. அந்த மக்கள் வீட்டுத்திட்டத் தைப் பெறமுடியாமல் அவதிப்படுகின்றார்கள. முல்லைத் தீவின் செம்மலைகிழக்கு, நீராவிப் பகுதியை தொல்பொருளத்திணைக்களம் கையகப்படுத்த முற்பட்டநிலையில் மக்களின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. ஒட்டுசுட்டான் பகுதியில் நீண்டகாலமாகச் சிவன்கோவில் இருந்த காணியைத் தொலபொருள் திணைக்களம் அபகரித்து எல்லைபோட்டிருக்கிறது. இவை சில உதாரணங்கள் மட்டுமே. குறிப்பாக வன்னிப்பகுதியில் இருக்கின்ற வனவளத் திணைக்களம் மற்றும் தொல் பொருள் திணைக்களங்களின் அலுவலகங்களில் பணிபுரிபவர்களில் அதிகளவானோர் பெரும்பான்மையினரே. இந்த இரண்டு திணைக் களங்கள் மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் திரை மறைவில் பேசப்பட்டிருக்கின்ற கட்டளைகளின் படி முன்னெடுக்கப்படு பவையாகவே உள்ளன. தமிழர் நிலங்களை அபகரித்துவிடவேண்டும் என்ற மறைமுகக் கட்டளையை நிறைவேற்றுபவையாகக் குறித்த திணைக்களங்கள் இருக்கின்றன.

### வெடுக்குநாரியில் தொல்பொருள் திணைக்களம்

தொல்பொருள் திணைக்களம் கடந்த 9ஆம் திகதி நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தது. அதாவது தொல்பொருள் திணைக்களத்துக்கு உரித்தான நிலத்தில் தமது அனுமதி இன்றிச் சிலர் நிலத்தை அபகரித்து அங்கே வழிபாட்டு முயற்சியில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக அந்தப் பகுதிக் கிராமத் தலைவர் என இனம் காணப்பட்ட பூபாலசிங்கம் மற்றும் ஆலயப் பூசகர், ஆலய நிர்வாகம் எனப் பல தரப்பினரும் நெடுங்கேணிப் பொலிஸாரால் அழைக்கப்பட்டிருக்கின்றனர். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களிடம், தொல்பொருள் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள பகுதியில் அத்துமீறி ஆலயம் அமைத்துத் தாங்கள் வழிபாடு நடத்து வதாகக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இனி அந்தப் பகுதிக்குள் பிரவேசிக்க கூடாது என்ற உத்தரவைப் பொலிஸார் கடந்த 10ஆம் திகதி தெரிவித்தனர். மறுநாள் 11ஆம் திகதி இந்துக்கள், தந்தையர் நினைவாகக் கடைப்பிடிக்கும் ஆடி அமாவசைத் தினப் பிதிர் வழிபாட்டு நாளின் நிமித்தம் அங்கு சென்றுவர அனுமதி கோரினர். அதற்கு அனுமதிக்கப்பட்டு சிவனுக்கு வழிபாடுசெய்யப்பட்டது. அன்றோடு அந்தப் பகுதி மக்களால் தாம் காலாதி காலமாக வழிபட்டு வந்த ஆலயத்தை எட்டியும் பார்க்க முடியாமல் தடை விதிக்கப்பட்டது.

### கிராமவாசிகள் கருத்துரைக்கையில்...

நெடுங்கேணி ஒலுமடுக் கிராமத்தின் மூத்த பிரஜைகளில் ஒருவரும் குறித்த ஆலயம் தொடர்பில் பொலிசாரால் அழைக்கப்பட்டு எச்சரிக்கப் பட்டவருமான வைரமுத்து பூபாலசிங்கத்தை அணுகி நடந்தவற்றை அறிய முற்பட்ட வேளையில். "இந்த நாட்டிலே நில உரிமை எப்போதோ பறிபோய்விட்டது. தொழில் உரிமையும் பறிபோய்விட்டது.

வாழ்வுரிமை என்பனவற்றையும் என்றோ இழந்துவிட்ட நாம் நடை பிணங்களாக வாழும் இறுதிக் காலத்தில், இறைவழிபாட்டுக்காக மத உரிமையேனும் இருக்கும் என நம்பினோம். அதுகூட எமக்குக் கிடையாது எனத் தெட்டத் தெளிவாகக் கூறப்பட்டு விட்டது. இதனால் நிம்மதி இழந்து தவிக்கின்றோம். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழர் தரப்பில் பலமான எவருமே இல்லை என்றே உணர்கின்றோம். எமது மதச் சுதந்திரத்தை மீட்டு எடுக்கின்ற நடவடிக்கைகள் எந்தளவுக்கு இடம்பெறும் என்பது தெரியவில்லை. இந்த அரசுக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். கூட்டமைப்பு மட்டுமல்ல. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனக் கூறும் அனைவரும் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

எனக்கு விவரம் தெரிந்த காலத்தில் எமது கிராமத்தில் இருந்து 35 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள பதவியாவில் இருந்த சிங்களக் குடியேற்றமானது இன்று 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வெடிவைத்தகல கிராமத்தை நெருங்கி விட்டது. எமது தரப்பு மௌனம் காத்தால் இன்னும் 10 வருடத்தில் நெடுங்கேணிவரை வந்தாலும் எந்த ஆச்சரியமும் கிடையாது. இதனால் இனியும் பொறுமை காக்க முடியாது. எனவே அனைவரும் எமக்காகக் குரல் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். தினம் தினம் எல்லைப் பகுதிகளில் ஏதோ ஒரு பிரச்சினை எழுந்த வண்ணமே உள்ளது " என்றார்.

பெரும்பான்மை மனோநிலையுடன் ஏனைய மக்கள் குழுமங்கள் மீது சட்டத்திணிப்புகளை மேற்கொள்வதைக் கைவிடவேண்டும். இதுவே ஒரு பௌத்த விகாரை சார்ந்த விடயமாக இருந்தால். சட்டம் சொல்கிறது என்பதற்காக இவ்வளவு அவசர அவசரமாகக் குறித்த சட்டத் தடையைக் கொண்டுவந்திருக்க முடியாது என்பது யாவரும் அறிந்ததே. காலாதி கலமாக பாரம்பரியமாக ஒரு குழுவினர் வழிபாடு நடத்திவந்த பகுதியைச் சட்ட வரைமுறைக்குள் உட்படுத்தும்போது உரிய அணுகுமுறையைக் கடைப்பிடித்தே குறித்த விடயதானங்களைக் கையாள வேண்டும்.

ஆனால், இப்படியான பல நடைமுறைகளே தொடர்ந்து வருகின்ற அரச இயந்திரத்தில் நீடித்து வருகின்றன. சிறுபான்மை மக்கள் சார்ந்த எந்தவொரு விடயத்தையும் பெரும்பான்மை மனோநிலையுடன் அரசோ, அரச திணைக்களங்களோ அணுகுவது தவிர்க்கப்படவேண்டும். அரசானது பெரும்பான்மையினரால் கட்டமைக்கப்பட்டதாக இருக்கும் தருணத்தில். மாற்று இனக் குழுமங்களுடான விடயங்களைக் கரிசனையுடன் கையாள வேண்டும். இதையே வெடுக்குநாரி மலையின் குறித்த வழிபாட்டுத் தடை விவகாரமும் வெளிப்படுத்தி நிற்கிறது.

# அமெரிக்க வலையில் மாட்டிடுமா துருக்கி?



தொகுப்பு
பிரகாஸ்

ஒவ்வொரு நாடுகளுக்கும் எதிராக வர்த்தகப் போரை நடத்திக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் பார்வை தற்போது துருக்கியின் மீது விழுந்துள்ளது.

அமெரிக்காவில் வெளிநாட்டுப் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரியை விட அமெரிக்கப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் விதிக்கப்படும் வரி மிக அதிகம். இதனால் ஏனைய நாடுகளுடன் 'வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்கு' பெரும் வர்த்தகப் போரை நடத்திக் கொண்டிருக்கிறது அமெரிக்கா. தனது வர்த்தகப் போர் நியாயமானது என்பதற்கு ட்ரம்ப் முன்வைக்கும் முதலாவது விவாதம் சீனத்துடனான வர்த்தக உறவுதான்.

ஒபாமாவின் ஆட்சியில் அமெரிக்கப் பொருள்களுக்கு சீனாவில் விதிக்கப்பட்டுவந்த வரியின் அளவு 25 சதவீதம். அதே நேரம் சீனத்துப் பொருள்களுக்கு அமெரிக்காவில் விதிக்கப்பட்ட வரியின் அளவு வெறும் 2.5 சதவீதம். சுமார் 10 மடங்கு வித்தியாசம் உள்ளது. இவ்வாறாகத்தான் அமெரிக்கா - ஐரோப்பா, அமெரிக்கா இந்தியா, அமெரிக்கா - துருக்கி ஆகிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தக உறவுகளும் உள்ளன. இத்தகையதொரு பின்னணியில்தான் துருக்கியின் ஏற்றுமதிகளுக்கு. அதாவது அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படும் துருக்கிப் பொருள்களுக்கு வரியை அதிகரித்தார் ட்ரம்ப். துருக்கியும் விடுவதாயில்லை. அமெரிக்க மின்னணு உற்பத்திகளை முற்றாகப் புறக்கணிக்க அல்லது மூன்று மடங்கு வரியை விதிக்க பரிசீலித்து வருகிறது அது.

அத்துடன் அமெரிக்கா - துருக்கி விவகாரம் வெறும் வரிப் பிரச்சினை மட்டுமல்ல. அது ஈரானுடனும் தொடர்பு கொண்டிருக்கிறது. அதாவது ஈரானைத் தனிமைப்படுத்துவதற்கு அமெரிக்கா எடுத்துவரும் ஒவ்வொரு முயற்சிகளையும் நிராகரித்து வருவது துருக்கிதான். எனவே துருக்கியைப் பழிவாங்குவதற்காகவும் இந்த வரிப்போரை அமெரிக்கா கையிலெடுத்திருக்கலாம்.

**'உலகின் வல்லரசா? மத்திய கிழக்கின் வல்லரசா...?'**



## நைல் நதியில் பெரும் சோகம்



உலகப் பிரபலமான நைல் நதி பெரும் சோகத்தைத் தந்துள்ளது. ஒன்றல்ல இரண்டல்ல இருபத்து இரண்டு பள்ளிச் சிறார்கள் நைல் நதியில் படகு கவிழ்ந்த விபத்தொன்றில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சூடானில்சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் மார்க்கங்களில் நதிகளும் உள்ளடங்குகின்றன. அவற்றில் ஒன்றுதான் நைல்நதி. சுமார் 40 சிறு வர்களை ஏற்றிக்கொண்டு கடந்த மாதம் 14ஆம் திகதி நைல் நதியில் படகொன்று பயணித்துள்ளது. இந்தப் படகு இயந்திரக் கோளாறு காரணமாக பாதி வழியில் நின்றுள்ளது. பின்னர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 அப்பாவிப் பள்ளிச் சிறுவர்கள் உயிரிழந்தனர்.

**'சோகத்தைத் தந்தது நைல்'**

## க.தி.மு.க.



கதிமுக. அதென்ன கதிமுக?. கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சிப் பெயரின் சுருக்கமே இது. திராவிடக் கட்சிகள் போதாதென்று கலைஞரின் மூத்த மகன் அழகிரியின் தலைமையில் உதயமாகவுள்ள கட்சியொன்றின் பெயர்தான் இது.

கலைஞரின் மறைவை அடுத்து அழகிரியை தி.மு.கழகத்துக்குள் சேர்ப்பது தொடர்பில் விவாதமொன்று நடைபெற்றது. ஆனால் அழகிரி மிகப்பெரும் பதவியொன்றை (பொதுச் செயலாளர் பதவி என்று நம்பப்படுகிறது) கேட்டதை அடுத்து அவரைக் கட்சிக்குள் சேர்க்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. இதையடுத்து அழகிரியின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கட்சியின் பெயர்தான் க.தி.மு.க.

**'திமுக, அதிமுக, மதிமுக, கதிமுக...'**


## ஜப்பானுக்கு போட்டியாக சீனா



ரோபோக்களின் நாடு என்றதும் சட்டென நினைவுக்கு வருவது ஜப்பான்தான். அந்த மதிப்பை ஜப்பானிடம் இருந்து தட்டிப்பறிக்க சீனா எத்தனிக்கிறதோ என்று எண்ண வைத்துள்ளது சீனாவில் இடம்பெற்றுள்ள கண்காட்சி ஒன்று.

சீனத்துத் தலைநகர் பீஜிங்கில் ரோபோக்களின் கண்காட்சியொன்று இடம்பெற்றுள்ளது. டீன்யன் முதல் நகரும் மனைகள் வரை ரோபோக்களால் ஒருபிடிபிடித்துள்ளது சீனா. இராணுவம், விண்வெளி, அணுவாயுதம், உணவுகள் என்று ஒவ்வொன்றாக வளர்ந்துவரும் சீனா இன்னும் ஒரு தசாப்தத்துக்குள் ரோபோக்களிலும் பெரிய வளர்ச்சியைக் காட்டும் என்பது வெளிப்படை.

**'சீனத்தின் அடுத்த படிநிலை...'**




## ஆப்கானிஸ்தானும் ஆயுததாரிகளும்

ஒரு நாட்டின் தலைநகர் ஓயாது தாக்குதலுக்கு உட்படுகிறது என்றால் அது காபூலாகத்தான் இருக்க முடியும். ஒருநாடு ஒவ்வொரு நாளும் தற்கொலைத் தாக்குதலுக்கும், குண்டு வெடிப்புக்களுக்கும் முகம் கொடுக்கின்றதென்றால் அதுவும் ஆப்கானிஸ்தானாகத்தான் இருக்க முடியும். உலகில் தற்போதுள்ள மிகவும் மோசமான ஆயுதக் குழு ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு. அந்த அமைப்பு தற்போது அதிகளவில் முகாமிட்டுள்ள நாடு சிரியா. ஆனால் சிரியாவை விட ஆப்கானிஸ்தானில் அதிகளவான பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என்கின்றன புள்ளிவிவரங்கள்.

ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ வெளியேறியதை அடுத்து அந்த நாட்டைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று முழுமூச்சாகப் போராடி வருகிறது தலிபான். ஆப்கானிஸ்தானில் அதுவும் குறிப்பாக காபூலில் நடத்தப்படும் தாக்குதல்களில் 95 சதவீதமானவை தலிபான்களால்தான் நடத்தப்படுகின்றன. இவ்வளவு ஏன் கடந்த புதன்கிழமையும் தலிபான்களால் காபூலில் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 50 பேர் அதில் உயிரிழந்துள்ளனர். அனைத்தையும் எண்ணிப் பார்க்கையில் ஆப்கானிஸ்தான் ஆயுததாரிகளின் தேசமாகத்தான் மாறிக்கொண்டிருக்கின்றமை புலப்படும்.

**'ஆப்கானிஸ்தான் என்னும் ஆயுத தேசம்...'**



# இதுதான் நடக்கும்

கவிதை

பாலாஜினி

என் கடிகாரம்
அதன் கை அசைவில்
என் காலங்கள்
அதன் கட்டளைகளின் படி
பொம்மைபோல நான்
பெரும் யோகிபோல அது
என் வேலைகளை எல்லாம்
விரைந்தே முடிக்கிறது

சுத்தமாய் எனக்குப் பிடிப்பதில்லை
சொன்னாலும் அது கேட்பதில்லை
அமிலக் கண்களால் எனை
உரசிச் சிரிக்கிறது
இருப்பினும்
இதை மட்டும் என்னால்
ஏற்றுக் கொள்ள முடியவில்லை
தினம் இரவுகளில் என்
படுக்கை அறைப் பகிர்தல்கள்

உணர்வுகள் இல்லாத
கூடல்களில் இன்று
வெறும் சுகம் மட்டுமே
எனக்குச் சுமையாகிப்
போனதிங்கே...

# கனடாக் கனவு

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்




"எங்கையப்பா அந்த நீலக்கோடன் வேட்டைக் காணயில்லை? அதையும் தேடியெடுத்துப் பெட்டியிலை வையும்! அங்கை உடுப்புகள் சரியான விலையாம். இஞ்சை கிடக்கிறதுகளைக் கொண்டுபோய்த் தான் இப்போதைக்குச் சமாளிக்க வேணும்"

நேரம் ஓடிக்கொண்டிருக்க கூடவே எனது மனமும் ஓடி ஆடிக் கொண்டிருந்தது.

"இஞ்சேருங்கோ! இந்தச் சூட்கேசிலை உங்கடை உடுப்புகளெல்லாம் மடிச்சு வைச்சிருக்கிறன். மற்றப் பையில தட்டைவடை, மிக்சர், புழுக்கொடியல், பொரிவிளாங்காய் எல்லாம் வைச்சிட்டன். அந்தச் சின்ன சிவத்தைச் ஷொப்பின் பை இருக்கெல்லே! அதுக்கை மிளகாய்த் தூளும் கருவாடும் கிடக்குது. நீங்கள் அந்தரம் பிடிச்ச மனிசன். ஒண்டையும் தவறவிட்டிடாதேங்கோ!"

மனைவி மரகதவல்லி தனது கடமைகள் அத்தனையையும் நேர்த்தியாக நிறைவேற்றிவிட்ட திருப்தியில் என்னருகில் வந்து நின்றாள்.

"சே! இதென்ன இது! ஏனப்பா அழுகிறீர்! நான் என்ன சந்திரமண்டலத்துக்கே போகப்போறன்! உதிலை கிடக்கிற கனடாவுக்குத் தானே போறன். நான் போய் எனக்குக் காட் கிடைச்ச உடனை உன்னையும் அங்கை கூப்பிடுவன் தானே! பிறகென்ன அழுகை! கண்ணைத் துடையும்."

இவ்வாறு நான் மனைவியைத் தேற்றிக் கொண்டாலும், என்னுடைய கண்களும் பனித்து அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

முப்பது வருடங்கள் கணவன்- மனைவியாக, அன்பாக, அன்னியோன்னியமாக வாழ்ந்தவர்களல்லவா நாங்கள். அப்படிப்பட்டவர்கள் இப்போது திடுதிப்பென்று பிரிந்துபோகும் துயரத்தைத் தாங்கிக் கொள்வது என்பது சாதாரணமான காரியமா என்ன?

"அப்பா! நீங்கள் கனடாவுக்குப்போய் எங்கடை சுகி மச்சாள் வைச்சிருக்கிற மாதிரி ஒரு லப்டொப் வாங்கி அனுப்பிவிடுங்கோ!"

மூத்த மகள் மதிவதனி தனது கோரிக்கையை முன்வைத்தாள்.

"ஓ! லப்டொப் தானே! எல்லாம் ரிப்ரொப் யோசிக்காதை" சொல்லிவிட்டு எனது கட்டை விரலை உயர்த்திப் பெருமையுடன் காட்டினேன்.

"அப்பா! எனக்கு ஐ போன்!"

பன்னிரண்டு வயதுச் சுமியும் விடுவதாயில்லை.

"ஓ.கே! ஓ.கே" என ஏராளமான ஓ.கேக்களைப் பெருமையுடன் உதிர்த்துவிட்டேன்.

■ ■ ■

நேரம் இரவு ஒன்பது மணியாகிக் கொண்டிருந்தது. பஸ் வர வேண்டிய நேரம் இதுதான். அவசரமாக ஐயா கடையடி பஸ்தரிப்பு நிலையத்துக்குப் போய்விட்டோம். மனைவியும் பிள்ளைகளும் என்னை வழியனுப்புவதற்காக என்னோடு வந்து நின்றனர்.

"பஸ்சொண்டு வருகுதப்பா! அதுவாய்த் தானிருக்கும். பையளைத் தூக்கி ஆயத்தமாய் நில்லுங்கோ!" படபடத்தாள் மனைவி

"கொலம்பு.. கொலம்பு...கொலம்பு.. வாறதா!"

மிதிபலகையில் நின்றபடி அந்தப் பருமனான கொண்டக்டர் கத்தினான்.

"என்னவாம்! கொழும்பாமோ! கொழும்பு தான் கண்டறியாத கொழும்பு. உந்தக் கொழும்பை விடப் பெரிய கனடாவுக்குப்போற எனக்கு உவை கொழும்பு காட்டப் போகினமாமோ!"

கொழும்பையும் அந்தக் கொண்டக்டரையும் ஒருவித இளக்காரமாக நினைத்தது மனம்.

"எட எட! பங்கை பஸ் ஒண்டு வருகுது. உது என்ன பஸ் தானோ! கரவெட்டி கார்த்திகேசுவின்ரை சிகரத்துக்கு லைட் பூட்டி விட்டது மாதிரியெல்லோ கிடக்கு. அப்ப உது கட்டாயம் வெளிநாட்டு பஸ்சாய்த் தானிருக்கும். சா! கலாதியாயிருக்கு. என்ன வடிவு!" நினைத்தபடி கையைக் காட்டி மறித்தேன்.

"எட இது கனடா பஸ் இல்லையாம். இலண்டன் பஸ்சாம்."

"தம்பி கனடா பஸ் வருகுதே அப்பன்!"

"ஓம் அண்ணை! பின்னாலை கனடாவும், பிரான்சும் கலைபட்டுக்கொண்டு வருகுதுகள். கவனமாய்ப் பாத்து ஏறுங்கோ!"

கூறிய கொண்டக்டர் தொடர்ந்து 'றைட்' சொல்ல அந்த பஸ் காற்றாக விரைந்தது.

"ஓமப்பா உதிலை வாற பஸ்சாய்த் தானிருக்கும். மறியுங்கோ! மறியுங்கோ!" மரகதவல்லி குச்சுப்புடி நடனமாடினாள்.

"எடியாத்தை! உது என்ன கண்டாவளையோ கனடாவோ! எனக்குக் கண்தெரியுதில்லை. பாத்து மறியும்"

"இல்லையப்பா! இது கனடாதான். ஏறுங்கோ சூட்கேசுகள் கவனம்"

அவளின் கண்கள் கலங்கின. எனக்கும்தான். பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்த மழை பொழிந்தேன். மனைவிக்கு...! அது முடியவில்லை. மெல்ல இடுப்பிலே கிள்ளிவிட்டு ஒன்றும் செய்யாதவன்போல் கனடா பஸ்சில் ஏறிவிட்டேன். நல்ல வேளை யாரும் பார்க்கவில்லை.

■ ■ ■

"எவடம்!" என்று கேட்பதுபோல் பார்வையால் கதை பேசினான் கொண்டக்டர். ஆள் ஒரு மாதிரியானவனாக இருப்பானோ?

"கனடா! கனடாச் சந்தி"

தெளிவாகச் சொல்லி வலது கையால் காசைக் கொடுத்து இடது கையில் ரிக்கெற்றையும் வாங்கிக் கொண்டேன்.

"கனடாச்சந்தியிலை தான் நிப்பாட்டுவம். பேந்து கண்ட கண்ட இடமெல்லாம் மணியடிச்சு என்னட்டை ஏச்சு வாங்கக்கூடாது"

எச்சரித்தான் கொண்டக்டர்

"நான் நினைச்சது சரிதான். உவர் பொடிப்புள்ளை, ஒரு தடிப்புப் பிடிச்சவர்போலை தான் கிடக்கு. அவற்றை கதையும், மிறாள் பார்வையும்.. என்னைப் பற்றித் தெரியயில்லைத் தம்பிக்கு!"

பயமுறுத்தினேன். மனதுக்குள்தான்.

பக்கத்துச் சீற்றிலிருந்த வாலிபன் காதுகளில் கைப்பேசியைச் சொருகி வைத்து இசையின்பத்தில் இலயித்திருந்தான். மற்றுமொரு நடுத்தர வயதினர் தன்னை மறந்து குறட்டைவிட்டு ஆனந்த சயனம் செய்து கொண்டிருக்க எனக்குப் பேச்சுத் துணைக்குக்கூட ஒருவருமில்லை. தொலைக்காட்சியில் ஏதோ ஆட்டம் பாட்டம். எனக்கு அது ஒன்றும் பிடிக்கவில்லை.

"சரி! உவன் கணபதியின்ரை காளிகோயிலை முந்தி ஒரு நாள் எனக்குச் சொன்ன வாக்கு. இப்ப உண்மையிலை பலிச்சிட்டுது தானே. காலம் கொஞ்சம் சுணங்கினாலும் கட்டாயம் நான் வெளிநாடு போயே தீருவன் எண்டது மனிசன். அது மட்டுமே மற்றவை மாதிரியில்லாமல் வலு சுகமாய்ப் பயணக் கஷ்டமில்லாமல், கொஞ்சச் செலவிலை போகலாம் எண்டான். இப்ப பார்! எல்லாம் உண்மையாய்ப் போச்சுதே! பஸ்சிலை வெளிநாடு போகலாமெண்டு ஆராவது நினைச்சிருந்ததே! இப்ப என்னடா எண்டால் வெளிநாட்டவங்கள் கடலைத் தூர்த்து, கல்லோ மண்ணோ! என்ன இழவு போட்டாங்களோ! பாலம் கட்டி இஞ்சையிருந்து நேராய் பஸ் ஓடப் பண்ணிப் போட்டாங்களே! எவ்வளவு அதிர்ஷ்டம் எனக்கு அடிச்சிருக்கு. முந்திப் போனவை எவ்வளவு அகப்பாடு பட்டுப் போனவை. கொஞ்சம் சுணங்கி எண்டாலும் எனக்குக் கடவுள் நல்ல பலனைத் தந்திட்டார்.

நானும் எவ்வளவு காலமாய் இந்த வெளிநாட்டு ஆசையிலை கிடந்து அலைஞ்சன். இனி உவன் மாணிக்கத்தான்ரை மோன் குலத்தான், மணியத்தாற்றை மணிவண்ணன் ஆக்கள் என்ன செய்யப் போறாங்கள் பாப்பம். எத்தினை முறை உவங்களைக் கெஞ்சி, மண்டாடிக் கேட்டனான்! என்னையும் உங்கை கூப்பிடுங்கோடா எண்டு. எரிச்சல், பொறாமை. அவையை மாதிரி நானும் நல்லாய் வந்திடுவனெண்டு. இனி வாயைப் பாக்கட்டும்"

மனம் அதிகமாகக் கறுகிவிக்கொண்டது. அட என்ன அழகான மாடிக் கட்டடங்கள். பளிச் என்ற காப்பெற் வீதி!இலட்சக் கணக்கில் வாகனங்கள்! ஒரு வேளை இதுதான் கனடாவோ! யாரையாவது கேட்டுப் பார்க்கலாமென்றால் வெட்கம் தடுத்தது.

■ ■ ■

"மெக்சிக்கோ! ஆர் மெக்சிக்கோவிலை இறங்குறது. மினைக்கடுத்தாமல் இறங்க வேணும்."

கொண்டக்டர் இப்போதும் கொதிப்பாயிருந்தான்.

"ஒண்டாரியோ! ஆர் இறக்கம்!"

பஸ் தரித்து நிற்க இரண்டொருவர் பெட்டி படுக்கைகளுடன் இறங்கினர். எனக்குப் பரபரப்பாயிருந்தது.

"தம்பி! நான் கனடாச்சந்தி அப்பன்!"

"ஓம்! கனடாச்சந்தி இறக்கம். குவிக்காய் குவிக்காய். இனி ஒட்டோவா பஸ்ராண்டிலைதான் நிக்கும். இடையிலை ஒருத்தரும் பெல் அடிக்கக்கூடாது."

சந்தியிலிறங்கி விட்டேன். எங்கே போவது என்று தெரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில்விட்ட நிலை.

"முதல் எங்கையேன் ஒரு லொட்ஜ் எடுத்து ஒண்டுக்கு இரண்டுக்குப்போய்விட்டு, பிறகு வேலை தேடுற அலுவலைப் பாப்பம்"

மனம் சொல்லிக்கொள்ள அந்த லொட்ஜ்ஜுக்குப் போகலாமென்றால்.

"இதென்னடாப்பா! படியளெல்லாம் தங்கடை பாட்டுக்கு ஓடுகுதுகள். எட உதிலை கவனமாய்க் கால்வைக்க வேணும். இல்லாட்டில் கால் அம்பிட்டுச் சம்பலாய் போயிடும்."

நினைக்க முன்பு கால் படியின் இடை வெளியில் எப்படியோ மாட்டிக் கொண்டது.

"ஐயோ! கால்... கால்...என்ரை கால்!"

அலறினேன் பலமாகக் கத்தினேன்.

"என்னப்பா! கால், அரையெண்டு கொண்டு... இராத்திரி அடிச்ச கால் இன்னும் முறியயில்லையே! உழைப்புப் பிழைப்பொண்டுமில்லை, விடிய விடிய நித்திரை! வேலை வெட்டிக்குப் போறதில்லை. நித்திரையிலும் உமக்குக் கால் கேக்குதோ! பரதேசி! எழும்பப்பா! எழும்பப்பா!"

மரகதவல்லி என் நெஞ்சில் காலால் உதைத்தாள்.

■




அரட்டை
மேரிகிறேஸ் வரதராஜன்

## அரச அலுவலர்களுக்கு....

இது ஒருபழையசெய்திதான் ஆனாலும் முகப்புத்தகத்தில் மறுபடியும் ஒரு தடவை நினைவுகூரலாக, மீள் ஞாபகப் படுத்தலாகப் பதிவாகியுள்ளது.

அரச ஊழியர்கள் உத்தியோகபூர்வ தகவல் பரிமாற்றத்துக்காகக் குறுஞ்செய்தி, தொலைமடல், மின்னஞ்சல், தொலைபேசி என்பவற்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதாம். குறித்த இணையவழி முறைகள் மாத்திரமே அரச அலுவலகங்கங்களில் பயன்பாட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டும் உள்ளதாம்! சமூக வலைத்தளங்களான முகப்புத்தகம், கீச்சகம், வட்ஸ்அப் என்பன உத்தியோகபூர்வ தொலைத் தொடர்பாடல் சாதனங்களாகக் கொள்ளப்பட மாட்டாதாம்! இவற்றை உத்தியோகபூர்வ தொடர்பாடல் சாதனங்களாகக் கருதி நடவடிக்கை எடுக்க முடியாதாம்! இதன்படி, அரச ஊழியர் ஒருவர் திடீர் விடுமுறைகளை தமது காரியாலயத்துக்கு சமூக வலைத்தளங்கள் ஊடாக அறிவிக்க முடியாது. அந்தப் பதிவின் சுருக்கம் இதுதான்.







2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதியன்று கிளிநொச்சி செஞ்சோலை வளாகத்துக்குள் இருந்த சிறுமிகள் மீது இலங்கை இராணுவத்தினர் வானூர்தித் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். அதில் 61வரையான சிறுமிகள் கொல்லப்பட்டும், 150க்கும் மேற்பட்ட சிறுமிகள் படுகாயமடைந்தும் இருந்தமை வரலாற்றுப் பதிவு. அந்தப் பதிவை இந்த வாரம் முகப்புத்தகமும் நினைவுகூர்ந்திருந்தது. பலரது முகப்புத்தகப் பதிவுகள் இது குறித்து இந்த வாரம் கண்ணீர் மல்கின.

## வட்டுகோட்டை ஆசிரியர் முகநூலில்!

தன்னிடம் கல்வி கற்பதற்காகத் தனியார் கல்வி நிலையத்துக்கு வந்த பதின்ம வயதுச் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டைப் பொலிசாரால் கைதாகியிருந்தார் ஆசிரியர் ஒருவர். கடந்த ஜூன் மாதமளவில் நிகழ்ந்திருந்தது இந்தச் சம்பவம். பத்திரிகைகள் நீதி கோரிய தமது கழுகுப் பார்வையை இந்த விடயத்திலும் விட்டுவைக்கவில்லை.

பிணைவழங்கல், மற்றும் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள், வழக்கின் போக்கு பற்றிய பலதையும்கூட முகப்புத்தகத்திலும் கூடச் சிலர் பின்தொடர்ந்து கவனித்து வருவது புரிகிறது. சில செய்தித் தளங்களை முகப்புத்தகத்துடன் இணைத்தும் இதைக் கவனித்து, வெளிப்படுத்தி வருகிறார்கள். புங்குடுதீவுப் பாடசாலை மாணவி வித்தியா கொலையுண்டபோது நீதி கேட்டுக் கிளர்ந்தெழுந்த மக்கள் கூட்டமல்லவா...!

## பிரமிட் மோசடி



இலங்கை மத்திய வங்கியால் தயாரிக்கப்பட்டதான குறிப்புடன் நிறைவடைகின்ற 'பிரமிட் பண மோசடி' பற்றிய விழிப்புணர்வை ஊட்டுகின்ற காணொலி ஒன்று முகப்புத்தகத்தில் பரப்பப்பட்டு வருகின்றது.

வேலையற்றிருக்கின்ற, உள்ளூரைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பலர் மத்தியில் பிரமிட் பண வியாபாரம் பற்றியும், அதில் அதிகளவு இலாபமீட்டும் முறைபற்றியும் தனியார் நிறுவனங்கள் சார்ந்த (ஐரோப்பியப் பாணியில் அலுவகை ஆடை அணிந்த) இருவர் ஆசையூட்டும் தந்திரப் பேச்சைப் பரப்புகிறார்கள்.

இதனால், ஈர்க்கப்பட்ட இளைஞர், யுவதிகள் குறித்த வியாபாரத்தில் தத்தமது கிராமத்தவர்கள் பலரையும் இணைத்து விடுகிறார்கள். காலப்போக்கில் இவர்களை வழிநடத்திய பெரும்புள்ளிகள் மறைந்துபோக ஊரவர்களிடம் குறித்த இளைஞர்கள், யுவதிகள் சிக்கி, வெட்கித் தலை குனிகிறார்கள், முரண்பட்டுக் கொள்கிறார்கள்.

பிரமிட் பண மோசடி பற்றியதாக விழிப்புணர்வூட்டுகின்ற இந்தக் காணொலி முகப்புத்தகத்தினரின் அரட்டையாகவிருந்தாலும் சமூகத்துக்குப் பயனுள்ளதாக அமைந்திருப்பது நிச்சயம் பாராட்டுக்குரிய ஒன்றுதான்.

## கொடியேற்றமும் வழிபாட்டுத் தடையும்

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒலுமடு கிராமத்தில் இருக்கின்ற வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவிலில் வழிபாடுகள் செய்வதற்குத் தடைவிதித்திருந்தது, தொல்லியல் திணைக்களம். ஆனாலும் அதன் பின்னர் சிறப்பு வழிபாடு ஒன்றுக்காகப் பக்தர்களை நிபந்தனைகளுடன் அனுமதித்திருக்கிறார்கள். தொல்லியல் திணைக்களத்தினரின் குறித்த செயற்பாடு, அந்தப் பகுதி இனிவரும் காலத்தில் பௌத்த மயமாகப் போகின்றமையைக கட்டியம் கூறி நிற்பதாக எழுச்சிக் குரல்களும், கருத்துக்களும் முகப்புத்தகத்தில் கோபக் கனலோடு பதிவாகியிருக்கின்றன. மறுபுறம் மகிழ்ச்சி பொங்கும்படியாக யாழ்ப்பாணம் - நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத்துக்கான கொடிச் சீலை வரவும், அதையொட்டித் தொடரும் திரு விழாக்களும் என முகப்புத்தகம் பக்தியால் நிரம்பியே வழிகின்றது.





## பணமென்றால்!

50 அதிஷ்டசாலிகளின் பெயர்ப்பட்டியல் தயார் நிலையில்...!

முதல் 300அதிஷ்டசாலிகளுக்கு நிச்சய பரிசாக பணப்பொதி! அதிஷ்டசாலிகளுக்குப் பணம் பொதிசெய்யப்படும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது நிபந்தனைக்கு உட்பட்டது. பொதிப் பரிமாற்றல் நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்படுவதாக , பணத்தாள்களின் படங்களைப் பதிவேற்றுவதுடன் விட்டு விடாமல், ஹொலிவூட் நடிகர் றொக்கும் காணொலியில் காட்சி தந்து ஆச்சரியமூட்டுகிறார். உண்மை, பொய் தெரியவில்லை. இப்படியாக ஒரு வகை அதிஷ்ட முன்னெடுப்புப் பற்றியும் முகநூலில் இந்த வாரம் அதிக பதிவுகள் இடம்பிடித்திருக்கின்றன.

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

# ரோகோ

வாரம் ஒரு நாடு 5



ரோகோ என்ற சொல்லின் பொருள் 'கடலின் வீடு' என்பதாகும். இது அவர்களின் தேசிய மொழியான எவேயிலிருந்து வந்த ஒரு சொல்லாகும். ஜேர்மனியர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்தில், நல்ல ரயில் சேவை இங்கு இருந்துள்ளது. முதலாவது உலகப்போர் ஆரம்பித்தபோது, ரோகோவும் இந்தப் போரில் சிக்கிக் கொண்டது. பிரிட்டனும், பிரான்ஸும் இந்த நாட்டை முற்றுகையிட்டுள்ளன. 1916ஆண்டில் இந்த நாடு பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளுக்கு இடையில் கூறுபோடப்பட்டிருக்கின்றது. 15ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இங்கு வந்திருந்தாலும், குடியேறும் எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. இவர்களின் பிரியமான விளையாட்டு கால்பந்தாட்டம். 2006ஆம் ஆண்டு, உலகக் கிண்ணத்துக்காகப் போட்டியிட்ட நாடுகளில் இதுவும் ஒன்றாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் இங்கு அடிமை முறை ஒழிக்கப்பட்டது, கவனிக்கத்தக்க ஒரு நிகழ்வாகும்.

### அமைவிடம்

மேற்கே கானா, கிழக்கே பெனின், வடக்கே புர்கீனோ பாஸோ, தெற்கே சமுத்திரம். இந்த மூன்று நாடுகளையும் எல்லைகளாகக் கொண்ட, மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ரோகோ என்ற சிறிய நாட்டுக்குள்தான் இந்த வாரம் நுழைகிறோம். கிட்டத்தட்ட 57ஆயிரம் சதுரக் கிலோமீற்றர்கள் பரப்பளவை உடைய ஆபிரிக்காவின் சிறிய நாடுகளில் ஒன்றான ரோகோவின் சனத்தொகையானது 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஏறத்தாழ 7.6மில்லியன்களாக இருந்துள்ளது.

### அடிமைகளின் கடற்கரை

இந்த நாட்டின் வரலாற்றைப் பார்க்கும்போது, பல்வேறு இனத்தவர்கள், கி.மு.11ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16ஆம் நூற்றாண்டுகள் வரையில் இங்கு வந்து போயிருக்கிறார்கள். 16ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரை, ஐரோப்பியர்கள் தாங்களுக்கு அவசியப்படும் அடிமைகளைத் தேடுவதற்கு ரோகோவையும் அதை அண்மித்த கரையோரப் பிரதேசங்களையும் ஒரு மையமாக வைத்திருந்தார்கள். இதன் காரணமாக அடிமைகளின் கடற்கரை என்றே இந்த நாடும், இதை அண்மித்த பிரதேசங்களும் அழைக்கப்பட்டு வந்திருக்கின்றன. 1884ஆம் ஆண்டில் ரோகோ உட்பட்ட ஒரு பிராந்தியத்தை ஜேர்மனி, 'ரோகோலாண்ட்' என்று பெரிட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இது பிரான்ஸின் கைகளுக்கு மாறியிருக்கின்றது. பிரான்சிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது 1960ஆம் ஆண்டில்தான்.

### 50வீதமானவர்கள் 18வயதைத் தாண்டாதவர்கள்.


ஆபிரிக்காவின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்று இது! இங்கு அண்ணளவாக 81.2வீத சனத்தொகையினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். உலகின் வறிய நாடுகளில் ஒன்றாகவே இது நோக்கப்படுகின்றது. இங்குள்ளவர்களில் 49.5வீதத்தினர்(கிட்டத்தட்ட அரைவாசித் தொகையினர்) 18வயதைத் தாண்டாதவர்கள். வறுமையான பிரதேசங்களில் இவர்கள் அதிகமாக இருப்பது, நாட்டை வறுமைநிலைக்குத் தள்ளுகின்றது. அகழ்ந்தெடுக்கப்படக் கூடிய பொஸ்பேட், ஏற்றுமதி செய்யப்படக் கூடிய கோப்பி, கச்சான், கொக்கோ போன்றவை இந்த நாட்டின் சிறிய சனத்தொகைக்குப் பொருளாதார ரீதியாக வலுச் சேர்ப்பது உண்மைதான். ஆனால் வறுமையை ஒழிக்கும் அளவுக்கு இதன் வலு இல்லை. நாட்டின் 11வீதமான நிலம் வளமானது என்பதால், விவசாயம் செய்கிறார்கள். வயலில் விளையும் பயிர்களை ஏற்றுமதி செய்கிறார்கள். இதைவிட துணி உற்பத்தித் துறையிலும், பியர் வடிப்பதிலும் முன்னிற்கிறார்கள். அப்படியிருந்தும் வறுமையை விரட்ட இவர்களால் முடியவில்லை.

### ஏற்றுமதியும் இறக்குமதியும்.

பொஸ்பேட், பருத்தி, கொக்கோ, கோப்பி ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்களாகும். இவர்களின் ஏற்றுமதியில் கூட்டாக புர்கினோபாஸோ (16.6%), சீனா(15.4%), நெதர்லாந்து (13%), பெனின்(9.6%), மாலி (7.4%) ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இயந்திராதிகளையும், பெட்ரோலியம், சில உற்பத்திகளையும், உணவுப் பண்டங்களையும் இந்த நாடு இறக்குமதி செய்கின்றது. இறக்குமதி விடயத்தில் பிரான்ஸ்(21.1%), நெதர்லாந்து (12.1%), ஜேர்மனி, இத்தாலி, தென் ஆபிரிக்கா சீனா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆனால், 5வீதத்துக்குக் குறைவான பொருள்களையே ரோகோ இறக்குமதி செய்கின்றது. 2012ஆம் ஆண்டில் சுரங்கங்களில் பொஸ்பேட் அகழ்வு நாட்டின் பொருளாதாரத்தில் 33.9வீத பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. நாட்டில் 12வீதமானவர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியது. பொஸ்பேட் கனிம வளம் உள்ள உலக நாடுகளில் ரோகோ நான்காம் இடத்தைப் பிடித்துள்ளது. உலக சந்தையில் பொஸ்பேட்டின் வீழ்ச்சி காரணமாக, இந்தத் துறை இப்பொழுது தாக்கம் கண்டுள்ளது. இவர்கள் மாபிள், உப்பு, சுண்ணாம்புக் கற்களைக் கொண்ட தரை வளத்தையும் கொண்டுள்ளார்கள். சீமெந்து உற்பத்தியும் இங்கு நடக்கின்றது.

### மதங்களும் பேசப்படும் மொழிகளும்

இங்குள்ளவர்களில் கிட்டத்தட்ட 29வீதமானவர்கள் கிறிஸ்தவர்கள். முஸ்லிம்கள் 20வீதம், 51வீதமானவர்கள் பல்வேறு மத நம்பிக்கைகள் கொண்டவர்களாக வாழ்கிறார்கள். உயிரில்லாப் பொருளுக்கும் இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் ஒரே ஆன்மாவைக் கற்பிக்கும் கொள்கை இவர்களிடம் இருப்பதுடன், ஆன்மா ஒன்றின் மூலமே உயிரியக்கம் உண்டாகிறது என்ற கோட்பாடும் இருக்கின்றது. காலங்காலமாக விக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டு வந்தவர்கள் இவர்களின் மூதாதையர். அதன் வழி இங்கு வந்ததுதான் 'வூடு' எனப்படும் மதம். தீய சக்திகளும், பிசாசுகளும் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அவை இருக்கின்றன என்பது இந்த வூடு விசுவாசிகளின் நம்பிக்கை. மதச் சடங்குகளை ஆணோ அல்லது ஒரு பெண் மதகுருவோ செய்கிறார். ஆணை 'ஹங்கன்' என்றும் பெண் மதகுருவாக இருந்தால் 'மம்போ' என்றும் அழைக்கிறார்கள். வூடு கோவிலும் இருக்கின்றது. இங்கிருந்த ஜேர்மன் கிறிஸ்தவப் பணியகம், 1830ஆம் ஆண்டில் கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றது. 1970ஆம் ஆண்டில் கிறிஸ்தவ தேவாலயங்கள், அமைப்புகள் முழுச் சுதந்திரத்தோடு இயங்க ஆரம்பித்துள்ளன.





பல மொழிகள் பேசப்படும் இந்த நாட்டில் அலுவலக மொழி பிரெஞ்! தேசிய மொழி எவே, கபியி. பிரெஞ் வடிவமைப்பைக் கொண்ட ரோகோ நாட்டில், பிரெஞ் மொழி எழுத்து மொழியாகவும் இருக்கின்றது. இங்குள்ளவர்களுக்கு ஆங்கில மொழி அறிவும் இருக்கின்றது. உள்ளூர், வெளியூர் மொழிகளென 40க்கு மேற்பட்ட மொழிகள் இங்கு பேசப்படுகின்றன. ரோகோ நாட்டவர் பொதுவாகத் தமது தாய் மொழியையே பேசி வருகிறார்கள். ஆனால் பாடசாலையில் பிரெஞ் கட்டாய பாடம்!

### சாவுச் சடங்குகள் ஆடம்பர விழாக்கள்

இவர்கள் சாவுச் சடங்குகளை வாழ்வின் மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள். சாவுச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கு இவர்கள் செலவிடுவதைப் பார்க்கும்போது, நமக்கு வியப்பு மட்டுமல்ல அதிர்ச்சியும் கூடவே தொற்றிக் கொள்ளும். இசைக் குழுக்களின் தெருப்பவனி, பெருமளவு செலவு செய்யப்பட்ட சவப்பெட்டி என்று ஒரு மாத காலத்துக்கு நீளும் இவர்களின் சாவுச் சடங்குக் கொண்டாட்டங்கள் நம்மை அதிசயப்படுத்துபவை! தங்களுடைய காணியையோ அல்லது வீட்டையோ அடகு வைத்து தமக்குப் பிரியமானவர் இறந்துவிட்டால் அவருடைய இறுதிச் சடங்குச் செலவுக்கான பணத்தை இவர்கள் திரட்டுவது அடிக்கடி நடப்பது. ஆனால் சாவு என்பது எயிட்ஸ்போன்ற நோய்க்காரணிகளால் சம்பவித்தால், அவசரம் அவசரமாக இறுதிச் சடங்குகளை முடித்து விடுவார்கள். ஒரு மனிதனின் வாழ்வில் அவன் சாவடைந்த பின்பு நடக்கும் கொண்டாட்டமே இங்கு மிகப்பெரிய, ஆடம்பரமான கொண்டாட்டமாக இருப்பது அதிசயத்திலும் அதிசயம்.

### குடிநீர் திண்டாட்டம்

ரோகோவின் வட பகுதியில், குறிப்பாகக் கிராமப்புறங்களில், குடிநீர் கிடைப்பது என்பது பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது. தங்கள் வீடுகளிலிருந்து பல கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள இடங்களுக்குச் சென்றுதான் குடிநீர் எடுத்துவரும் அவல நிலை இவர்களுக்கு! தலைநகரான லோமிலிருந்து, 300கிலோ மீற்றர்கள் வடக்காக உள்ள ஒரு கிராமத்தில் குடிநீருக்காக ஒரேயொரு கிணறு மாத்திரமே இருக்கின்றது. 1978ஆம் ஆண்டில் ஜேர்மனியர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் கட்டிய கிணறு இது. நீண்ட வரிசையில் காத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைப்பது ஒரு வாளி தண்ணீர்தான்! பெரும்பான்மையானவர்கள் அருகாமையிலுள்ள ஆற்றிலிருந்து, நோய்க்காவிகளான சேற்று நீரை அள்ளி வருகிறார்கள். குளிக்கவோ அல்லது மிருகங்களுக்குக் குடிக்கவோ கொடுக்க முடியாத நீர் இது என்று ஓர் அதிகாரி குறிப்பிடுகிறார்.

அழுக்கு நீரை அருந்துவதால் மூன்று பிள்ளைகளில் ஒன்றாவது உடல்ரீதியாகப் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த மோசமான நிலை மாறி, 2017ஆம் ஆண்டளவில் 52வீதமானவர்களுக்கு நல்ல குடிநீர் கிடைப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம். எம்மைச் சுற்றி இருக்கும் நாடுகளும் அப்படித்தான்.

(அடுத்த வாரம் இன்னொரு நாடு தொடரும்...)

தொகுப்பு
தி.இராஜநாயகி

# கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்தளிப்பதே இந்தப் பகுதி. அவ்வகையில் இது விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' என்கிற (கட்டுரைத் தொகுப்பு) நூலில் இருந்து 'கொய்யப்பட்ட' ஒரு பகுதி. (வெளியீடு – நவம்பர்2003)

**1984** ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம். அப்பொழுது நானும் எனது மனைவி அடேலும் சென்னை நகரப் புறத்திலுள்ள திருவான்மையூரில் விடுதலைப் புலிப் போராளிகளுடன் வசித்து வந்தோம். எமது இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அவர்களும் மூத்த தளபதிகள் சிலரும், போராளிகளும் எமது இருப்பிடத்துக்குச் சமீபமாகத் தங்கியிருந்தனர். இந்திய மத்திய அரசு இரகசியமாக ஒழுங்கு செய்த இராணுவப் பயிற்சி முடிந்தபோதும், தமிழக நாட்டுப் புறங்களில் பயிற்சிப் பாசறைகளை நிறுவி, புதிய போராளிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. அடையாறில் அமையப்பெற்ற விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையகத்தில் நான் பணி புரிந்து வந்தேன்.

அந்தக் கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் மட்டுமன்றி மற்றைய போராளி அமைப்புக்களும் சென்னையைப் பிரதான பின்தளமாகக் கொண்டு இயங்கி வந்தன. தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்), தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு(புளொட்), ஈழ விடுதலை அமைப்பு(ஈரோஸ்) ஆகியன. இந்திய இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு தமிழ் நாட்டில் செயற்பட்டு வந்தன. பிளவுபட்டுப் பிரிந்து நின்ற போராளி அமைப்புக்களை ஒரே இலட்சியத்தில், ஒரே அணியாக ஒன்றிணைத்தால், தமிழீழ விடுதலைப் போராட்டம் பலப்படும் எனத் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வேளை பரவலாகக் கருத்தொற்றுமை நிலவியது. பல்வேறு வட்டாரங்களில் இருந்து ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்காவில் வசித்த ஈழத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் சென்னைக்கு வருகை தந்து விடுதலை அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்து ஒற்றுமையை வலியுறுத்தினர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் இந்த ஒற்றுமை முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். 1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களக் காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான இன ஒழிப்புக் கலவரத்தை அடுத்து தமிழ்நாடு எங்கும் தமிழர்களுக்கு ஆதரவான எழுச்சி கிளர்ந்தது. என்றுமில்லாத வகையில் தமிழின உணர்வு மேலோங்கி நின்றது. தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த போராளி அமைப்புக்கள் மீது அனுதாபமும் ஆதரவும் நிலவியது. ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு நல்கி, தமிழ்நாட்டுத் தமிழரின் நல்லெண்ணத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் மத்தியில் போட்டியும் நிலவியது; ..

●●●

...முதலமைச்சர் எம்.ஜி. ஆரைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்றாகிவிட்டது. முதல் சந்திப்பில் எமது இயக்கத்தை அறிமுகப்படுத்த வேண்டும். எமது இயக்கத்தின் போராட்ட இலட்சியத்தை எடுத்து விளக்க வேண்டும். ஆகவே, முதல் சந்திப்புக்கு என்னைப் போகுமாறு பிரபாகரன் பணித்தார். எம்.ஜி.ஆர். வற்புறுத்தினால் பின்பு தாம் அவரைச் சந்திக்கலாம் என்றும் பிரபாகரன் முடிவு எடுத்தார். எனது தலைமையில் ஒரு குழுவாகச் சென்று அன்று மாலை முதலமைச்சரைச் சந்திப்பது என்று முடிவாயிற்று. என்னுடன் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான பேபி சுப்ரமணியம் (இளங்குமரன்), சமீபத்தில் வீரச்சாவு எய்திவிட்ட கேணல் சங்கர், அன்று விடுதலைப் புலிகளின் பத்திரிகையின் ஆசிரி






யராகப் பணிபுரிந்த திரு.மு.நித்தியானந்தன் ஆகியோர் அன்று மாலை முதலமைச்சர் எம்.ஜி.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்தோம். மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்ட எம்.ஜி.ஆர் எம்மை அன்புடனும் பண்புடனும் வரவேற்றார். முதலில் நாம் எம்மை அறிமுகம் செய்து கொண்டோம்.

"உங்கள் தலைவர் பிரபாகரன் வரவில்லையா? அவரைச் சந்திக்க நான் ஆவலாக இருப்பதாகச் சொல்லுங்கள்" என்றார். "அவர் சென்னைக்கு வெளியே ஒரு பயிற்சிப் பாசறைக்கு அலுவலாகச் சென்றிருக்கிறார். அடுத்த தடவை நிச்சயமாக அவரை அழைத்து வருவோம்" என்றேன்.

"ஈழ விடுதலைப் போராளிகள் ஐந்து அமைப்புக்களாக ஏன் பிளவுபட்டு நிற்க வேண்டும். ஒரே அணியில் ஒன்றுசேர முடியாதா?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

"ஒற்றுமைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஓர் உறுதியான, தெளிவான இலட்சியத்தின் அடிப்படையில்தான் போராளி அமைப்புக்கள் ஒன்றுசேர முடியும். ஆனால், விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு நிறையவுண்டு. நடத்தையிலும் வேறுபாடு உண்டு. விடுதலைப் புலிகள் தனித்துவமானவர்கள். தனித்துவப் பண்பியல்புகள் கொண்டவர்கள். ஒழுக்கம், கன்னியம், கட்டுப்பாடு போன்ற உயரிய பண்புகளை இறுக்கமாகப் பேணுபவர்கள். சாவுக்குத் துணிந்தவர்கள். எதிரியின் கையில் உயிருடன் சிக்காதிருக்க நஞ்சுக் குப்பிகளை அணிந்திருப்பவர்கள். தமிழீழத் தாயக விடுதலை என்ற இலட்சியத்துக்காகத் தமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயாரானவர்கள். இந்த அற்புதமான பண்புகளும் இலட்சிய உறுதிப்பாடும் ஏனைய அமைப்பினரிடம் காணமுடியாது" என்று விளக்கினேன். மௌனமாக ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலி வீரர்கள் கடைப்பிடிக்கும் பண்பியல்புகள் அவரை வெகுவாகக் கவர்ந்தன...

●●●

"...விடுதலைப் புலிகளின் கொள்கை என்ன, அரசியல் சித்தாந்தம் என்ன? விடுதலைப் புலிகள் கம்யூனிசத் தீவிரவாதிகள் என்று எனது அமைச்சர் ஒருவர் சொல்கிறாரே. அது உண்மையா?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர்.

'விடுதலைப் புலிகள் கம்யூனிஸ்டுகள் அல்லர். விடுதலைப் புலிகள் புரட்சிவாதிகள். சுதந்திரப் போராளிகள். தமது தாயகமான தமிழீழத்தின் சுதந்திரத்துக்காகப் போராடுபவர்கள். சாதியக் கொடுமை, பெண் அடிமைத்தனம் மற்றும் சமூக முரண்பாடுகள் நீங்கிய சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் ஓர் உன்னதமான, சுதந்திரமான சமுதாயத்தைப் படைக்கவே நாம் போராடுகின்றோம். இப்படியான எமது புரட்சிகரக் கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் எம்மைக் கம்யூனிசத் தீவிரவாதிகள் எனச் சிலர் தவறாகக் கருதக் கூடும். ஏழைகளின் சுபீட்சத்துக்காகவும் ஒடுக்கப்படும் மக்களின் விடிவுக்காகவும் நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றோம். குருதி சிந்தி, உயிரை அர்ப்பணித்துப் போராடுகின்றோம். எமது இந்த இலட்சிய உறுதியைத் தீவிரவாதம் என்று சொல்ல முடியாது. விடுதலை வேட்கை என்று சொல்வதே பொருந்தும்" என்று விளக்கினேன். விடுதலைப் புலிகளின் கொள்கையையும் சித்தாந்தத்தையும் விவரிக்கும்போது கடினமான, சிக்கலான சொற்பாவனைகள், கோட்பாடுகளைத் தவிர்த்து மிகவும் எளிமையாக அவர் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் விளக்க முயன்றேன்.

"ஏழைகளின் நண்பனாக, தொழிலாளர்களின் தோழனாக, நசுக்கப்படும் மக்களின் நாயகனாக நீங்கள் திரையுலகில் நடித்துத், தமிழ் நாட்டில் சமூக விழிப்புணர்வைத் தட்டியெழுப்பவில்லையா? இதனால் தமிழ் மக்களின் இதயங்களில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடிக்கவில்லையா? நீங்கள் சினிமா உலகில் சாதித்ததை, விடுதலைப் புலிகள் நிஜவுலகில் சாதிக்கிறார்கள். உங்களுக்கும் புலிகளுக்கும் இலட்சியம் ஒன்றுதானே? கொள்கையளவில் நோக்கினால், உங்களையும் பிரபாகரனையும் சமூகப் புரட்சிவாதிகள் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று விளக்கினேன்.

அவர் புன்முறுவலுடன் தலையசைத்தபோது நான் கொடுத்த விளக்கம் அவருக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது என்பது தெளிவாகியது.

அடுத்ததாகச் சிங்கள அரச பயங்கரவாதத்தின் கொடுமைகளையும் ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் தாங்கொணாத் துன்பங்களையும் எடுத்துக் கூறினோம். சிங்கள ஆயுதப் படைகள் தமிழர் தாயகத்தில் நிகழ்த்திய படுகொலைகளை விவரித்துக்கூறிய திரு.பேபி சுப்பிரமணியம், அந்தக் கொடூரக் காட்சிகளைச் சித்திரிக்கும் ஒளிப்படங்களை எம்.ஜி.ஆரிடம் காண்பித்தார். அந்தக் கொலைக் காட்சிகளைப் படங்களில் பார்த்ததுமே அவரது முகம் விகாரமடைந்தது. "இதைப் பார்க்க முடியவில்லையே. இப்படியெல்லாம் கொடுமை செய்வார்களா?" என்று கவலையுடனும் ஆச்சரியத்துடனும் கேட்டார்.

"ஈழத்தில் இனக்கொலை நடக்கிறது. எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டு வருகிறார்கள். இந்தத் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களையும், மண்ணையும் மீட்கவே நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம்" என்று விளக்கினேன்.


"இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை இந்திய அரசு சும்மா பார்த்துக்கொண்டு இருக்கிறதா? ஈழத்துப் போராளிகளுக்கு ஏதோ இரகசியமாக உதவி செய்வதாகக் கேள்விப்பட்டேன். இராணுவப் பயிற்சியும், ஆயுதங்களும் கொடுப்பதாகச் சொல்கிறாங்க. உண்மையா?" என்று கேட்டார் முதலமைச்சர்.

"மிகவும் சிறிய அளவில் உதவி புரிகிறார்கள். யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட மாதிரி. எமது அமைப்பைச் சேர்ந்த இருநூறு போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். சிறிய தொகையில் பழைய துருப்பிடித்த ஆயுதங்களும் தந்திருக்கிறார்கள். இவற்றில் பல பாவனைக்கு உகந்தன அல்ல என்று எமது தளபதிகள் சொல்கிறார்கள். தமிழீழ மக்களின் அரசியல் விடுதலைக்காக இந்திய அரசு எங்களுக்கு உதவி புரியவில்லை. தனது பூகோள - அரசியல் நலனுக்காகவே எமக்கு உதவி புரிகிறது. அதாவது மேற்குலக அரசியல் இராணுவ வலைக்குள் சிக்குண்டு நிற்கும் இலங்கை அரசைத் தனது ஆதிக்க வியூகத்துக்குள் கொண்டு வருவதற்காகவே இந்தியா முயல்கின்றது. இந்த நோக்கை அடைவதற்காகவே ஈழத்துப் போராளிகளை இந்தியா பகடைக் காய்களாகப் பாவிக்கிறது. இந்த இராணுவப் பயிற்சித் திட்டத்தாலும் பாகுபாடு காட்டப்படுகிறது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி மறுக்கப்பட்டது. ஆயினும் இந்திரா காந்தி அம்மையாரின் தலையீட்டின் பின்னரே இந்தப் பயிற்சித் திட்டத்தில் நாம் இணைக்கப்பட்டோம். அப்படியிருந்தும் எம்மைவிட மற்றைய அமைப்புகளுக்கே கூடுதலாகப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்குப் பணமும் வழங்கப்படுகின்றது. எமக்கு நிதியுதவி எதுவும் வழங்கப்படவில்லை" என்று சொன்னேன்.

"என்ன காரணத்துக்காக இப்படிப் பாரபட்சம் காட்டுகிறார்கள்?" என்று கேட்டார் எம்.ஜி.ஆர். "நாம் தனித்துவமான போக்குடையவர்கள் என்பது இந்திய அரசுக்குத் தெரியும். அத்தோடு, வரித்துக்கொண்ட இலட்சியத்தில் நாம் உறுதியாக நிற்போம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவின் இரகசியத் திட்டங்களுக்கு இசைந்து போய், வளைந்து கொடுக்க மாட்டோம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஏனைய அமைப்புக்கள் அப்படியல்ல. அவர்களுக்கு உறுதியான இலட்சியம் எதுவும் இல்லை. இந்திய அரசின் அழுத்தங்களுக்கு, அவர்கள் பணிந்து சென்று, வளைந்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இதன் காரணமாக ஏனைய போராளி அமைப்புகளை இராணுவ ரீதியாகப் பலப்படுத்தி, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த இந்திய அரசு முயல்கிறது" என்று விளக்கினேன்.

எல்லாவற்றையும் மிகவும் உன்னிப்பாகவும், பொறுமையாகவும் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். "எல்லாம் எனக்குப் புரிகிறது. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? எத்தகைய உதவியை என்னிடம் இருந்து எதிர் பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

# பெப்பர்மின்ற்




ஹொலிவூட்டின் பழிவாங்கும் கதைகளில் இதுவும் ஒன்று என்று இயல்பாகக் கூறிவிட முடியாமல் செய்வதற்காக அவற்றிலிருந்து வேறுபட்ட சிலதனிப் பண்புகளைக் கொண்டுள்ளது பெப்பர்மின்ற்.

### கதை

வீட்டில் உங்கள் உணவைத் திருடித் தின்ற ஒரு பூனை இப்போதுஉங்களிடம் நன்றாக மாட்டிவிட்டாதா? அதைத் துரத்திச் செல்கையில் இனிஎந்தவழியிலும் தப்பிக்கவே முடியாது எனும் நிலையில், மூன்று பக்கங்களும் தடுப்புக்களையுடைய சுவர்களுக்குள் உங்களிடம் அதுசிக்கிவிட்டதா? ஆனால், இனித்தான் நீங்கள் கவனமாக இருக்கவேண்டும். அந்தப் பூனை புலியாகும் தருணத்தில் இப்போது இருக்கிறது. அதற்கு அடிப்பதற்காக கையில் தடியுடன் நீங்கள் நிற்பீர்களாயின், நீங்கள் நிற்கின்ற அந்த நான்காவது வெளியால் தான் அது பாய்ந்து செல்லவேண்டும். ஆகவே அது உங்களைத் தாக்கிவிட்டுச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. இப்படியான ஒரு கருவைக் கொண்ட கதைதான் இதுவும். இனி இழப்பதற்கு எதுவுமில்லை என்று ஒருவர் உணரும் கணத்தில், அதுவரையில்லாத சக்தியும், புத்தியும் அவருக்கு ஒருங்கே சேரும். இதைப் பழிவாங்கல் கதையொன்றின் வாயிலாகச் சொல்கிறது. வருகிற மாதம் 7ஆம் திகதியளவில் வெளியாகவிருக்கும் 'பெப்பர்மிண்ற்' திரைப்படம்.

நினைவிழத்தலில் இருந்து மீண்டெழும் அந்த இளம் தாய், தன்னுடைய கணவனையும் ஆசை மகளையும் காணவில்லை என்று தேடுகிறாள். கொடூரர்கள் சிலரால் காரணமின்றி அவர்கள் கொல்லப்பட்ட விவரம் அவளுக்கு நினைவூட்டப்படுகிறது. அழுது அரற்றும் அவளுக்குக் கொலையாளிகள் கைதாகியிருக்கின்ற செய்தி ஆறுதலைத் தருகிறது. ஆனால், தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்கும் என்ற அவளுடைய எதிர்பார்ப்பில் மண் விழுகிறது. கறைபடிந்த காவலர்களின் அலட்சியமும், இலஞ்சத்தில் திளைக்கும் நீதிபதியும் குற்றவாளிகளைத் தப்பவிடுகின்றனர். விரக்தியில் அந்தஅப்பாவிப் பெண் காணாமல்போகிறாள். அதன் பின்னர் ஐந்து ஆண்டுகள் கழித்து, அச்சுறுத்தலாகும் தொடர் கொலை களைத் துப்புத்துலக்கும் அமெரிக்கப் புலனாய்வுத் துறையினரின் விசாரணை, காணாமல்போன, அநீதியால் வஞ்சிக்கப்பட்டஅந்தப் பெண்ணிடம் வந்துநிற்கிறது. தனது குடும்பம் கொல்லப்பட்ட ஐந்தாவது ஆண்டு நினைவு நாளில் வீறுகொண்டு எழுந்து எதிரிகளை, அவள் வேட்டையாடுவதும் அந்தப் பழிவாங்கும் படலத்துக்குச் சமூக ஊடகங்களில் ஆதரவு வலுப்பதும் தொடர்கிறது. இத்தனை வருடங்களாக அந்தப் பெண் எங்கே மறைந்திருந்தாள்? பிரத்தியேகக் கொரில்லா தாக்குதல்களை எங்கே கற்றுக்கொண்டாள்? அவளது வேட்டையாடல் எங்கே சென்று முடிகிறது என்பதான முடிச்சுகள் பின்னர் அவிழ்கின்றன்.

### பாத்திரங்கள்

திரைக்கதை மீதான நம்பிக்கையில் இந்தப் பழக்கப்பட்ட பழிவாங்கல் கதையை பெப்பர்மிண்ற் முன்னோட்டக் காட்சியிலேயே துணிந்து சொல்லிவிடுகிறார்கள். டேக்கன்உள்ளிட்ட சண்டையும், விறுவிறுப்பும் கலந்த படங்களால் கவனம் பெற்ற பிரெஞ்சு இயக்குநர் பீயர் மொரெல் இயக்கியிருக்கின்ற இந்தத் திரைப்படத்தில், ஜெனிவ்பர் கார்னர், டைசன் ரிட்டர், மைக்கல் மோஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ■



> நினைவிழத்தலில் இருந்து மீண்டெழும் அந்த இளம் தாய், தன்னுடைய கணவனையும் ஆசை மகளையும் காணவில்லை என்று தேடுகிறாள். கொடூரர்கள் சிலரால் காரணமின்றி அவர்கள் கொல்லப்பட்ட விவரம் அவளுக்கு நினைவூட்டப்படுகிறது.

# புதிய ஜேம்ஸ் பாண்ட் நாவல்






அடுத்துஉருவாகவிருக்கும் ஜேம்ஸ் பாண்ட் நாவல், 'கஸினோறோயல்' படக் கதையின் முன் பகுதிக் கதையாக இருக்கும் என்றுதெரிகிறது. ஹொலிவுட்பட வரிசைகளில் முக்கியமானது ஜேம்ஸ் பாண்ட். ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரத்தில் நடிப்பவர்கள் அவ்வப்போது மாறினாலும் அந்தக் கதாபாத்திரத்தின் புகழ் என்றும் குறைந்ததில்லை. 'இயன் வ்ப்ளெமிங்' என்றபிரிட்டிஷ் எழுத்தாளரின் படைப்பான இந்தக் கதாபாத்திரம் 1953ஆம் ஆண்டு 'கஸினோ றோயல்' என்றகதையின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டது. தொடர்ந்து அந்தக்கதை 'தொலைக்காட்சித் தொடராகவும் உருவானது. 1962ஆம் ஆண்டில் தான் முதல் ஜேம்ஸ் பாண்ட் படம் வெளியானது.

ஏற்கனவே 'கஸினோ றோயல்' கதை 1967ஆம் ஆண்டில் ஒருமுறையும், 2006ஆம் ஆண்டில் ஒருமுறையும் ஜேம்ஸ் பாண்ட் படங்களாக உருவாகியுள்ளது. தற்போது, அடுத்த ஜேம்ஸ் பாண்ட் கதை, 'கஸினோ றோயலின்' முன் கதையாக இருக்கும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. நாவலின் பெயர் 'போரெவர் அண்ட் எ டே' என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. இதன் எழுத்தாளர் ஹோறோவிட்ஸ்.

இயன் வ்ப்ளெமிங் மறைவுக்குப் பின் ஹோறோவிட்ஸ்தான் பாண்ட் கதாபாத்திரத்தை வைத்து நாவல் எழுதியுள்ளார். அவர் எழுதிய இரண்டாவது நாவல் இது. இவரதுமுதல் ஜேம்ஸ் பாண்ட் நாவல் 2015ஆம் ஆண்டில் வெளியான ட்ரிக்கர் மார்டிஸ். இது கோல்ட் வ்பிங்கர் கதாபாத்திரத்தைப் பாண்ட் எதிர்கொள்வதுபோலஅமைக்கப்பட்டிருந்தது.

"மார்ஸே தண்ணீரில் ஜேம்ஸ் பாண்டின் உடல் மிதந்துகொண்டிருக்கிறது. அடையாளம் தெரியாதவர்களால் அவர் கொல்லப்பட்டுள்ளார். புது ஜேம்ஸ் பாண்டுக்கானநேரம் வந்துவிட்டது" என்றகுறிப்போடு இந்த நாவல் தொடங்குகிறது. தொடர்ந்து ஜேம்ஸ் பாண்ட் எப்படித் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார் என்பதையும், வ்ப்ளெமிங் எழுதி வெளிவராத சில கதைகளையும் இந்த நாவலில் தெரிந்துகொள்ளலாம். போரெவர் அண்ட் எ டே, என்ற இந்தப் புத்தகம் மே.31ஆம் திகதி பிரிட்டனில் வெளியாகியிருக்கிறது. வருகிற மாதமளவில் அமெரிக்காவிலும் வெளியாகவுள்ளது.

> ஜேம்ஸ் பாண்ட் எப்படித்தன்னைத் தயார்படுத்திக் கொண்டார் என்பதையும், வ்ப்ளெமிங் எழுதி வெளிவராத சில கதைகளையும் இந்த நாவலில் தெரிந்துகொள்ளலாம். போரெவர் அண்ட எ டே என்ற இந்தப் புத்தகம் மே 31ஆம் திகதி பிரிட்டனில் வெளியாகியிருக்கிறது.






## கமல் படம்

**2013** ஆம் ஆண்டில் வெளியான விஸ்வரூபம் திரைப்படத்தின் இரண்டாவது பாகம் இது. முந்தைய படத்தில்வரும் சம்பவங்களுடன் முன்னும் பின்னுமாக நகர்கிறது இந்தப் பாகம். முதல் பாகத்தில் விஷ் என்ற மாறுவேடத்தில் அமெரிக்காவில் வசிக்கும் விஸாம் அகமது கஷ்மீரி, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நிகழவிருந்த வெடிகுண்டுத் தாக்குதலைத் தடுக்கிறார். அந்தத் தாக்குதலைத் திட்டமிட்ட ஒமர் தப்பிவிடுகிறார். இந்த இரண்டாம்பாகம் அதிலிருந்து ஆரம்பிக்கிறது.

**கதை**

இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்துக் கடற்பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட அணு ஆயுதப் போர்க் கப்பலைக் கண்டறிந்து, அதை வெடிக்கச் செய்து லண்டனில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறார் அல்கொய்தா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஒமர் பாய் (ராகுல் போஸ்). கடலுக்கு அடியில் மூழ்கிக் கிடக்கும் ஆயிரத்து 500 தொன் நிறையுடைய, அந்தக் கப்பலிலுள்ள வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து லண்டன் நகரை மூழ்கடிப்பது, இந்தியாவின் சுதந்திர தினத்தன்று 64வரையான இடங்களில் சமநேரத்தில் குண்டுகளை வெடிக்கச் செய்வது ஆகியவை அவரது முக்கிய சதிகள். இராணுவ உயர் அதிகாரியான கமல்ஹாசன் இந்தச் சதித் திட்டங்களை முறியடிக்கும் பணியைக் கையில் எடுக்கிறார். இதற்கு சேகர் கபூர், அண்ட்ரியா, பூஜா குமார் உள்ளிட்டோர் உறுதுணையாக நிற்கின்றனர். தனது தாக்குதல் திட்டங்களை இந்திய உளவாளியான கமல்ஹாசன் முறியடிக்க வந்திருப்பது தெரிந்ததும், கமலைக் கொல்லும் முயற்சியில் இறங்குகிறார் ராகுல் போஸ். இவர்கள் இருவரில் யாருடைய முயற்சி வென்றது என்பதே படத்தின் கதை.

**தொடர்ச்சியாக...**

'விஸ்வரூபம்' முதல் பாகத்தின் தொடர்ச்சியாக இந்த 2ஆம் பாகம் விரிகிறது. அதை நினைவூட்டும் விதமாகப் படத்தின் ஆரம்பக் காட்சிகள் அமைந்துள்ளன. இந்தியாவால் தேடப்படும் குற்றவாளி என அறிவிக்கப்படும் கமல் ஓர் இந்திய உளவாளி என்பதை வில்லன் ராகுல் போஸ் கண்டுபிடிக்கும் விதம் உட்பட, முதல் பாகம் விடையளிக்காமல் சென்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது இந்த 2ஆம் பாகம்.

**பாத்திரங்கள்**

நடிப்பைத் தாண்டி, திரைக்கதை ஆசிரியர், இயக்குநராக முதல் பாகத்தில் உண்மையாகவே விஸ்வரூபம் எடுத்திருந்தார் கமல். படமாக்கம், தொழில்நுட்பத்தில் ஹொலிவூட் படங்களுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்ற தரத்துடனும் அது இருந்தது. தற்போது அது இன்னும் ஒருபடி அதிகமாகி 'உலக நாயகன்' என்ற பட்டத்துக்குப் பொருத்தமான கலைஞனாகக் கமலை முன்னிறுத்தியிருக்கிறது 2ஆம் பாகம்.

அறையில் மைக் பொருத்தப்பட்டிருப்பது முதல், தன்னுடைய இராணுவ அமைப்பிலேயே வில்லன் ராகுல் போஸுக்கு உளவாளி இருப்பதைக் கமல் கண்டுபிடிப்பதும், தன்னைக் கொல்வதற்கு வில்லன் திட்டமிடுவதைச் சாதுர்யமாகக் கையாள்வதிலும் கைதட்டல் வாங்குகிறார் கமல். அந்த இடங்களில் ஆனந்த் மகாதேவனும் மிளிர்கிறார். கதைக்கேற்ற மிகக் கச்சிதமான உடல்மொழி, பார்வை அசைவுகளால் மிரட்டியிருக்கிறார் கமல்ஹாசன். அண்ட்ரியாவின் சண்டைக்காட்சிகள், இராணுவப் பயிற்சி இடங்களும் அருமை. படத்தில் விறுவிறுப்பான திருப்பமாக அமைந்தது சிதைவுறாத அமைப்பால் இங்கிலாந்து போர்க் கப்பலை வெடிக்கச் செய்யும் வியூகம். அதற்காகப் பூஜாகுமாரைக் கடலுக்குள் இறக்கி கமல்ஹாசன் செய்யும் முயற்சி வெகுவாக ஈர்க்கிறது.

**பலம் – பலவீனம்**

புலனாய்வும் விறு விறுப்புமான களத்தில் அடுத்தடுத்த தாக்குதல், எதிர்பார்ப்பு உள்ளிட்ட விடயங்களை அடுக்கிக்கொண்டே போகாமல் குடும்பம், காதல், சின்னச் சின்ன ஊடல் என்றும் தொட்டிருக்கிறார் இயக்குநர் கமல்ஹாசன். அந்த இடங்கள் சற்றே ஆறுதல் என்றாலும், தீவிரவாத அமைப்பை எதிர்கொள்ளும் ஓட்டத்துக்கு இடையூறாக அமைந்துவிடுகிறது. தவிர, கதை ஆக்கம், வசனங்கள் அளவுக்கு கிராபிக்ஸ் காட்சிகளில் கமல் கவனம் செலுத்தவில்லை. அதுவும் படத்தின் விறுவிறுப்பைக் குறைக்கிறது.

முதல் பாகத்துடன் ஒப்பிடும்போது இதில் காதல் அதிகமாகவும் ஆக்சன் சற்று குறைவாகவும் இருக்கிறது. ஆனால் பலவீனமான இதயம் கொண்டவர்களுக்கு அதிர்ச்சி தரும் பல காட்சிகள் வன்முறையின் மிதமிஞ்சிய தன்மையுடன் இருப்பது படத்தின் குறிப்பிடத்தக்க பலவீனங்களில் ஒன்று. இந்தப் பாகத்தில் கதாநாயகன் கமலுக்கான காட்சிகள், இந்தியாவின் முன்னணி நடிக, நாயகத்தனப் படங்களில் காணப்படுவதுபோல இந்திய மசாலாத்தன்மையுடன் இல்லாமல் ஹொலிவூட் மசாலாத் தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், சண்டை வடிவமைப்பாளர்கள் ஸ்டேபான், வ்பெரோஸ், டி.ரமேஷ் ஆகிய மூவரும் கவனிக்க வைக்கின்றனர். இவர்களது சண்டை வடிவமைப்புக்கு ஈடுகொடுத்திருக்கும் கமல், மாஸ் மசாலாக் கதாநாயகனாகவும் தனது இரசிகர்களை ஏமாற்றாமல் விருந்தளித்து விடுகிறார்.



**இசை, ஒளிப்பதிவு, கலை இயக்கம்**

ஷாம்தத், ஷானு ஆகியோரது ஒளிப்பதிவில், நீருக்கு அடியிலான காட்சிகளை வடிவமைத்திருப்பதும் படம் பிடித்திருப்பதும் சந்தேகம் இல்லாமல் உலகத் தரம் தான். தலிபான் தீவிரவாதக் குழுக்களின் மறைவிடங்களைத் திரைகள் எனத் தெரியாதவாறு வடிவமைத்த லால்குடி இளையராஜாவின் கலை இயக்கம் அருமை. லண்டன், இந்தியா, ஆப்கன் ஆகிய களப் பின்னணிகளுக்கு ஏற்ற வகையிலான ஜிப்ரானின் பின்னணி இசையும், மகேஷ், விஜய் சங்கரின் கச்சிதமான படத்தொகுப்பும் பார்வையாளர்கள் திரையை விட்டுக் கண்களைத் திருப்பாமல் பார்த்துக் கொள்கின்றன.




## காதல் மீதான கேள்வி

ஒரு நடுத்தர வர்க்கத்து இளைஞனுக்கும், நவயுக யுவதிக்கும் இடையேயான காதலும், காதல் சார்ந்த ஊடலும், சண்டையும் சமாதானங்களுமே 'பியார் பிரேமா காதல்'.

**கதைச்சுருக்கம்**

அலுவலகத்துக் கணினியில் 'வின்டோவைத்' திறந்து, அதன் வழியாகப் பக்கத்து அலுவலகப் பெண் சிந்துஜாவைப் பார்த்து, லயித்து, காதலித்து உருகுவதையே முழுநேர வேலையாக வைத்திருக்கிறார் ஸ்ரீ. பால் நழுவிப் பழத்தில் விழுவதுபோல ஒருநாள் ஸ்ரீயின் அலுவலகத்திலேயே வேலைக்குச் சேர்கிறார் சிந்துஜா. பசிக்கு 'மணியம்' கடையைத் தேடும் ஸ்ரீயும், பீசாக் கடையைத் தேடும் சிந்துஜாவும் ஒருகட்டத்தில் மதுபானத்தை ஊற்றிக் குடித்து நட்பை வளர்க்கிறார்கள். நட்புச்செடியில் குட்டிக் குட்டிக் குறும்புகளும், சந்தோஷங்களும் சச்சரவுகளும் பூத்துக் குலுங்க, காலத்தின் கோலத்தால் ஒருநாள் இரவு நண்பர்களுக்குள் 'கசமுசா' நடந்துவிடுகிறது. அதே படுக்கையில் வைத்து "ஐ லவ் யூ" எனத் தனது நீண்டநாள் காதலை ஸ்ரீ சொல்ல, "வி ஆர் ஜஸ்ட் ப்ரெண்ட்ஸ்" எனத் திகிலாக்குகிறார் சிந்துஜா. இப்படிக் காமம் வேறு, காதல் வேறு, கல்யாணம் வேறு எனக் கட்டம்கட்டி வாழும் சிந்துஜாவுக்கும், எல்லாமே ஒன்று தான் எனக் கண்ணைக் கசக்கும் ஸ்ரீக்கும் இடையேயான உறவின் அடுத்த கட்டம் எப்படி அமைந்தது என்பதைக் காதல் கதையாகவும், கலர்புல்லாகவும் சொல்லியிருக்கிறார் இயக்குநர் இளன்.

**பாத்திரங்கள்**

அம்மாவை நன்றாகப் பார்க்க வேண்டும் என்பதையே வாழ்நாள் இலட்சியமாகக் கொண்ட, தேநீர் மட்டுமே குடிக்கும் நல்லதொரு இளைஞனாக ஹரீஷ் கல்யாண். சூதுவாது தெரியாத நடுத்தரவர்க்கத்து இளைஞன் கதாபாத்திரத்துக்குக் கச்சிதமாகப் பொருந்துகிறார்.



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உணவகம் திறக்க வேண்டும் என்பதையே வாழ்நாள் இலட்சியமாகக் கொண்ட, ஒரே மூச்சில் பீர் போத்தலைக் குடித்து முடிக்கும் பெண்ணாக ரைஸா. நன்றாக நடிக்கிறார். ஹரீஷ் கல்யாணுக்கும் ரைஸாவுக்கும் இடையேயான தாறுமாறான இணைப்பாக்கம் தான் படத்தின் பலம். நாயகனின் காதலுக்குத் திட்டம் வகுத்துக் கொடுக்கும் 'ஜடிடா மணி' கதாபாத்திரத்தில் முனீஸ்காந்த். இன்னும் அவரை நன்றாகப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனந்த்பாபு, ரேகா, சுப்பு பஞ்சு எனப் படத்தில் மூத்த நடிகர்களும் இருக்கிறார்கள். சதீஷ், சாந்தி அங்கா கதாபாத்திரங்களில் நடித்தவர்கள் கவனிக்கவைக்கிறார்கள். நல்ல பாத்திர வடிவமைப்பும்கூட.

**காதல் மீதான புரிதல்**

வழக்கமான திரைக்கதையையும் சுவாரஸ்யமாக்குகின்றன தமிழ் சினிமாவுக்குப் புத்தம் புதிதான சில காட்சிகள். சிரிப்பு, அழுகை, கோபம், காதல் என எல்லா உணர்வுகளும் கலந்த திரைக்கதை. படத்தின் இறுதிப் பகுதிகள் மட்டும் முகத்தில் தண்ணியைத் தெளிக்கின்றன. இந்தத் தலைமுறையினருக்குக் காதலின் மீதான புரிதல்களையும் அதிலுள்ள சிக்கல்களையும் பேசுகிறது படம். காதலர்களின் எல்லாத் தரப்பு நியாயங்களையும் பேசி, இறுதியாக என்ன முடிவெடுப்பது என்பது தெரியாமல், அந்த வாய்ப்பை நம்மிடமே கொடுத்திருக்கிறார் இயக்குநர். எல்லாத் தெய்வீகக் காதலர்களுக்கும் இடையே ஓர் அமெரிக்க மாப்பிள்ளை பலி ஆடாகச் சிக்குமல்லவா. அதேபோல், இந்தப் படத்தில் ஒரு பெண்ணைப் பலிஆடு ஆக்கியிருக்கிறார்கள். காதலர்களின் நியாய, அநியாயங்களை எல்லாம் பேசுபவர்கள் இந்தப் பலியாடுகளைப் பற்றியும் பேசியிருக்கலாம். இரசிகர்களுக்கு இன்னும் தெளிவான புரிதல் கிடைத்திருக்கும்.

# குற்றங்களுக்கு எதிரானவர்கள் குற்றவாளிகளுக்கு உதவும் விந்தை



கட்டுரை
சி.சந்திரகலா

குற்றங்களுக்கு எதிரானவர்கள், உண்மைக்காகக் குரல்கொடுப்பவர்கள் என்று பல மகுட வாக்கியங்களைச் சூடிக் கொண்டு, "சட்டத்தைக் காத்து, நீதியை நிலை நிறுத்துகிறோம்" என்றும், தம்மைக் 'குற்றங்களுக்கு எதிரானவர்கள்' என்றும் காட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ்ச் சட்டத்தரணிகளில் சிலர், குற்றவாளி களுக்கு ஆதரவாகச் செயற்படுவது பலரும் அறியாத சங்கதி. "குற்றங்களுக்கு எதிரானவர்கள், குற்றவாளிகளுக்கு அல்ல" எனும்படியான ஒரு புதிய கோட்பாடு குறித்த தமிழ்ச் சட்டத்தரணிகளிடம் நிலவி வருகிறது. 'குற்றத்துக்கு எதிரானவர்கள்' என்றால், அதைப் புரிபவர்களுக்கும் எதிரானவர்களாகவே இருந்தாக வேண்டும். ஆனால், இவர்கள் விடயத்தில் இது முரண்நிலை.

**குற்றவாளியை விடுவிப்பது புனிதமான செயலல்ல**

மேற்கூறிய வகைச் சட்டத்தரணிகளுக்குக் குற்றம் பணம் கொடுக்காது. ஆனால், அதைச் செய்பவர்கள் பணம் கொடுப்பார்கள். அதாவது அந்தக் குற்றங்களில் இருந்து தம்மை விடுவித்து விடுங்கள் என்ற கோரிக்கையுடன் சட்டத்தரணிகளைத் தஞ்சம் அடைந்தவர்கள் பணம் கொடுப்பார்கள். குற்றம் செய்தவரை, தண்டனை அனுபவிக்காது தப்ப வைப்பது ஒன்றும் புனிதமான கைங்கரியம் அல்ல. அதுவும், அந்தக் குற்றவாளி புரிந்த குற்றத்துக்கு இணையான ஒரு சமூக விரோதச் செயற்பாடே(குற்றமே) ஆகும். இது குற்றம் புரிபவர் பயமின்றித் துணிந்து, தொடர்ந்தும் குற்றத்தில் ஈடுபடுவதற்கு வழி வகுக்கும். இது இன்று, நேற்றுத் தமிழ் சமூகத்துக்குள் புகுந்த ஒன்றல்ல. 50 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் ஓர் ஏழைச் சீவல் தொழிலாளிக்கும், மட்டக்களப்பில் ஓர் ஏழை விவசாயிக்கும் நடந்த கொடுமையைத் தமிழ்ச் சட்டத்தரணிகள் மத்தியில் குற்றங்களுக்கு உடந்தையாகின்ற போக்கு உணரப்பட்டதன் முதல் பதிவாக இவ்விடத்தில் ஞாபகப்படுத்த முடியும்.

**கொலை செய்வதற்குத் தகுந்த திட்டம்**

பனை மரத்தில் கள்ளுச் சீவிக்கொண்டிருந்த ஒரு சீவல தொழிலாளி, அவ்வேளையில் அந்தப் பனை மரத்தின் கீழே நின்ற ஒருவரால், துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். அதை நேரில் கண்டவாகள் சாட்சி சொன்ன போதிலும், அந்தக் கொலையைச் செய்தவரால் தண்டனையில் இருந்து தப்ப முடிந்தது. அதற்குக் காரணம், அந்தச் சீவல் தொழிலாளி கொல்லப்படுவதற்கு முன்னர், அதற்காக ஒரு பிரபல தமிழ்ச் சட்டத்தரணியிடம் ஆலோசனை பெறப்பட்டு, அதன் பின்னர் அந்தக் கொலை செய்யப்பட்டமையே. அதனாலேயே குறித்த குற்றவாளி தப்பிக்கொள்ள முடிந்தது.

சீவல் தொழலாளி பனையில் இருக்கும்போது, அதே அளவு உயரமான இன்னோர் பனையில் இருந்து சுட்டால் தான் மார்பில் சூடு விழுவது சாத்தியம். ஆனாலும், தொழிலாளி சீவிக் கொண்டிருக்கும் பனை மரத்தின் கீழே நின்றும் மார்பில் சுட முடியும். அந்தச் சீவல் தொழிலாளியின் மார்பில் குண்டு பாயவேண்டும் என்பதே கொலையின் முன்பாகக் கொலையாளிக்குச் சட்டத்தரணி வழங்கிய சட்ட ஆலோசனையாக இருந்தது. கீழே நின்றவாறு எவ்வாறு நெஞ்சில் சுடுவது என்பது பற்றியே ஆலோசனை வழங்கப்பட்டது. அதாவது பனை வட்டுக்குள் ஏறிப் பாளையைச் சீவுவதற்காகக் குனியும்போது தொழிலாளியின் நெஞ்சுப் பகுதி நிலம் பார்க்கும். அவ்வேளையில் சுட வேண்டும் என்று கூறியதற்கிணங்கச் சூடு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் நீதிமன்ற விசாரணையின்போது, "சுட்டவர் வேறு ஒரு பனையில் இருந்து சுட்டாரா?" என்று கேட்டபோது, சாட்சிக்காரர் "இல்லை அவர் பனையின் கீழிருந்துதான் சுட்டார்" என்று கண்ணால் கண்ட விடயத்தைக் கூறினார். மார்பில் குண்டு பாய்ந்திருக்கின்றபடியால், கொலையுண்டவருக்குச் சமாந்தர உயரத்தில் நிற்கும் ஒருவரால்தான் அப்படிச் சுட முடியும், என்று வாதாடிய குறித்த சட்டத்தரணி, எப்படியோ குற்றவாளியைக் குற்றத்திலிருந்து விடுவித்துவிட்டார்.

இவ்வாறு குற்றம் புரிபவர்களைக் காப்பாற்றி விடுகின்ற தமிழ்ச் சட்டத்தரணிகள் இன்று வரையில் தமிழ்ச் சமூகத்தில் உள்ளனர் என்பதே இன்றைய துயரமாகும்.

**மட்டக்களப்பில் மற்றொரு பதிவு**

மட்டக்களப்பு- புன்னைக்குடாப் பகுதியின் முக்கிய புள்ளியான 'கானா குனா'வின் மகன் ஒரு விவசாயியைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றிருந்தார். அதன் பின் சீவல் தொழிலாளியின் விடயத்தில் தலையிட்டுக் குற்றவாளியைக் காப்பாற்றிய அதே சட்டத்தரணியைக் கொலை நடைபெற்ற இடத்துக்குக் கூட்டிச் சென்று காட்டியிருக்கிறார்கள். சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டு அந்த விவசாயியின் உடலைத் துளைத்துவிட்டு அருகில் இருந்த பனை மரத்திலும் பாய்ந்திருந்தது. அந்தச் சட்டத்தரணி மேற்படி வழக்கைக் கண்டி நீதிமன்றத்துக்கு மாற்றிக் காலத்தை இழுத்தடித்தார். குண்டுபட்ட பனை மரத்தைக் கீறி எடுத்து விட்டு, அந்த இடத்தில் வேறொரு மரத்தை நட்டுவைத்த நிலையில், நீதிபதி அந்த இடத்தைப் பார்க்க வந்தார். கொலைக்கு முக்கிய ஆதாரமாகக் கருதப்பட்ட குண்டுபட்ட பனை மரம் அங்கிருக்கவில்லை. அதனால், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றத்தை நிரூபிப்பதற்கு ஆதாரம் போதாது என்று தீர்ப்பு எழுதப்பட்டுக் குற்றவாளி விடுவிக்கப்பட்டார். இப்படியாகத் தான் தற்போது யாழ்ப்பாண இளைஞர்களின் முறைகேடு தொடர்பில் அங்குள்ள ஆட்சியாளர்கள், இராணுவம், பொலிசார் எனப் பல தரப்புக்களையும் குற்றம் சாட்டுகின்ற முதலமைச்சர் உட்படப் பலரும், இந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்களைச் சட்டத்தில் சிக்கவிடாது காப்பாற்றுபவர்களுக்குள் தமிழ்ச் சட்டத்தரணிகளும் உடந்தை என்பதைக் கவனத்தில் எடுக்க மறுக்கின்றனர்.

**சட்டத்தரணிகளின் வசூலிப்புக்கள்**


வித்தியா படுகொலை விவகாரத்தில் மக்களின் கோபம் அதிகமாக இருந்தமையால் 'சுவிஸ்குமார் அன் டீம்' சார்பாகத் தமிழ்ச் சட்டத்தரணிகள் துணிந்து இறங்கவில்லை. தனிப்பட்ட ஒரு குடும்பம் வன்முறையால் பாதிக்கப்படும்போது மக்கள் எழுச்சி இருப்பதில்லை. இதனால் தமிழ்ச் சட்டத்தரணிகள் இந்த விடயங்களில் தயக்கமின்றிக் குற்றவாளிகளின் பக்கம் களமிறங்குகின்றனர். சட்டமும் ஒழுங்கும் நிலை குலைந்திருக்கும் இன்றைய காலத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது இல்லாது போய்விடுகிறது. ஆனால், இந்த நிலையை வட மாகாண நீதிமன்றங்களாலும், சட்டத்தரணிகளாலும் கட்டுப்படுத்த முடியும். தமிழ்ச் சட்டத்தரணிகள் தமது, மூளையைச் செலவிட்டுப் பொய்யான விடயங்களைத் தேடுவதும், உருவாக்குவதும், சட்டத்தில் உள்ள பலவீனமான விடயங்களைத் தேடிக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளுக்கு உதவித் தப்பவைப்பதும் தவிர்க்கப்படுதல் வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு இது வாய்ப்பாக அமையும். வாள்வெட்டுக் குழுக்களுடன் பொலிசாருக்கும், இராணுவத்துக்கும் தொடர்பு உண்டு எனப் பரவலாகப் பேச்சுக்கள் உள்ளன. அது எவ்வாறு ஒருவகை அத்துமீறலாகப் பார்க்கப்படுகின்றதோ, அதைவிட ஓர் அத்துமீறலாகத் தமிழ்ச் சட்டத்தரணிகள் குற்றவாளிகளுக்காகக் குரல் கொடுப்பதைத் தமிழ் மக்கள் பார்க்கத் தவறக்கூடாது. தமிழ்ச் சமூகத்தில் படித்தவர்களான சட்டத்தரணிகள் பணத்துக்காகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் காப்பாற்ற முயல்வது மிகவும் மோசமானது.

**முதலமைச்சரின் விகடப் பேச்சு!**

உயர் நீதிமன்ற நீதிபதியும், தற்போதைய வடக்கு முதல்வருமான சி.வி.விக்கினேஸ்வரன், பொலிஸ் அதிகாரத்தை எனது கையில் தாருங்கள், இரண்டு மாதங்களில் இந்த வாள்வெட்டுக் கும்பல்களை ஒழித்துக் காட்டுகிறேன் என்று அடம்பிடிப்பது சிரிப்புக்கு இடமானது. இதை விடுத்து பொலிசார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துபவர்களை உடனடியாகப் பிணையில் எடுப்போரையும், அவர்களது வழக்குகளில் பேசிப் பிழைப்பு நடத்தும் சட்டத்தரணிகளையும் இந்தக் குற்றவாளிகள் சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகக் கூடாது எனக் கட்டுப்படுத்துவது சிறப்பானது. அடாவடித்தனங்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களின் சாவு வீடுகளில் அவர்களின் வறுமையைக் காண முடிகிறது. அவ்வாறானவர்கள் கைது செய்யப்படும்போது, அதே ஏழைக் குடும்பங்களிடம் பணம் வாங்கிய பின்னரே அவர்களை வெளியில் எடுப்பதில் சட்டத்தரணிகள் இறங்குகின்றனர். இவ்வாறான விடயங்களில் இளம் சட்டத்தரணிகள் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. இவர்களில் சிலர் அரசியலில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர். இவ்வாறானவர்களை, அரசியலில் தோற்கடிக்கும் பொறுப்பு மக்களுக்கு உண்டு.

**சட்டத்தரணிகள் முன்னிலையாகின்ற வழக்குகள் பற்றிய விவரங்களைத் தெரியப்படுத்தவேண்டும்**

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களையும், அவர்கள் எந்தச் சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றில் சரணடைந்தார்கள், அவர்களை எந்தச் சட்டத்தரணி பிணையில் எடுத்து விட்டார், குற்றம் செய்யாத நல்ல பிள்ளைகள் என்று நீதிபதிக்கு நியாயம் காட்டி அவர்களை வெளியில் எடுத்து விட்ட சட்டத்தரணி யார் போன்ற விடயங்களைப் பின்னாள்களில் மறுபடியும் குற்றத்தில் ஈடுபட்டுக் குறித்த நபர்கள் கைதாகும்போதும், அல்லது சட்டத்தரணி முன்னிலையாகும் குறித்த வழக்கிலேயே குற்றம் உறுதியாகும்போதும் ஊடகங்கள் இவை பற்றிய விவரங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது மக்கள் உடன்மைக்கு அப்பால் வாதிடுகின்ற சட்டத்தரணிகளின் போக்கைப் புரிந்து கொள்ள உதவியாக அமையும். இவ்வாறு தகவல்களைத் தொகுத்துக் கவனிக்கும்போது ஒரு குறிப்பிட்ட நபர், எத்தனையாவது குற்றத்தைச் செய்துள்ளார் என்பதும், அவரைக் குறிப்பிட்ட சட்டத்தரணி எத்தனை தடவைகள் வெளியில் எடுத்துள்ளார் என்பதும் தெரியவரும். இது விடயத்தில் தமிழர் மத்தியில் சிறந்த அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்படுவதும் அவசியம். அதையும்விட மக்களின் பலத்தால் அந்தச் சட்டத்தரணிகளைத் தொழில் ரீதியாக ஓரம் கட்ட முடியும். 'உவன் கள்ளன்' என்று இன்று மனதுக்குள் பலரையும் குறிப்பிடுகின்ற ஒரு சாதாரண மனிதன் அதனை எந்த ஒரு தொழில் துறையினர் மீதும் வெளிப்படையாகக் கூறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.



அடாவடித்தனங்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களின் சாவு வீடுகளில் அவர்களின் வறுமையைக் காண முடிகிறது. அவ்வாறானவர்கள் கைது செய்யப்படும்போது அதே ஏழைக் குடும்பங்களிடம் பணம் வாங்கிய பின்னரே அவர்களை வெளியில் எடுப்பதில் சட்டத்தரணிகள் இறங்குகின்றனர். இவ்வாறான விடயங்களில் இளம் சட்டத்தரணிகள் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. இவர்களில் சிலர் அரசியலில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர்.

## பத்தாயம்

**மாதத்தின் மூன்றாவது வாரத்தில், ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் ஒருவருடைய கதை மீள் பதிப்பாவது வழமை. அந்த வகையில் இது அமரர் இலங்கையர்கோனின் 'வஞ்சம்'**

# வஞ்சம்

சிறுகதை

இலங்கையர்கோன்



இலங்கையர் கோன் ஈழத்தின் சிறுகதை மூல வர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் சிவஞா னசுந்தரம், இலங்கை நிர்வாகசேவை அதிகாரி. காரியாதிகாரி. 'கலைமகள்', 'குற்றவாளி' 'மணிக் கொடி', 'ஈழநாடு', 'வீரகேசரி', 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளில் சிறுகதைகளைப் படைத்துள் ளார். இவரது பதினைந்து சிறுகதைகளின் தொகுப்பாக, 'வெள்ளிப் பாதசரம்' வெளிவந்துள் ளது. அல்லயன்ஸ் 'கதைக்கோவை' யில் இவ ரது சிறுகதையான 'முதற்சம்பளம்' இடம்பிடித் துள்ளது. நாடகங்களையும் எழுதியுள்ளார்.

நீரில் பால் கலப்பதுபோல கழியும் இரவின் மையிருளில் உதயத்தின் வெண்மை பரவிக் கொண்டிருந்தது.

நிலத்தில் சிதறிக் கிடக்கும் இலைகளின் மேல் பலாமரங்கள் சொரியும் பனித்துளிகளின் ஏகதாள சப்தம் அந்த வைகறையின் நிசப்தத்துக்குப் பங்கம் விளைவித்தது. அந்தப் பனித் துளிகளின் குளிர்ந்த ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தே; அருட் கோடையின் காய்ச்சலினால் உயர்ந்து முறுகிப் போயிருந்த நிலம் ஓர் அற்புதமான மண் வாசனையைக் கக்கியது.

பலா மரத்தின் கிளை ஒன்றில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த புள்ளடியன் உறக்கம் கலைந்து தன் வலப்புறச் சிறகுக்குள் புதைந்து கிடந்த தன் தலையை வெளியே இழுத்துச் சுற்றும் முற்றும் பார்த்தது. "என்ன இரவின் கரும் போர்வை அகன்று விட்டதா? சரிதான். இந்தப் பனிக்குளிரில் நேரம் போவதே தெரியவில்லை…"

அந்த வைகறைப் பொழுது உயிர்த்த ஜீவசக்தி புள்ளியடியினுடைய வக்கரித்த நரம்புகளிலும் பாய்ந்தது. அதற்கு உயிர் வாழ்வதில் ஒரு புது ஆசையையும், ஊக்கத்தையும் கொடுத்தது. உயிர் வாழ்வதே பெரிய இன்பம். தினமும் வைகறையில் கண் விழித்து எப்பொழுதும் தன் உடலில் இன்னும் ஜீவன் குமுறிக் கொண்டிருக்கிறது என்ற உணர்ச்சியே புள்ளடியனுக்கு புளகாங்கிதம் உண்டாக்கிற்று.

வாழ்க்கையில் என்ன குறை? எதற்காக ஏங்கி அழ வேண்டும்? வாழ்க்கையில் கோர உருவம் , உருவத் துக்கு ஓர் உறுத்தும் விசக்கொடுக்கு இருக்கிறதென்பது' புள்ளடியனுக்கு இதுவரை தெரியாது. ஏன் தெரியப் போகிறது? அதன் ஐந்து வருட வாழ்வு பூராவிலும் அது கவலைப்பட்டதில்லை. ஆசைகள், நிராசையாகவில்லை. வேண்டியதெல்லாம் வேண்டிய படியே கிடைத்து வந்தன. உண்பதற்குக் கறகறப்பான நெல், கிளறுவதற்கு உயரமான குப்பைமேடு. சுகிப்பதற்கு நல்ல அழகான தடித்த பேடைகள்.

புள்ளடியான் தன் இறகுகளைப் படபட என்று அடித்து தலையை உயரத் தூக்கிப் பல நாளைய அனுபவத் தால் விளைந்த ஓர் அலட்சியத்தோடு தன் பரம்பரைப் பல்லவியைப் பாடியது.

"கொக்கரக்கோ… ஓ…. ஓ…"

திடீரென்று அந்த வட்டாரமே சிலிர்த்துக் கனைத்துக் கொண்டு எழுந்தது போன்ற ஒரு பரபரப்புக் காணப்பட்டது. பனையோலைக் 'கடகங்களை' தலைமேல சுமந்து கொண்டு பனங் காய் பொறுக்கப் போகும் சிறுவர், சிறுமியர், கலப்பை சகிதமாக உழவு மாடுகளை ஓட்டிக் கொண்டு வயலுக்குச் செல்லும் குடியானவன். அழுக்கு மூட்டைகளைத் தோளில் சுமந்து கொண்டு குளக்கரை செல்லும் தொழிலாளி.

பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டது. புள்ளடியனும் மற்றக் கோழிகளும் மரங்களை விட்டு இறங்கின. அந்த வளவில் வளர்ந்து.

அந்தப் பத்துப் பன்னிரண்டு பெட்டைக் கோழிகளுக்குப் புள்ளடியன் ஒரு தனி நாயகன் மாதிரி. மகாராஜாக்களைப் போல புள்ளடியனுக்கு மோகமும் எல்லையற்று இருந்தது. பெண் பித்து மகாராஜாக்களுக்கு இருப்பது போலவே புள்ளடியனுக்கு ஒரு பட்ட மகிஷி இருந்தாள். தூய வெள்ளை நிறம் பொருந்திய தடித்த பேடை.

இந்தப் பேடையிடத்தில் புள்ளடியனுக்கு ஒரு தனிப் பிரேமை. ஒரு தனி அருள். முட்டையிட்டு அடை காக்கும் நேரம் தவிர மற்றப்படி இரண்டும் சதா ஒருமித்தே இருக்கும். புள்ளடியனுக்கு ஐந்து வயதாகிறது. முன்னிருந்த துடிதுடிப்பு இப்பொழுது இல்லைதான். வீரியமும் தளர்ந்துபோய்விட்டது. ஆனால் வெள்ளைப் பேடை மேலிருந்த மோகம் மட்டும் சிறிதும் குறையவில்லை. அன்னியன் ஒருவனுடைய பார்வை பேடையின் மேல் விழுந்தால்; விழுந்துதான் பார்க்கட்டும். அன்று காலையில்தான் அடுத்த வளவுக்கு ஒரு புதுச் சேவல் வந்திருந்தது. அதன் நிறமும் வெள்ளை. பார்ப்பதற்கு ரொம்ப அழகாக இருந்தது. கழுத்தடியில் விரிந்து சடைத்த இறகுகள், பூப்பந்தல் போல அகன்று பரந்த வால், தலையிலும் தாடையிலும் தெறித்துக் கொண்டிருந்த சூடுகள்! அதன் நடையிலே ஒரு ராஜகம்பீரம் தொனித்தது. அதன் இளமை இப்பொழுதுதான் முழு மலர்ச்சி. அதற்கு வேதனையைக் கொடுத்து அதன் கனவுகளையும் நினைவுகளையும் தேக்கிக் கொண்டு நின்ற ஆசை, பேடைக்குலம் முழுவதையுமே சுட்டெரித்துப் பஸ்பமாக்கி விடுவது போல் இருந்தது. அன்று வந்ததும் வராதது மாக அது வேலியில் உள்ள துவாரத்தின் வழியாக மறுபுறம் எட்டிப் பார்த்தது. புள்ளடியனுடன் குப்பை கிளறிக் கொண்டிருந்த வெள்ளைப் பேடையைக் கண்டு விட்டது. இரண்டு நாள்களாகப் பட்டினி கிடந்தவன் அறுசுவை உண்டியைக் கண்டதுபோல் இருந்தது. அதற்குப் பேடையின் வாசனை என்பதே அறியாமல் ஒரு பகலும் இரவும் கோழிக்கார சாயுபுவின் கூடைக்குள் அடைப்பட்டுக் கிடந்த பிறகு இந்த மனோகரமான காட்சி 'ஆ' அதன் நரம்புகள் ஒவ்வொன்றும் வின்பூட்டி இருப்பதுபோல் தெரிந்தன. மறுகணம் வேலியைத் தண்டி மறுபக்கத்தில் குதித்தது. அப்பொழுதுதான் வெள்ளைப் பேடை தனியாக இல்லை என்பது அதன் கண்ணில் பட்டது. பேடையை அணுகிவிட வேண்டுமென்ற ஆசை தடைப்பட்டு அவ்விடத்திலேயே ஓர் ஏக்கப் பார்வையோடு நின்றுவிட்டது.

இந்தச் சச்சரவைக் கேட்ட வெள்ளைப் பேடும் குப்பை கிளறும் வேலையை நிறுத்திவிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தது. கோழிக்குலத்தின் மன்மதன் போல் நின்றிருந்த புதுச் சேவல் அவளுடைய மனதில் பெரும் புயலைக் கிளப்பி விட்டது. யார் இது? புதுஆசாமி. ஆனால் அதன் அழகு, என்ன நிறம், என்ன கம்பீரம், எங்கிருந்து எப்பொழுது. ஏன் வந்தது?

அவள் இதுவரை புள்ளடியனுடைய தனி ஆட்சிக்கு உட்பட்டிருந்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அந்த வட்டாரத்தில் புள்ளடியனைத் தவிர வேறு சேவல் கிடையாது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை, புள்ளடியன் மூப்படைந்து பலம் குன்றி இருந்தாலும் சேவல் சேவல்தான்.

ஆனால், இன்று அவளுடைய கனவுகளை வடித்து பிழிந்து எடுத்த ரூபம் போல் நின்றிருந்த புதுச் சேவலைக் கண்டதும் அவளுக்கு உண்மையாகவே தலை கிறுக்கிவிட்டது. பேடையின் கவனம் கலைந்ததைக் கண்ட புள்ளடியன் தலை நிமிர்ந்து பார்த்தது. "ஆகா, அப்படியா சங்கதி"

பெட்டையைக் கண்டிப்பது போலப் புள்ளடியனும் ஒரு தரம் கொக்கரித்தது. அதன் அர்த்தம் புரிந்து கொண்ட பேடை "பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று நினைத்து மறுபடியும் கிளறும் வேலையில் ஈடுபட்டது.

இப்பொழுது ஆகக் கூடிய காரியம் ஒன்றுமில்லையென்று புதுச் சேவலுக்குப் பட்டுவிட்டது. "இன்று மத்தியானம் எப்படியும்" என்று நினைத்து வேறு பக்கமாகத் திரும்பி நடந்தது.

மத்தியான வெயில் யுகாந்த காலாக்கினி போல் எரிந்து கொண்டிருந்தது. தொலைவில் கானலின் மிதுப்பு மர ஏணிகள் காற்றில் சற்றே அசைந்தன. கோழிகள் எல்லாம் ஒரு மாதுள மரத்தின் கீழ் தம் இறகுகளை கோதிக் கொண்டு படுத்திருந்தன. அந்த உக்கிரமான வெயில் அவற்றின் பரபரப்பை அடக்கிவிட்டது. புள்ளடியனுக்குப் பலத்த யோசனை. "அட எங்கிருந்து வந்தான்? யாரைத் தேடி? [illegible] கொண்டிருந்தது.



**அந்த வட்டாரத்தில் புள்ளடியனைத் தவிர வேறு சேவல் கிடையாது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ, சக்கரை. புள்ளடியன் மூப்படைந்து பலம் குன்றி இருந்தாலும் சேவல் சேவல்தான். ஆனால் இன்று அவளுடைய கனவுகளை வடித்து பிழிந்து எடுத்த ரூபம் போல் நின்றிருந்த புதுச் சேவலைக் கண்டதும் அவளுக்கு உண்மையாகவே தலை கிறுக்கிவிட்டது.**

43

தொகுப்பு
அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து





## இந்த அரசு இனிப்போதும்!

சிறிலங்கா பொது மக்கள் பெரமுனவின் தமிழ்மொழியிலானசுவரொட்டிஒன்று அம் பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளி லும் ஒட்டப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை அரசு செய்தவை எவை என்பதைக் குறிப்பிடும் வகையில் சுவ ரொட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது.

'அரசின் விடயப்பத்திரம்' என்ற தலைப்பி டலோடும், 'இந்த அரசு இனிப் போதும்' என்ற அடிக்குறிப்போடும் சுவரொட்டி வடி வமைக்கப்பட்டுள்ளது. மேலும், 'திருடப் பட்டுவிட்டன', 'தேசிய சொத்துக்கள் விற் கப்பட்டு விட்டன', 'தேர்தல்கள் பிற்போடப்பட்டு விட்டன', 'தேசிய ஒற் றுமை இல்லாமலாக்கப்பட்டுள்ளது', 'தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது', 'பொருளாதாரம் சீர் குலைக்கப்பட்டுள்ளது' போன்ற வாசகங்களும் வெளிப்படுத்தல்க ளாக சுவரொட்டியில் முன்னி லைப்படுத் தப்பட்டுள்ளன.

மூலை முடுக்கெல்லாம் இச்சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளதன் தாற்பரியம் தான் என் னவோ?



## நாஜிம் மீண்டும் நியமனம்!

இலங்கைதென்கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தராக மீண்டும் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம்நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தேர்வுநிலை அடிப்படையில் உடனடியாகச் செயற்படும் வண்ணம் நியமனக்கடிதம்அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. கவுன்ஸில் உறுப்பினர்கள் இடையே இடம்பெற்ற வாக்கெடுப்பு முடிவுகளின்படி 13 வாக்குகளுடன் முதலிடம் பெற்றிருந்த உபவேந்தர் நாஜிம் உட்பட மூவரது பெயர்கள் புதிய உபவேந்தர் நியம னத்துக்காக அரச தலைவருக்கு சிபார்சு செய்யப்பட்டிருந் தது.

இதேவேளை உபவேந்தராக மீண்டும் பேராசிரியர் நாஜிம் நியமிக்கப்படக்கூடா தென பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் பலத்தஆட்சேபனைதெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வழிகாட்டல் கருத்தரங்கு

நிந்தவூர் சமூக ஒருமைப்பாடு மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியம் (USID) ஆரோக்கிய மேம்பாட்டுக்கான வழிகாட் டல் கருத்தரங்கொன்றை அண்மையில் நடத்தியது.

நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார், மருத்துவர் ஏ.எம்.ஜாபிர் ஆகியோர்



முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் ஆரோக்கிய உணவுப் பழக்கங்கள், அருகிவரும் ஆயுள்வேத மூலிகைகள் தொடர்பான விரிவுரைகள்இ டம்பெற்றன. வழிகாட்டல் கருத்தரங்கில் பங்குபற்றியோருக்கு ஆரோக்கிய மூலி கைகள், உணவுத் தாவரங்கள் வழங்கி வைக்கப்பட்டது.



## களை கட்டுகிறது

இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ஹஜ்ஜுப் பெருநாளை எதிர்வரும் 22ஆம் திகதி கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைப்பிறை காணப்பட்டு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் அறிவிக்கப்பட்டதைய டுத்து தென்கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் பெருநாள் வியாபாரங்கள் களை கட்டிவருகின்றன.

புத்தாடைகள் உடுதுணிகள் உட்பட பெருநாள் கொண்டாட்டத்துக்கான பொருள் கொள்வனவில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

வழமைக்கு மாறாக முஸ்லிம் பிரதேசங்களில் வெளிமாவட்ட நடைபாதை உடு துணி வியாபாரிகளின் மலிவு விற்பனைகளும் அதிகரித்துள்ளன. ஹஜ்ஜுப் பெரு நாள் தொழுகைக்கான விசேட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தகவல் தருக



அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் குறைபாடுகள் மற்றும் 'மோசடிகள் இடம் பெறின், பத்திரிகையாளர்கள் தமது கவனத்திற் குக் கொண்டு வரமுடியுமென அம்பாறை மா வட்டத்தின் புதிய மாவட்டச் செயளர் டி.எம்.எல். பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற் றும் தகவலறியும் உரிமைச் சட்டமூலம் தொடர்பில் அம்பாறைமாவட்ட பத்திரிகையாளர்களுக்கு விளக்கம ளிக் கும் கருத்தரங்கு ஒன்றை அரச தகவல் திணைக்களம் அம்பாறை மாவட்டச் செயலகத்துடன் இணைந்து அண்மையில் நடத்தியது. அம்பாறை மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கருத் தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகை யிலேயே மாவட்டச் செயலாளர் பண்டார நாயக்க மேற்கண்ட வாறு தெரிவித்தார். தமது சொந்தக் கைபேசி இலக்கத்தை பத்திரிகையாளர்களிடம் தெரியப்படுத்திய மாவட்டச் செயலர், தகவல் தருவதன் மூலம் அபிவிருத்தி வேலைத்திட்டங் களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றைச் சிறப்பாக முன்னெடுக்க உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

***துணிந்து நில், தொடர்ந்து செல்!***




## நான் அம்பாறைக் குடிமகன்

"அம்பாறை மாவட்ட மாவட்டச்செய லராக புதியநிய மனத்தைப் பெற்று வந்து கட மையைப் பொறுப்பேற் [illegible] நான் அம்பாறை மாவட்டத்தின் [illegible] மாற்றங்கண்டுள்ளேன்" என அம்பாறை [illegible] மாவட்ட செயலராக பதவியேற்றுள்ள பது ளையைச் சேர்ந்த டி.எம்.எல்.பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்ட செயலகத்தில் முதன் முதலாக கலந்து கொண்ட நிகழ்வு ஒன்றில் உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அம்பாறை மாவட்ட மக்களின் நலனுக்காக இனமத பேதங்களின்றி அர்ப்பணிப்புடன் சேவையாற்றவுள்ள தாகவும், மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்து தமது செயற் பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை இனவாத அரசியல்வாதிகள் குறித்து விழிப்புடனிருப்பது நல் லது!

## அம்பாறையில் பெரஹர



திகாமடுள்ள 'அசல மகா' பெரஹர எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில் அம்பாறை நகரில் இடம்பெறவுள்ளது. இப்பெர ஹர தொடர்பில் பத்திரிகையா ளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட் டமொன்று அம்பாறை மண்டல மகா விகாரையில் விகாராதிபதி சுகதகம சீலரத்ன ஹிமி தலைமையில் நடைபெற்றது. இதன்போது பௌத்த, இஸ் லாம், இந்து, கிறிஸ்தவ மக்கள் கலந்து சிறப்பிக்கும் நல்லி ணக்க நிகழ்வாக பெரஹர அமையுமென விகாராதிபதி தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தின் பிரதான பெரஹர நிகழ்வாக அசல மகா பெரஹர வருடம்தோறும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது



# அதிக வட்டி பெரிய நட்டம்

கட்டுரை

செ.கிரிதரன்

நேற்றுத்தான் வீட்டுக்கு முன்னாலை அவனைக் கண்டு கதைச்சனான். வட்டியையும் முதலையும் சேர்த்துத் தாறன் எண்டான். இண்டைக்கு குடும்பத்தோடை ஆளைக் காணேல்லை"

''பாங்கிலை லோன் பாஸ் பண்ணியாச்சு. கிடைச்சவுடனை தந்திடுறன் எண்டு சொல்லி ஏழு மாதமாச்சு. இப்ப பார்த்தால் ஒரு பாங்கிலையும் அவருக்குக் கடன் எடுக்க ஏலேதாம். CRIB றிப்போட் பிழையாம்" (CRIB- கடன் தகவல் பணியகம்- இலங்கை மத்திய வங்கி

"நேற்றுக் கடை நிறையச் சாமான் கிடந்தது. இண்டைக்குக் கடை திறந்து கிடக்குது. ஆளுமில்லை. சாமானுமில்லை. அவற்றை வீட்டு நாய் சாப்பாடில்லாமல் அழுது கொண்டிருக்குது"

"ஸ்ரோர்ஸ்லை அடுக்கின நெல்லைப் பொறுப்பாய் வைச்ச கடன் கொடுத்தம். இப்ப ஒரு மாதமாய் ஆளைக் காணேல்லை. போய் மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்தால் அத்தனையும் உமி. இதற்கு முந்தி இருப்புப் பார்க்கப் போன எங்களுக்கு ஒவ்வொரு முறையும் ஒரே நெல்லு மூட்டையைத் தான் குத்திக் காட்டியிருக்கிறான்"

இவை வங்கி முகாமையார் ஒருவரின் புலம்பல்கள்.

"இருபது பரப்புக் காணியெண்டு இரவு நேரம் போய்ப் பார்த்தம். பரப்பு எட்டு லட்சம் என்று மதிச்சுக் கடனைக் கேட்டால். காணியை வித்துக் கடனைக் கழிச்சுப் போட்டு மிச்சக் காசைத் தாங்கோ எண்டுறான். போய்ப் பார்த்தால் இப்பதான் தெரியுது காணிக்கு முன்னாலை சுடலை. இனி ஆருக்குக் காணியை விக்கிறது? இது இன்னொரு வங்கி முகாமையாளர்.

இவை போன்ற உரையாடல்களை நாம் நாளாந்தம் கேட்டு வருகின்றோம். இவற்றின் மத்தியில் தாய் ஒருவர் தவறான முடிவை எடுத்துப் பிள்ளைகளுக்கு நஞ்சு கொடுத்துத் தானும் அதை அருந்தி உயிரை மாய்த்தார். இதில் பிள்ளைகள் மூவரும் ஐந்து வயதுக் குட்பட்டவர்கள். வெளிவந்த செய்திகளின் படி பெரும் தொகையைக் கடனாகக் கொடு அதை மீளப் பெற முடியாது என்று தெரிந்தவுடன் குடும்பத் தலைவர் தனது மனைவி- பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்காமல் தவறான முடிவை எடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார். தொடர்ந்து ஒரு மாத காலத்துக்குள் மேற்குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதில் நீதிபதிக்கும் கடிதம் எழுதப்பட்டு அந்தக் கடிதமும் ஊடாங்களில் வெளிவந்தது.

இன்று வடக்கு மாகாணத்தில் வட்டிக்குப் பணம் கொடுப்பது- வாங்குவது என்பன பெரும்பாலானோரின் வாழ்க்கை முறையாகி விட்டன. இதன் அடிப்படையைப் பார்த்தால், சும்மா இருந்து பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் நோக்கமாக உள்ளது. உரிய பதிவு நடைமுறைகள் இன்றி ஒருவர் வட்டிக்குப் பணம் வாங்குவதும், கொடுப்பதும் சட்டப்படி குற்றம். அனுமதிபெற்ற வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மட்டுமே இதைச் செய்ய முடியும். அன்றித் தனி நபர்கள் செய்வது தண்டனைக்குரியது.

இருந்தபோதும் குறித்த தாய் நீதிபதிக்குக் கடிதம் எழுதுவதற்கு முன்பு தான் செய்த பணப்பரிமாற்றத்துக்கு நீதிமன்றம் தீர்வு தரக்கூடிய முறையில் உரிய முறைகளைக் கடைப்பிடித்துச் செயற்பட்டிருந்தால் 'இந்த அவலமான முடிவை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. முதலில் ஒரு கோடி ரூபாவை ஒருவருக்குக் கொடுப்பதென்றால் அவர் எவ்வளவுதான் தெரிந்தவராக இருந்தாலும் எப்படித் திருப்பித் தரப் போகிறார்? என்று சிந்திக்க வேண்டும்.

வெளிநாடு போய் அனுப்புவதென்றால் எவ்வாறு அது சாத்தியமாகும்? இன்றைய நிலையில் நுழைவுவிசைவு பெறாமல் எந்த ஒரு மேலை நாட்டுக்கும் செல்ல முடியாது.

அவ்வாறில்லாமல் பணம் கொடுத்துத் திருத்தனமாகச் செல்வதென்றால் அதற்கு ஒரு வீதம் கூட வாய்ப்பு இல்லை. பணம் முழுவதையும் எவரோ ஒருவரிடம் இழக்க வேண்டி வரும். இன்று வங்கிகளின் சராசரி வட்டி வீதம் 11 வீதத்திலிருந்து 12 வீதமாக இருக்கிறது. இதற்கு மேலாக ஒருவர் உங்களுக்கு வட்டி தருகிறேன் என்று கூறினால் அதிலுள்ள ஆபத்தை உணர வேண்டும். முதலுக்கே மோசம்தான் ஏற்படும்.

ஆனால் 45 வீதம் முதல் 60 வீதம் வரை வட்டி செலுத்திக் கடன் பெறுபவர்களும் இங்கு இருக்கிறார்கள். இதன் கருத்து (ஒரு வருட முடிவில்) ஒரு லட்சம் ரூபா கடனுக்கு ஒரு லட்சத்து ஆயிரம் வரை செலுத்த வேண்டும் என்பதே. இன்னும் ஒருபடி மேலே சென்று சிந்தித்தோமானால் வியாபாரி ஒருவர் ஒரு லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யும் பொருளை ஒரு வருடம் கழித்து விற்பதனால் ஒரு லட்சத்து 60 ஆயிரத்துக்கு விற்க வேண்டும். இது நடைமுறைச் சாத்தியம் அற்றது. ஏனெனில் அதே பொருளைச் சொந்த முதல் போட்ட பக்கத்துக் கடைக்காரர் ஒரு லட்சத்துக்கு 20 ஆயிரமளவில் விற்றுக் கொண்டிருக்கக் கூடும்.



எனவே வங்கிகளைத் தவிர வேறு இடங்களில் கடன் வாங்கி, இலாபம் ஈட்டுவது என்பது முடியாத காரியம். பெரிய தொகையை உறவினருக்கோ, நண்பருக்கோ கடனாகக் கொடுக்கும்போது அதைச் சட்ட ரீதியாகச் செய்தல் வேண்டும். ஒரு சட்டத்தரணியை அணுகுவதன் மூலம் உரிய ஆவணங்களில் ஒப்பமிட்டு பணப்பரிமாற்றத்தை மேற்கொள்வது இருவருக்குமே நன்மையைக் கொடுக்கும்.

நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்படும்போது குறித்த ஆவணங்கள் சான்றுப் பொருளாக இருக்கும். பணம் கொடுத்து ஏமாந்த பலர் "நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன் அவன் இப்படி ஏமாற்றுவதென்று நினைக்கவில்லை"

"மூன்று தரம் வாங்கிச் சொன்ன சொல் மாறாமல் திருப்பித் தந்தான். அதனால்தான் கொடுத்தேன்"

"சின்ன வயது முதல் நண்பர்கள்; பக்கத்து வீடு எப்படி முகம் முறிக்க முடியும்?"

"ஆள் வசதியாய் இருந்தான். இப்போதுதான் தெரியும் ஒன்றும் அவனுக்குச் சொந்தமானதில்லை" என்று கூறுவார்கள். இதில் இன்னும் மோசமானது குறைந்த வட்டிக்கு ஒருவரிடம் வாங்கக் கூடிய வட்டிக்கு இன்னொருவருக்குக் கொடுப்பது. இதில் கடன் பெற்றவர் ஏமாற்றும்போது மற்ற இருவருமே சிக்கலில் மாட்டுகின்றார்கள்.


ஒரு விடயத்தை நினைவில் நிறுத்த வேண்டும். உழைக்காமல் சேர்க்கும் பணம் எமக்குப் பயன்படாது. குறுக்கு வழியில் எப்போதும் பணம் சேர்க்க முடியாது. உடல் உழைப்பு அல்லது மூளை உழைப்பின் மூலமே பணத்தை ஈட்டலாம். ஒருவரை ஏமாற்றிச் சேரக்கும் பணம் ஒருபோதுமே மகிழ்வைத் தராது. தவறான வழியில் பணத்தைச் சேர்த்தால் அது தகுந்த நேரத்தில் எமக்குப் பயன்தராது. இந்த நேரத்தில் கவிஞர் கண்ணதாசனின் வரிகளே எமக்கு நினைவுக்கு வருகின்றன.

**"வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும் வாசல்**
**தோறும் வேதனை இருக்கும்- வந்த துன்பம்**
**எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை**
**உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப்**
**பார்த்து நிம்மதி நாடு"**

ஆடம்பரமற்ற வாழ்க்கை முறை. வரவுக்கு உட்பட்ட செலவு. நீதியான முறையில் சேர்க்கும் பணம் என்பனவே மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொடுக்கும் என்பதை உணர்ந்து கொள்வோமாக ■

**கட்டுரையாளர்**
**ஓட்வுபெற்ற வங்கி அலுவலர்**

வங்கிகளைத் தவிர வேறு இடங்களில் கடன் வாங்கி, இலாபம் ஈட்டுவது என்பது முடியாத காரியம். பெரிய தொகையை உறவினருக்கோ, நண்பருக்கோ கடனாகக் கொடுக்கும்போது அதைச் சட்ட ரீதியாகச் செய்தல் வேண்டும். ஒரு சட்டத்தரணியை அணுகுவதன் மூலம் உரிய ஆவணங்களில் ஒப்பமிட்டு பணப்பரிமாற்றத்தை மேற்கொள்வது இருவருக்குமே நன்மையைக் கொடுக்கும்.



கட்டுரை

கிருஷ்ணராஜா

# உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்கள்

# பாதிப்புக்களும் தீர்வுகளும்

நாட்டில் புதிதாக ஓர் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டம் வரும்போது மக்கள் அந்தத் திட்டத்தை அச்சத்துடனும் அந்நியத் தன்மையுடனும் பார்க்கும் நிலை இங்கு காணப்படுகிறது. குறித்த திட்டத்தால் தமது காணிகள், சொத்துக்கள் மற்றும் வியாபாரங்கள் பாதிக்கப்பட்டுவிடுமோ? தமக்கு ஏதும் இடர்பாடுகள் ஏற்படுமோ? என்ற அச்சமும், மக்களுக்கும் திட்டங்களுக்கும் இடையே தொடர்பாடல் இன்மை அல்லது தொடர்பாடல் வினைத்திறன் இன்மையுமே இதற்கான முதன்மைக் காரணங்களாக இருக்கலாம். திட்டங்களுடனோ, திட்ட உத்தியோகத்தர்களுடனோ மக்கள் முரண்படுகின்ற சந்தர்ப்பங்களையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால், சில திட்டங்கள் தடைப்பட்டதையும், சில திட்டங்கள் தாமதப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும்கூட நடந்தேறியிருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள்: மக்கள் அறியாதவையாகவே இன்றும் உள்ளன.

**அபிவிருத்தித் திட்டங்கள் அவசியமானவையே**

உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டுக்கும் மக்களின் வாழ்வாதாரத்துக்கும் மிகவும் இன்றியமையாதவை. சிறந்த வெள்ள நீர் வடிகால்களானவை நோய்க்காவிகள் பெருகுவதைத் தடுத்து, தொற்று நோய்கள் வராது தடுக்கின்றன. கடல் நீர்த் தடுப்பணைகள் கடல் சீற்றத்தில் இருந்து காக்கின்றன. குடிநீர் வழங்கவும், விவசாயம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் நிலத்தடி நீர்மட்டத்தைக் காப்பதற்கும் நீர்த்தேக்கங்கள் பயன்படுகின்றன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், வீதிகள், ரயில் பாதைகள், உற்பத்தி நிலையங்கள் ஆகியன நாட்டின் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, வாழ்க்கைத்தரம் போன்றவற்றில் முக்கிய பங்காற்றுகின்றன. இந்த உட்கட்டுமானங்கள் மக்களின் உயிர் காப்பவையாக, பொருளாதார, வாழ்வாதார, சமூக, கலாச்சார விடயங்களின் மேம்பாட்டுக்கு மிகவும் இன்றியமையாதவையாக உள்ளன. அதிகரித்து வருகின்ற மக்களின் பொருளாதார நிலை, சனத்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றால் இவ்வாறான உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் தவிர்க்க முடியாதவை ஆவதுடன், நீண்டகால நோக்கில் அவை மக்களுக்குப் பெரியளவில் நன்மை பயப்பனவாகவும் உள்ளன.

**உட்கட்டுமானங்களின் போதான சவால்**

இவ்வாறான உட்கட்டுமானத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற வளங்கள் மற்றும் நிலங்கள் ஏற்கனவே மக்களால் பயன்படுத்தப்படுபவையாகக் காணப்படுகின்றபோது, குறித்த திட்டங்கள் சிக்கலத் தன்மை வாய்ந்தவையாக மாறுகின்றன. உதாரணமாக, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு துறைமுகத்தை அமைப்பதற்குச் சில மீனவர்கள் தாங்கள் தொழில் செய்யும் கடல் பகுதியையும், தமது குடியிருப்பு நிலங்களையும் இழக்க வேண்டி ஏற்படுகிறது. பல்லாயிரம் மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக நீர்த்தேக்கம் அமைப்பதாயின் சில விவசாயிகள் தமது பாரம்பரிய விளை நிலங்களை இழக்க நேரிடுகிறது. வீதி அபிவிருத்தி செய்யப்படும்போது வீதியோரத்தில் உள்ள காணிப்பகுதிகள், கட்டுமானங்கள் மற்றும் வியாபாரங்களை மக்கள் இழக்க நேரிடுகிறது. இவ்வாறு உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, குறித்த கட்டுமானத்துக்குத் தேவையான நிலங்களை மக்கள் இழக்கவேண்டியிருப்பது தவிர்க்க முடியாத தாகின்றது.

**அரசுக்கு அதிகாரம் - மக்களுக்கு உரிமைகள்**

நாட்டின் அபிவிருத்திக்கான, அதாவது நாட்டுமக்களது அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டுமானங்களை விருத்தி செய்யவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. இந்தப் பொறுப்பானது, குறித்த உட்கட்டுமானங்களை விருத்தி செய்வதற்காக மேலதிக நிலங்களைப் பயன்படுத்துவதற்கான சிறப்பு அதிகாரத்தை அரசுக்கு வழங்குகின்றது. அதாவது, பொதுமக்களின் தேவைக்கான நிலத்தை அரசு தனது அதிகாரத்தின் மூலம் பெற்றுப் பயன்படுத்த முடியும். அரசால், அதிகாரம் பயன்படுத்தப்படும் பொழுது, நாட்டின் ஏனைய மக்களின் நலனுக்காகத் தமது காணிகளை இழந்தவர்கள் அல்லது வேறு பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. ஆனாலும், வளர்ந்து வரும் சட்டம் மற்றும் மனித உரிமை சம்பந்தமான கொள்கைகள், இவ்வாறு உட்கட்டுமானத் திட்டங்களால் பாதிக்கப்படுகின்ற மக்களின் பாதுகாப்பு பற்றிய கொள்கைகளையும், செயற்பாடுகளையும் விருத்தி செய்யவேண்டிய தேவையை வேண்டி நிற்கின்றன.

**'மக்கள் நோக்கு'**

உட்கட்டுமானத் திட்டத்தின் பாதிப்புக்கள், தனியே நில சுவீகரித்தல் என்பது மாத்திரமல்ல. இதன் விளைவாக, பௌதீக இடப்பெயர்வையும் (இடம்மாறுதல், வசிப்பிட நிலங்களை இழத்தல் அல்லது வசிப்பிடங்களை இழத்தல்) பொருளாதார இடப்பெயர்வையும் (நிலங்கள், சொத்துக்கள், சொத்துக்களை அடையும் வழிகள், வருமானம் பெறும் மூலங்கள், அல்லது வாழ்வாதாரங்களுக்கான வழிவகைகளை இழத்தல்) உட்பட்ட பல இழப்புக்கள் மற்றும் தடைகளை உள்ளடக்கின்றன. இவை பகுதியானவையாகவோ, முழுமையானவையாகவோ, தற்காலிகமானவையாகவோ அல்லது நிரந்தரமானவையாகவோ அமைகின்றன. தற்காலத்து உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் 'மக்கள் நோக்கு' என்ற கருத்தைக் கொண்டுள்ளதுடன், திட்ட வடிவமைப்பானது மக்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கவும், தவிர்க்க முடியாதவிடத்து பாதிப்புக்களை குறைக்கவும், குறைக்கவும் முடியாதவிடத்து பாதிப்புத் தணிப்புப் பரிகாரங்களுக்கும், பாதிப்புக்களுக்குப் பொருத்தமான இழப்பீடுகளை வழங்கவும் முயலுகின்றன.

இதன்மூலம் பாதிப்புக்களால் எந்தவொரு நபரும் வறுமைக்கு உட்படுவதையோ, நலிந்த நிலைக்குள் செல்வதையோ தவிர்த்து அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் மேம்படுவதைக் குறித்த அபிவிருத்தித் திட்டம் (அரசு) உறுதி செய்கின்றது.

**இழப்பீடுகளும் பதிலுதவிகளும்**

அரசு உடமையாக்குகின்ற நிலம் பகுதியானதாக இருக்கலாம். இவ்வாறாகப் பகுதியளவான நிலத்தை அரச உடமையாக்குகின்றபோது குறித்த நிலப்பகுதிக்கான சந்தைப் பெறுமதிக்கு அமைவான இழப்பீட்டுத் தொகையும், அந்த நிலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சொத்துக்கள் மற்றும் கட்டுமானங்களை மீள் அமைக்கக் கூடிய பெறுமதிக்கு அமைவான இழப்பீடும், வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படின் வாழ்வாதார விருத்தி உதவிகளும் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படுகின்றன. அதேவேளை காணி உரிமையாளரின் நிலத்தில் சிறுபகுதி உடமையாக்கலுக்கு உட்படாமல் எஞ்சி, அது உரிமையாளரால் பயன்படுத்த முடியாத அளவுக்குச் சிறிதாகவோ, பயனற்றதாகவோ இருக்குமெனில், அந்த நிலப்பகுதியையும் பொறுப்பேற்று அதற்கான இழப்பீடும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு முழுமையாகக் காணி உடமையாக்கப்படுவதாலோ, அல்லது குறித்த திட்டத்தால் ஏற்படுகின்ற வேறு பாதிப்புக்களாலோ மக்கள் அல்லது மக்களது வாழ்வாதாரங்கள் முழுமையாக இடம்பெயர வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்ட மக்கள் அரசால் மாற்று இடங்களில் மீள் குடியேற்றப்பட்டு, மீளமர்ந்த நிலத்துக்குப் பாதுகாப்பான உரித்து, வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி வாய்ப்புக்களைப் பெறுவதற்கான வசதிகளுடன் சிறந்த வீடமைப்பு, இடம்பெயர்ந்தோருக்கு அபயம் (மாற்று இடம்) வழங்கிய சமூகங்களுடன் பொருளாதார மற்றும் சமூகரீதியாக ஒருங்கிணைத்தல், இடம்பெயர்ந்த மற்றும் அபயம் வழங்கிய சமூகங்களுக்குத் திட்டத்தின் பயன்களை விரிவுபடுத்துதல், நில அபிவிருத்தி, கடன் வசதிகள், பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு வசதிகள், போன்ற இடைக்கால ஆதரவுடன் அபிவிருத்தி உதவிகள், தேவைப்படுகின்ற குடியியற் கட்டமைப்பு, சமூக சேவைகள் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும்போது, அவற்றை மேம்படுத்தப்படுவதற்கான அல்லது ஆகக்குறைந்தது முன்பிருந்த நிலைக்கேனும் மீட்டெடுக்கப்படுவதற்கான வழிவகைகள் கைக்கொள்ளப்படுகின்றன. காணி உறுதிப்பத்திரம் மற்றும் காணிக்கான அங்கீகரிக்கப்பட்ட சட்ட உரித்து இல்லாதோர்கூட, மீள்குடியமர்வு உதவிகளுக்கும் காணி தவிர்ந்த பிறசொத்துக்களது இழப்புக்கான இழப்பீட்டைப் பெறுவதற்கும், வாழ்வாதார விருத்தி உதவிகளுக்கும் தகுதியுடையவர்களாகின்றனர்.

**கவனங்களும், பாதுகாப்பும்**

அபிவிருத்தித் திட்டங்கள் சிறப்பாக மக்களுடன் இணைந்ததாக, திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள் மற்றும் இடர்களைச் சிறப்பாகக் கருத்தில் கொண்டதாக அமைவதற்கு அதனால் பாதிப்புற்ற மக்கள், அவர்களுக்கு அபயம் வழங்கிய சமூகங்கள் மற்றும் அக்கறையுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்காக முன் அறிவிக்கப்பட்ட கலந்துரையாடல்கள் கட்டாயமாக மேற்கொள்ளப்படுகின்றன. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளோர், காணிகள் இல்லாதோர், முதியோர், பெண்கள், சிறுவர்கள் மற்றும் பூர்வீகக்குடியினர் அத்துடன் காணிகளுக்கான சட்டபூர்வமான உறுதிப்பத்திரம் இல்லாதோர் ஆகியோரது தேவைகள் சார்பாகச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது.

கட்டுமான நடவடிக்கைகள் நடைபெறும்போது ஏற்படுகின்ற தற்காலிக இடர்கள் மற்றும் குறைகள் திட்டத்திலும் கட்டுமான ஒப்பந்தக்காரராலும் கவனத்தில் எடுக்கப்பட்டு அவற்றுக்கான தணித்தல் நடவடிக்கைகள் அல்லது பரிகாரங்கள் வழங்கப்படுகின்றன. கட்டுமான நடவடிக்கைகளின்போது ஏற்படும் தூசுகள், சத்தம், அதிர்வுகள் போன்றன தடுக்கப்பட அல்லது அனுமதிக்கப்பட்டதற்கு மேலாக நிகழாது உறுதிப்படுத்தப்படுகின்றது. கட்டுமானத் தளத்திலே பாதுகாப்பு வேலிகள், பாதுகாப்புக் குறியீடுகள், பாதைகள் தடைப்படும்போது பாதுகாப்பான தற்காலிக மாற்று வழிகள் போன்றன பொருத்தமாக வழங்கப்படுவதோடு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு அல்லது குறைக்கக் கூடியவாறு கட்டுமான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. கட்டுமானம் பற்றிய விவரங்கள் மற்றும் நேரங்கள் பற்றிச் சம்பந்தப்பட்ட மக்களுக்கு முற்கூட்டியே அறிவுறுத்தப்படுகிறது.

இதனால் பெரியளவு இடர்பாடுகள் தடுக்கப்படுகின்றன. கட்டுமான நேரத்தில் தற்காலிகமாகப் பாதைகள் தடைப்படின் மக்கள் பயணிப்பதற்குப் பாதுகாப்பான மாற்று பாதைகள் வழங்கப்படுகிறன. (இது வீதியில் இருந்து மக்கள் தமது வீடுகளுக்கும் மற்றைய தனியார் மற்றும் பொது வசதிகளை அடைவதற்கான வழிகளுக்கும் பொருந்தும்). இவ்வாறான தற்காலிகத் தடைகளால் கடைகள் மற்றும் வியாபார நிலையங்களின் வியாபாரத்தில் இழப்பு ஏற்படின், அதற்கும் பொருத்தமான இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட கொள்கைகள் மற்றும் சட்டங்களுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதற்கு சகல உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களும் பொறுப்பான சமூகப் பாதுகாப்பு நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன் அனைத்து கட்டுமான ஒப்பந்தகாரர்களும் பொறுப்பான சமூக பாதுகாப்பு நிபுணர்களைப் பணிக்கு அமர்த்தியிருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**குறைகளைத் தெரியப்படுத்த வேண்டும்**

எமது பகுதிகளில் பெரும்பாலும் ஒப்பந்தகாரர்கள் மேற்குறித்த விடயங்கள் பற்றி அதிக தெளிவும் அக்கறையும் இல்லாது இருப்பதாகத் தோன்றுகிறது. கட்டுமானத் தளங்களை முகாமை செய்யும் விதங்கள், மக்களுக்கு இன்றும் இடர்பாடுகளை ஏற்படுத்துபவையாகவே காணப்படுகின்றன. பாதிப்புக்கள் மற்றும் இடர்களை எதிர்கொள்ளும்போது, மக்கள் தமக்குள்ளே பேசிக்கொள்வதுடன் நிறுத்தி விடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில், மக்கள் தமது குறைகள் பற்றித் தெரியப்படுத்த வேண்டும். அதற்காகவே மிகவும் வசதியான, இலகுவான குறை நிவர்த்திப் பொறிமுறைத் திட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இவை பல படிமுறைகளில் அமைந்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளையும் கொண்டு அமைந்த குழுக்களாக இருக்கின்றன. அடிமட்டத்திலான குறை நிவர்த்திக் குழுவிலே தமது குறைகளுக்குத் தீர்வு கிடைக்காவிடில் மக்கள் அதற்கு மேல்மட்டக் குழுவில் முறைப்பாடு செய்ய முடியும். அபிவிருத்தித் திட்டம் நடைபெறுகிற பகுதிக் கிராம அலுவலர், பிரதேச செயலாளர், மாவட்டச்செயலகம், திட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டக் காரியாலயம், திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அரச திணைக்களத்தின் காரியாலயம் போன்றவற்றிலும் மக்கள் தமது பாதிப்புக்கள் மற்றும் குறைகள் பற்றி முறைப்பாடுகளைச் செய்து பரிகாரங்களைப் பெறமுடியும். இதற்கும் மேலாகக் குறித்த திட்டத்துக்கு நிதி வழங்குகின்ற நிறுவனத்திலும் முறையிட முடியும். முறைப்பாடுகளை, மக்கள் தமது வீட்டில் இருந்தே தொலைபேசியூடாகவோ, கடிதம் மூலமாகவோ மேற்கொள்ள முடிகின்றது. இவ்வாறு உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களில் சமூகப்பாதுகாப்புப் பற்றிய தீர்க்கமான கரிசனைகள், திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் அதிக காலத்தையும் மேலதிக செலவையும் ஏற்படுத்தினாலும், மக்களது பாதிப்புக்களுக்குப் பொருத்தமான முறையில் பரிகாரங்கள் வழங்கப்படுகின்றன. மக்களின் பாதிப்புக்கள் ஈடுசெய்வதை உறுதிப்படுத்துவதற்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிபோன்ற பன்னாட்டு நிதி வழங்குநர்களால், மக்களுக்கான பாதிப்புக்களுக்கான பரிகாரங்கள் வழங்கப்பட்டு அவற்றில் மக்கள் திருப்தி அடையும் வரை தமது நிதியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட அனுமதி வழங்குவதில்லை. இவ்வாறு நாட்டின் சமூகப் பாதுகாப்பு நடைமுறைகள் விருத்தியாகின்ற நிலையில், மக்களும் இவை பற்றித் தெரிந்துகொண்டு திட்டங்களுக்குத் தமது பங்களிப்புக்களை வழங்கிச் சிறந்த திட்டங்கள் உருவாகவும் நடைமுறைப்படுத்தவும் வழிசெய்தல் மிகச்சிறப்பானதாகும்.

*கட்டுரையாளர் - சமூகவியலாளர்*

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

# பெயர்ப் பலகையளை கவனிக்கிறியளோ...?

கண்நாளாய் உள்ளுக்குள்ள கிடந்து குமையிற விசயம் ஒண்டுதான் இது பாருங்கோ. அதுஎன்னவெண்டால் எங்கட உள்ளூர்த் தலைவருகளின்ர பிரச்சினை தான் அது. அவை செய்யிறதுகளைப் பார்த்தால், அதெல்லாம் என்னவெண்டு தெரிஞ்சுதான் செய்யினமோ எண்டும் கொஞ்சம் யோசிக்க வேண்டி இருக்குத் தான். எண்டாலும் செய்ய முதலிலை யோசிக்கலாம் அல்லது தெரிஞ்ச. அறிஞ்ச ஆக்களோடை கதைச்சுப் பேசிச் செய்யலாமல்லோ?




எதுக்கெடுத்தாலும் கட்சி பிரிக்கிற பழக்கத்தை விட்டு மக்கள் சார்ந்து சிந்திக்கப் பழக வேணும் கண்டியளோ. இப்பிடிச் சொல்லுறது உங்களுக்குப் பிடிக்கா தெண்டு எனக்கு நல்லாத் தெரியும். உங்களைத் தெரிவு செய்த குற்றத்துக்காக எண்டாலும் நான் சொல்ல வேண்டியதுகளைச் சொல்லத்தானே வேணும்? பிறகு ஏன் சொல்லயில்லை? சொல்லியிருந்தாச் செய்திருப்பமெல்லோ எண்டு பந்தை எங்கட பக்கம் திருப்புவியள். இல்லையோ?

●●●

முந்தி நாய் பிடிக்கிற அதிகாரமிருந்துது. பிறகு அது இல்லாமலாகிப் போச்சுதல்லே? அது மாதிரி இப்ப இருக்கிறதுகளும் பறிபோகிறதுக்கு முன்னம் அதுகளை வைச்சுக்கொண்டு செய்யக்கூடியதுகளையாவது செய்யலாமெல்லே? அதுதான் பாருங்கோ எங்கட றோட்டுகள். ஒழுங்கையளுக்குப் பேர் வைக்கிற அதிகாரம் உங்களிட்ட இருக்கல்லே? அதையாவது சரியாய் ஒற்றுமையாய்ச் செய்யலாமல்லே? இதையும் என்ர தொகுதியிலை நீ எப்பிடி லைற் போடுவாய்? எண்டு சணடை பிடிச்சமாதிரியாய் இல்லாமல் செய்யலாமில்லே!

> அப்ப அந்த நாளுகளிலை மாவீரர் நாள்களிலை மாவீரர்களின்ர பேருகள் றோட்டுகளுக்கு வைச்சதல்லோ? நினைவிருக்கே? சிவப்பு, மஞ்சள் நிறப் பைப்பிலை (குழாய்) மஞ்சள் பலகையிலை. சிவப்பு நிறத்தாலை பெயர் எழுதி, ஒழுங்கையோ, வீதியோ தொடங்கிற, முடியிற இடங்களிலை நட்டுப் பெரிய கொண்டாட்டம் கொண்டாடி எல்லோ திறந்தவை.

அது சரி, உவடமெல்லாம் புதிசு புதிசா ஒழுங்கையளுக்குப் பேர் வைச்சிருக்கிறியள். நல்லதுதான். எண்டாலும் இப்ப என்னை உறுத்தின விசயம் என்னவெண்டால். ஏற்கனவே ஊர்கூடி. ஸ்பீக்கரிலை பாட்டுப்போட்டு. பேர் வைச்சுத் திறந்த றோட்டுகளுக்குமல்லே நீங்கள் திரும்ப வேற பேருகளை வைக்கிறியள். அதிலையும் வேதனையும், வேடிக்கையும் என்னவெண்டால் அப்ப அந்த நாளிலை பெயர் சூட்டுற விழாவிலை முன்னுக்கு நிண்டவையும், மறைவாக நிண்டு விமர்சிச்சவையும்தான் இப்ப பேர் வைக்கினம் எண்டதுதான் பாருங்கோ.

"90களிலை சிற்றூர் அவை, வட்ட அவை, 2000 களிலை போரெழுச்சிக் குழு எண்டெல்லாம் கூத்தாடின ஆக்களிலை கணிசமான ஆக்கள்தான் இப்பவும் இப்பிடிக் கூத்தாடுகினம்" இப்பிடிச் சொல்லிச் செல்லப்




பாண்ணை சிரிக்கிறார். ஆளுக்கு நல்ல ஞாபக சக்தி இருக்குப் பாருங்கோ. இலேசுப்பட்ட ஆளில்லை அந்தாள். அப்ப அந்த நாளுகளிலை, மாவீரர் நாள்களிலை மாவீரர்களின்ர பேருகள் றோட்டுகளுக்கு வைச்சதல்லோ? நினைவிருக்கே? சிவப்பு, மஞ்சள் நிறப் பைப்பிலை (குழாய்) மஞ்சள் பலகையிலை, சிவப்பு நிறத்தாலை பெயர் எழுதி. ஒழுங்கையோ. வீதியோ தொடங்கிற. முடியிற இடங்களிலை நட்டுப் பெரிய கொண்டாட்டம் கொண்டாடி எல்லோ திறந்தவை. இப்ப என்னடா எண்டால், எந்த மாவீரர்களின்ரை தியாகங்களைச் சொல்லியும், தொடர்ந்தும் மாவீரர்களின்ரை கொள்கையளைச் சுமக்கிற ஆக்கள் தாங்கள்தான் எண்டும், அவங்களாலை அங்கீகரிக்கப்பட்ட ஆக்கள் தாங்கள் மட்டும்தான் எண்டும் சொல்லிச் சொல்லியே கதிரையளைப் பிடிச்ச அதே ஆக்கள்தான் மாவீரர்களின்ரை பெயருகளை மறந்தும், மறைச்சும் இப்ப வீதியளுக்குப் புதிசாய்ப் பேர் வைக்கினம்.

எரிச்சலாயில்லையோ?

●●●

24மணித்தியாலங்களும் கள்ளர். இரவிலை வோற குள்ளமனிசர். வேகமாய் வந்து வேகமாய்ப் போற வாள்ச் சண்டியர். லீசிங் காறர், கக்கூஸ் பிறஸ் விக்கவாற ரை கட்டின பொடிபெட்டையள் அது இதுவெண்டும் ரீ.வி, நாடகங்கள், கோயில் திருவிழாக்கள், கோஷ்டிகள் அது இதுவெண்டு சனங்கள் சரியான பிசி!

பொதுவான விசயங்களிலை ஈடுபடுறதுக்கு நேரமில்லாமலல்லே அந்தரப்படுகுதுகள். அதோடை விலைவாசி வேற்ற ! எந்தளவுக்கு, எது ஏறப்போகுது எண்ட ஏக்கம் வேற. நிலைமையள் இப்பிடியிருக்கத்தான் வீதியளுக்குப் பெயர் வைக்கிற வேலையளும் நைசாக நடந்தேறுது. "அவங்கட காலத்திலையும், இப்ப மாதிரிச் சுத்துமாத்துகள், கூடிக்குலாவலுகளிலை ஈடுபட்டு, அதுகள் எல்லாம் ஒண்டு விடாமலுக்கு அவங்கடை பைலுக்குப் போயிருக்கும் எண்டதை நினைச்சுப் பயத்திலை நித்திரையில்லாமக் கிடந்தவைக்கு அவங்களைப் பிடிக்காதல்லே? இப்ப அவை உள்ளூர் எடுபிடியளுக்கு அனுமதி குடுக்கினை" எண்டு விசுவர் சொல்லுறதிலை. இப்பிடி மார்க் பண்ணுப் பட்டவையைப் பற்றிச் சனங்கள் நல்லா விளங்கி வைச்சிருக்குதுகள் எண்டது தெரியுதெல்லே! மனுசன் உள் வீட்டுக்குள்ள அடியுண்ட ஆள், சும்மா சொல்லியிராது கண்டியளே. எல்லாம் சரிதான். பேர் தேவைதான். அதுக்கு முதலிலை பழசுகளை ஒருக்கா நினைச்சுச் செய்யிறது நல்லது. ஐயாவிட்டைக் கேட்டுத்தான் செய்யவேணும் எண்டால், உரிமையைப் பற்றிக் கதைக்கிறதை விட்டுப்போட்டு, உங்கடை உங்கடை தொழிலுகளை நேர்மையாகச் செய்யிற வழியளைப் பாக்கிறது மனசுக்கு எண்டாலும் இதமா இருக்குமெல்லோ!

அப்பிடிச் செய்யிறதுதான் மாவீரருக்கு நீங்கள் குடுக்கிற மரியாதையாயும், உங்களை நம்பிப் புள்ளடி போட்ட சனத்துக்குச் செய்யிற நன்மையாயும் இருக்கும் எண்டு நான் நினைக்கிறன். நீங்கள் என்ன நினைக்கிறியள்?

■

# என் செய்தேன்...?

கவிதை

விவேகனந்தனூர் சதீஸ்


விடுதலைக்குப் பின்...
ஒருவ்ன் என் கண்ணைப்
பார்த்தபடியே
காறி உமிழ்கிறான்
கடைத் தெருவில் நின்று
மற்றொருவன்
பழைய கதைகளெல்லாம்
கேட்ட பின்பும்
பரீட்சயம் இல்லையென்று
பாதை மாறுகிறான்

இன்னொருவன்
இப்படி ஒருவனைத் தெரியாது
என்று
தப்பி ஓடுகிறான

ஊரைச் சேர்ந்தவன்
ஒரு நாளுமில்லாது
உம் என்று முறைக்கிறான்

ஓரளவு பழகியவன்
இது கேவலமான வாழ்க்கை
என
ஓரம் கட்டுகிறான்

ஒன்றாய் இருந்தவன்
"உன்னைவிட எதிரி உயர்ந்த
வன்"
என்கிறான்.
கைதுக்குப் பின் நான் செய்த
காரியம் தான் என்ன...?



■

சூரியகாந்தி

ஞாயிற்றுக்கிழமை 19/ஒகஸ்ட் /2018

தொகுப்பு

செ.மகேஷ்

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 22

**1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்த விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.**

# ஆரம்பக் கல்வி

அத்திபாரம் சரியாகவும் பலமானதாகவும் இருந்தால் மாத்திரமே கட்டடத்தின் மேற்பகுதி உறுதியாக இருக்கும். மாணவர்களுக்கான ஆரம்பக் கல்வியும் அத்திபாரம் போன்றதே. அது சம்பந்தமான பயனுள்ள சில கருத்துக்களைத் தருகிறார் யாழ்ப்பாணம்-மட்டுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அந்த நாள் (1994 ஆம் ஆண்டு) அதிபர் திரு செ.க.துரைரத்தினம்.

**ஆரம்பக் கல்வி வளம்**

ஐந்து வயதை முழுமை செய்த மாணவர்களிடம் காணப்படும் திறன்களை மதிப்பீடு செய்வதன் மூலம் தரம் ஒன்றுக்கான முறைசார் கல்விக்குரிய பாடத்திட்டத்தை ஆக்கிக் கொடுக்க வேண்டும். பாடசாலைப் புகுநிலைத் திறன்களைக் கண்டறிவதற்குப் பரந்த அளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவை பெரும்பாலும் பரம்பரை, சூழல் ஆகியவற்றோடு ஏற்படுத்தும் தாக்கத்தை மாணவன் ஏற்றுக் கொள்கின்றானா? அல்லது அவற்றின் தாக்க விளைவு அவனுடைய விருப்புக்கு முரணாக அமைந்தது எனக் கருதி வெறுக்கின்றானா? என்பதைக் கவனத்துக்கு எடுக்க வேண்டியது மிக அவசியமாகும்.

உளவியல் ரீதியாக மாணவன் ஏற்றுக் கொள்ளாதவற்றை நாம் திணிக்கின்றோமா? என்பது பற்றி நாம் சிந்தனைக்கு எடுப்பதே இல்லை. பொருளாதாரப் பற்றாக்குறை, சனத்தொகை அதிகரிப்பு, கல்விசார் வளங்கள் போதாமை, ஆளணிப் பற்றாக்குறை போன்றவையே நாம் சிந்திக்காமைக்குரிய காரணங்களாகும்.

சிறுவர் தொடர்பாகச் சிந்திக்க வேண்டிய அம்சங்களும் செயற்படுத்த வேண்டியவையும் நிறையவுண்டு. கல்விக்காகச் செல்விடுவது வீணானதல்ல. இது ஒரு மூலதனம். எனவேதான் ஆரம்பக் கல்வி தொடக்கம் மேற்கல்வி வரையும் இலவசக் கல்வியுடன் கூடிய அத்தியாவசியக் கல்வியாக முன்வைக்கப்பட்டுள்ளது. பிறந்த குழந்தை ஓரிரு நாள்களில் தாயின் முகத்தை இனங்காண்பதோடு கற்றல் ஆரம்பமாகிறது. பிறந்த நாளிலிருந்தே கற்கத் தொடங்குகிறது என்று கூறினாலும் தவறில்லை. ஆனால் ஆரம்பக் கல்வியைப் பெறும் வாய்ப்பை ஐந்து வயதைத் தொடர்ந்து யாவரும் பெற்றுள்ளனர். ஐந்து வயதை முழுமை செய்வதற்கு முன்னரே கல்வியைக் கொடுத்து விட வேண்டும் என்ற ஆசையே பல பெற்றோரிடம் உள்ளது. ஆனால் அதை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதைச் சிந்திக்க அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

**ஆரம்பக் கல்வி ஆசிரியர் யார்?**

பிள்ளைகள் பொறியியலாளர்களாகவோ, வைத்தியக் கலாநிதிகளாகவோ வர வேண்டும் என்ற ஆசையால் அவசரப்பட்டுத் தாம் நினைத்ததைப் புகட்டிவிடத் துடிப்போர் பலரும், கண்மூடித் தனமாகச் சிறுவர் பாடசாலைகளை நடத்தும் ஆசிரியர்களிடம் தமது பிள்ளைகளை அனுப்பி ஆரம்பத்திலேயே கல்வியைப் பிள்ளைகளுக்கு ஒரு சுமையாக்கி விடுகின்றனர்.

பாலர் கல்வி நிதானமாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஆரம்பம் சரியாக அமைதல் வேண்டும். அத்திபாரம் பிள்ளையின் ஆளுமையைப் பண்படுத்தும் பலம் கொண்டதாக இருத்தல் வேண்டும். அவசரப்பட்டு, திட்டமிடாது கட்டப்பட்ட அத்திபாரத்தின் மேல் பலமான சுவர் எழுப்பப்படுவது சாத்தியமானதல்ல. அத்திபாரத்தில் ஏற்பட்ட தவறுகளைக் கட்டடம் உயர்ந்த பின்னர் சரி செய்வது சாத்தியமானதும் அல்ல.

ஆரம்பக் கல்வியைச் சிறப்பாகக் கற்றுக் கொண்டு முன்னேறிய உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி புகட்டுதல் யாவருக்கும் இலகுவானதாகும். அதற்கெனப் பயிற்சி பெறாதவர்களும் கற்பிக்கின்றனர். அந்த வகையிலேயே தனியார் கல்வி நிறுவனங்களும் பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கும் பயிற்சிகளை மேற்கொள்கின்றன. ஆனால் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு அதற்குரிய பயிற்சிகளைப் பெறாதவர்கள் கற்பித்தலை முன்னெடுப்பது பொருத்தமானதல்ல.

கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சையில் அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர் அதே வகுப்பு மாணவருக்குக் கற்பித்தல் இலகுவானது. ஒரு பட்டதாரி, பட்டதாரிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்குக் கற்க உதவலாம். இதைத் தனியார் கல்வி நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஆரம்பக் கல்வியைப் பெற வேண்டிய மாணவர்களுக்கு இவர்கள் யாருமே கல்வியூட்ட முடியாது. ஆரம்பக் கல்வியை ஊட்ட முற்படுபவர் குழந்தையின் இயல்பாற்றல், மனப்பாங்கு பற்றிப் பயிற்சி மூலமோ, குழந்தை உளவியல் பற்றி நன்கறிந்தோ வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். மிகவும் பொறுமையோடு, திட்டமிட்ட முறையில் பிள்ளையின் நிலைக்கு இறங்கி ஆராய்ந்து பிள்ளையிடம் பல விடயங்களைக் கற்று, குழந்தைக் கல்வியில் வெற்றி பெற்றவர்களே பெஸ்ரோலொஜி, பற்றிக் பொறபல், மொண்டிசூரி அம்மையார் போன்றவர்கள். இவர்களில் பலர் ஆய்வுகளின் மூலம் கல்விப் பட்டங்களைப் பெற்றவர்களாவர்.

**ஆரம்பக்கல்வி கற்பிப்பதற்குப் பின்நிற்போர்**

இலங்கையில் பட்டம் பெற்ற அறிஞர்கள் இவ்வாறு ஆய்வில் ஈடுபடுவது மிகக் குறைவே. அதிகாரிகளாக வேண்டும் என்பதற்காகவும் அல்லது மேல் வகுப்புகளில் கற்பிக்கும் சந்தர்ப்பத்தைப் பெறவேண்டும் என்பதற்காகவும் பரீட்சைகளை எழுதிப் பட்டதாரியாகின்றனர். பட்டதாரிகளும் டிப்ளோமா படித்தவர்களும் மேலே செல்வதற்காகவே மேலும் படிக்கிறார்கள். இதனால் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிப்பதற்காக முன்னிற்கும், முறையாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், கல்விப் பொதுத் தராதர உயர்தர சாதாரணதரப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களும் தமது சிறப்பான கற்பித்தலை மேற்கொண்டாலும் அவர்களைத் தாழ்வாகக் கருதும் ஒரு குழுவினர் இருக்கவே செய்கின்றனர். இதனால் ஆரம்பக் கல்வியில் அதிக அக்கறை காட்டாத நிலையில் அடித்தளம் ஆட்டம் காணவே செய்கிறது. ஆரம்பக் கல்விக்கு எனத் தெரிவு செய்யப்படும் கல்விப் பொதுத் தராதர உயர்தர, சாதாரணதர ஆசிரியர்கள் கூடத் தமது துறையை மாற்றி மனையியல், விவசாயம், விஞ்ஞானம், கணிதம், சிறப்புத் தமிழ் என்று துறை மாற்றிப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டு மதிப்பின் அடிப்படையிலான அடுத்தபடி உயர்வாகக் கருதி தரம்6 தொடக்கம் தரம்11 வரையான இடைநிலைத்தரங்களில் கற்பிக்கவே முந்துகிறார்கள். இதனால் 'ஆரம்பக் கல்வி கற்பிக்கும் கஷ்டத்தில் இருந்து தப்பித்துக் கொண்டோம்' எனக் கருதி மகிழ்கிறார்கள். மீதமாக உள்ள சந்தோசமாகப் பணியாற்றும் ஒரு சிலர், பற்றாக்குறை ஆசிரியர்களின் வேலையையும் தாமே சுமந்து கொண்டு முழு மனதுடன் கற்பித்து வருகிறார்கள். அதனால் பாதிப்புறும் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் தொகையும் அதிகரிக்கவே செய்கின்றது. தொடரும் வகுப்பேற்றத்தால் விரும்பியோ, விரும்பாமலோ ஆரம்பக் கல்வியைக் கடந்து இடைநிலைக் கல்விக்குள்ளேயும் பிரவேசிக்கிறார்கள். குறைந்த எண்ணிக்கையானோர் மேலும் நீந்திச் சென்று உயர்கல்வியைப் பெறுகிறார்கள். பெருந்தொகையானோர் அடிப்படைக் கல்வியைக் கூட முழுமையாகப் பெறாதவர்களாகப் பரீட்சை மையக் கல்வி கசந்த நிலையில் இடைவிலகி, செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இத்தகைய மாணவர்களுக்குத் தரம்7,8 இல் புகுத்தியிருக்கும் வாழ்க்கைத் திறன் என்ற பாடம் தனது கதவுகளை அகலத் திறந்து வைத்துக் கொண்டு ஓரளவு ஆறுதலளிக்கிறது. அதற்குக் கூட ஆரம்ப அடித்தளக் கல்வி சிறப்பாக அமைந்து, கிடைத்திருக்குமாயின் பேருதவியாக இருக்கும் என்பது தெளிவாகிறது. மேற் கல்விக்கோ, வாழ்க்கைத் திறன் கல்விக்கோ ஆரம்பக் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. அதைச் செயற்படுத்துவதற்குக் கடின உழைப்பு வேண்டும் என்பதைச் சிந்தித்துச்செயலாற்ற வேண்டும். ஆரம்பக் கல்வியில் ஈடுபடுபவர்களும் உயர்ந்தவர்களே என்ற நிலைப்பாட்டை உருவாக்கியே தீர வேண்டிய காலம் வந்துவிட்டது.



**ஆரம்பக் கல்வி ஆசிரியர்**

தரம் ஒன்றிலோ, அதற்கு முன்போ ஒரு வட்டத்தை வரைய இடஞ்சுழியாகத் தானாகவே பழகி விட்ட மாணவனை வலஞ்சுழியாக மாற்றவேண்டிய தேவை உண்டு. மாற்ற யாரால் முடியும்? வலமாகச் சுழிக்கப் பயிற்சி கொடுத்துக் கற்பிப்பவர் மறுபக்கம் திருப்பிவிட்டு மீண்டும் பார்த்தால் மாணவர் பழையபடி இடஞ்சுழியாகச் சுயாதீனமாகச் சந்தோசமாகச் சுழித்துக் கொண்டிருப்பார்! இதற்கு என்ன செய்யலாம்? எப்படி இவரை மாற்றலாம்? என்று ஆழமாகப் பொறுமையுடன் சிந்திப்பவர் நல்ல ஆரம்பக் கல்வி ஆசிரியர். அதைவிடுத்துக் கோபித்துத் தண்டனை வழங்குபவர் பாவம்! அவர் குழந்தை உளவியல் தெரியாதவர். இங்கே சூத்திரமோ கண்டுபிடிப்புகளோ வாய்ப்பாடோ வேலை செய்யா!


நல்ல ஆரம்பக் கல்வி ஆசிரியரின் பணி எத்தகையது? மதிக்கப்பட வேண்டியவர்கள் யார்? ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் எத்தகையது? என்பன பற்றிச் சிந்திக்க வேண்டியது இன்று அவசியமாகும்.

பாடசாலையில் சேரும் வயதான ஐந்தை முழுமை செய்யும் முன்னர் சிறுவர் பெற்றுக் கொண்ட அறிவை ஆய்வு செய்த யப்பானிய நிபுணர் ஒருவரதும், திரிலேதைகசுந்தரி, காரியவசம் ஆகியோரினதும் ஆய்வுகளின்படி 1993ஆம் ஆண்டிலும் 1994ஆம் ஆண்டிலும் முறையே முதலாம், இரண்டாம் தரப் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அவை சிறுவர்களின் படிப்படியான உள, உடல் வளர்ச்சியைக் கருதியே மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரின் பேச்சு, எழுத்து என்பன எவ்வாறு அமைகின்றதோ அதைப் பின்பற்றியே பிள்ளைகள் கற்கின்றனர். அவை மாத்திரமல்ல நடை, உடை, பாவனைகள் கூடச் சிறுவர்களால் பின்பற்றப்படுகின்றன. இந்த நிலையில் ஆரம்பக் கல்வியை எந்த ஆசிரியரும் வழங்கலாம் என்ற கருத்தைச் சில அதிபர்களும் ஆசிரியர்களும் கொண்டிருப்பது வேதனைக்குரியதாகும். கணிதம், மொழி ஆகிய பாடங்களும் விஞ்ஞானம், சுற்றாடற்கல்வி போன்றனவும் வரைதல், இசைத்தல், விளையாடுதல் என்பனவும் ஒன்றிணைத்தே கற்பிக்கப்படுவதை அவதானிக்கலாம். ஆனால் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்துவமான வேறுபாடுகள் உண்டு என்பதை அவர்கள் அறிந்துள்ளனர். அவற்றை ஒன்றிணைத்துக் கற்பிப்பதால் ஏற்படுத்தப்படுகின்ற வாழ்க்கைத் திறன்களைச் சிறு வரிடத்தில் வெளிக்கொண்ருகின்ற திறமை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிடத்தில் சிறப்பாக இருப்பதைக் காணலாம்.

இடைநிலைக்கல்வியிலும் உயர்கல்வியிலும் கற்கும் மாணவர்களுக்கென ஒவ்வொரு பாடத்துக்கும் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் நியமனம் பெறுகின்றனர். ஆனால் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைத்துப் பாடங்களிலும் நிபுணத்துவம் பெறுவதன் மூலமே சிறுவர்களுக்குச் சிறந்த அடிப்படைக் கல்வியை வழங்க முடியும். அத்தகைய திறன்களுடனேயே ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் திகழ்கிறார்கள். இதை ஏனைய ஆசிரியர்களும், சமூகமும் உணர்தல் வேண்டும்.

(தொடரும்)



# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

தொடர்

தாஸ் மாஸ்ரர்

11

ஒரு கைதிக்குச் சிறைத் தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டதன் பின்னர் அவரைச் சிறைச்சாலைக்குள் கொண்டு வருவார்கள். அவர் அணிந்திருக்கும் உடையைக் களைந்து, வெள்ளை நிறக் காற்சட்டையையும், நீளக் கை இல்லாத, வட்ட வடிவக் கழுத்தையுடைய மேலங்கியையும் அணியக் கொடுப்பர். கைதி அணிந்திருந்த உடையை ஓர் உருளை வடிவில் சுற்றி, நூலால் கட்டி, அதில் கைதியின் பெயர், சிறை இலக்கம் எனக் கைதி குறித்த குறிப்புக்கள் சிலவற்றை ஒரு தாளில் (மட்டை) எழுதி அந்த உடுப்பு உருளையுடன் இணைத்துப் பத்திரப்படுத்துவர். குறிப்பிட்ட கைதி பல வருடங்களின் பின் விடுதலை பெறும் வரை அந்த உடுப்பும் பத்திரமாகவே இருக்கும். அவன் விடுதலையாகும்போது அந்த உடுப்புக்களை மீண்டும் வழங்குவார்கள். தண்டனை முடிந்து சிறையிலிருந்து வெளியேறிச் செல்பவர்கள் இப்படியாகத் தாம் எப்போதோ கையளித்த இந்தப் பழைய, கசங்கிப் போன உடுப்புக்களை அணிந்து செல்வதை நான் பல தடவைகள் கண்டிருக்கிறேன். சிலவேளை அந்த உடுப்பு முறையின் நாகரீகம் வெளியில் மாறி இருக்கும். பல வருடங்களின் முன்பு அவன் உள்ளே வந்தகாலத்தில் இருந்ததுபோல வெளியே ஆடை நாகரீகம் இருக்காது. விடுதலை அன்று அந்த உடுப்புக்களை அணிவதில் சிலருக்குச் (சிறைக்கு வந்த காலத்திலிருந்து உடல் வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், பருமனாக, அல்லது மெலிந்து இருந்தால்) சிரமம் இருக்கும். அதற்கு மாற்று ஏற்பாடு எதுவும் இல்லாது இருப்பதால் அந்த ஆடையைத்தான் அணிந்தாக வேண்டும். ஆனால், அதைக் குறிப்பிட்ட கைதி ஒரு பொருட்டாக எடுத்து கொள்ளப்போவதில்லை. ஏனெனில் அந்தச் சிறை வாழ்க்கையில் இருந்து வெளியேறிச் செல்வது என்பதே அந்த நேரத்தில் அவனுக்குப் பெரிதாகத் தென்படும். ஒரு மறுபிறப்பாகவே அதைக் கருதிக்கொள்வான். இதை நான் எனது விடுதலையின்போது முழுவதுமாக அனுபவித்திருக்கிறேன். அப்போதிருந்த அந்த உணர்ச்சியை முழுமையாக வெளிக்கொணரும் அளவுக்கு எனது எழுத்து, மொழி, ஆற்றல் போதாது என்றே உணர்கிறேன். மூளையின் முழுப்பாகத்துக்கும் குருதி ஓடுவது போலவும், கால், கை இயங்காதது போலவும், பசி, தாகம் இல்லாததுபோலவும், காற்றில் மிதந்து செல்வதுபோலவும் இருக்கின்ற சுக அனுபவம் அது.

போகம்பரைக் களஞ்சியத்தில் சுருட்டிக்கட்டப்பட்ட கைதிகளின் உடுப்புக்கள், நூற்றுக் கணக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு இவ்வளவு பேர் இன்னமும் விடுதலை ஆகாமல் இருக்கின்றனர் என்பதை இலகுவாக அனுமானிக்க முடியும்.

* * *

எல்லாச் சிறைச்சாலைகளிலும் ஆவணக் காப்புப் பகுதி ஒன்று இருக்கும். அதில் தான் கைதிகளின் வழக்குத் தொடர்பான கோவைகள் இருக்கும். இங்குள்ள அதிகாரிகள் ஒரு கைதியைச் சிறைக்குள் கொண்டு வந்தவுடன் அவரது கொமிற்றலைப் பார்த்து அடுத்த வழக்குத் தவணையைப் பதிவு செய்து கொள்வர். குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒரு கைதி எப்போது விடுவிக்கப்படுவார் என்ற விவரமும் அங்குதான் இருக்கும். ஒவ்வொரு நாளும் வழக்குக்குக் கொண்டு போக வேண்டியவர்கள், விடுவிக்கப்பட வேண்டியவர்கள் சார்ந்த பதிவு விடயங்கள் உரிய முறையில் கையாளப்படும்.

நான் தடுத்து வைக்கப்பட்ட சிறைகளுடன் ஒப்பிடுகையில், ஆவணப்பகுதி வேலைத் திட்டங்களை உரிய நேரத்தில் செய்து முடிப்பவர்கள் போகம்பரைச் சிறை ஊழியர்களே. அங்குஇரண்டு நட்சத்திரங்களை(மூத்திரை) மார்பில் சூடிய(பதவி நிலை) ஒரு ஜெயிலரும் வேறு அதிகாரியும் கடமையில் இருப்பர். ஒருகைதியை மேலதிக விசாரணைக்காக நீதிபதியின் அனுமதியுடன் சிறைக்கு வெளியே புலனாய்வுப் பிரிவினர் அழைத்துச் சென்று 72மணி நேரம் வரையில் தமது ஆளுகையின் கீழே வைத்து விசாரிப்பதற்குச் சட்டத்தில் இடமுண்டு. அவர்களால் விசாரணைக்கு உட்பட இருக்கின்ற குறிப்பிட்ட கைதி பற்றிய மேலதிக தகவல்களை ஏலவே கைதாகியிருக்கிற கைதி ஒருவரின் மூலம் விசாரணையாளர்கள் பெற்றிருக்கக் கூடும். அதை உறுதிப்படுத்தும் வகையிலான விசாரணை களை வெளியில் எடுத்துச் சென்ற கைதியிடம் மேற்கொள்ளும்போது, "அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது" என்று அவர் கூறுவாராயின், உடன்ரீதியான துன்புறுத்தல்களை அவர் மீது விசாரணையாளர்கள் ஏற்படுத்தக்கூடும். வெளிக் காயங்கள் ஏற்படாத அளவுக்குக் கவனமாகத் துன்புறுத்தியிருந்தால், கைதியைச் சிறை நிர்வாகத்திடம் ஒப்படைக்கும்போது சிக்கல் இருக்காது. தன்னை விசாரணையாளர்கள் துன்புறுத்துவார்கள் என்ற பயம் கைதிக்கு இருந்தால், சிறைச்சாலை நிர்வாகம் தனக்குப் பாதுகாப்பு வழங்கும் பட்சத்தில்தான் விசாரணையாளர்களுடன் வெளியே செல்ல முடியும் என்று வேண்டிக்கொள்ளும் நடைமுறை உண்டு. சிறைச்சாலை ஊழியர்களின் பொறுப்பில் குறிப்பிட்ட கைதியைப் புலனாய்வு விசரணையாளர்களிடம் கையளித்துக் கவனிக்கும் பொறுப்புச் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு உண்டு.

சிறைச்சாலை நிர்வாகத்துக்கு இருக்கும் இன்னொரு பொறுப்பு ஒரு கைதி "உணவு உண்ண மாட்டேன்" என்று ஒரு நிபந்தனையை வைத்து உணவு தவிர்ப்பில் இருக்கும்போது அது பற்றி உடனடியாகச் சிறைச்சாலை ஆணையாளருக்கு அறிவிப்பதுடன், குறிப்பிட்ட கைதியின் உணவுத் தவிர்ப்பை முடித்து வைக்கும் முயற்சிகளில் இறங்கவேண்டும்.

அதற்குக் குறிப்பிட்ட கைதி இணக்கமடையாதிருந்தால் அவரைச் சாகவிடாமல் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தும் பொறுப்பும் சிறைச்சாலை நிர்வாகத்தினுடையதே. 1.3.2002ஆம் ஆண்டு அன்று, களுத்துறைச் சிறைச்சாலையில் கைதிகள் சாகும்வரை உணவு தவிர்ப்பை ஆரம்பித்திருந்தார்கள். பத்து வருடங்களாகச் சிறையில் இருந்துவரும் திருகோணமலையைச் சேர்ந்த லிங்கம் என்பவரும் அதில் அடங்கியிருந்தார். அவரது உடல் நிலை மிக மோசமாகியபோது சிறைச்சாலை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று உணவு உண்ணுமாறு வற்புறுத்தினர். அவர் மறுத்துவிட்டார். தான் சாவடைந்தால் வைத்தியருக்கோ, சிறைச்சாலை நிர்வாகத்துக்கோ பிரச்சினை வராதவாறு தான் கையெழுத்திட்டுத் தருவதாக அவர் சொல்லியிருக்கிறார். ஆனபோதிலும் சிறை நிர்வாகத்தின் வற்புறுத்தலால் அவருடைய உணவு தவிர்ப்புக் கைவிடப்பட்டது. இருந்தாலும், திடீரென அவருக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் ஒரு வாகனமும், ஐந்து ஊழியர்களும் இரவு நேரத்தில்கூட விசேட சேவையாகப் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தார்களாம். தேவை ஏற்படின் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்வதற்காக.

* * *

12.6.2002ஆம் ஆண்டு அன்று எனக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு நீதிமன்றத்தில் இருந்தேன். எனக்கு அருகில் ஒரு சிறைச்சாலை ஊழியர் இருந்தார். வெளியே நின்றிருந்த அதிகாரி வருமாறு அவரை நோக்கிச் சைகை காட்டினார். என்னருகில் இருந்த ஊழியர் பரபரப்புடன், உடனே எனது இரண்டு கைகளிலும் விலங்கை மாட்டி வீதிக்கு அழைத்துச் சென்றார். பொறுப்பதிகாரி "இவரை ஏன் கூட்டி வந்தாய்? உன்னை மட்டுமல்லவா வரச்சொன்னேன்" என்றார். இருவர் ஓரிடத்தில் இருக்கும்போது, தொலைவில் நிற்பவர், "வா" என்று சைகை காட்டினால் அது இருவருக்கு என்பதாக விளங்கிக் கொள்வதை அன்றுதான் நான் அறிந்தேன். நான் வரக்கூடாத இடத்துக்கு வந்துவிட்டேன் என்பதை விளங்கிக்கொண்டேன். அவர்களது உரையாடல் எனக்குப் பெரிதாகப் படவும் இல்லை. தேவைப்படவும் இல்லை. 10 நிமிடங்கள் வரை முதன்மை வீதியில் கைவிலங்குடன் நிற்கவேண்டியதாயிற்று. பின்னர் முச்சக்கரவண்டி யொன்றில் என்னைச் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றார்கள்.

அங்கு போய்ச் சேர்ந்த பின்பும் பொறுப்பாக வந்த அதிகாரி மற்றைய ஊழியரை மட்டமாகப் பேசிக்கொண்டே இருந்தார். இவையெல்லாம் மிகச் சிறிய விடயங்கள். அதற்கான மாற்று விடயங்களை ஒரு சில நிமிடங்களில் தீர்மானித்துவிட முடியும். அதற்கு அவர்கள் பழக்கப்படவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

* * *

சிறைச்சாலையில் வருடாவருடம் திருத்தவேலைகள் செய்யப்படுவது வழக்கம். சுவருக்கு வெள்ளையடித்தல், உடைந்த பகுதிகளுக்குச் சீமெந்துப் பூச்சிடுவது, நீர்க்குழாய்களைப் பழுதுபார்ப்பது இவை எல்லாவற்றுக்கும் நிதி ஒதுக்கீடுகள் உண்டு. தேவையான பொருள்களைக் கடைகளில் வாங்குவதற்கு அனுமதி உண்டு. இத்தகைய வேலைகள் முழுமையாக நடப்பதில்லை. சில தரக்குறைவான பொருள்களை வாங்கிச் சிறைக் கைதிகளை வைத்து அந்த வேலைகளை முடித்து விடுவார்கள். இதன்மூலம் சிறைச்சாலை அதிகாரிகள் பணம் சம்பாதித்துக் கொள்வார்கள்.

2002ஆம் ஆண்டு 2ஆம் திகதி ஏப்ரல் மாதமளவில் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் பொதுக் கைதிகளுக்கான கழிப்பறைகள் சீரமைப்புச் செய்யப்பட்டன. அதில் 10வரையான கழிப்பறைகள் இருந்தன.

அவற்றுக்குப் புதிய பேசின்கள் போடப்பட்டன. எனினும் அவற்றைக் குழியுடன் இணைக்கும் குழாயுடன் நேரடியாக இணைத்துவிட்டார்கள்.

இடையில் பொருத்தப்படவேண்டிய வளைவான துண்டு போடப்பட்டால் அதற்குள் தண்ணீர் நின்று சீராக வேலை செய்வதுடன் மணம், நுளம்பு என்பன குழிக்குள் இருந்து வெளியே வருவதும் தவிர்க்கப்படும். ஆனால் இடையில் போடவேண்டிய வளைவுத் துண்டைப் பொருத்தாது விட்டதால் மணம், நுளம்புத் தொல்லை, குழியிலிருந்து வரும் வெம்மை எனப் பல காரணங்களாலும், பல கைதிகளுக்குத் தோல் நோய்கள் ஏற்பட்டன. இதைவிட அந்தப் பகுதியில் கடமையில் இருக்கும் ஊழியர்கள் தமது மூக்கைத் துணியொன்றால் மூடிக்கட்டியவாறு கடமையில் இருப்பதைப் பல தடவைகள் கண்டேன்.

அந்தச் சிறிய வளைவுகளைப் பொருத்தாமல் விட்டதன் மூலம் சிறையதிகாரிகள் பெருமளவில் பணம் சம்பாதித்திருக்க முடியாது. ஆனால் கைதிகள் பலருக்கு பல்வேறுபட்ட நோய்களும், அசௌகரியங்களும் வரமாக வழங்கப்பட்டதுதான் உண்மை.

(தொடரும்)

கட்டுரை

திவ்யா ஆர்யா

# சாவுத் தண்டனை

# வன்புணர்வுக் குற்றங்களை தடுக்குமா?

நாட்டையே உலுக்கிவிட்ட பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களைத் தொடர்ந்து, 12வயதுக்குட்பட்ட சிறுமிகளைப் பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாகச் சாவுத் தண்டனையை விதிக்கும் வகையிலான சட்டத் திருத்தம் இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சரான மேனகா காந்தி, இந்தச் சட்டம் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் என்று தான் நம்புகிறார் என்க் கூறினார். கடந்த 2013ஆம் ஆண்டு, டெல்லியில், ஓடும் பஸ்சில், ஜோதி என்ற இளம்பெண் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு ஆளானதைத் தொடர்ந்து, பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்குச் சாவுத் தண்டனை விதிக்கும் முடிவை இந்திய மத்திய அரசு கொண்டுவந்தது.

தென் கிழக்கு ஆசியாவில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து நான்காவது நாடாக இந்தியாவில் பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்குத் தூக்குத் தண்டனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்த நடவடிக்கை பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களைக் குறைக்குமா? குறைக்காதா? என்ற வேறுபட்ட கருத்துக்கள் எழுந்துள்ளன.

**சட்டங்களை ஏலவே கொண்டுள்ள நாடுகள்**

**ஆப்கானிஸ்தான்** -பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்கு எதிராக 2009ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானில் ஒரு குற்றவியல் சட்டம் கூட நிறைவேற்றப்படவில்லை. 2009ஆம் ஆண்டு பெண்களுக்கெதிரான வன்முறைத் தடுப்பு சட்டம் அந்த நாட்டு அதிபரின் உத்தரவின் மூலம் நிறைவேற்றப்பட்டது. பெண்கள் அல்லது சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி இறந்தால், அந்தச் செயலைப் புரிந்தவருக்குச் சாவுத் தண்டனை விதிப்பதற்கு அந்தச் சட்டம் வழிகோலியது. பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்குச் சாவுத் தண்டனை அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகும்கூட ஆப்கானிஸ்தானில் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களின் எண்ணிக்கை சீராக அதிகரித்தது. ஆப்கானிஸ்தானில் சாவுத் தண்டனை விதிக்கப்படுவது பரவலாக இல்லை. அவ்வப்போது தனது விதிகளின்படி தவறு செய்தவர்களைப் பொதுவெளியில் தூக்கிலிட்ட தாலிபன் அமைப்பு, ஆப்கானிஸ்தானில் 2001ஆம்



ஆண்டு வீழ்ந்த பிறகு, அந்த நாட்டு அரசு ஒருசில வருடங்களுக்கு ஒருமுறையே தூக்குத்தண்டனையை நிறைவேற்றி வருகிறது. ஆனால், ஒவ்வொரு தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கும் அந்த நாட்டின் அதிபர் தனித்தனியே கையெழுத்திட வேண்டும். ஆப்கானிஸ்தானில் 2009ஆம் ஆண்டு முதல் இதுவரை 36 சாவுத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பன்னாட்டு மன்னிப்புச் சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், அவற்றுள் எத்தனை தண்டனைகள் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்டன என்பது தெரியவில்லை.

ஆப்கானிஸ்தானில் 2014ஆம் ஆண்டு சில பெண்களைக் கூட்டாகப் பாலியல் வன்புணர்வு செய்த ஐந்து ஆண்களுக்கு அப்போதைய அதிபர் கர்சாய், இரண்டு மணிநேர துரித விசாரணைக்கு பிறகு, சாவுத் தண்டனை விதிப்பதற்கு ஒப்புதல் தெரிவித்துக் கையெழுத்திட்டார்.

**பாகிஸ்தான்** -பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்கு தெற்கு ஆசியாவிலேயே சாவுத் தண்டனை விதித்த முதல் நாடு பாகிஸ்தான். 1979ஆம் ஆண்டு அப்போதைய இராணுவத் தளபதியாகவும், நாட்டின் ஆறாவது அதிபராகவும் விளங்கிய ஜியா உல் ஹக், முறை தவறிய பாலியல் உறவு கொள்பவர்கள் மற்றும் பாலியல் வன்புணர்வு செய்பவர்களைக் கல்லைக் கொண்டு அடித்தே கொல்லும் தண்டனையைக் கொண்டுவந்தார். ஆனால், பாலியல் வன்புணர்வுகளால் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்கள் பாதிக்கப்பட்டதற்குச் சாட்சியாக நான்கு ஆண்களை நிறுத்த வேண்டும் என்ற விதி இருந்ததால், இந்தச் சட்டம் அடக்குமுறையாகப் பார்க்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பெண்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் அந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தத்தின்படி, பெண்கள், சிறுமிகள், கூட்டுப் பாலியல் வன்புணர்வு மற்றும் 16வயதுக்குட்பட்ட சிறுமிகளைப் பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்குச் சாவுத் தண்டனை விதிக்கும் சட்டம், பாகிஸ்தான் தண்டனைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. 12 வருடங்களுக்கு முன்னர் பாலியல் வன்புணர்வு செய்பவர்களுக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டதிலிருந்து இதுவரை பார்க்கும்போது பாகிஸ்தானில் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களின் எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளது. சாவுத் தண்டனைக்கு எதிராக எழுந்த பன்னாட்டு அழுத்தங்களால் 2008முதல் 2014 வரையான காலத்தில் பாகிஸ்தானில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**பங்களாதேஷ்**- பாலியல் வன்புணர்வு, கூட்டுப் பாலியல் வன்புணர்வு, பெண்கள் மீதான அமிலத் தாக்குதல்கள் மற்றும் குழந்தைக் கடத்தல் போன்ற குற்றங்களுக்குச் சாவுத் தண்டனை உட்படக் கடுமையான தண்டனைகள் வழங்கவேண்டும் என்பதற்காக 1995ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான ஒடுக்குமுறை (சிறப்பு விதிகள்) சட்டத்தை பங்களதேஷ் நாடாளுமன்றம் கொண்டுவந்தது. ஆனால் இந்தக் கடுமையான தண்டனைகள் குறித்துப் பல விமர்சனங்கள் எழுந்தன. போதிய ஆதாரங்கள் மற்றும் குறைந்தபட்ச தண்டனைகூட இல்லாத காரணத்தால் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலரும் சுதந்திரமாகத் திரிந்தனர். 2000 ஆம் ஆண்டில் இந்த சட்டம் அகற்றப்பட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகள் சட்டத்துக்கு எதிரான ஒடுக்குமுறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மாற்றப்பட்டது. இதில் பெண்கள் அல்லது குழந்தைகள் வன்புணர்வு வழக்கில் சாவுத் தண்டனை வழங்கும் அம்சம் மட்டும் மாற்றப்படவில்லை. ஆயுள் தண்டனை மற்றும் பிற குற்றங்களுக்கு குற்றப்பணம் விதிக்கப்படும் என்பதும் இந்தச் சட்டத்துடன் இணைக்கப்பட்டது. 24 ஆண்டுகளுக்கு முன்னர் சாவுத் தண்டனை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இங்கு பதிவான வன்புணர்வு வழக்குகளின் எண்ணிக்கை குறையவில்லை.

"வன்புணர்வு செய்தால் சாவுத் தண்டனை விதிக்கப்படும் என்ற பயத்தை மக்கள் மனதில் கொண்டுவந்த எந்தச் சான்றும் இல்லை. வன்புணர்வு வழக்குகளின் எண்ணிக்கையும் குறையவில்லை," என்கிறார் மனித உரிமை ஆர்வலரான சுல்தானா கமல்.

கடந்த பத்து ஆண்டுகளில் பங்களாதேஷில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சாவுத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சாவுத் தண்டனை மீதான உலகளாவிய தரவுகளை சேகரித்துவரும் பன்னாட்டு மன்னிப்புச் சபை கூறுகிறது. ஆனால், இவற்றில் வன்புணர்வு வழக்கில் எத்தனை சாவுத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன என்பது பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

**பாதிக்கப்படுபவர்கள் ஊதாசீனப்படுத்தப்படுகிறார்கள்**

தெற்காசிய நாடுகளில் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டவர்கள் சமூகக் களங்கமாகக் கருதப்படுவதால், பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பாதிப்பை பெரும்பாலும் வெளிப்படையாகச் சொல்வதில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்ற அமைப்பு 2012ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையின்படி, பாலியல் வன்புணர்வு பற்றிப் பெண்கள் முறைப்பாடு செய்தால், தகாத உறவு என்ற குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்படலாம் அல்லது கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்படலாம்.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொலிஸ், நீதி அமைப்புகள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆதரவு கொடுப்பதற்குப் பதிலாக, தவறாக நடத்தப்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்கள் பெரும்பாலும் அக்கறையில்லாமல் ஏளனத்துடன் நடத்தப்படுவதுடன், தார்மீக நெறிமுறைகளை மீறித் தண்டிக்கப்படுகின்றனர் என அந்த அறிக்கை கூறுகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாகப் பொலிஸ் மற்றும் பிற அதிகாரிகளின் பொறுப்புகளை அதிகரிக்கும் வகையில் இந்தியாவில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் மாற்றம் என்பது மிகவும் மெதுவாகவே உள்ளது. இந்தியாவில் வ்ன்புணர்வுச் சம்பவங்களுக்கும் பொலிசாரிடம் முறைப்பாடுகள் அளிப்பதற்குமான இடைவெளி மிகவும் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**சாவுத் தண்டனையால் குற்றத்தைக் குறைக்க முடியாது**

சாவுத் தண்டனை மட்டுமே வன்புணர்வுக் குற்றங்களை குறைப்பதற்கு உதவாது என்று ஆப்கானிஸ்தான் தனிநபர் மனித உரிமைகள் ஆணையத்தின் நிர்வாக இயக்குநர் மூஸா மஹ்மூடி கூறுகிறார். பாலியல் வன்புணர்வு என்பது ஏற்றுக்கொள்ள முடியாத குற்றம் என்றாலும், நடைமுறையில் சமரசங்கள் சாத்தியமாகின்றன. பாலியல் வன்புணர்வுக்குச் சாவுத் தண்டனை விதிப்பதற்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற பல இந்தியச் செயற்பாட்டாளர்களும் இந்தக் கவலையை எழுப்புகின்றனர். ஐந்தாண்டுகளுக்கு முன்னர் சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்ட போதிலும், பெண்கள் மற்றும் சிறார்கள் மீதான பாலியல் வன்கொடுமைக் குற்றங்களின் எண்ணிக்கை மாறாமல் தொடர்கின்றன.

தண்டனை வழங்கப்படும் விகிதம் குறைவாக இருப்பதால், ஏற்கனவே இருக்கும் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. காவல்துறை அதிகாரி அல்லது அரசு அதிகாரி ஒருவர் பாலியல் குற்றத்தில் ஈடுபட்டால், அது குறித்து உரிய விசாரணை செய்வது, இரண்டு தரப்பினருக்கும் மரபணுப் பரிசோதனைகளை முறையாக மேற்கொள்வது, பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை மறைப்பது, விசாரணையை விரைவில் முடிப்பதுபோன்ற சாத்தியங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இந்தியாவில் ஏற்கனவே இருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் இந்தச் சட்டங்கள் உறுதியாக, நன்கு திட்டமிடப்பட்டுச் செவ்வனே செயல்படுத்தப்படுமா? என்பது கவலைக்குரிய விடயமாகவே உள்ளது.

**நீதியின் மெத்தனப்போக்கு**

வழக்கை நடத்தும்போது ஏற்படும் அதிக செலவுகள், தாமதமான விசாரணை நடைமுறைகள் என நீளும் சிக்கல்களைத் தவிர, பாதிக்கப்பட்ட பெண்ணின் பிறப்புறுப்பில் இரண்டு விரல்களை உட்செலுத்திப் பரிசோதனை செய்வதுபோன்ற உடல்ரீதியான சோதனைகளை நினைத்து அச்சப்பட்டு, நீதிமன்றத்துக்கு வெளியே வழக்குகள் சமரசம் செய்துக்கொள்ளப்படுவதாக பங்களாதேஷில் உள்ள செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். இந்தியாவில் இரண்டு விரல்கள் பரிசோதனை தடை செய்யப்பட்டிருந்தாலும், சங்கடம்தரும் உடல் பரிசோதனைகள் செய்யப்படுவது இயல்பானதாக இருக்கிறது. நீண்ட இழுபறியான விசாரணைகளும் குற்றங்களைப் பதிவு செய்வதில் தடைக்கல்லாக இருக்கின்றன.

பாலியல் வன்கொடுமை வழக்குகளின் தரவுகளை இணைக்கும் அமைப்பான 'ஒடிர்கா' அறக்கட்டளையின் செயலாளர் அடிலுர் ரெஹ்மான் இவ்வாறு கூறுகிறார்.

"ஊழல் பரவலாக இருப்பதால் சாவுத் தண்டனை விதிப்பதில் தடையிருக்கிறது; அரசியல் செல்வாக்குக் கொண்ட குற்றவாளிகளால் நீதி அமைப்புக்கள் எளிதாக கையாளப்படுகின்றன; அவர்களுக்குப் பிணை கிடைக்கிறது, கருணையுடன் பார்க்கப்படுகிறார்கள். அவர்களை யாரும் தண்டிக்க விரும்புவதில்லை" என்று அவர் கூறுகிறார்.

அவர் சாவுத் தண்டனைபோன்ற கடுமையான தண்டனைகள், பாதிக்கப்பட்டவர் நீதித்துறையை அணுகுவதற்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதையே இது தெளிவாகக் காட்டுகின்றது. பொலிஸ், நீதித்துறை, அரசு அதிகாரிகள் மற்றும் தனிநபர்கள் ஒவ்வொருவரிடமும் சமுதாய அணுகுமுறைகளில் மாற்றம் ஏற்பட்டாலன்றி, குற்றவியல் சட்டங்கள் உண்மையில் குற்றங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் மிகவும் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தும்.

*நன்றி. பி.பி.சி.தமிழ்*

தொடர்கதை

# நின்னைச் சரணடைந்தேன்

கே.எஸ்.ஆனந்தன்




"ஹலோ ரவிசங்கர் உங்களைத் தேடி உங்கள் வீட்டுக்குப் போனோம். நீங்கள் உங்கள் அம்மாவின் வீட்டுக்குப் போயிருப்பதாக அங்கிள் கூறினார். நாங்கள் கேட்ட விசயம் பற்றி என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்"

வண்டியிலிருந்து இறங்கி வந்தவர் கேள்வியுடன் பேச்சை நிறுத்தினார்.

"அம்மாவுடன் கலந்து பேசித்தான் முடிவு சொல்வேன். உங்களுக்குத் தருவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. முன்பக்கத்தால் தந்தால் பின்னுக்கு இருக்கும் காணிக்குப் போவதற்குப் பாதை வேணும். அதுபற்றிப் பார்த்து விட்டுத்தான் எதையும் தீர்மானிக்க வேண்டும்" என்றான்.

"ரவி சோர்! எங்களுக்குப் பின்பக்க நிலத்தைத் தந்தாலும் பரவாயில்லை. போய் வருவதற்குப் பாதை விட்டால் சரி. நீங்கள் முகப்புக் காணியை வைத்திருக்கலாம். உங்களுக்கு ஒரு பிரச்சினையும் வராது. இதனால் யாருக்கும் எந்த இடைஞ்சலும் இல்லைத் தானே?"

"நீங்கள் சொல்லலாம். அக்கம் பக்கம் இருப்பவர்களுக்கு இது விளங்காது. கதைப்பார்கள். பெட்டிசன் போடுவார்கள். அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன். அது மட்டுமில்லை அம்மா இருக்கும்போது அவருடைய அனுமதி பெறாமல் நான் எதுவும் செய்யமாட்டேன். அம்மாவிடம் கேட்டுவிட்டு வருகிற புதன்கிழமை அளவில் உங்களுக்கு முடிவு சொல்லுறன்"

"ஓ.கே. தங்கியு மிஸ்ரர் ரவி! உங்களுக்கு பிரச்சினையில்லை என்றால் முழுக் காணியையும் நாங்கள் எடுக்கிறோம். விலையில் நீங்கள் கொஞ்சம் விட்டுக் கொடுக்கவேணும்" என்றார் மற்ற ஆள்.

"எனக்கு விளங்கவில்லை"

"விலைப் பிரச்சினையில் நீங்கள் கொஞ்சம் இறங்கினால் முழு நிலத்தையும் நாங்கள் எடுக்கலாம் என்றிருக்கிறம்"

"அப்படியா? சரி நீங்களே சொல்லுங்கள் எந்த அளவுக்கு எதிர்பார்க்கிறீர்கள்"

"வண் குறோஸ்? இதற்கு மேல் நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. எதற்கும் மதருடன் கதைத்து விட்டுச் சொல்லுங்கள். ஒரு கிழமைக்குள் செற்றில் பண்ணிவிடுறம்"

இருவரும் அவனுக்குக் கை கொடுத்து விட்டுச் சென்றனர். அவர்கள் சென்ற பின்னர் கதவைத் திறந்து கொண்டு ஆசனத்தில் வந்து அமர்ந்து வண்டியை ஸ்ராட் செய்தவன் சிரித்துக் கொண்டே, "வண்டியை மறித்ததும் நீ பயந்திட்டியா" என்றான்.

"நீங்கள் இருக்கும்போது நான் ஏன் பயப்பட வேணும்?" என்றாள் அவள்.

"அப்படியா? சில சமயம் நேற்றிரவு மிஸ்ரர் விஸ்வலிங்கத்துக்கு நடந்ததுபோல ஏதாவது நடந்தாலும் என்று நினைத்திருப்பியோ என்று தான் கேட்டன்"

"அப்படித்தான் நினைச்சன் ஆனால், பயப்படவில்லை"

"உண்மையாகவா?"

"உண்மையாய்த் தான் சொல்லுறான். அப்படிப் பயப்படுவதாயிருந்தால் என்னுடைய பதவியை ரிசைன் பண்ணிவிட்டு வீட்டோடு தான் இருந்திருப்பன்"

"குட்! நியாயமாய்! நீதியாய் மனிதாபிமான சிந்தனையுடன் நடந்தால் எதற்கும் பயப்படவேண்டிய அவசியமேயில்லை"

"அது சரி என்ன காணிப் பிரச்சினை என்று ஏதோ கதைத்தீர்கள்"

"அதுவா? அம்மாவுக்கு அவாவின் தகப்பன் கொடுத்த சீதனக் காணி ஐந்து பரப்பு கிடக்கின்றது. என்னுடைய அப்பாவும் சரி. நானும் சரி அந்தக் காணியில் எது வித பலனும் எடுத்ததில்லை. அது ஒரு கற்பூமி. அக்கம் பக்கம் வீடுகள் கிடையாது. சிலர் கல்லைத் தோண்டி எடுத்துவிட்டு தோட்டம் செய்கிறார்கள். எங்களுக்குப் போதிய தோட்டக் காணியிருப்பதால், அதில் ஒரு வீட்டைக் கட்டித் தங்கச்சியாக்களுக்குக் கொடுக்கலாம் என்று விட்டு விட்டோம். அவர்கள் வெளிநாட்டுக்குப் போனதால் வீடு தேவைப்படவில்லை. அந்தக் காணியைத்தான் இவங்கள் கேட்கிறாங்கள்"

"இவங்களுக்கு அந்தக் காணி ஏன் தேவைப்படுகிறது?"

"போக்குவரத்துப் பிரச்சினை இல்லை. அக்கம் பக்கம் ஆக்களில்லை. தொலைத் தொடர்புக் கோபுரம் கட்ட இடம் தேடித் திரியிறாங்கள். இவங்களுடையது மிகப் பிரபல்யமான நிறுவனம். இந்தக் காணி ஒரு சென்றர் பிளேஸ். அதனால் தான்"

"உங்களைப் பொறுத்தளவில் இந்தக் காணி பரப்பு என்ன விலை போகும்?"

"றோட்டுக் கரை என்பதால் யாரும் விரும்பி வாங்குவார்கள். ஐந்து இலட்சம் போகலாம்?"

"ஒரு கோடி தாறம் என்றானே"

"ஆமாம் அதில் என்ன சந்தேகம். ஆரம்பத்தில்நான் கொஞ்சம் டிமாண்ட் பண்ணினேன். வேறு யாராவது வாங்கினாலும் என்றுவிட்டு விலையைக் கூட்டிக் கேட்கிறாங்கள்"

"இந்தக் காசை எல்லாம் என்ன செய்யப் போறீங்கள்"

"அம்மாவின் காணி. பெண்பிள்ளைகள் இருவரும் தேவையில்லை என்று விட்டு விட்டார்கள். அப்புறம் யாருக்கு? எனக்கு இதில் எந்தத் தேவையும் கிடையாது. அப்பா, அம்மா பெயரில் ஒரு பாடசாலைக் கட்டடம் கட்டிக் கொடுக்கலாம் என்றிருக்கிறன். ஆனால், அம்மாவுடன் யோசித்துச் செய்யலாம்" என்றான்.

"நீங்கள் வியாபாரி இப்படித் தர்மம் செய்ய நினைக்கிறீர்களே. நீங்களே தனியாக ஒரு கிளையைத் திறந்து பிஸ்னஸ்ஸை டெவலப் செய்யக்கூடாதா?"

"பெரிய பதவியில் இருப்பவள். உனக்குக் கூடச் சாதாரண பெண்களைப் போன்ற சிந்தனை தானிருக்கு. நான் வியாபாரி என்றா என்னைக் கல்யாணம் செய்தாய்? எல்லாரும் அப்படித் தான் நினைச்சிருக்கினம். இல்லையா?"

"வியாபாரி இல்லையா? அப்படியானால் அமுதசுரபி?"

"பாபுவின் உடையது. நான் பங்காளி அவ்வளவு தான். வியாபார விடயம் எதிலும் ஈடுபடுவது கிடையாது. தோட்டம் ஏன் செய்யிறன்..? சாப்பிட வேணும். வியாபாரம் அப்படியில்லை. நான் அமுதசுரபியில் இருந்துகொண்டு பாபுவுக்குச் சொல்லுகின்ற அட்வைஸ் அதிக இலாபத்துக்கு ஆசைப்படக் கூடாது. தொழிலாளி வயிற்றில் அடிக்காமல் நல்ல சம்பளம் கொடுக்கனும் அப்படி நடந்தால் வியாபாரம் நன்கு நடக்கும் என்ற. ஒரே இடத்தில் மற்ற நிறுவனங்களை விட அமுதசுரபியின் வளர்ச்சி பெருகியது. பாபுவுக்கு ஒரே ஆச்சரியம். இன்று நான் விலகப் போறன் எண்டாலும் அவன் விடமாட்டான். அதில் கிடைக்கும் ஆதாயத்தில் ஒரு பங்கு நல்ல காரியங்களுக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று கூறிச் சிரித்தான்.

"என்னைப் பற்றி ஏதோ சொன்னீங்களே"

"நான் உன்னை உன்படிப்பை பதவியை வைத்து என்னவோ கற்பனையெல்லாம் செய்திருந்தேன். ஆனால் அதெல்லாம் வெறும் கற்பனையாகி விட்டதாக நினைக்கிறேன். அன்று எங்களுக்கு தேநீர் கொண்டு வந்தாளே ஒரு பெண் அவள் கிறிஸ்தவப் பெண் ஒரு பாதிரியாரால் தான் எனக்கு அறிமுகம் செய்து வைத்து வேலை கொடுக்கும் படி கேட்டார். சரி என்று பாபுவிடம் சொல்ல அவளை ரெலிபோன் பகுதியில் சேர்த்தோம். பாபு ஒரு நாள் ஏதோ கதையில் அவளிடம் சமயம் பற்றிக் கதைத்துள்ளார். அவள் எங்கள் நாயன்மார்களைப் பற்றிக் கூறியதுடன் 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்று திருமந்திரம்பாடி புலன்களைக் கட்டுப்படுத்தி நல்ல வழியில் வாழ்ந்ததால் எங்கள் உள்ளத்துள் இருக்கும் உயிரே இறைவன். அதற்கு மாறாக நாம் செயற்படக்கூடாது என்றுபாபுவை வாயடைக்கச் செய்து விட்டாள். இதை ஏன் கூறினேன் என்றால் மனம் தான் எதற்கும் காரணம். நாம் எல்லோரும் சாதாரணமான மனிதர்கள் தான் ஆனால் எம் உள்ளத்தில் உறைகின்ற இறைவனுக்கு பங்கமேற்படாமல் வாழவேண்டும்" என்றான்.

"என்னவோ நீங்கள் பேசுவது எதுவும் எனக்குப் புரிந்தும், புரியாமலிக்கின்றது" என்றாள் சுவேதா.

"அதுவும் நல்லதுக்குத்தான்" என்று கூறிச் சிரித்தான்.

❦ ❦ ❦

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது. படுக்கைக்குச் சென்று வழமைபோல படுத்தனர். அவன் பேசாமல் படுத்திருந்தான். இவ்வளவு நேரமும் சம்பந்த சம்பந்தமில்லாமல் கதைத்துக்கொண்டிருந்தவன் பேசாமல் படுத்திருந்தது அவளுக்கு என்னவோ போலிருந்தது. மற்றும் வேளைகளில் எதைக் கதைத்தாலும் கதை முடிந்த பின் அவனே அவளைக் கட்டியணைப்பான். அன்று பேசாமல் படுத்திருந்ததால் அவள் அவன் மீது கையைப் போட்டு அணைத்தாள். அடுத்த கணம் அவன் சொன்ன பதில் அவளைத் தூக்கிவாரிப் போட்டது.

❦ ❦ ❦

சாவு என்பது மனிதர்கள் அழைக்காமலே வரும் ஒரு விருந்தாளி. நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி ஒவ்வொருவரையும் அந்த விருந்தாளி அழைக்கத்தவறுவதில்லை. பலரும் சாவை விரும்புவதில்லை. தள்ளாமை வந்து எழுந்து நடக்க முடியாத நிலையிலும் சரி சாவு வரக்கூடாது என்று தான் நினைப்பார்கள். ஆனால், சாவு வரப்போகிறது என அறிந்தும் மகிழ்ச்சியோடு வாழ்பவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்களில் ஒருத்தி தான் அமுதசுரபியில் வரவேற்பாளராகவும் 'ரெலிபோனிஸ்ற்' ஆகவும் இருக்கும் கிறிஸ்தவப் பெண்மணியான ரோஸி.


பெயருக்கேற்ற நிறம். மெல்லிய சுருண்ட முடி. கருவிழிகள். அழகுத் தேவதையான அவள் கல்வியறிவிலும் நன்கு தேர்ச்சி பெற்றவள். கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் அநாதைப் பிள்ளையாக அங்குள்ள விடுதியில் வளர்ந்தவள். அவளைப் பார்த்தவர்கள் யாவரும் அவளை ஒரு முறையாவது திரும்பிப் பார்க்காது போகமாட்டார்கள். கவர்ச்சியான அழகுப் பதுமை. தேவாலயத்தில் பாதிரியாரின் அன்புக்குப் பாத்திரமான அழகு தேவதை. அநாதை இல்லத்தின் ஒளிவிழா நிகழ்வுக்காக அமுதசுரபியில் நிதிக்காகச் சென்ற இடத்தில் ரவிசங்கரைச் சந்திக்க நேர்ந்தது. அந்த ஒளிவிழா நிகழ்ச்சிக்கு அவளையும் சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தார் பாதிரியார். அங்கே சென்றபோது தான் அந்தப் பெண்ணின் பரிதாபகரமான வாழ்வு பற்றி அறிந்தான் ரவிசங்கர்.

"அது சரி பாதர் ஆரோக்கியமான பெண்ணாகக் காணப்படுகின்றாளே அப்புறம் எப்படி?"

"மிஸ்ரர் ரவி அவள் ஒரு கான்ஸர் பேர்சன் என்பது எனக்கும், அவளுக்கும், டாக்டர் திஸநயாக்காவுக்கும் மட்டுமே தெரிந்த விடயம். சாவின் வாசலில் நாள்களை எண்ணிக்கொண்டிருக்கும் ஓர் அபலை. அதைப் பற்றி அவள் சிந்திப்பதோ கவலைப்படுவதோ கிடையாது. கிளினிக்கு போவாள். மருந்து சாப்பிடுகறாள். மனதை ஆரோக்கியமாக வைத்திருக்கும் பக்குவத்தை ஆண்டவர் அவளுக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் கர்த்தர் எப்ப தேவையோ அப்ப என்னை எடுத்துக் கொள்ளட்டும். மகிழ்ச்சியுடன் போவதற்குச் சித்தமாகவுள்ளேன். நான் வளர்ந்த, வாழ்ந்த ஆச்சிரமத்துக்கு எதுவும் செய்யாமல் போய் விடுவேனோ என்ற கவலை தவிர வேறு எதுவும் கிடையாது. பாதர் உங்களுக்குத் தெரிந்த இடத்தில் ஓர் வேலை வாங்கித்தாருங்கள். நான் உழைத்த ஊதியத்தில் கொஞ்சமாவது ஆச்சிரமத்துக்குக் கொடுக்க விரும்புகின்றேன்" என்று மன்றாடுகிறாள். வேறு இடங்களுக்கு அனுப்ப நான் விரும்பவில்லை. உங்கள் அமுத சுரபியில் ஒரு வேலை போட்டுக்கொடுக்க முடியுமா?" என்றார். பாதர் முதலாம் திகதியிலிருந்து அனுப்பி வையுங்கள்" என்று கூறிவிட்டு வந்தான்.

(தொடரும்)

## நான் ஒரு மருத்துவர் ஆனால்...



- நான் மருத்துவரானால் நோயாளருக்கு நல்ல சிகிச்சை அளிப்பேன்.
- நோயாளருடன் அன்பாகப் பேசி, அவர்களது துன்பம் துடைப்பேன்.
- எல்லா நோயாளர்களையும் சமமாக மதித்து அவர்களது பிணி தீர்ப்பேன்.
- ஏழை நோயாளருக்கு இலவச சிகிச்சை அளிப்பேன்.
- மருத்துவ வசதிகள் குறைந்த பிரதேசங்களுக்குச் சென்று சேவையாற்றுவேன்.
- எனது கடமையை நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செய்வேன்.
- மருத்துவத்துறை மேலும் மேலும் முன்னேற முயற்சிப்பேன்.
- புதிய ஆய்வுகளை மேற்கொண்டு இதுவரை இருக்கின்ற, குணப்படுத்த முடியாத நோய்களுக்கு மருந்துகளைக் கண்டுபிடிக்கமுயற்சிப்பேன்.
- நோயற்ற வாழ்வு வாழும் வழிகளை மக்களுக்கு எடுத்து உரைப்பேன்.
- மக்களுக்குச் செய்யும் சேவையை, மகேஸ்வரனுக்கு(கடவுளுக்கு)செய்யும் சேவையாகக் கருதிச் செயற்படுவேன்.

## காரணம் புரிந்தது


ஸ்ராலினின் மறைவுக்குப் பிறகு குருசேவ் தலைமைப் பொறுப்புக்கு வந்திருந்த சமயம் அது. கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஸ்டாலினின் தவறான போக்குகளைக் கண்டித்து குருசேவ் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது கையெழுத்திடப்படாத துண்டுக் காகிதம் ஒன்று அவரிடம் அனுப்பப்பட்டது. அதில் "ஸ்டாலின் உயிரோடு இருந்த பொழுது இந்தக் குற்றச்சாட்டுக்களை நீங்கள் ஏன் சுட்டிக்காட்டவில்லை?"என்று கேட்கப்பட்டிருந்தது.




படித்துப் பார்த்த குருசேவ் "இந்தத் துண்டுக் காகிதத்தை அனுப்பியவர் யார்?கையை உயர்த்துங்கள்"என்றார்.
ஒருவருமே கையை உயர்த்தவில்லை. குருசேவ் சிரித்துக்கொண்டே சொன்னார்.
"இதை அனுப்பியவர் என்ன காரணத்தால் இப்போது கையை உயர்த்தாதிருக்கிறாரோ?அதே காரணத்துக்காகத்தான் அப்போது நானும் கேள்வி கேட்கவில்லை".



# முகம் காட்டாத தென்னாலிராமன்



தென்னாலிராமனின் நகைச்சுவைப் பேச்சுக்களும், கோமாளித்தனமான செய்கைகளும் அரசரையும் அவரது அரச சபையினரையும் மகிழ்வித்தன. ஆனால் ராஜகுரு தாத்தாத்சாரியார் போன்றவர்கள் தென்னாலிராமனுடன் அடிக்கடி முரண்பட்டுக் கோபமுற்றனர். மன்னரோ தென்னாலிராமனின் செய்கைகளைக் கண்டிக்கவில்லை. இதனால் அரசவையினர் தங்களது பணிகளைச் செய்யத் தவறினர். ஒருமுறை மன்னர் தென்னாலியின் மேல் கோபமுற்று "ராமா இவையெல்லாம் உன்னால்தான் நிகழ்ந்தன! உன் முகத்தை இன்றிலிருந்து நான் காண விரும்பவில்லை" எனக் கூறிவிட்டார்.
தென்னாலிக்கு இந்த வார்த்தைகள் கவலையளித்தன. ஆனாலும் மனதைத் தேற்றிக் கொண்டு மன்னரை வணங்கி விட்டுச் சென்றார்.அடுத்த நாள் மன்னன் அரசவையின் ஒரு முக்கியமான பேச்சு வார்த்தையின் இருந்தார். அப்போது தென்னாலிராமன் அங்கு உள்ளாரா? எனச் சுற்றிப்பார்த்தார் அரசர். அவர் அங்கு இல்லை. அவரது இருக்கை வெறுமையாக இருந்தது. அரசர் நிம்மதிப் பெருமூச்சுவிட்டார். "நல்லது தென்னாலி இங்கு இல்லை. அவனிருந்தால் என்னால் இந்தப் பேச்சு வார்தையை நடத்தியிருக்க முடியாது. அவன் இங்கு முகம் காட்டாமல் இருப்பதே இப்போதைக்கு நல்லது"என எண்ணினார்.
அந்தச்சமயம் அரசபையில் சிறு சலசலப்பும் முணுமுணுப்பும் உற்சாகமும் ஏற்பட்டது.
"என்ன நடக்கிறது? என மன்னன் சற்று முன்புறம் நகர்ந்து பார்த்தார். அப்போது தென்னாலிராமன் தனது இருக்கைக்கு நகர்ந்து செல்வதைக் கண்டார். ஆனால் அவரது தலையில் ஒரு மண் பானையைக் கவிழ்த்து முகத்தை மறைத்து இருந்தார். பார்ப்பதற்காக மட்டும் கண்ணருகில் இரண்டு துளைகள் போடப்பட்டிருந்தன. மற்றப்படி முகம் மறைந்திருந்தது.
"தென்னாலிராமா!நான் எவ்வளவு முறை எச்சரித்தும் கேட்காமல் நீ அரசவைக்கு வந்துள்ளாய். ஆனால் உனது இப்போதைய செய்கைக்கு என்ன அர்த்தம்?" என மன்னர் கேட்டார். "ஏதோ நகைச்சுவைதான் சொல்லப்போகிறார் தென்னாலிராமன்"என்று மன்னர் மனதுக்குள் சந்தோஷப்பட்டாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளாது கோபமாக இருந்தார்.
"மன்னரே!நான் அரசவையில் எந்த வித கோமாளித்தனமும் செய்யவில்லை. மாறாக உங்களது கட்டளையைக் கடைப்பிடிக்கிறேன்!" எனத் தெனாலிராமன் பதிலளித்தார்.
"நான் என்ன கட்டளை பிறப்பித்தேன்?"என்றார் மன்னர்.
"நீங்கள் எனது முகத்தைக் காண விரும்பவில்லை என்றுதான் கூறினீர்கள். ஆனால் உன் உருவத்தை அல்லவே!"என்று அவர் குறிப்பிட்டார்.
மன்னரின் கோபம் மறைந்தது. உடனே சிரித்துவிட்டார். "தென்னாலிராமன் என்னைத் தந்திரமாகச் சிரிக்கவைத்துவிட்டாய். சரி உன்னை மன்னிக்கிறேன் உனது இருக்கையில் உட்கார்"என்றார் மன்னர்.



## மாம்பழம்

குண்டுக் குண்டு மாம்பழம்
யாழ்ப்பாணத்து மாம்பழம்
வண்டு துளைத்த மாம்பழம்
உண்டால் இனிக்கும் மாம்பழம்

கன்னம் போலச் சிவப்பு
கண்ணைப் பறிக்கும் வனப்பு
கற்கண்டு போல இனிப்பு
கல்லாமணி மிகத் தித்திப்பு

தங்க நிறத்து மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமா?
வெட்டி வெட்டித் தின்னலாம்
பங்கு போட்டுக் கொள்ளலாம்



சி.அபிசரன்.
தரம் - 6பி,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



கே.அருண்,
தரம் - 1,
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை.



# 'கோலமாவு கோகிலா'

## தவிர்க்க முடியாத தமிழ்ப் படம்!

முழுக்க முழுக்க நகைச்சுவைப் பாணியில் தீவிரமான கதையைச் சொல்லியிருக்கும் படம்தான் 'கோலமாவு கோகிலா'. நுரையீரல் புற்றுநோயால் அவதிப்படும் தாயைக் காப்பாற்ற பல்வேறு வடிவங்களில் பாடுபடுபவள்தான் இந்தக் கோகிலா.

நடுத்தரக் குடும்பத்தின் இயலாமை அனைத்தையும் அருமையாகப் பதிவு செய்துள்ளார் இயக்குநர் நெல்சன். நயன்தாராவின் மணி மகுடத்தில் மற்றொரு வைரக்கல் இந்த 'கோலமாவு கோகிலா' என்கின்றனர் விமர்சகர்கள்.

நீங்கள் குருதித் தானம் செய்ய விரும்பினால்
அதை இங்கே செய்ய வேண்டாம்.
குருதி சேமிப்பு வங்கியில் செய்யுங்கள்



டீச்சர்: உன் பேரு என்ன?
மாணவி: பொன்னி
டீச்சர்: ஸ்வீட் நேம்



மாணவி: ஸ்வீட் நேம் இல்ல மிஸ்
ரைஸ் நேம்...

## கடவுள்

இன்று பசியால் வாடும்
மக்களுக்கு
உணவு கொடுக்காத கடவுள்...
நாளை சொர்க்கமே
கொடுத்தாலும்...
அப்படியொரு கடவுள்
தேவையில்லை!!!



## சிரிப்பும் சிந்தனையும்

## பெண்

காதலிக்கப் பெண்
வேண்டுமாம்!
கல்யாணத்துக்குப் பெண்
வேண்டுமாம்!
வாரிசு சுமக்கப் பெண்
வேண்டுமாம்!
வாரிசு மட்டும் ஆண்
வேண்டுமாம்!

## நேசி...

உன்னை நேசிக்கும் இதயத்தை நேசி!!
உன்னைக் கோபப்படுத்தும் இதயத்தை
அதிகமாக நேசி!!

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | | 4 | | |
| 4 | 5 | | 2 | | | 3 | | |
| 1 | | | | | | | | 2 |
| | 9 | | 7 | | 1 | | | |
| | | | 9 | | 6 | | | |
| | | | 4 | | 2 | | 6 | |
| 5 | | | | | | | | 8 |
| | | 2 | | | 9 | | 4 | 1 |
| | | 3 | | | | | 7 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 8 | 2 | 5 | 1 | 6 | 3 |
| 6 | 8 | 1 | 3 | 9 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 2 | 5 | 6 | 1 | 4 | 8 | 9 | 7 |
| 7 | 4 | 8 | 5 | 6 | 3 | 9 | 2 | 1 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 8 | 4 | 3 | 5 |
| 5 | 1 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 |
| 1 | 9 | 2 | 4 | 3 | 6 | 5 | 7 | 8 |
| 8 | 3 | 7 | 9 | 5 | 1 | 6 | 4 | 2 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 2 | 3 | 1 | 9 |

நேற்றைய விடை



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் அமைதி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் பின்பற்றுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**இடபம்:** சிறு செயல் கூட பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்க ஆர்வமுடன் பணிபுரிவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழில்,வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். கூடுதல் முயற்சியினால் தொழில் வியாபார மந்த நிலை சரியாகும். பயன் தராத பொருள் விலைக்கு வாங்க வேண்டாம்.

**சிங்கம்:** எதிர்பார்த்த செயலில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்ட உழைப்பால் தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**கன்னி:** ரசனையுடன் செயலில் ஈடுபடுவீர்கள். தங்களின் நற்செயலை குடும்பத்தினர் மனமுவந்து பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் சிரமம் விலகும்.

**துலாம்:** பணிகளை நிறைவேற்ற கூடுதல் முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். அரச உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கு கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் சீராகும்.

**தனுசு:** சமயோசித குணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** சொந்த உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள தாமதம் படிப்படியாகச் சீராகும்.


**கும்பம்:** பெரியவர்களின் சொற்களை மதிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.



## twitter

உன் நண்பனை
அளவோடு நேசி!
ஒரு நாள் அவன் உன்
எதிரியாகலாம்!
உன் எதிரியை நேசிக்கக்
கற்றுக்கொள்!
ஒரு நாள் அவன் உன்
நண்பனாகலாம்!



நிழலின் அருமை
வெயிலில் தெரியும்

## நாளை

**20.08.2018**

திங்கட்கிழமை

ஆவணி 04

திதி: நவமி மு.ப. 07 . 12 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ 01 .39 வரை
சுபநேரம்: 12.5 – 01.35 வரை
ராகுகாலம்: 07.35 – 09.05 வரை

## பள்ளிக்கூடம்



என்னிடம்
வரும் போதும்
அழுகிறார்கள்
என்னை விட்டுச் செல்லும்
போதும் அழுகிறார்கள்


இவர்களுக்கு நான்
எப்படி ஆறுதல்
சொல்லுவது!!



## இது புதுசு

பெண்களுக்கான சாறி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

# துளசியில் உள்ள மருத்துவக் குணங்கள்



ஒரு தாவரத்தை உண்ணும்போது, அதில் நோய் நீக்கும் தன்மை இருந்தால், அதை மூலிகை என்று கூறுகிறோம். அந்த மூலிகைகளில் உணவாக சமைத்து உண்டபிறகு மருந்தாகும் தாவரத்தை கீரை என்கிறோம். அதே போன்று சமைக்காமல் பச்சிலையாக மருந்தாகும் தாவரத்தை பச்சிலை மருந்து என்று குறிப்பிடுகிறோம்.

உண்ணாமல் தாவரத்தின் காற்றுபட்டால் நோய் நீங்கும் தாவரத்தை தெய்வ மூலிகை என்கிறோம். அப்படி எண்ணற்ற தாவரங்களின் காற்றுப்படுவதால் நோய் நீங்குவதோடு, அவை தரும் அதிகப்படியான உயிர்காற்றான பிராண வாயுவால் உயிரினங்கள் உயிர் வாழ முடிகிறது.

அத்தகைய தாவரங்களில் ஒன்றுதான் துளசி. இதன் காற்றுப்பட்டாலே நோய் நீங்கும். அதிகளவில் பிராணவாயுவை உண்டு பண்ணி தருவது துளசி. இந்தத்துளசியை வீடுகளில் வைத்து பெண்கள் அவற்றை சுற்றி வருவதை பார்க்க முடியும். அப்படி சுற்றி வரும்போது, பெண்களுக்கு அதிகளவு பிராணவாயு கிடைக்கிறது. இதனால் மூச்சுத் திணறல் உண்டாகாமலும், நோய் வராமலும் துளசி பாதுகாக்கிறது.

துளசியில், துளசி, கருந்துளசி, செந்துளசி, நாதுளசி என நான்கு வகைகள் உள்ளன. இவற்றில் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவக் குணங்கள் அடங்கியுள்ளன. இதை அப்படியே சாப்பிடக்கூடாது.

துளசியில் இனி துளசி என்றால் 21 இலைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். மூன்று மிளகு சேர்த்து மைய அரைக்க வேண்டும். பிறகு வெள்ளைத்துணியில் வைத்து பிழிந்து இர்ண்டு அல்லது மூன்று துளிகள் மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வாரம் ஒரு நாள் தொடர்ந்து காலையில் கொடுத்தால் நுரையீரல் மற்றும் அது சம்பந்தமான நோய்கள் வராது.

துளசி இலையில் ஒன்பது மிளகு வைத்து அரைத்து மூன்று நாள் சாப்பிட்டால் சொறி என்கிற தோல் ஒவ்வாமையைப் போக்கும்.

இதே இலையில் ஐந்து மிளகு வைத்து அரைத்து பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் காலத்தில் மூன்று, நான்கு, ஐந்தாவது நாள்களில் மூன்று நாள் சாப்பிட்டால் மாதகால வயிற்று வலியை போக்கும். இதையே திருமணமான பெண்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லையென்றால், மூன்று வீதம் மூன்று மாதங்களுக்கு கொடுத்தால் குழந்தை பிறக்கும் என்கிறார்கள்.

துளசியில் ஏழு மிளகு சேர்த்து நன்றாக அரைத்து சாறெடுத்து, அதை வெள்ளைத்துணியில் நனைத்து நீண்டநாள் ரணம், புண் ஆகியவற்றின் மீது தொடர்ந்து ஐந்து நாள் வைத்து வந்தால் புண் ஆறிவிடும்.

விஷக்கடிகளுக்கு ஒன்பது மிளகு வைத்து அரைத்து தினமும் காலை ஏழுநாள்களுக்கு வெறும் வயிற்றில் சாப்பிட்டால் விஷம் முறியும். தோல் வெடிப்பு, தலையில் பொடுகு, சொறி, தலைப்புண், மீசை மீது ரணம், தாடிப்புண் போன்றவை சரியாகும்.

துளசியுடன், இரண்டு மிளகு அளவு புதினா உப்பு, ஐந்து மிளகு ஆகியவற்றை அரைத்து, மூன்று நாளைக்கு கொடுத்தால் பக்கவாதம், ஜன்னி, ஈர சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

மேலும் துளசியுடன் ஐந்து மிளகு, மூன்று மிளகு அளவு மஞ்சள் தூளும் சேர்ந்து அரைத்து மூன்று நாள் காலையில் சாப்பிட்டால் மூச்சு பயிற்சி (யோகாசனம்) போன்றவைகளுக்கு உகந்தது. நீர் உடல் குறையும். இதே துளசியுடன் மூன்று மிளகு, போதிய கற்கண்டுடன் அரைத்து சாப்பிட்டால் உடல் எடை கூடும்.

இப்படி துளசியின் மருத்துவ குணங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதனால் தான் கோவில்களில் தீர்த்தத்துடன் துளசி உள்ளதோடு பல வீடுகளில் வணங்குவதற்குரியதாகவும் துளசி செடி விளங்குகிறது.

ஆனால், துளசியை மட்டும் தனியாக உட்கொள்வதால் பக்கவிளைவுகள் ஏற்படும். அதே வேளையில் உரிய உபபொருள்கள் சேர்த்து சாப்பிடும்போது அரிய மருந்தாக துளசி விளங்குகிறது.

## இஞ்சியை பயன்படுத்தும் முறை



காலையில் எழுந்ததும் ஒரு சிறிய துண்டு இஞ் சியை உட்கொண்டால் அல்லது இஞ்சிச்சாற்றைக் குடித்து வந்தால், குருதியில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். பசி உணர்வுகள் அதிகம் இல்லாதவர்கள், காலையில் சிறிது இஞ்சியை மென்று வந்தால், பசியுணர்வு அதிகரிக்கும்.

இஞ்சி சாறு, எலுமிச்சை சாறு, வெங்காயச் சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர ஆரம்ப கால ஆஸ்துமா, இரைப்பு, இருமல் குணமாகும்.

இஞ்சிச் சாறை பாலில் கலந்து பருகுவதன் மூலம் வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் குணமடைவதோடு உடம்பும் இளைக்கும். மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி என்பன நீங்க இஞ்சியை துவையல், பச்சடி செய்து சாப்பிட வேண்டும்.

ஒற்றைத் தலைவலி பிரச்சினை உள்ளவர்கள் சிறிது இஞ்சியை அரைத்து பேஸ்ட் செய்து, நீரில் கலந்து நெற்றியில் தடவ நல்ல பயன் கிடைக்கும்.

சிறிது இஞ்சியை நீரில் தட்டிப் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, அதில் எலுமிச்சைச் சாறு மற்றும் தேன் கலந்து குடித்து வந்தால், நெஞ்சுப் பகுதியில் தேங்கியுள்ள சளி பிரச்சினைக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.

இஞ்சிச் சாறை பாலில் கலந்து பருகுவதன் மூலம் வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் குணமடைவதோடு உடம்பும் இளைக்கும். மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி என்பன நீங்க இஞ்சியை துவையல், பச்சடி செய்து சாப்பிட வேண்டும்.

பல்வலி ஏற்படும் போது, இஞ்சித் துண்டை ஈறுகளில் மசாஜ் செய்யலாம் அல்லது இஞ்சியை நீரில் தட்டிப் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரால் வாயைக் கொப்பளிக்க வேண்டும்.

இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்த பின், நீரை எடுத்து, துளசி இலைச் சாறை சேர்த்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட வாய்வுத் தொல்லை நீங்கும்.

இஞ்சி குமட்டல் மற்றும் வாந்தி மற்றும் காலையில் ஏற்படும் சோர்வைப் போக்க இஞ்சியை வெறும் வயிற்றில் ஒரு துண்டு சாப்பிட்டால் நல்ல பயன் கிடைக்கும்.

இஞ்சியைத் தட்டி நீரில் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, அதில் தேன் கலந்து குடித்தால் செரிமானப் பிரச்சினைகள் நீங்கும். அதுவும் இதை காலையில் குடித்தால் செரிமான மண்டலம் சுத்தமாகி, அதன் செயற்பாடு அதிகரிக்கும்

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 700 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 90 | 120 | 100 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 140 | 100 |
| பாகல் | 280 | 160 | 120 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 130 |
| பூசணி | 40 | 80 | 80 | 60 |
| தக்காளி | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 400 | 400 | 200 | 400 |
| புடோல் | 110 | 70 | 80 | 100 |
| கோவா | 150 | 180 | 180 | 160 |
| வெண்டி | 100 | 50 | 40 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 240 | 280 |
| லீக்ஸ் | 200 | 150 | 120 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 200 | 180 | 300 |
| கரட் | 280 | 300 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 50 | 130 |

# வஞ்சம்

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைக் கண்ட புள்ளடியன் லபக் என்று அதைத் தன் அலகுகளில் கௌவிக் கொண்டது. கிட்ட வந்ததை விட்டுவிட்டால்...

மறுபடியும் அந்தப் புதுச் சேவல்லப் பற்றிய யோசனை. "காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போவதா?" ஆனால் "எங்கே வெள்ளைப் பேடை?" புள்ளடியன் சுற்றுமுற்றும் பார்த்தது. அதைக் காண வில்லை. உடனே புள்ளடியனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. தூ! என்ன பெண்குலம் இப்படியுமா? புள்ளடியன் வயதடைந்த உதவாக்கரையாகப் போய்விட்டதென்னமோ உண்மைதான். ஆனால். அதற்காக இப்படி நட்டாத்தில் கைவிட்டு நேற்று முளைத்த அற்பனோடு போகிறாள். எப்படியும்- ஆனால்-

புள்ளடியன் விரைவாக எழுந்து குப்பை மேட்டை நோக்கி ஓட்டம் பிடித்தது. வெள்ளைப் பேடும் புதுச் சேவலும் ஒன்றாக நின்று குப்பை கிளறின. ஓர் ஆனந்தம் காணப்பட்டது. அவள் எப்படியும் போகிறாள். ஆனால் புள்ளடியனுடைய அவமதிக்கப்பட்ட ஆண்மை காப்பாற்றப்பட வேண்டாமா? அதுவும் குலகோத்திரம் இல்லாத பதரினால்..

கணப் பொழுதில் மஞ்சள் நிறமாக இருந்த புள்ளடியனுடைய சூடுகள் குருதி ஏறிச் செக்கச் செவேல் என்று சிவந்துவிட்டன. அதன் கழுத்தில் இருந்த உரோமங்கள் குத்திட்டு நின்றன. சிறகுகளைப் பலமாக அடித்துக் கொண்டு ஒரு பயங்கரமான கொக்கரிப்போடு புதுச் சேவலை நோக்கிப் பாய்ந்தது. புதுச் சேவலும் தயாராகவே நின்றது. புள்ளடியன் விட்டுக் கொடுக்க வில்லை. "உயிர் போனால் போகட்டும்"

திடீரென்று புள்ளடியனுக்கு உலகம் எல்லாம் இருண்டு போனது போல் காணப்பட்டது. ஒன்றும் தெரியவில்லை. தன் கழுத்திலும் முகத்திலும் வேகமாக விழும் கூர்மையான கொத்துகள்தான் அதற்குத் தெரிந்தது. மறுகணம் அதை யாரோ கைகளால் தூக்கி எடுப்பது போல் இருந்தது. தன் எஜமானனான கமக்காரனின் கைகள்தான். எஜமானுடைய குரல் இரக்கத்தினால் குழைந்து இருந்தது.



"அட சீ! இந்தக் கிழட்டு வயதிலும் கூட உனக்குப் பொம்பிளை ஆசை விடவில்லையே! வீணாகச் சண்டை பிடிச்சு உன் கண்களைக் கெடுத்துவிட்டாயே. நீதான் என்ன செய்வாய் பாவம்! அவள் கொழுத்த குமரி... தூ!" ■

## சொற்சிலம்பம் போட்டி இல: 536

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | | | ■ |
| | 4 | ■ | 5 | | | 6 | |
| | ■ | 7 | ■ | | ■ | | ■ |
| | ■ | | ■ | 8 | 9 | | |
| ■ | 10 | | ■ | ■ | 11 | | |
| 12 | | | 13 | 14 | | ■ | ■ |
| | 15 | | | | | ■ | 16 |
| 17 | | ■ | | ■ | ■ | 18 | |

அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ...............................
..................................................................
கையொப்பம்:.........................................................

### இடமிருந்து வலம்

1. யாழ் போதனா வைத்தியசாலையில் அண்மையில் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்ட மாற்று அறுவைச் சிகிச்சை ஒன்று
4. பழம் என்பதற்கான ஒத்த சொல் (வலமிருந்து இடமாக)
5. கதவில் பொருத்தப்பட்டுள்ள உலோகத்தண்டு
8. புகைவண்டி நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புகை வண்டிக்கான அனுமதி தொடர்பான அமைப்பு
11. அழகு
17. உடம்பைச் சுத்தமாக்கு
18. புரிந்துகொள்ள முடியாத ஒன்று இறுதி எழுத்தை இழந்து நிற்கிறது

### மேலிருந்து கீழ்

1. தித்திப்பு
2. உயிர் உருவாக மூலமாக அமைவது தலைகீழாக மாறியுள்ளது
3. வாழ்வு
6. திமிங்கிலம் இந்த வகையைச் சேர்ந்தது
7. உயர்மட்ட நிர்வாக அலுவல்கள் நடைபெறும் இடம்
9. காவல் செய்பவர் (குழம்பியுள்ளது)
12. சுலபம்
13. பணத்தை பேச்சு வழக்கில் இப்படியும் அழைப்பர்
14. நீர் பாய்ந்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறுவழி
16. வயிற்றுப்போக்கு

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 534 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) மகத்துவம் (6)துதி (7)வாடி (8)பாதி (9) பரவுதல் (11)கபடம் (14) விதம் (15)அமரன் (16)மகன் (17)உறவினன் (18)கல (19)கும் (20)துறவறம்

**மேலிருந்து கீழ்**
(1) மதுரகவி (2)கதி (3)துவாரம் (4)வடிவு (5)மதி (8) பால் (9) படம் (10)தடிமன் (12)பதற்றம் (13)தன்னலம் (15)அகன்ற (16)மனது (17)உகு (18)கற

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.536**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட். இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (29.08.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 534 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ந.பொன்னம்பலம்,
உபதபாலகம்,
மல்லாகம்

**2 ஆம் பரிசு**
இ.செல்லம்மா,
மே/பா இராசநாயகம்,
சோறன்பற்று - பளை.

**3 ஆம் பரிசு**
வேலு - முருகமூர்த்தி,
திருக்கேதீஸ்வரம் கோயில்,
மன்னார்.

**4 ஆம் பரிசு**
ம.அருள்றாஜ்,
4ஆம் வட்டாரம்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
வே.சரண்ணியா,
இல.5,கச்சேரி ஒழுங்கை,
சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

யோ.பாஸ்கரன் சித்தார்த்தா,
வல்லை வீதி, தொட்டிலடி,
சங்கானை.

k.k.வேகாவனம்,
வித்தியானந்தாக் கல்லூரியடி,
முள்ளியவளை.

A.B.லியன்சி பிகிறாடோ,
வேளாங்கண்ணிவீதி,
பள்ளிமுனை, மன்னார்

சொற்சிலம்பம் போட்டி இல.536 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.09.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 534 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**19.08.2018 முதல் 25.08.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

புதன். குரு. சந்திரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். முன்னர் செய்த நற்செயலுக்கான நன்மை தேடி வரும். புதிய வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். பிள்ளைகளின் அறிவுத்திறன் வளர உங்களின் அனுபவங்களை பயன்படுத்துவீர்கள். சிரம சூழ்நிலை மதிநுட்பத்தால் சரியாகும். சத்தான உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் வருகை போட்டியை உருவாக்கும். இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் குடும்பச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற விடாமுயற்சி தேவை.

## இடபம்

ராகு. சூரியன். சுக்கிரனால் அதிக நன்மை கிடைக்கும். வாழ்வில் முன்னேற உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். ஆடம்பர பணச்செலவுகளை தவிர்க்கவும். தம்பி. தங்கையின் அன்பு நெகிழ்ச்சியை தரும். பணிகளில் இருந்த குளறுபடி சரியாகும். வெளியூர் பயணம் நன்மையை தரும். பிள்ளைகள் பெற்றோர் சொல் கேட்டு செயல்படுவர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். விருந்து. விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## மிதுனம்

சுக்கிரன், குரு. சந்திரன் நற்பலன் தருவர். வாழ்வின் வளர்ச்சிக்கான புதிய சூழ்நிலை உருவாகும். பணிகளை ஆர்வமுடன் செயல்படுத்துவீர்கள். பணவரவும். நற்பெயரும் அதிகரிக்கும். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை கேட்டு செயல்படுவர். தம்பி,தங்கை வாழ்வில் முன்னேற்றம் பெற உதவுவீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர் பாசத்துடன் உதவுவர். தொழிலில் உற்பத்தி. விற்பனை செழித்து லாபம் கூடும். பணியாளர்கள் அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். சலுகையும் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் தேர்ச்சி பெறுவர்.

## கடகம்

சுக்கிரன், சனீஸ்வரர். சந்திரன் அனுகூலபலன் தருவர். மனதில் இருந்த குழப்பம் தீரும். திட்டமிட்ட பணிகளை முழு முயற்சியுடன் நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர் பாசத்துடன் சொந்தம் பாராட்டுவர். பிள்ளைகள் விரும்பிய பொருள் தாராள பணச்செலவில் வாங்கித் தருவீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும். வழக்கில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் குடும்பநலன் பேணுவார். வீட்டில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். தொழில். வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் செழித்து வளரும். பணியாளர் பணி இலக்கு நிறைவேற்றி பாராட்டு பெறுவர். பெண்கள் கணவரின் அன்பில் நெகிழ்ச்சி அடைவர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர்.

## சிங்கம்

சுக்கிரன். செவ்வாய், கேது. சந்திரனால் நற்பலன் கிடைக்கும். உறவினர்களின் உதவி மனதில் உற்சாகம் தரும். பணிகளில் திறமை வெளிப்படும். புதிய வீடு. வாகனம் வாங்க சிலருக்கு யோகம் உண்டு. பிள்ளைகள் படிப்பு, செயல் திறனில் மேம்படுவர். பூர்வீகச் சொத்தில் பணவரவு கூடும். மனைவி உங்கள் எண்ணங்களை செயல்படுத்துவார். விருந்து. விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில். வியாபாரம் செழித்து வருமானம் சேமிப்பாகும். வெளியூர் பயணம் எதிர்பார்ப்பை நிறைவேற்றும். பணியாளர்கள் பணியிட சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேறுவர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் ராஜயோகபலன் தருவர். பொது இடங்களில் மதிப்பு உயரும். சூழ்நிலை உணர்ந்து சாதுர்ய புத்தியால் வெற்றி காண்பீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடந்தேறும். வீடு. வாகனத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். பிள்ளைகள் நற்செயல்களால் பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் சொல்லும். செயலும் சிறப்பாக இருக்கும். தொழில். வியாபாரத்தில் போட்டி குறைந்து ஆதாயம் கூடும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றுவர். பெண்கள் நேர்த்திக்கடன் நிறைவேறி இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் நன்கு படித்து பரிசும். பாராட்டுப் பெறுவர்.

## துலாம்

சூரியன். புதன், சுக்கிரன். சனீஸ்வரர் சிறப்பான பலன் வழங்குவர். நண்பர்களின் உதவி கிடைக்கும். மனம். செயலில் உற்சாகம் அதிகரிக்கும். வளர்ச்சியை நோக்கி வெற்றி நடை போடுவீர்கள். உடன்பிறந்தவர் அன்பு பாராட்டுவர். வீட்டில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். பிள்ளைகள் நல்வழியில் செயல்பட்டு பெற்றோர்க்கு பெருமை தேடித் தருவர். வழக்கு, விவகாரங்களில் விலகுவதால் பணவிரயத்தை தவிர்க்கலாம். மனைவி உங்களின் நல்ல குணங்களை பாராட்டுவார். தொழில், வியாபாரத்திற்கு தேவையான அரசு உதவியை பெறலாம். இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு நற்பெயர் காண்பர்.

## விருச்சிகம்

சுக்கிரன், செவ்வாய், கேது, சந்திரனால் வியத்தகு நன்மை ஏற்படும். கடின பணிகளையும் புதிய உத்தியால் எளிமையாக நிறைவேற்றுவீர்கள். இதனால் நற்பெயரும் பாராட்டும் வந்து சேரும். தாய்வழி உறவினர் எதிர்பார்ப்புடன் அணுகுவர். பிள்ளைகளின் தகுதி. திறமை மேம்பட தேவையானதை செய்வீர்கள். விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும். மனைவியின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். வெளியூர் பயணம் நன்மையை தரும். தொழில். வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். அதிக உழைப்பால் வருமானத்தை அதிகரிப்பீர்கள். பணியாளர்கள் பணியில் குளறுபடி வராமல் செயல்படவும்.

## தனுசு

புதன். குரு. சந்திரனால் நற்பலன் உண்டாகும். சமூக நிகழ்வுகள் மனதில் புதிய மாற்றங்களை உண்டாக்கும். பழகுபவர்களின் மனமறிந்து பேசி நற்பெயரை பாதுகாப்பீர்கள். வாகனப் பயணம் எளிதாக இருக்கும். பிள்ளைகளின் உடல்நலத்திற்கு சத்து நிறைந்த உணவு தருவீர்கள். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். விவகாரங்களில் இதமான அணுகுமுறையால் சுமுக தீர்வு கிடைக்கும். கூடுதல் பாசத்தால் மனைவியின் விருப்பத்திற்கு உரியவராகி விடுவீர்கள். தொழில். வியாபாரத்தில் போட்டி குறைந்து லாபம் கூடும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாணவர்கள் முயற்சியுடன் படித்து கல்வி வளர்ச்சி காண்பர்.

## மகரம்

சுக்கிரன். சந்திரன் நற்பலன் வழங்குவர். உங்கள் அறிவாற்றல் மேம்படும். செயல்களில் மனிதாபிமானம் இருக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் அதிகரிக்கும். பிள்ளைகள் மனதில் நம்பிக்கை வளர ஆலோசனை சொல்வீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் நற்செயலால் குடும்பத்தில் ஒற்றுமை பலம் பெறும். தொழிலில் இடையூறு விலகி உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி எளிதில் கிடைக்கும். பெண்கள்தாய்வீட்டுக்குதேவையான உதவியை வழங்குவர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சிபெறுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்கள் ராஜயோகபலன் தருவர். தடைபட்ட பணிகளும் கூட மளமளவென நிறைவேறும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். பெற்றோரின் அன்பும். ஆசியும் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். வழக்கு, விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவியின் ஆலோசனை குடும்ப ஒற்றுமைக்கு வழிவகுக்கும். புதிய உத்தியால் தொழிலில் உற்பத்தி. விற்பனை சீராக இருக்கும். தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் பின்பற்றவும். பெண்கள் உறவினரின் வீட்டு விஷயத்தில் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பரின் உதவி கிடைக்கும்.

## மீனம்

செவ்வாய், கேது, சந்திரன் அனுகூல பலன் தருவர். உழைப்பிற்கான பலன் முழு அளவில் வந்து சேரும். நிம்மதி நிறைந்த வாழ்வு உருவாகும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். பிள்ளைகளின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். ஒவ்வாத உணவு வகைகளை உண்ண வேண்டாம். குடும்பத்தில் ஒற்றுமையை கண்ணும் கருத்துமாக பேணவும். தொழிலில் வருமானம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் அறிந்து கொள்வர். பெண்கள் அக்கறையுடன் குடும்பநலன் பாதுகாத்திடுவர். மாணவர்கள் கூடுதல் நேரத்தை படிப்பிற்காக ஒதுக்குவர். பணியாளர்கள் தம்து கடமையை உணர்ந்து பணிபுரிவர்.

# நாயாற்றில் என்னதான் பிரச்சினை...?



கட்டுரை
த.செல்வராசா

முல்லைத்தீவு -முள்ளியாவளையைச் சேர்ந்த, வித்தியானந்தாக் கல்லூரியில் கல்வி கற்ற ஒருவர், 1982ஆம் ஆண்டளவில் செம்மலைக் கிராமத்துக்குச் செம்மலையைச் சேர்ந்த தர்மராஜா என்ற தனது சகபாடியுடன் சென்றிருக்கிறார். அன்று அந்தக் கிராமத்தில் ஒரு கலை விழா நடந்திருக்கிறது. ஊரவர்களின் தொகையை ஒத்த அளவில் சிங்கள மீனவர்களும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருக்கிறார்கள். செம்மலைத் தமிழ் இளைஞர்கள் சிங்கள பைலாப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

○○○○

நாயாறுப் பகுதியில் மீன் பிடிப்பவர்கள் செம்மலை, அளம்பில், கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னைமரவாடி, நாயாறு என முல்லைத்தீவுக் கடற்கரை ஓரங்களை நோக்கி ஒரு பருவ காலத்துக்கு வந்து, அங்கு வாடிகளை அமைத்துத் தற்காலிகமாகத் தங்கி மீன் பிடிக்கிறார்கள். இந்த மீன்பிடிப் பாடுகள் தமிழ் மீனவர்களுக்கே அதிகம் சொந்தமானவை. வெளியூர் மீனவர்களுக்கும் சிறியளவில் சொந்தமாக இருந்தன. இதில் இரண்டு விதமான மீன்பிடித்தல்கள் இடம் பெறுகின்றன. உள்ளூர்ச் சம்மாட்டிமார்களின் தொழிலுக்கு ஆதரவாக அங்கிருந்து வரும் வெளியூர் மீனவர்கள் கூலிக்கு மீன் பிடித்துக் கொடுத்துச் சம்பளம் வாங்கிச் செல்கிறார்கள். வெளியூர்ச் சம்மாட்டிகள் தாமே தொழிலாளிகளையும் வள்ளங்களையும் கொண்டு வந்து உள்ளூரவர்களின் பாடுகளைக் குத்தகைக்கு எடுத்து மீன் பிடிக்கிறார்கள். பின்னாள்களில் உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி வலுக் குறைவடையக் குறைவடைய உள்ளூரவர்களின் அநேக பாடுகள் வெளியூர்ச் சம்மாட்டியார்களுக்குத் தாரைவார்க்கப்பட்டன. அவர்களின் தொழில் களை கட்டியது. இப்போதுதான் பிரச்சினை ஆரம்பித்தது. வெளியூர் மீனவர்களிடமிருந்த இயந்திர தொழில்நுட்ப வசதிகள், அதிக முதலீடுகளைக் கொண்ட தொழில் நடவடிக்கைகள் இதர தொழில் வலுக்கள் என்பன மூலம் அவர்கள் அதிக வருமானத்தை ஈட்டி வந்தனர். இதில் எவ்வகையிலும் அவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாத உள்ளூர் மீனவர்களின் நிலை சிறியதொகை வருமானம் தருகின்ற தொழில் முறைமைகளுடன் தேய்வடைந்து சென்றது. பிரச்சினை கிளம்பியது.

### அடிப்படைக் காரணம் என்ன...?

அரசுதான் காரணம். கடந்த காலப் போரானது உள்ளூர் மீனவர்களை அதிகம் பாதித்திருந்தது. போரால் தமது உடமைகளை, தொழில் நடவடிக்கைகளை, வாழ்வதாரங்களை எனப் பலவற்றையும் இழந்து நலிவடைந்திருந்த உள்ளூர் மக்களுக்குரிய ஆரோக்கியமான, மீண்டெழும் சூழலை அரசு இன்னமும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அவர்களுக்குக் கைகொடுத்து, அவர்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுத்து, வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு துளியும் அக்கறை காட்டவில்லை. ஆனால், வெளியூர் மீனவர்களின் நிலை இப்படிப்பட்டதல்ல. போரால் பல தசாப்தங்களாக உள்ளூரவர்கள் பின்தங்கிக் கொண்டு போன காலங்களில் எல்லாம் வெளியூரவர்கள் மாறாக வளர்ச்சியே கண்டிருக்கிறார்கள். அவர்களிடம் இருக்கின்ற அதிக தொழில் முதல்கள், நவீன தொழில் முறைமைகள் எனப் பலவும் பின்தங்கிய உள்ளூரவர்களின் தசாப்தங்களுடன் ஒப்பிடுகையில், அத்தனை கால வளர்ச்சியை உடையன. குறித்த தொழிலில் இரண்டு பகுதியினரும் ஈடுபடுகின்ற போதும் வெளியூரவர்கள் அதிக வருமானத்தைப் பெறுவது இயல்பாகிவிடுகிறது. ஆனால், இவர்களுக்கு இருக்கின்ற அடிப்படை வலுவை உள்ளூரவர்களுக்கும் அளிக்கும்போது உள்ளூரவர்களும் வெளியூரவர்களுக்குச் சளைக்காமல் தொழிலில் வருமானம் ஈட்டியிருப்பர். பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

### பிரச்சினைகளின் திசை திருப்பல்

போரால் பாதிக்கப்பட்ட உள்ளூரவர்களை மேம்படுத்துவதில் அரசு காட்டாத அக்கறையே இங்கிருக்கின்ற மூலப் பிரச்சினை. ஆனால், உள்ளூர் - வெளியூர் மீனவர்கள் என்ற பதங்கள் நீக்கப்பட்டுப் பிரச்சினை சிங்களவர் - தமிழர் என்றாகிவிட்டது. இதைவிடவும் இன்னும்பல பின்னணிகள் பொருத்தப்பட்டுப்பிரச்சினைபூதாகாரமாக்கப்பட்டு வருகின்றது. திசைகள் பல நோக்கியும் பயணிக்கச்செய்யப்படுகிறது. தவிர பிரச்சினையின் மூலம் மறைக்கப்பட்டு விட்டது. மழுங்கடிக்கப்பட்டு வருகிறது. அல்லது அதைக் கண்டுபிடிக்கும் திறனற்று இருக்கிறார்கள்.

### உள்ளூர், வெளியூரவர்கள் என்று சுட்டுவதே பொருந்தும்

இங்குள்ள வெளியூர் வாடிக்காரர்களுக்கும், உள்ளூர் மீன்பிடிக் கிராமங்களுக்கும் எவ்வாறு உறவு ஏற்பட்டது என்பது பற்றிய பார்வை முக்கியமானது. மன்னார், புத்தளம், கற்பிட்டி, உடப்பு, சிலாபம், நீர்கொழும்புப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மீனவர்களாகவே இவர்கள் உணரப்படுகிறார்கள். புத்தளம், சிலாபம், நீர்கொழும்புப் பகுதி மீனவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாகவும், சிங்கள மொழியையும் பேசுபவர்களாகவும், நடுத்தர வயதினராகவும் இருந்தனர். பிற்காலத்தில் சிங்களவர்களாக மாறினர். இந்த மாற்றத்துக்கு இற்றைக்கு 50வருடகாலங்கள் தேவைப்பட்டிருக்கின்றன. இந்தச் சிங்களக் குடும்பங்களில் உள்ள வயதானவர்கள் தற்போதும் தமிழையே தமது அன்றாடப் பாவனை மொழியாகப் பேசி வருகின்றனர். ஆனால், தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சிங்களத்திலேயே உரையாடுகின்றனர். இந்த வயதானவர்கள் இறந்து போனதன்பின்னர் அந்தக் குடும்பங்களில் இருந்த பூர்வீகத் தமிழ் அடையாளமும் இல்லாது போய்விடலாம். தற்போது அவர்கள் சூடியிருக்கின்ற கிறிஸ்தவ மதப் பெயர்களான பீரிஸ், சில்வா போன்றன அவர்கள் சிங்களவரா, தமிழரா எனப் பிரித்தறிவதற்குப் போதுமானவையாக இல்லை. இதனால், இவர்களை இன ரீதியாகப் பிரிப்பது அவ்வளவு பொருத்தமான ஒன்றன்று. உள்ளூர் வெளியூரவர்கள் எனச் சுட்டுவதே தகும்.

### உள்ளூர் - வெளியூரவர்களின் ஊடாட்டம்

உடப்பைச் சேர்ந்த மக்கள் பேசுகின்ற தமிழ் மொழியின் சாயலை யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ, மலையகத்திலோ காண முடியாது. அதுவொரு பூர்வீக மக்களுக்குரிய தமிழ் என்பது இகுவாகப் புரியும். இந்த வரலாற்று ரீதியான மீன்பிடி தொடர்பில் இற்றை வரைப் புரிந்து கொள்ளக்கூடிய அடையாளம் உடப்பு மக்களிடம் உண்டு. இலங்கையின் மேற்குப் பாகத்தில் உள்ள ஒரேயொரு இந்து மீன்பிடிக் கிராமம் உடப்பு. இலங்கையின் கடற்கரை ஓரங்கள் எல்லாம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஆக்கிரமிப்பாளர்களின் கண்களில் பட்டுக் கிறிஸ்தவ மயமாகும்போது, இவர்கள் இந்துக்களாகத் தொடர்ந்தும் வாழ முடிவது ஆச்சரியமே. (உடப்பில் கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்படவில்லை. மக்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்படவுமில்லை)

உடப்பு அம்மன் கோவில் தீ மிதிப்பு, மிகவும் புராதனமானது. அந்தத் திருவிழாக்காலத்தில் மீன்பிடிப் படகுகள் அனைத்தும் கவிழ்த்துப் போடப்பட்டிருக்கும். அந்த ஊரில் யாருமே தொழிலுக்குப்போக மாட்டார்கள். அப்படி ஓர் ஒழுக்கமும் கடற்றொழில்சார் கற்பும் அந்த மக்களிடம் இன்றுவரைப் பேணப்பட்டுவருகிறது.

இந்த உடப்பு மக்கள் இந்துக்களாக இருப்பதால், சிலாபம் நகரில் உள்ள முன்னேஸ்வரம் (முனீஸ்வரம் என்றும் அழைப்பர்) கோவிலுடன் நெருங்கிய தொடர்புடையர்களாகவும் காணப்படுகின்றனர்.

புலம்பெயர்ந்து வருகின்ற பருவகால மீனவர்களுக்கும் பாரம்பரிய முல்லைத்தீவு ஊரவர்களுக்கும் இடையில் காதல், திருமணம் எனப் பலவும் நிகழ்ந்துள்ளன. 1983க்கும் பின்பான காலத்தில் இந்தத் தொடர்புகளைப் பேண முடியாத நிலை ஏற்பட்டது. 2010ஆம் ஆண்டின் பின்னர் இந்தத் தொடர்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

போர்க் காலத்திலும், போர் நிறைவுற்ற காலத்திலும்கூட முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து வெளியேறிய பலர் புத்தளம், சிலாபம், நீர் கொழும்புப் பகுதிகளில் வாழும் (வெளியூர்) தமது மீன்பிடி நண்பர்களின் பாதுகாப்பிலே தஞ்சம் புகுந்து வாழ்ந்து வந்தனர்.

தென்மேல் பருவப்பெயர்ச்சிக்காற்று வீசுகின்ற காலங்களில் இலங்கையின் மேற்குக் கடலில் (நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம்) மீன் பிடிபாடு குறைவடைகின்றது. அந்தப் பகுதி மீனவர்கள் முல்லைத்தீவுக் கரையை நோக்கி வருகின்றனர். வடகீழ்ப் பருவப் பெயர்ச்சி மழை தொடங்கியதும் இந்த மீனவர்கள் மீண்டும் தமது பூர்வீக இடங்களுக்குச் செல்வது வழமை. ஆரம்பத்தில் தமிழ் மக்களாகவே வெளியூரவர்கள் தமிழ்ப் பிரதேசத்துக்கு வந்து போனார்கள். பின்னரான போர் நெருக்கடி காரணமாக அந்த மக்கள் தாம் வாழந்த சூழலில் தம்மைச் சிங்களவர்களாக மாற்றிக் கொள்ளும் முயற்சியில் மிக வேகமாக இறங்கினர். தற்போது இவர்கள் 'சிங்கள மீனவர்கள்' என்று அழைக்கப்படும் நிலை ஏற்பட்டு விட்டது.

இத்தகைய தமிழர் விடயத்துக்கு மிகச் சிறந்த உதாரணமாக ஜெயராஜ் பெனாண்டே புள்ளேயைக் குறிப்பிடலாம் அவர் பாரம்பரியத் தமிழ்க் கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தமிழை நன்கு பேசுபவர். ஆனால், அவர்களுக்கு யாழ்ப்பாணத்திலோ மட்டக்களப்பிலோ மலையகத்திலோ உறவு இருந்ததாகத் தெரியவில்லை.

### வளங்களை அழித்து மீன்பிடித்தல்

குறித்த பருவகாலத்தில் அல்லது ஒருபோக மீன்பிடித் தொழிலுக்கு வருவோர் தாம் தூர தேசம் வந்து தங்கி நிற்கின்ற ஒவ்வொரு நாளையும் மிகவும் பயனுள்ளதாகப் பயன்படுத்திக் கொள்ள முனைகிறார்கள். தொழிலில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். இவர்களிடம் இருக்கும் உத்வேகம் உள்ளூரவர்களிடம் இருப்பதில்லை. இதனால்தான் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தியாவது அதிகமாக மீன்களை அள்ளிவிட வேண்டும் என வெளியூரவர்கள் நினைக்கின்றனர். இன்றைக்கு அவர்கள் அதிகளவு தொழிலில் ஈடுபடுகின்றமை கவனம் பெற்றதாலும்கூட அவ்விடத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவது பற்றிய பேச்சுக்கள் எழுந்திருக்கலாம். இதற்கு முன்பு உள்ளூர் - வெளியூர் தரப்புக்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருக்கவில்லை என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. இப்படியும்கூட பிரச்சினை யின் போக்கு இனத்தைத் தாண்டிப் பல கோணங்களுக்குச் சென்றிருக்கலாம்!

### தீ வைத்தமை பெரு நட்டமே

ஒரு நாள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடாது விட்டால்கூட வெளியூரவர்களுக்குப் பெரியளவில் நட்டம் ஏற்படுகின்றது. கொழும்புக்கு அனுப்பப்படும் மீனின் தொகையில் பாதிப்பு ஏற்பட்டுவிடும். இந்த நிலையில் போகத்துக்கு மீன்பிடிக்க வருவோர் உள்ளூரவர்களுக்குச் சொந்தமான வாடிகளைக் கொழுத்தினால், அங்கு ஓர் இயல்பு நிலை பாதிக்கப்படும் என்பதையும், தமது தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதையும் அவர்கள் நன்கு அறிவர். இந்த அடிப்படையில் பார்க்கும்போது தமிழருக்குச் சொந்தமான வாடிகளை அவர்கள் கொழுத்தியிருப்பார்களா? எனும் சந்தேகமும் ஏற்படாமல்லில்லை. இந்தத் தீ வைப்புக் காரணமாக உள்ளூரவர்களின் உடமைகள் அழிந்துபோயிருக்கின்றன. ஏலவே குறிப்பிட்டது போல வெளியூர்ச் சம்மாட்டிகளும் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். மூடை முடிச்சுக்களுடன் வெளியேறி இருக்கின்றனர். இத்தகைய ஒரு முரண்பாட்டை இரண்டு தரப்புக்களும் ஏற்படுத்திக் கொள்ள விரும்ப மாட்டார்கள் என்றும் தோன்றுகின்றது. முதலாளிகள் அரசியலுக்காகத் தமது தொழிலை அழிப்பதற்கு ஒருபோதும் முன்வர மாட்டார்கள். இந்த மீன்வாடி எரிப்பு விவகாரத்தில் எங்கோ ஒரு கை பிழைபாடு நடந்திருக்கிறது என்பது மட்டும் உண்மை. அது நிச்சயமாக மீன்பிடிச் சமூகத்தினரின் கை பிழைபாடாக இருக்க வாய்ப் பில்லை. ஏனெனில் இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டது உள்ளூர், வெளியூர்- சம்மாட்டிகளின் வருமானமும் சாதாரண மீனவர்களின் வாழ்வாதாரமும்தான்.

# நலிந்து போயிருக்கின்றவர்களிடம் சுரண்டும் வலுவான பெரும்பான்மை!

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் உள்ளூர் மீனவர்களின் வாடிகள் இனம் தெரியாதவர்களால் எரியூட்டப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டிருக்கின்றன. இதில் வலைகள், இயந்திரங்கள், படகுகள் எனப் பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. மூன்று படகுகள் முற்றாக எரியுண்டு சீரமைக்க முடியாத அளவுக்குச் சிதைந்துபோய்விட்டமையும் குறிப்பிடத்தக்கது.



பல காலங்களாகவே முல்லைத்தீவுக் கடற்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் அத்து மீறிப் புகுந்து சட்டவிரோதமான மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் சுருக்குவலை, லைலா வலை போன்ற தடைசெய்யப்பட்ட வலைகளை மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதுடன், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், 'டைனமெட்' வெடிகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தல் போன்ற தடைசெய்யப்பட்ட வழிமுறைகளையும் கையாண்டு வந்தனர். அவற்றின் காரணமாக முல்லைத்தீவு - நாயாறுப் பகுதிகளில் மீன் வளம் துரிதமாகக் குறைந்து வரும் நிலை ஏற்பட்டது. இப்படியிருக்க இதைக்கவனத்தில் கொள்ள வேண்டிய நீரியல் வளத் திணைக்களமானது தம்மிடம் நிலவுகின்ற ஆள்பற்றாக்குறையைக் காரணம்காட்டி இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருந்தது. இந்த நிலையில்தான் தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடிகளைத் தடுத்து நிறுத்தும்படி உள்ளூர் மீனவர்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர்.



### உள்ளூரவர்களின் போராட்டங்கள்

தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியைக் கண்டித்த உள்ளூர் மீனவர்களின் போராட்டமாது 10நாள்கள் வரைத் தொடர்ந்தது. மீன்பிடி நீர் வளத்துறை அமைச்சர் விஜிதமுனி சொய்சா முல்லைத்தீவுக்குப் பயணம் செய்து போராட்டம் நடத்திய மீனவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டார். உடனடியாகச் சட்டவிரோத மீன்பிடியைத் தடைசெய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி நீரியல் வளத் திணைக்களத்துக்கு அவர் ஆலோசனைகளை வழங்கியதுடன் தேவை ஏற்படின் கடற்படையினரின் உதவியைப் பெறுமாறும் கூறினார். இதையடுத்து முல்லைத்தீவு - நாயாறுப் பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 27வரையான வெளிமாவட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து எட்டுப் படகுகள் கைப்பற்றப்பட்டன. பின்பு அவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் விடுவிக்கப்பட்ட அன்றிரவு உள்ளூர் மீனவர்களின் வாடிகளும், படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் என்பனவும் தீக்கிரையாக்கப்பட்டன. பின்னர் தென்னிலங்கை மீனவர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### சாதாரணமாகக் கடந்துவிட முடியாது

மேற்குறித்த விடயத்தைச் சாதாரண ஒரு வன்முறைச் சம்பவமாகவோ அல்லது மீனவர்கள் மத்தியில் தொழில் போட்டி காரணமாக ஏற்பட்ட ஒரு முரண்பாடாகவோ பார்த்துவிட முடியாது. தமிழ் மக்கள் அதிகம் வாழும் ஒரு பிரதேசத்தில், தமிழ் மக்களுக்குச் சொந்தமான வாடிகளை எரியூட்டி, சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளன என்றால், இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் வலிமையான கரங்கள் உண்டு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அந்த வலிமையான கரங்கள் எவை என்பதைக் கடந்த காலங்களில் இந்தப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையிலேயே ஊகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

### பாதிப்பற்ற வகையில் ஊரவர்களின் தொழில் முன்னெடுப்பு

நாயாறுப் பகுதியானது நன்னீரும் கடல் நீரும் சங்கமிக்கும் ஒரு பகுதியாகும். நாட்டுக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித்தருகின்ற இறால், உயர் ரக நண்டு என்பன இங்கு அதிகம் விளைகின்றன.

இந்தப் பகுதியில் நிறைந்திருக்கின்ற குறித்த கடல் வளங்களானவை பாதிக்கப்படாத வகையிலேயே உள்ளூர் மக்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். போருக்கு முன்னைய காலப்பகுதியில் நீர்கொழும்பு, உடப்பு ஆகிய பகுதிகளிலிருந்து வரும் மீனவர்களும் வாடி அமைத்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். பருவகாலம் முடிந்ததும் அவர்கள், தமது சொந்த இடங்களுக்குத் திருப்பிம் போய்விடுவது வாடிக்கை. அதே வேளையில் நாயாற்றைச் சுற்றியுள்ள கிராமங்களான குமுளமுனை, அளம்பில், ஆறுமுகத்தான்குளம், செம்மலை ஆகிய பகுதிகளில் இருக்கின்ற மீனவர்களும் நாயாற்றுப் பகுதியில் தொழில்செய்து வந்தனர். பருவகாலம் முடிவுற்ற பின்பு அந்தப் பகுதிமக்கள் அங்கு நன்னீர் மீன்பிடியிலும் ஈடுபடுவதுண்டு. நாயாற்றை அண்மித்த கடல்பகுதிகள் மீன்கள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய சூழலையுடையவை. எனவே இந்தப் பகுதிகளை முல்லைக் கடலின் வள உற்பத்திப் பகுதி எனக் கொள்வதில் சந்தேகம் இருக்க முடியாது.

### தென்னிலங்கை மீனவர்களின் அத்த மீன்பிடி

தற்சமயம் தென்னிலங்கை மீனவர்கள் சுருக்கு வலை, லைலா வலை போன்றவற்றைக் குறித்த கடல் பகுதியில் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். வளர்ச்சி பெறாத சிறிய மீன்களும் அகப்படக்கூடிய சிறிய கண்கள் கொண்ட வலைகளை, தொழில் முறைகளை இவர்கள் பயன்படுத்துகின்றனர். இதனால் எதிர்காலத்தில் இந்தப் பகுதி மீன்களே இல்லாத பகுதியாக மாறும் அபாயத்துக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். அது மட்டுமன்றி ஒளி பாய்ச்சி மீன்பிடிப்பதன் மூலமும், டைனமெட் வெடிகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதன் மூலமும் மீன்கள் மட்டுமின்றி ஏனைய கடல்வாழ் உயிரினங்களும் அழிவடைகின்றன. உயிரினங்கள் கடலிலேயே இறந்து வீணாகின்றன. சட்டவிரோத வலைகளின் பாவனையால் சிறிய மீன்கள் அழிவடையும்போது பெரிய மீன்களுக்குப் போதிய உணவு கிடைக்காத நிலையில் அவைகளும் அழிவடைகின்றன. இத்தகைய பேரழிவை ஏற்படுத்தக் கூடிய வழிமுறைகளை வெளிமாவட்ட மீனவர்கள் பயன்படுத்துவது இயல்பாகவுள்ளது. குறுகிய காலத்தில் கூடுதல் வருமானத்தை ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டே அவர்கள் இவ்வாறாகச் செயற்படுகின்றனர். அவர்கள் பருவகாலம் முடிந்ததும் தங்கள் தொழிலை வேறு இடங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். மீண்டும் அடுத்த பருவகாலத்துக்கே இங்கு வருவார்கள். ஆனால் அவர்களின் அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக, வருடம் முழுவதும் அந்தக் கடல் பகுதியை நம்பி வாழும் உள்ளூர் மீனவர்கள் தங்கள் வருமானத்தை இழக்கின்றனர்.

### சிங்களக் குடியேற்றங்களும் சாத்தியம்

நாயாற்றுப் பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் நிரந்தர வீடுகளையும் அமைத்து வருகின்றனர். எதிர்காலத்தில் இவை மீனவர்களுக்கான வீட்டுத் திட்டங்களாக உருவாக்கப்பட்டு அந்தப் பிரதேசம் சிங்களமயப்படுத்தப்படும் வாய்ப்புகளும் உள்ளன. நாயாற்றின் அடுத்தடுத்த கிராமமான கொக்கிளாய் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

1960ஆம் ஆண்டை அண்மித்த காலப்பகுதியில் காலியைச் சேர்ந்த ஒரு சம்மாட்டி அங்கு வந்து வாடியமைத்துத் தொழில் செய்யத் தொடங்கினார். பருவகாலம் முடிந்ததும் அவர்கள் போய் விட்டு அடுத்த வருடம் வருவார்கள். கரைவலைத் தொழிலுக்குக் கூலிகளாக வந்த சிலர் காலப்போக்கில் அங்கேயே தங்கிப் பருவகாலம் முடிந்ததும் ஆற்று மீன்பிடியில் ஈடுபட்டனர். கொக்கிளாய் மக்களின் முதன்மைத் தொழில் விவசாயம் என்பதால் அவர்கள் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. சிறிது காலத்திலேயே மீனவர் குடியேற்றத்திட்டம் மூலம் அவர்களுக்கு அரசு வீடுகட்டிக்கொடுக்க, முகத்துவாரப் பகுதி அவர்களின் ஆதிக்கத்தில் வந்தது. கொக்கிளாய் மருத்துவமனைக்காணி, ஒரு தனியார் காணி என்பன ஆக்கிரமிக்கப்பட்டு ஏற்கனவே இருந்த பிள்ளையார் கோவிலை மறைத்து விகாரை ஒன்று எழுப்பப்பட்டு வருகிறது.



21பாடுகளைக் கொண்ட கொக்கிளாய் கடற்பகுதியில், 3பாடுகள் சிங்கள மீனவர்களுக்கும் 18பாடுகள் தமிழ் மீனவர்களுக்கும் உரிமையாயிருந்தன. தற்சமயம் பொரும்பாலான கடல்பாடுகளுக்கு தென்னிலங்கை மீனவர்கள் உரிமை கொண்டாடி வருகின்றனர். இது போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிலைத்தையும் நீர்வளத்தையும் ஆரோக்கியமாகவுள்ள வெளியூர் மீனவர்கள் அதிகளவில் பயன்படுத்தி விடுகின்ற ஒரு நீண்ட நிகழ்ச்சி நிரலின் சிறு பகுதியாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஆசிரியர்களின் கொடுப்பனவை அதிகரிக்க ஆலோசனை

பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வியமைச்சர் அகிலவிராஜ்காரியவசம் பரீட்சைகள் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஆசிரியர்களின் வசதிகள் அதிகரிக்கப்படுமே அன்றிக் குறைப்பதற்கு ஒருபோதும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லையென்றும் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

பாடசாலை விடுமுறைக் காலங்களில் ஆசிரியர்களின் சம்பளத்தை நிறுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள பொய்யான தகவல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கல்வித் துறைக்காக செயற்படுத்தியுள்ள பெரும் வேலைத்திட்டங்கள் ஊடாக கிடைக்கின்ற பிரதிபலன்கள் தொடர்பில் கோபமடைந்துள்ள குழுக்கள் கீழ்த்தரமான அரசியல் நிகழ்ச்சி நிரலை மேற்கொண்டுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## பன்னாட்டு சைட்டீஸ் மாநாடு அடுத்த வருடம் இலங்கையில்

கொழும்பு, ஒக 19

அழிவடையும் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதற்காக மக்களை விழிப்பூட்டும் நோக்கில் இடம்பெறும் சர்வதேச சைட்டீஸ் மாநாடு அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

மாநாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான சிறப்புக் கலந்துரையாடல் அரசதலைவரின் செயலாளர் உதய ஆர் செனவிரத்னவின் தலைமையில் நேற்றுமுன்தினம் அரசதலைவர் செயலகத்தில் இடம்பெற்றது.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இம்மாநாடு 2019ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 03ஆம் திகதி வரை கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

183 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், பன்னாட்டு அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 4 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் வனப்பிரதேசத்தை மேம்படுத்துவதற்கும், வன விலங்குகளையும் உயிர் பல்வகைமையைப் பாதுகாப்பதற்கும் பேண்தகு அபிவிருத்தி கொள்கைகளின் ஊடாகப் பெரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவரும் தருணத்தில் இம்மாநாடு இலங்கையில் இடம்பெறுவது சிறப்பு அம்சமாகும்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோரும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலர் அனுர திசாநாயக்க உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளும், பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## ஞானசாரருக்கு திங்கள் சத்திரசிகிச்சையாம்

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரருக்கு எதிர்வரும் திங்கட்கிழமை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது என்று சிறிஜயவர்த்தன மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் பிரபாத் வேரவத்த தெரிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் ஞானசார தேரருக்கு 6 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தண்டனை விதிக்கப்பட்ட நாளில் இருந்து ஞானசார தேரர் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற காரணத்துக்காக மருத்துமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றார். சிறுநீரகத்தில் உள்ள கல்லை அகற்றவே சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேரரின் இதயத்தில் பிரச்சினைகள் இருப்பது கண்டறியப்பட்டதால் சத்திரசிகிச்சைக்கான நாள் பின்தள்ளப்பட்டு வந்தது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

தற்போது அவருக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவர் பிரபாத் வேரவத்த தெரிவித்துள்ளார். (ற)














# ஒரு புயலின் ஓய்வு

விளையாட்டு

பிரகாஸ்

குரோசிய என்றொரு நாடுள்ளது என்பது இந்த வருடம்தான் பலருக்கும் தெரியவந்திருக்கும். அந்த நாட்டுக்கான ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்திருந்தது குரோசிய கால்பந்து அணி. ஆம், ரஷ்யாவில் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் குரோசிய அணி இறுதியாட்டம் வரை முன்னேறியதை அடுத்தே அந்த நாட்டின் பெயர் பலரால் உச்சரிக்கப்பட்டுள்ளது. அத்தகைய கால்பந்தாட்ட அணி தனது முக்கிய வீரர் ஒருவரை தற்போது இழந்துள்ளது. பெரும் தடுப்புச் சுவரை இழந்துள்ளது என்றால் அது சாலப் பொருத்தம்.

குரோசிய கால்பந்து அணி நான்கு வீரர்களில்தான் பெரும்பாலும் நிலைபெற்றுள்ளது. அணித் தலைவர் லூக்கா மோட்ரிச், இவான் ராகிடிக், இவான் பெர்சிக் மற்றும் மான்சுகிக் என்றவாறாக அமைகின்றனர் அந்த நால்வர். உலக அணிகளை அச்சுறுத்திய இந்த நால்வர் கூட்டணி தற்போது முடிவுக்கு வருகிறது. ஆம். மான்சுகிக் கடந்த வெள்ளிக்கிழமை ஓய்வை அறிவித்துள்ளார்.

ரஷ்ய கால்பந்துத் தொடரில் ஜொலித்த வீரர்களில் 32 வயதேயான மான்சுகிக்கும் ஒருவர். அவரை 'அணித் தலைவரின் வலது கை' என்றே கால்பந்தாட்ட உலகம் அழைத்து வருகிறது. லூக்கா மோட்ரிச் எடுக்கும் நகர்வுகளில் மான்சுகிக்கின் தலையீடும் கணிசமான அளவு இருக்கும். இருந்திருக்கிறது. அத்தகையதொரு வீரர் ஓய்வை அறிவித்துள்ளமையானது குரோசிய கால்பந்தாட்டத்துக்குப் பெரும் இழப்பே.

## எங்கேயும் நான் ராஜா



ஸ்பானிய ரென்னிஸ் வீரர் ரபேல் நடால், தான் தான் ரென்னிஸ் உலகின் நாயகன் என்பதை தற்போதும் அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தி வருகிறார். அனுபவ முதிர்ச்சி, உடல் தகுதி என்று அனைத்துமாகச் சேர்ந்து ஒரு பிடிபிடித்து வருகிறார் அவர்.

நடால் என்றதும் சட்டென நினைவுக்கு வருவது பிரென்சுக் கிண்ணம்தான். ஏனைய வீரர்கள் ஒரு தடவை அந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றவே தவமாய்த் தவமிருப்பார்கள். ஆனால் நடால் ஒன்றல்ல இரண்டல்ல இந்த வருடத்துடன் சேர்த்து பதினொரு தடவைகள் அந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். பிரான்ஸில் மட்டுமல்ல பிரிட்டன், இத்தாலி, சவூதி அரேபியா என்று அனைத்து நாடுகளினதும் ரென்னிஸ் தொடர்களில் ஆகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வந்த அவர் சமீபத்தில் கனடாவின் றொயேர்ஸ் கிண்ணத்தையும் கைப்பற்றியுள்ளார். எனின், எங்கேயும் அவர் ராஜாதானே!

## துடுப்பு இல்லாத படகு

துடுப்பு இல்லாத படகு என்ன செய்யும்? நீரோட்டம் எதுவோ அதன் ஆதிக்கத்துக்கு இசைந்து சென்றுவிடும். அதுதான் தற்போது ரியல் மட்ரிட் அணியின் நிலைப்பாடும்.

ரியல் மட்ரிட் அணியின் அரணாக, தூணாக செயற்பட்டு வந்தவர்தான் சி.ஆர். எனப்படும் கிறிஸ்ரியானோ றொனால்டோ. ரியல் மட்ரிட் அணி நிர்வாகத்துக்கும் றொனால்டோவுக்கும் இடையில் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையை அடுத்து அவர் அந்த அணியில் இருந்து விலகி இத்தாலியின் யுவென்டாஸுடன் ஒப்பந்தமானார். ரியல் மட்ரிட் அணியில் இருந்து றொனால்டோ விலகியமை அந்த அணிக்குப் பேரிழப்பு என்று வெளியில் இருந்து விமர்சித்தாலும் அணிக்குள் அந்தக் கருத்தை ஏற்பதற்குப் பலரும் மறுத்தனர். இதன் விளைவு அத்லெட்ரிகோ மட்ரிட் கழகத்திடம் ஸ்பானிய சுப்பக் கப் மகுடத்தை இழந்துள்ளது மட்ரிட். றொனால்டோ எனும் துடுப்பு இல்லாத ரியல் மட்ரிட் என்னும் படகு கரைசேர வாய்ப்பில்லை.






## கோக்லிக்காக...

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லியின் பெறுபேறு பரவலாக விமர்சிக்கப்படும் நிலையில் அவருக்காகக் குரல் கொடுத்துள்ளார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்கார.

"கோக்லி ஆகச் சிறந்த வீரர். அவருடைய அண்மைக்கால பெறுபேறுகளுடன் ஏனைய வீரர்களின் பெறுபேறுகளை ஒப்பிடுவது நியாயமானதல்ல" என்று குறிப்பிட்டுள்ளார் சங்கா.

## பாவம் பாண்டியா

இந்திய கிரிக்கெட் அணிக்குள் மிகக் குறுகிய காலத்துக்குள் புகழ்பெற்றவர் அதிரடி வீரர் பாண்டியா. ஆட்டத்தை முடிப்பதில் எதிர்கால டோனி, சகலதுறை பெறுபேற்றில் நிகழ்கால கபில்தேவ் என்றெல்லாம் போற்றப்பட்ட அவருக்கு அண்மைக்காலங்கள் சோதனைகள் நிறைந்தனவாக அமைந்துள்ளன.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை என்பதால் இந்திய அணியின் பெறுமதி மிக்க வீரராக வேகப்பந்துவீச்சும் துடுப்பாட்டமும் செய்யக்கூடிய வீரரான பாண்டியா இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அடுத்தடுத்து தடுமாற்றத்தையே வெளிப்படுத்துகிறார்.



இதையடுத்து அவரை ஒரு பிடிபிடித்து வருகின்றன சமூக வலைத்தளங்கள். அதிலும் இந்திய அணியின் முன்னாள் வீரர் ஹர்பஜன், "பாண்டியாவை சகலதுறை வீரர் என்று அழைப்பதை அனைவரும் நிறுத்த வேண்டும்'' என்று கோரிக்கை வைத்துள்ளார்.



**அறம் படத்தில் கதாநாயகி ஏற்றிருக்கும் ஆட்சியர் பாத்திரம் அவருக்கு ஓர் அதிகாரத்தைத் தருகிறது. ஆனால், இந்தப் படத்தில் எந்த பலமுமே இல்லாமல் வரும் நாயகி, நோயிலிருந்து தனது தாயைக் காப்பாற்ற முயல்கிறார், பலம் வாய்ந்த வில்லன்களை எதிர்கொள்கிறார், கொலை செய்கிறார். உண்மையில் இது நயன்தாராவுக்கு அடுத்த கட்டம். நயன்தாரா மட்டுமல்ல, படத்தில் வரும் பெண் பாத்திரங்கள் எல்லோருமே முக்கியமான முடிவுகளை எடுக்கிறார்கள். அந்த வகையில் இது ஒரு கவனிக்கத்தக்க படம்.**

அறம்' படத்துக்குப் பிறகு நாயகன் இல்லாமல் நயன்தாராவை மட்டும் மையப்புள்ளியாக வைத்து உருவாகியிருக்கும் மற்றொரு படம்தான். 'கோலமாவு கோகிலா'. நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தாயைக் காப்பாற்றுவதற்காக வெவ்வேறு வடிவங்களில் பாடுபடும் மகளின் கதையே 'கோலமாவு கோகிலா'.




### கதை

வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனை செய்கின்ற காட்சியறையில் வேலை பார்க்கும் நயன்தாரா மாதம் 14ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கும் ஓர் ஊழியர். அவருடைய தந்தை தானியங்கிப் பண இயந்திரப் பகுதிக் காவலாளியாகப் பணிபுரிகிறார். தங்கை கல்லூரியில் படிக்கிறார். "அட்ஜெஸ்ட்மெண்ட் செய்தால் மட்டுமே சம்பள உயர்வு கிடைக்கும்" என்று மேலாளர் கூற, அந்த வேலையை உதறித் தள்ளுகிறார் நயன்தாரா. 22ஆயிரம் சம்பளத்தில் 'மசாஜ்' நிலையத்துக்கு முகாமையாளராக வேலைக்குச் சேர்கிறார். அந்த நேரத்தில்தான் அம்மா சரண்யா பொன்வண்ணன் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது. வீட்டை அடகு வைப்பது, கடன் வாங்குவது என்று பல்வேறு முறைகளில் பணம் புரட்ட முயற்சி செய்தாலும் தாயின் சிகிச்சைக்கு வேண்டிய 15இலட்ச ரூபாயை ஏற்பாடு செய்ய முடியவில்லை. இந்தச் சூழலில் எதிர்பாராவிதமாகப் போதைப்பொருள் கடத்தும் இளைஞர் ஒருவரை நயன்தாரா இடித்து விட, அவர் பொலிசில் மாட்டிக்கொள்கிறார். அந்தக் கும்பல் நயனையும், அவர் தங்கையையும் துரத்திப் பிடிக்கிறது. அதற்குப் பிறகு என்ன ஆகிறது? நயன்தாராவால் தாயின் சிகிச்சைக்கான பணத்தைப் புரட்டித் தாயைக் காப்பாற்ற முடிகிறதா? போதைக் கடத்தல் கும்பலால் நயனுக்கு ஏற்படும் பிரச்சினைகள் என்ன? அவற்றிலிருந்து தப்பிக்க முடிந்ததா? போன்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.



நடுத்தரக் குடும்பத்தின் பணப் பிரச்சினையை, இயலாமையை, துணிச்சலை மிகச் சாதுர்யமாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் நெல்சன். கொஞ்சம் தவறினாலும் தடம் மாறிவிடக்கூடிய திரைக்கதைக்கு நகைச்சுவை இழையால் வலுச் சேர்த்து, குடும்பத்தை முன்னிறுத்தி அவர்கள் செய்யும் செயலைத் தர்க்க ரீதியாக நியாயப்படுத்துகிறார்.

### பாத்திரங்கள்

எதுவும் தெரியாத அப்பாவியாக இருக்கும் நயன்தாரா தனக்கு நிகழும் ஆபத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்று யோசித்தால், "அதெல்லாம் எனக்குச் சாதாரணமாக்கும்" என்று வியப்பளிக்கிறார். தன்னைப் புத்திசாலியாக வெளிப்படுத்தும் தருணங்களில் சபாஷ் பெறுகிறார். "நீங்க சுட்டால்தான் போவேன்" என்று வினோத்திடம் சொல்லி அங்கேயே நகராமல் உறுதி காட்டுவது, "எனக்குக் கொலை என்றால் பயம், நான் போகும்போது பின்னாடி சுடுங்க. அந்தச் சத்தத்தைக் கேட்டாப் போதும்" எனச் சொல்வதுமாக நயன் அப்பாவித்தனத்திலிருந்து அப்படியே மாறுவது ஆச்சரியம். இக்கட்டான சூழலில் தனது குடும்பத்தைக் காப்பாற்ற எடுத்துவைக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் செயலிலும் நயன் தடம் பதிக்கிறார்.

சரண்யா பொன்வண்ணன் நோயாளிக்குரிய அறிகுறிகளுடன், பாவப்பட்ட அம்மாவாக அடக்கி வாசித்திருக்கிறார். படுத்த படுக்கையாகக் கிடந்துகொண்டு பொலிசுக்கு அவர் காட்டும் வித்தை, அவரது நடிப்பு மனதில் பதிகிறது. அடியாளைப் புரட்டி எடுக்கும் முயற்சியிலும் தனது நடிப்பை அப்படியே அள்ளி வழங்குகிறார். பொறுப்புள்ள அப்பாவாகவும், தன்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்ற வருத்த வடுக்களைச் சுமந்து திரிபவராகவும் ஆர்.எஸ்.சிவாஜி பக்குவமான நடிப்பில் கவனிக்க வைக்கிறார்.

"எனக்கு இப்போ கல்யாண வயசுதான் வந்திருச்சு" என்று ரொமான்ஸில் பின்னி எடுக்கும் யோகி பாபு நகைச்சுவையில் அசர வைக்கிறார்.

கடைக்காரச் சிறுவன், நாக்குலை ஒருதலையாகக் காதலிக்கும் அன்பு ஆகியோருடனான கலந்துரையாடலில் சிரிக்க வைக்கிறார். ஸ்மைல் சேட்டை அன்பு, ஜாக்குலின், வினோத், ஹரீஷ் பெராடி, 'நான் கடவுள்' ராஜேந்திரன், சரவணன், நிஷா, சீனு மோகன் ஆகியோர் பொருத்தமான பாத்திர வார்ப்புகள்.



### ஒளிப்பதிவு, இசை...

சிவகுமார் விஜயனின் ஒளிப்பதிவும், அனிருத்தின் இசையும் படத்துக்குக் கூடுதல் பலம் சேர்க்கின்றன. கல்யாண வயசுப் பாடல் திரும்பக் கேட்க வைக்கிறது. பின்னணி இசை கதைக் களத்துக்கு மிகச் சரியாகப் பொருந்துகிறது.

படம் முழுக்க அழுது காவியம் படைக்காமல் சிரித்துக்கொண்டே தீவிரத்தன்மையை உணர்த்தி, உறவின் உன்னதம் பேசுகிறார் இயக்குநர் நெல்சன். பணத்தின் தேவையை, அது இல்லை என்று சொல்லும் உறவுகளை, நியாயமான முறையில் பணம் புரட்ட முடியாமல் தவிக்கும் தவிப்பை அப்படியே கனகச்சிதமாகத் திரையில் கொண்டு வந்திருக்கிறார்.

தடம் மாறும் நயன்தாரா தடுமாறாமல், எந்த இடத்திலும் சிக்கிக் கொள்ளாமல் தப்பிப்பது நம்பும்படியாக இல்லை.

கைபேசியில் போட்டுக்கொடுக்கும் கடத்தல் கும்பலைச் சேர்ந்த இளைஞரைக் கொலை செய்யும் வினோத்திடம், அருகில் இருக்கும் இன்னொரு இளைஞரையும் கொலை செய்யச் சொல்வது ஏன்? அந்த எல்லைக்கு நயன்தாரா எப்படித் தயாராகிறார், அவர் கதாபாத்திரம் எப்படிப் பரிமாணம் அடைகிறது என்பதை எங்கும் நியாயப்படுத்தவில்லை.

ஆனாலும், ஒரு நாயகனை முன்னிறுத்திக் கூடும் பத்துக்காகத் தான் செய்யும் வேலையை நியாயப்படுத்தும் கதாபாத்திரங்களுக்கு மத்தியில், நாயகியை மையப்படுத்தி பிரச்சினைக்கான தீர்வின் வேர்களைத் தேடிப் பயணிக்கச் செய்த 'கோலமாவு கோகிலா' ஒரு தடவை பார்க்கக்கூடிய படம்தான்.

பரவாயில்லை ரகம்

பழைய மாணவர் ஒன்றியம் – பிரான்ஸ்
கிளி / அக்கராயன் மகா வித்தியாலயம்
"தொடுவானம்" நிகழ்ச்சித்திட்ட ஆதரவில்
ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் நடாத்தும்
வட மாகாண அணிகளுக்கிடையிலான

# மாபெரும் மென்பந்தாட்டப் போட்டி 2018

அணிக்கு 11 பேர், 8 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்டது

காலம்-28.08.2018 முதல்
03.09.2018 வரை

**முதலாம் பரிசு - ரூபா 50.000**

**இரண்டாம் பரிசு - ரூபா 25.000**

வெற்றிக்கேடயங்கள்,பதக்கங்கள் இன்னும் பல
சாதனை பரிசில்களுடன்

22.08.2018 முன்னர் பதிவு செய்யும் அணிகள்
போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள்

பதிவுக்கான தொலைபேசி இலக்கங்கள்
0769191301,
0770281285

பதிவுக் கட்டணம் ரூபா 2000

ஸ்கந்தா விளையாட்டுக் கழகம்
ஸ்கந்தபுரம் . கிளிநொச்சி

தொடுவானம்

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா செல்லத்துரை (நாகதாழ்வு)



நாகதாழ்வு மன்னாரைப் பிறப்பிடமாகவும், குழந்தையேசுபுரம் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா செல்லத்துரை கடந்த (16.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் இராசமணி (ஆயுள் வேத வைத்தியர்) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புமனைவியும் பங்கராஸ் (ஜெயந்திநகர்), சுப்பிரமணியம் ஞானப்பு (மகேந்திரன் வைத்தியசாலை, திருவையாறு), அந்தோனிதாஸ் (அம்பாள் குளம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான நீற்றா, சுப்பிரமணியம் மற்றும் பவுலினா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற செல்வவதி, மற்றும் புஸ்பவதி, இரத்தினம் (ஆடர் இல்லம், மன்னார்), புனிதவதி, சந்திராவதி, செல்வரத்தினம் (துரை, வாழ்வுதயம், மன்னார்), காலஞ்சென்ற ஜீவரத்தினம் மற்றும் இராசரத்தினம்(அதிபர், பெரியபண்டிவிரிச்சான் ம. வி. மடு), இந்திராவதி(பிரான்ஸ்), நவரத்தினம் ( வசன்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மன்னார்), யோகரத்தினம்(யோகி, சிக்கன கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சொக்கலிங்கம், சறோஜாதேவி(ஓய்வு பெற்ற அதிபர்), சதாசிவம், பிரான்சிஸ், (ஓய்வு பெற்ற நடத்துனர், இ.போ.ச.மன்னார்), இன்பராணி, லோஜி, (ஆசிரியை, C.C.T.M.S வவுனியா), நஞ்சன் (பிரான்ஸ்), அகிலா (ஆசிரியை, மாவிலங்கேணி மன்னார்), கொலஸ்ரா (ஆசிரியை, விவேகானந்த வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புமாமியாரும், கீதா – பார்த்திபன், சிவா – யாழினி (பிரான்ஸ்), சுகந்தன்(பிரான்ஸ்), சுதர்ஷன் – கிருபா (மகாதேவாஆச்சிரமம், கிளிநொச்சி), ஜீவிதா (சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி), ஹம்சா(இயன் மருத்துவர், மன்னார்), துசி – சுதன்(கனடா), கிசாயினி, பிரியந்தா, சர்மிலன், சுபேசன் (உயர் தொழில்நுட்ப கல்லூரி, திருகோணமலை), அஜந்தா (ஆசிரியை, எருக்கலம்பிட்டி மகளிர் ம.ம.வி, மன்னார்), அபிசன், பிரதீக்ஷா, மிலோஜன், அயூஷா, றம்மியா (பிரான்ஸ்), கேசன், சத்ஜயன், தரணிகன், தாருசன், நியோன்சா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் விதுஷன், விஹாஷினி, கேசல், கேசித் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.08.2018) திங்கட்கிழமை பி.ப 02 மணிக்கு குழந்தை யேசு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தாழ்வுபாடு வீதி,
குழந்தையேசுபுரம், மன்னார்.
077 502 9923, 077 159 9649

தகவல்:
குடும்பத்தினர்.

### வாடகைக்கு உண்டு

கொக்குவில், K.K.S. வீதி, பிரதான வீதியில் மேல்மாடியில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை 8000/= முற்பணம் 150000/=
**தொடர்பு - 077473 8355**

### கல்லீரல் பாதிப்பிலிருந்து மீட்சி

கல்லீரல் கொழுப்பு, ஹெபடைடீஸ், மஞ்சள் காமாலை, கல்லீரல் இளைநார் வளர்ச்சியடைதல், கல்லீரல் புற்றுநோய் போன்ற கல்லீரல் பாதிப்புகள், மதுபானப்பாவனையினால் அல்லது வேறுகாரணிகளினால் உருவாகும் வைரஸ் தொற்று அல்லது வீக்கத்தினால் ஏற்படும்.

அறிகுறிகள் { கல்லீரலில் ஏற்படும் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாதல், நிறை குறைதல், நீர்க்கோவை, அரிப்பு

எமது நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உட்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட கல்லீரல் கலங்கள் மீளமைக்கப்படும்.



FAIR PHARMA (PVT) LTD

**Hotline:**
0777555600
0777708310
0777708330

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு, இல:60, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## வயோதிபத்...

யான பொருள்கள் நேற்றுக் கொள்ளையிடப்பட்டுள்ளன. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

ஊரெழு தெற்கு அம்மன் கோயிலடியில் உள்ள வீடொன்றுக்குள் அதிகாலை 4 மணியளவில் புகுந்த 4 பேர் கொண்ட கும்பல் அங்கிருந்த வயோதிபத் தம்பதிகளைக் கடுமையாகத் தாக்கியது. 6 பவுண் தங்கச் சங்கிலி மற்றும் வீட்டில் இருந்த பொருள்களைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

எ.தவலிங்கம் (வயது -77), த.மங்கையர்க்கரசி (வயது-71) ஆகியோரே காயங்களுக்குள்ளாகினர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ரு-8)

## Vacancy

யாழ். பல்கலைக்கழகத்தின் யாழ்./ கிளிநொச்சி வளாகங்களில் வேலை செய்வதற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.


1. **Quantity Surveyor**
2. **Draughtsman**

தகைமை உடையோர் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிவரக் கோவையினை 03 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

E-mail :- vacancynsc@gmail.com Fax :- 021 221 3663

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 . 12 . 1939



இறப்பு 30 . 08 . 2017

### அமரர் சின்னத்தம்பி செல்வராஜா (JP)


(அகில இலங்கை சமாதான நீதிவானும் சத்தியம் பெற்ற மொழிபெயர்ப்பாளரும்)

**திதி: 19.08.2018**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்ட ராஜாவே
உன்னைப் பிரிந்துநாம் - இங்கு
உளம் வருந்தும் வேளையிலும்
மீளாத்துயர் போக்க மீண்[illegible] வருவாயோ எம் உயிரே!
உந்தன் ஆத்மசாந்தி[illegible]ண்ணீர்த்துளிகளை
மலராக்கி அர்ச்சித்து
வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனை
வேண்டி நிற்கின்றோம்.

மனைவி
குடும்பத்தினர்.

(CS.13170)(13.17)



# மறைக்கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

இன்று வேகமாக வளர்ந்து எல்லாத்துறைகளையும் ஆக்கிரமித்து வரும் ஊடகத்துறையை எப்படி மறைக்கல்வித் துறைக்கும் பயன்படுத்தலாம், எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதே இன்று திரு அவையினதும் திருச்சபைத் தலைவர்களினதும் முக்கிய கேள்வியும் தேடலுமாகும். கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளை அறிவிக்கும் முதன்மையான கல்வியான மறைக்கல்விக்கு எப்படி ஊடகத்துறையை பயன்படுத்தலாம், எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியே இந்த ஆக்கம் அலுசுகிறது. இந்த ஆக்கம் அடுத்த வாரமும் தொடரும்.

**மறைக் கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு**

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை சி.சி.பி.ஐ மறைக் கல்விப் பணிக்குழுவானது 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மறைக் கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு எனும் தலைப்பில் தேசிய மறைக் கல்விக் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

இந்திய கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் மறைக் கல்விப் பணிக்குழு அதன் தலைவர் ஆயர் அந்தோனி டிவோட்டா தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஆயர் தோமஸ் மார்க்வான் வட கிழக்கு மண்டலத் தலைவர் ஆயர் ஜேம்ஸ்தோபில் பேராயர் யோண் மூலசீரா ஆகியோரின் தலைமையில் மறைக் கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு என்னும் மேற்படி தேசிய மறைக் கல்விக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

64 மறை மாவட்டங்களில் இருந்து வந்த 84 பேருக்கு கிளகாத்தியில் உள்ள வட கிழக்கு மறை மாவட்டங்களின் சமூக அமைப்பில் மறைக் கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு என்னும் தலைப்பில் மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது. மேற்படி அமைப்பின் தேசிய செயலர் லோறன்ஸ் குலாஸ் அடிகளாரால் ஒப்பமிடப்பட்டு தமிழக மறைக்கல்விப் பணிக்குழுவால் வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கையை வேலூரைச் சேர்ந்த ஏ.யோன் பற்றிக்ஸ் அடிகளார் தமிழாக்கம் செய்துள்ளார். இந்தக் கருத்தரங்கின் இறுதிப் பிரசுரம் நவம்பர் டிசெம்பர் 2014 தோழன் இதழில் 56 முதல் 61ஆம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டது. இதன் சுருக்கத்தினை கீழே நோக்குவோம்.

**மறைக் கல்வி என்பது ஓர் உறவு நிலை**

மறைக் கல்வி என்பது ஓர் உறவு நிலையாகும். திருச்சபை சமூகம் மறைக் கல்வியாளர் மற்றும் மறைக் கல்வி கற்பிக்கப்படுபவர் என்னும் இரு உலகங்களுக்கு இடையே நடைபெறும் பரிமாற்றம் ஆகும்.

மறைக் கல்வி கற்பிக்கப்படுபவர் மறைக் கல்வியில் ஒரு பொருளாக அல்ல மாறாக அதன் வளர்ச்சியில் உயிர்த்துடிப்புள்ள ஆளாகச் செயற்படுபவர். மறைக் கல்வியாளர் திருமுழுக்கு யோவானைப் போல "வழி உண்மை மற்றும் வாழ்வை" சுட்டிக் காட்டுகின்ற இறைவாக்குப் பணியைப் பெற்றுள்ளார்.


**மறைக்கல்வியாளர்கள் இறைவாக்கினருக்குரிய இலக்கும் கடமையும் உடைய இறைவாக்கினர்கள்**

மறைக்கல்வியாளர்கள் ஊடகவியலாளர்கள் அல்லர். மாறாக இறைவாக்கினருக்குரிய இலக்கும் கடமையும் உடைய இறைவாக்கினரே. அவர்கள் நவீன ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களாக இருப்பது தேவையானது. ஆனாலும் கருத்துக்களைப் பரப்புவது என்ற ஒன்று மட்டுமே முக்கியமானது அல்ல மாறாக இறை நம்பிக்கையை வாழ்வது மிகமிக முக்கியமானது.

'இறை நம்பிக்கையின் உள்ளீடு என்பது ஒன்று' அது அளிக்கப்படும் வழிமுறை என்பது வேறு ஒன்று. ஏனெனில் எமது திருமறைக் கோட்பாடுகளில் பாதுகாக்கப்படும் உண்மைகள் பல்வேறு வெளிப்படுத்தும் முறைகளில் அதே உள் இயல்புகளையும் பொருளையும் பாதுகாக்க முடியும்.

**மறைக்கல்வியாளர்கள் தொடர்பு சாதனங்களில் திறனை வளர்த்துக் கொள்வது அவசியம்**

மறைக்கல்வி எப்போதும் அறிவிப்பது சம்பந்தப்பட்டதாய் இருந்து வந்திருந்தாலும் அது அறிவிப்பது போன்றது மட்டுமல்ல உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் சான்று போதித்தல் - கற்பித்தல் - அருள் அடையாளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற பல உருவகங்களை இறை நம்பிக்கையை அறிவிப்பதை எடுத்துரைக்கின்றது. மறைக் கல்வியில் கற்பனை செய்வது தேவையாய் இருக்கின்றது. மறைக் கல்வியாளாகள் தங்களின் மறைக் கல்வியை இன்று மீண்டும் கற்பனை செய்து பார்ப்பதும் நவீன ஊடகங்கள் வழியாக அதன் ஆர்வத்தை மீண்டும் கண்டு பிடிப்பதும் அதன் தாக்கத்தை மீண்டும் நிலைநிறுத்துவதும் அவசியம் ஆகின்றது. இந்தக் குறிக்கோளை அடையும் மறைக்கல்வியாளர்கள் நற்செய்தியின் பணியில் பயன்படுத்தும் நோக்குடன் தொடர்பு சாதனங்கள் அல்லது அறிவிப்பு முறைகளில் தங்களின் திறனை வளர்த்துக் கொள்வது அவசியம் ஆகின்றது.




**மறைக்கல்வியாளர்கள் ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும்**

சமயம் மற்றும் அறநெறி சார்ந்த மன நிலைகளிலும் அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களிலும் கல்வி பயிலும் ஊடகங்களின் தாக்கத்தால் தொடர்புபடாத மனிதர்கள் இந்த உலகில் எங்கும் இல்லை.

அருவமான கருத்துக்கள் சிந்தனைகளை விட விம்பங்களினால் அதிகம் உந்தப்படுகின்ற ஓர் உலகில் நாம் வாழ்கின்றோம். நற்செய்திகளில் எல்லாத் திசைகளிலும் இறை நம்பிக்கையின் விதைகளைத் தெளிக்கின்ற உழவரைப் போல (மாற்கு 4 :13) மறைக்கல்வியாளர் பாரம்பரிய மற்றும் தற்காலிக ஊடகங்களை கிறிஸ்துவின் நற்செய்தியை எல்லோருக்கும் கொண்டு செல்லப் பயன்படுத்த



வேண்டும். விபிலியக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட இந்த ஊடகம் இன்றைய பின் நவீனத்துக் காலத்திற்கு இன்னும் பொருத்தமுள்ளதாக இருக்கிறது.

பாரம்பரியமான ஊடகம் அல்லது பின்மம் அல்லாத ஊடகம் எமது கலாசாரத்தின் அங்கமாகச் செயற்படுகின்றது. இதை ஒரு தலைமுறையில் இருந்து மற்றுமொரு தலைமுறைக்கு பாரம்பரியத்தை கடத்திச் செல்லும் திறன் மிகு வழிகள். பாரம்பரிய ஊடகம் மக்களின் வாழ்வியல் முறை பேச்சு இசை நடனம் உடை செயல்கள் ஆகியவற்றின் காட்சிகளைத் தந்து மக்களைப் பற்றி படம் பிடித்துக் காட்டுகிறது. இது மக்களின் மிகப் பழமையான ஆழப்படிந்த நம்பிக்கைகள் பழக்கங்கள் மற்றும் சடங்கு முறைகள் ஆகியவற்றில் இருந்து உருவாக்கப்பட்டவை. பல காலங்களாக சமூகத்தின் தொடர்புக் கருவிகளாக பயன்பட்ட இந்தச சுய முறைகள் இன்று மறைக்கல்வியாளருக்கு மிகவும் பயன்படக் கூடியது. அவை கற்பிக்கும் முறைகளின் பயன்பாட்டையும் அர்த்தத்தையும் வெளிப்படுத்துகின்றது. மேலும் அவை சாதாரண மக்களுக்கு நிலையான உண்மைகளை அறிவிக்கின்றன.

> இறை நம்பிக்கையின் உள்ளீட்டை அறிவிப்பது திருச்சபையின் தலையாய பணி ஆகும். பயன்படுத்துவோருக்கு எளிதாகவும் விரைவாகவும் உடனடியாகவும் அகன்ற தொடர்பு சாத்தியமாவதால் சமூக ஊடகம் இதற்கு திறன் மிகு ஒரு வழியாகும்.

இன்று தற்கால ஊடகம் கருத்துக்களைப் பரவச் செய்து உலக கலாசாரத்தை படைக்கும் ஆசானைப் போன்றது. இது பாரம்பரிய மதிப்பீடுகளை நவீன உலக மய மதிப்பீடுகளால் இடமாற்றி விடுகின்றது. இத்தகைய ஊடகங்கள் குறிப்பாக எண்ணிலக்க ஊடகம் அவற்றின் ஜனநாயகப் படுத்தும் தன்மைகள் நிலப் பரப்புக்களை ஆளுகைக்கு உட்படுத்தல் மற்றும் எளிதில் அடையக் கூடிய தகவல்கள் ஆகிய மூன்று தன்மைகளால் மறைக்கல்வியாளருக்கு பெரும் சவாலாக அமையும். மறைக்கல்வியாளர் இந்தப் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டு அச்சப்படவும் முடியாது. எமது மறைக் கல்விப் பணியில் அவற்றின் தாக்கத்தை அவர்கள் கண்டு கொள்ளாமல் இருக்கவும் முடியாது.

**ஊடகம் என்பது மறைக்கல்வி அளிக்கும் ஒரு வழி**

ஊடகம் மறைக்கல்வி அளிக்கும் ஒரு வழியாகும். அதை நன்றாய்ச் செய்வது ஒருவரை வல்லுநராக்கும். எனவே மறைக்கல்வியில் தேர்ச்சியும் செயல்திறமையும் கொண்டிருக்க எம்மை அழைக்கிறது. சமூக ஊடகம் என்பது உண்மை போல கொள்ளத்தக்க சமூகத் தொடர்புகளில் மக்கள் ஈடுபடும் நவீன காலத்தின் தேவை ஆகும். இது அடிப்படையில் உள்ளீடு சமூகம் அல்லது குழுமம் அல்லது தொடர்புநிலை ஆகிய மூன்று முக்கிய காரணங்கள் மீது கட்டப்பட்டுள்ளது. இதன் உள்ளீடு வலைத்தளத் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டு உண்மை போல தோன்றும்படி கட்டப்பட்டுள்ள சமூகம் அல்லது குழுமத்திற்கு அனுப்பப்படுகிறது அல்லது அளிக்கப்படுகிறது. பெருமளவிலான உள்ளீடு அகன்று பரவும் தன்மை பயன்பாட்டுத் தன்மை உடனடியாகக் கிடைப்பது மற்றும் சேர்க்க நீக்க வாய்ப்பு ஆகியவை சமூக ஊடகங்களின் பண்புகள் ஆகும்.

இறை நம்பிக்கையின் உள்ளீட்டை அறிவிப்பது திருச்சபையின் தலையாய பணி ஆகும். பயன்படுத்துவோருக்கு எளிதாகவும் விரைவாகவும் உடனடியாகவும் அகன்ற தொடர்பு சாத்தியமாவதால் சமூக ஊடகம் இதற்கு திறன் மிகு ஒரு வழியாகும். மறைக்கல்வி அளித்தலில் பல வகைகளான மறைக்கல்விப் போதனை ஒப்புரவு மற்றும் அமைதிக்கான மறைக்கல்வி விடுதலையின் மறைக்கல்வி மானிட முன்னேற்றம் ஆகிய அனைத்திலும் சமூக ஊடகம் பயன் படுத்தப்படலாம். ஆனால் இறை நம்பிக்கையின் உள்ளீட்டை அறிவிப்பது தொழில்நுட்பத்திலும் அதிவேக கலாசாரத்திலும் கத்தோலிக்க நம்பிக்கையைப் பற்றிய உறுதியற்ற தகவல்கள் விரும்பம் போல சிதைத்தல் ஆகியவற்றில் மறைந்து தொலைந்துவிடக் கூடாது.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3071 திகதி: 2018.08.18 பச்சை
04 29 36 40 K 54 37,857,065/-

அதி கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 346
சீட்டிழுப்புத் திகதி 2018.08.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,229,075/-
வெற்றி இலக்கங்கள்
18 46 55 62 O

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த ஆயிலியம் 2ஆம் பாதம் கிரகபாவம் 30 உடைய ஆஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்த படித்த அழகான விவாகரத்தான மணமகனிற்கு படித்த நற்குணம் உடைய அழகான வெளிநாடுகளில் கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மன், ஆஸ்திரேலியா, இத்தாலி, டென்மார்க், நோர்வே, சுவீடன், அமெரிக்கா போன்ற நாடுகளில் P.R. உள்ள மணமகள் தேவை. 1983 இல் பிறந்த பூசம் 2ஆம் பாதம் கிரகபாவம் 25 உடைய (றோமன் கத்தோலிக்கம்) விவாகரத்து பெற்ற மணமகனிற்கு மணமகள் தேவை.

**வாணி சர்வதேச திருமண சேவை நிலையம் (VimB) அனுமதிக்கு உட்பட்டது.**

**077 522 1132, 077 285 4626, 076 963 8046** VE/I/33

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 170
சீட்டிழுப்பு திகதி ▸ 18.08.2018 சிவப்பு
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 11 14 45
விதி எண் 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10, 763, 284/=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| அம்பாறை | 8976746 |
| கம்பஹா | 9197650 |
| யாழ்ப்பாணம் | 4416177 |
| புத்தளம் | 2045089 |
| கேகாலை | 8373134 |

2018.08.23 ம் திகதி வியாழக் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

## மரண அறிவித்தல்

### திருமதி புனிதவதி யோகநாதன்



சாவகச்சேரி, சங்கத்தானை, சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி யோகநாதன் கடந்த (16.08.2018) வியாழக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி நல்லம்மா - தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் (வேலுப்பிள்ளை) - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற யோகநாதனின் அன்பு மனைவியும் கமலாவதி, மீனாட்சிப்பிள்ளை, ... ஆகியோரின் அன்புச் சகோதரியும் ... சிவராசா (பேரா மகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சஜீவன், கிஷான், அனு ... ஆரியன், லாவண்யா ... ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2018) ... பிள்ளையார் கோவிலடி, மீசாலை ... பி.ப. ஒரு மணிக்கு பூதவுடல் ... இந்து மயானத்திற்கு ... இத்தகவலை உற்றார், உறவினர், ... ஏற்றுக்கொள்ளவும்.

...: குடும்பத்தினர்.

## குற்றச்...

றுக் காவல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இதனூடாக குற்றச் செயல்களை நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டோம். இவ்வாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கில் உள்ள 53 பொலிஸ் பிரிவுகளில் 5 பொலிஸ் பிரிவுகளில்தான் அதிக வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. தற்போது சிறப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூக விரோதச் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், காங்கேசன்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் அதிக சமூக விரோதச் செயல்கள் நடைபெற்றன. அவற்றைத் தடுக்க பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன. குற்றச் செயல்கள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நல்லுறவும், தொடர்பாடலும் இருக்க வேண்டும். மக்கள் எந்த முறைப்பாடாக இருந்தாலும் எனக்கு அறிவிக்கலாம். முறைப்பாடுகளைக் கடிதம் மூலமும் அனுப்பலாம். வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ காங்கேசன்துறை என்ற முகவரிக்கு அனுப்பலாம். அலைபேசி ஊடாகத் தகவல்கள் தர விரும்புபவர்கள் 076 609 3030 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தித் தகவல் தரலாம்.

பொலிஸாரின் அறிவுறுத்தல்கள் அடங்கிய 5 ஆயிரம் துண்டறிக்கைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த மக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். வன்முறைச்சம்பவங்களை கட்டுப்படுத்த பொதுமக்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (ந.5.8.106)

## கடற்படை முகாம்...

கடற்படையினர் நடவடிக்கை எடுப்பதாக அறிந்த உள்ளூர் மீனவர்கள் கடற்படை முகாம் முன்பாகக் கூடியதால் பதற்ற மான நிலமை ஏற்பட்டது.

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் அனுமதியின்றி கடலட்டை பிடித்தனர் என்று தெரிவித்துக் கடற்படையினரால் 81 மீனவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவர்களின் 27 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே இவர்களைக் கைது செய்தனர்.

சட்டவிரோதமாக கடலட்டை பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் புத்தளம், மன்னார், திருகோணமலை, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகுகள், தொழில் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டுக் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்கள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மதியமளவில் கைது செய்யப்பட்டவர்களிடம் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதி உள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பாது விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனால் அந்தப் பகுதி மீனவர் அமைப்புக்களும், மீனவர்களும் கொதிப்படைந்தனர். கடற்படை முகாம் முன்பாகத் திரண்டனர்.

மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர், மீனவர் சமாச பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், பொதுமக்கள் என்று பலர் கூடியதை அடுத்து அங்கு பதற்றநிலை தோன்றியது. அங்கு பொருத்தப்பட்டிருந்த மறைகாணி (சி.சி.ரி.வி) பொதுமக்களை நோக்கித் திருப்பப்பட்டன. கடற்படை அதிகாரியை தவிசாளர் சந்தித்து கலந்துரையாட வேண்டும் என்று கோரப்பட்டது. அவர் வந்து தவிசாளருடன் கலந்துரையாடினார். அங்கு வந்த கடற்படையைச் சார்ந்தவர்கள் அவற்றை ஒளிப்பதிவு செய்தனர்.

மீனவர்கள் அனுமதி இன்றி இரவு நேரத்தில் கடலட்டை பிடித்ததாகவே கைது செய்தோம். அவர்கள் தாம் நீரியல் வளத்துறை அதிகாரிகள் மூலமாக அமைச்சில் அனுமதி பெற்றுள்ளோம் என்று கூறினர். தடுத்து வைத்தோம். இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினோம். நீரியல் வளத்துறை அதிகாரிகள் கைதானவர்களை விடுவிக்குமாறு தெரிவித்துள்ளனர் என்று கடற்படை அதிகாரி தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்கள் பி.ப. 2 மணியளவில் விடுவிக்கப் பட்டனர்.

(ந.5,26)

## காணிகளை...

கும் இராணுவத் தளபதியின் முடிவு முட்டாள்தனமானது என்று தெரிவித்துள்ளார் அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

**கேள்வி** வடக்கில் விடுதலைப் புலிகள் மீள் எழுச்சி கொள்வதற்கான வாய்ப்புத் தொடர்பாக பேசப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொள்வதற்கு இராணுவத்துக்கு தலைமை தாங்கிய தளபதி என்ற வகையில் உங்களின் மதிப்பீடு என்ன?

**பதில்** நாங்கள் விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம். அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான பின்னணியையும் அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்குமான சூழலை உருவாக்கியிருக்கிறோம். அது போதுமானதல்ல. சில தமிழ் அரசியல்வாதிகள், இன்னமும் பிரிவினைவாதம் பேச முயன்று கொண்டிருக்கிறார்கள். அதை அனுமதிக்க முடியாது. தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அதற்கு இணங்கமாட்டார்கள். அதிகாரப் பகிர்வை செய்ய வேண்டுமானால் நாம் பொதுவாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். பெரும்பான்மையான மக்கள் அதனை எதிர்க்கிறார்கள். தமிழ் மக்கள் பொருளாதார அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டிருக்கிறார்களே தவிர அரசியலில் அல்ல. மக்கள் எதனைக் கேட்கிறார்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமே தவிர, அரசியல்வாதிகளின் தேவைகளை அல்ல. சில தமிழ் அரசியல்வாதிகள், வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்கிறார்கள். எந்த அடிப்படையிலும் அவர்களின் அந்த அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்க முடியாது. நாட்டில் இருந்து இராணுவத்தை உங்களால் அகற்ற முடியாது.

**கேள்வி** இராணுவத்தின் பருமனை குறைக்க வேண்டிய தேவை உள்ளதா?

**பதில்** நாட்டின் எல்லா இடங்களிலும் இராணுவத்தினரின் பிரசன்னம் இருக்க வேண்டிய தேவை உள்ளது. இராணுவம் தெற்கில்தான் இருக்க வேண்டும், வடக்கில் இருக்கக் கூடாது என்று உங்களால் கூறமுடியாது. இராணுவத்தின் பருமனைக் குறைக்க வேண்டிய தேவை இல்லை என்பதே எனது கருத்து.

எனது தனிப்பட்ட கருத்தின்படி, இராணுவத்தின் குறைந்தபட்ச பலம், ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேல் இருக்க வேண்டும். உள்நாட்டுப் பிரச்சினைக்காக மாத்திரமல்ல, வெளிநாட்டு அச்சுறுத்தல் உள்ளிட்ட எந்தவொரு நிலைமையையும் எதிர்கொள்வதற்கும் நாட்டின் இராணுவம் தயாராக இருக்க வேண்டும்.

சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு. அவர்கள் 3 மில்லியன் பேரைக் கொண்ட இராணுவப் படையை வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடிமகனும், போரிடுவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. எனினும் அவர்கள் அணிதிரட்டப்படவில்லை. வடக்கில் சில பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை முழுமையாக வெளியேற்றக் கூடாது.

பொதுமக்களின் காணிகளை திரும்ப அவர்களிடம் ஒப்படைப்பதற்காக, சில இராணுவ முகாம்களை மூடி, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் அளவைக் குறைப்பது பற்றி இராணுவத் தளபதி பெருமையாகப் பேசியதைக் கேள்விப்பட்டேன். இது முட்டாள்தனமானது.

ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மக்களுக்கு மீள வழங்குவதற்காக, முகாம்களை மூடுவதையிட்டு பெருமைப்பட முடியாது. நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். மக்களின் கருத்தை கேட்க வேண்டும். சரியான மதிப்பீட்டை செய்ய வேண்டும்.

**கேள்வி** இராணுவம் கைப்பற்றியுள்ள காணிகள் விடுவிக்கப்படும் விடயத்துடன் நீங்கள் இணங்கவில்லையா?

**பதில்** அரசியல் அழுத்தங்களுக்காக இதனைச் செய்யக் கூடாது. இதனை முறைப்படி செய்ய வேண்டும்.

இராணுவத் தளபதி இப்போது, இராணுவத்தினரை விலக்கி அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த முனைகிறார். அவர் முகாம்களை மூடி வருவது குறித்து, களமுனைத் தளபதிகள் சிலர் மகிழ்ச்சியடையவில்லை என்று கேள்விப்படுகிறேன். அது ஒரு பிரச்சினை.

**கேள்வி** ஆயுதப் படைகளின் தளபதியான அரச தலைவரின், உத்தரவுகளை இராணுவத் தளபதி நிறைவேற்ற வேண்டியதில்லையா?

**பதில்** எல்லாச் சந்தர்ப்பங்களிலும், தமது மேலதிகாரிகளை இராணுவத் தளபதி திருப்திப்படுத்த வேண்டியதில்லை. நாட்டின் பாதுகாப்புக்கு இராணுவத் தளபதியே பொறுப்பு.

**கேள்வி** பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவரை அவர் புறக்கணிக்க, அல்லது இணங்காமல் இருக்க முடியுமா?

**பதில்** இராணுவத்தை நிறுத்துவது பற்றிய அறிவு அரசியல்வாதிகளுக்கு இல்லை. அவர்கள் அதனை விளங்கிக் கொள்ளவில்லை.

நீண்ட காலத்துக்கு முன்னர், 2002 இல், நான் யாழ்ப்பாணத் தளபதியாக இருந்த போது, உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள சில பகுதிகளில் உள்ள முகாம்களை மூடுமாறு அரசால் கேட்கப்பட்டேன். அப்போது நான் ஒரு மேஜர் ஜெனரல். பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதனை நான் நிராகரித்தேன்.

**கேள்வி** அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த அரசுடன்தானே நீங்கள் இப்போது இருக்கிறீர்கள்?

**பதில்** அது வேறுபட்ட சிந்தனை. இப்போது அவர்கள் எனது வழியில் பணியாற்றுவதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(5)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு - 076 780 6942

## கேபிள் ரீ.வி. திருத்துநர் தேவை

கேபிள் ரீ.வி. திருத்துநர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்பு - 076 780 6942

## மைத்திரி...

எதிர்வரும் 22ஆம் திகதி மயிலிட்டித்துறைமுக அபிவிருத்திக்கு அடிக்கல் நடும் நிகழ்வுக்கு வருகைதரும்போது போராட்டம் நடத்தவுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு கடலட்டை பிடித்த 81 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 27 படகுகளும் கைப்பற்றப்பட்டன. பருத்தித்துறைமுனையை அண்மித்த பகுதியிலுள்ள கடற்படையினரின் முகாமில் மீனவர்களும் அவர்களது படகுகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இரவில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று நீரியல்வளத் திணைக்களத்தினரால் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து மீனவர்களும், படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கொதிப்படைந்துள்ள வடமராட்சி மீனவர்கள் தெரிவித்ததாவது,

வடமராட்சி கிழக்கில் பகலில் மட்டுமே கடலட்டை பிடிக்க முடியும் என்று அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இரவு கடலட்டை பிடிப்பதற்கு இரகசியமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளமை இன்று (நேற்று) உறுதியாகியுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்ட மையை எதிர்த்து அரச தலைவர் வருகையின் போது ஆர்ப்பாட்டம் நடத்த எண்ணியுள்ளோம்.

வடமராட்சி கிழக்கில் அனுமதி இன்றி அரச நிலங்களில் அடாத்தாக வாடி அமைத்துத் தங்கி நின்று 400இக்கும் அதிகமான படகுகள் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றன. தங்கி நிற்பவர்களுக்கு கழிப்பறை வசதிகள் கூட இல்லை. அந்தப் பிரதேசத்தை அசுத்தம் செய்கின்றனர். அங்கேயே அட்டைகளையும் உலர்த்தி ஏற்றுமதி செய்கின்றனர்.

உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியபோது கரையில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலேயே கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவர். பகலில் மட்டுமே தொழில் செய்வர் என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது. இன்று (நேற்று) பருத்தித்துறையை அண்டிய பகுதியில் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்டிருந்த சமயம் அதிகாலையில் 27 படகுகளைக் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். ஒவ்வொரு படகிலும் மூவர் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

பிடிக்கப்பட்ட அனைவரும் இரவுவேளை தொழிலில் ஈடுபட்டமையால் நீதிமன்றில் நிறுத்தப்படுவர் என்று எதிர்பார்த்தோம். ஏனெனில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்கி நின்று கடல் அட்டை பிடிப்பவர்களிடம் இரவுத் தொழிலிற்கான அனுமதிகள் இதுவரை கிடையாது. ஆனால் அவர்கள் அனுமதி பெற்றுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். அப்படியானால் எவருக்குமே தெரியாது கடந்த ஒரு மாத காலத்துக்குள் இவ்வாறான இரவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரவு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் எமது மாவட்ட நீரியல்வளத்துறை திணைக்களம் கூட உள்ளூர் மீனவ சங்கங்கத்துக்குத் தெரியப்படுத்தவில்லை. இவ்வாறு கடல் அட்டை பிடிப்பவர்களுக்கு திணைக்களம் இரகசியமாக உதவுகின்றது என்ற குற்றச் சாட்டை இறுதியாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். அதற்குப் பதிலளித்த திணைக்கள அதிகாரி உள்ளூர் மீனவர்களில் சிலர் இரகசியமாக நிலத்தை வழங்கினர். இன்னும் சில சங்கம் அனுமதியை வழங்கியுள்ளது என்று எம்மீது பழியை போட்டனர்.

தற்போது இரவு நேரத்திலும் கடல் அட்டை பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அதனை ஏன் மீனவ சமாசத்துக்குத் தெரியப்படுத்தவில்லை. குறைந்த பட்சம் பிரதேச செயலர் அல்லது மாவட்ட செயலருக்குக் கூட திணைக்களம் தெரிவிக்கவில்லை. அதிகாரிகள் தமது கடமை முடிந்தால் சரி, மீனவன் எப்படி அழிந்தால் என்ன என்ற மனநிலையிலேயே பணியாற்றுவது தெட்டத்தெளிவாகின்றது. இவ்வாறான ஓர் திணைக்களமும் அதிகாரிகளும் எமக்கும் தேவைதானா என்ற சந்தேகமும் எழுகின்றது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 22ஆம் திகதி மயிலிட்டித் துறைமுக அபிவிருத்தியை ஆரம்பிக்க வரும் சமயம் மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிக்காட்டவுள்ளன. நாளை திங்கட்கிழமை மீனவர் சங்க சமாசப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இது தொடர்பான இறுதி முடிவை எடுக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந.5.26.105.170)


## வாக்குறுதியை...

மீனவர்கள் கொந்தளித்தனர். கடலட்டை பகல் வேளைகளில் மாத்திரமே பிடிக்கப்படும் என்று கொழும்பு அரசின் மீன்பிடி அமைச்சு வாக்குறுதி வழங்கியிருந்தது. இருப்பினும் அந்த வாக்குறுதியை கொழும்பு அரசு மீறியுள்ளது.

வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கியிருந்து கடலட்டை பிடிப்பதற்கு உள்ளூர் மீனவர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இது தொடர்பில் கொழும்பு அரசின் மீன்பிடி அமைச்சருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும். மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றிருந்தது.

பகல் வேளைகளில் மாத்திரமே கலட்டை பிடிப்பில் ஈடுபடலாம். ஒரு படகில் இரண்டு பேர் மாத்திரமே நீரில் மூழ்கி கடலட்டை பிடிக்கச் செல்லலாம். கடற்கரையிலிருந்து 5 கிலோ மீற்றருக்கு அப்பால் தொழிலில் ஈடுபடவேண்டும். லைலா, சுருக்கு போன்ற வலைகளைப் பயன்படுத்த முடியாது என்ற நான்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டி ருந்தன.

இந்த நிலையில் உள்ளூர் மீனவர்களுக்கோ. அதிகாரிகளுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ தெரியாமல், பகல் வேளைகளில் மாத்திரம் மீன்பிடியில் ஈடுபடலாம் என்ற


DEPARTMENT OF FISHERIES & AQUATIC RESOURCES

Assistant Director
District Fisheries Office
Jaffna

**Permission to obtain diving license for harvesting of Beche de mer and Chank**

This is in reference to the letter dated 11/05/2018 forwarded by A.A.S.Enterprises of No.142/A, Yonnakapura, Dickwella to this Department.


I approve the 40 fishermen and the 15 OFRP boats as per the attached list to be engaged in beche de mer and chank fishery in the Jaffna District under the provisions of Fishing Operation License Regulation 1996 and subjected to the following conditions.

(i) SCUBA diving should be beyond 5Kms from the coast.
(ii) Night diving (SCUBA) is prohibited in the Jaffna District.
(iii) If any permit holder reported engage in purse seining (layla, surukku etc.) using this license, it will be cancelled.
(iv) The number of fishermen should be confined to 2 persons per boat and the skipper is not allowed to engage in diving.

Director General

Copy: 1. Commander, Sri Lanka Naval Headquarters — For information

முன்னர் வழங்கப்பட்ட கடிதம்


DEPARTMENT OF FISHERIES & AQUATIC RESOURCES

Assistant Director
District Fisheries Office
Jaffna

Permission to obtain diving license for harvesting of Beche de mer and Chank
(Letter issued on 10/04/2018 is cancelled)

தற்போது வழங்கப்பட்ட கடிதம்

நிபந்தனை கடந்த 15ஆம் திகதி வழங்கப்பட்ட கடிதத்தில் நீக்கப்பட்டுள்ளது. (5.26)

## கோபி...

னான் உடல் நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 80. 1938ஆம் ஆண்டு கானாவில் பிறந்தார் கோபி அன்னான். ஐக்கிய நாடுகள் சபையின் 7 ஆவது பொதுச் செயலராக 1997ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார். மனித உரிமைக்காகப் போராடிய தி எல்டர்ஸ் அமைப்பில் உறுப்பினராக சேர்ந்து 2013ஆம் ஆண்டு அதன் நிர்வாகியாக உயர்ந்தார். அமைதியான உலகைக் கட்டமைக்க பணியாற்றியதற்காக 2001ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை பெற்றுக் கொண்டார். (5)

## காங்கேசன்துறை...

கடற்படையினர் காங்கேசன்துறை வடக்குக் கடற்பரப்பில் அதிவிரைவுப் படகில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். கடலில் பொதிகள் மிதப்பதை அவதானித்துள்ளனர். அவற்றை மீட்டுச் சோதனை நடத்தினர். பொதிகளில் கேரளக் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் 39 பொதிகளில் 83.5 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைமாற்றுவதற்காக இந்தக் கஞ்சாப் பொதிகள் கடலில் போடப்பட்டிருக்கலாம் என்று கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந.5.26)

## வடக்கு...

யாழ்ப்பாணம், ஓக. 19

வடக்கு மாகாண நிர்வாகத்தில் வெற்றிடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்குத் தகைமை வாய்ந்தவர்கள் இருக்க வேண்டும். அவ்வாறான நிலை இங்கு இல்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியதாகவும், அதற்கு இவ்வாறு பதில் வழங்கியதாகவும் தெரிவித்து, வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கேள்வி, பதில் ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் 6 ஆயிரத்து 338 வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரியவருகின்றது. அவற்றுள் கொழும்பு அரசினால் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்கள் 3 ஆயிரத்து 329. மாகாண அரசினால் நிரப்பப்படவேண்டியவை 3 ஆயிரத்து 9.

பதவி வெற்றிடங்களுக்கு வேலை வாய்ப்பற்றவர்கள் தகைமை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். வேலையற்றிருப்போர் யாவரும் எமக்கிருக்கும் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தகைமை பெற்றவர்கள் என்று நினைத்து எம்மைக் குறை கூறுவது முறையாகாது.

பல வெற்றிடங்களை நிரப்பத் தோதான தகைமை உடையவர்கள் இல்லை என்பதை மனதில் கொள்ளுங்கள். பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்விபெற்று உயர் நிலையை அடையும் எம்முட் பலர் வெளிநாடுகளுக்குச் செல்வது உங்களுக்குத் தெரியும். அவர்களால் நிரப்பக்கூடிய வெற்றிடங்களும் எமது வெற்றிடப் பட்டியலில் இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

அதேபோல் தொழிற்கல்வி கற்று சில தொழில்களில் தேர்ச்சி பெற்ற பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைகள் தேடிச் செல்வதால் இங்கு ஏற்படும் வெற்றிடங்கள் பல தொடர்ந்து நிரப்பப்படாது இருப்பதையும் நீங்கள் உணரவேண்டும். தொழில்த் திறன் உள்ளவர்கள் இல்லாததால் வடமாகாணம் படும் அவஸ்தையை நீங்கள் உணரவேண்டும். தாதிகளுக்கு வெற்றிடம் உண்டு. தக்்த தமிழில் பேசும் தாதிகள் இல்லாததால் நாம் மாகாணத்துக்கு வெளியில் இருந்து தாதியரை அழைத்துவந்து வெற்றிடங்களை நிரப்புகின்றோம். நிரப்பிய பின்னரும் வெற்றிடங்கள் பல உண்டு.

தமிழ் இளையோருக்கு வடக்கு மாகாணசபை அநீதி இழைத்துள்ளதா அல்லது வடக்கு மாகாண சபைக்குத் தமிழ் இளையோர் அநீதி இழைத்துள்ளார்களா? இலகுப் பாடங்களைப் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் பலர் வேலை வாய்ப்பின்றி இருப்பது அவர்கள் எமது வெற்றிடங்கள் பலவற்றை நிரப்பத் தகுதி இல்லாததன் காரணத்தால். இதனால்த்தான் எமது தேவைகளுக்கு ஏற்பவும் கல்வி புகட்டப்படவேண்டும் என்று கூறிவருகின்றோம் - என்றார்.

'வடக்கில் வேலை வாய்ப்புக்களை வழங்கும் சந்தர்ப்பம் இருந்தும் அவற்றைச் சரியாகப் பயன்படுத்த வடக்கு மாகாணசபை தவறியுள்ளமை வடக்கு மாகாண சபையின் செயற்றிறன் அற்றசெயற்பாடாக கருதமுடியாதா?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு. வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் தான் இவ்வாறான குற்றங்களை முன்வைத்து வருகின்றனர். அடுத்த தேர்தலுக்கான முனகல்கள் இவை.

முன்பும் வெற்றிடங்கள் இருந்தன. இவர்களோ நீங்களோ கேட்கவில்லை. திடீரென்று பதவி முடியும் காலத்தில் இவற்றை எழுப்பக் காரணம் என்ன? வாசகர்கள் பதில் அறிவார்கள். வேலை வாய்ப்புக்களை வழங்க இருக்கும் சந்தர்ப்பங்களை நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பது தவறான கருத்து. நாம் காலத்துக்குக் காலம் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகளை எடுத்தேவருகின்றோம் என்று பதிலளித்துள்ளார். (5)

## முட்டாள்...

என்று திட்டிய காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

ஊடகவியலாளர் கீத் நொயார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து. மகிந்த ராஜபக்சவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் வாக்கு மூலம் பெற்றுக்கொண்டனர்.

கொழும்பு விஜயராமவில் அமைந்துள்ள மகிந்தவின் இல்லத்தில் வைத்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் மகிந்த கருத்து தெரிவித்திருந்தார்.

இதன்போது. தனது தனிப்பட்ட செயலரை நோக்கி முட்டாள் என்று கூறி திட்டியுள்ளார். இந்தக் காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது. (5)

## வென்றது வள்ளுவர்

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வள்ளுவர் அணி வெற்றிபெற்றது.
சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வள்ளுவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதியது. 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வள்ளுவர் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## வென்றது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், ஒக். 19
கிராஞ்சி செந்தமிழ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழகபிஅணிமோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமி டங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

தாச்சித் தொடர்
யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் அளவெட்டிபாரதிவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

கால்பந்தாட்டம்
சங்கானை பிரதேச கழகங்களை ஒன்றிணைத்து நடத்தும் சங்கானை சுப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் துணைவி சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி லையன் எவ்.சி அணியை எதிர்த்து அராலி கிங்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துணைவி. ரெஜின்ஸ்ரெம் அணியை எதிர்த்து வட்டுகிங்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



# இந்து முன்னணி அணி அன்ரனிஸை வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 19
தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இந்து முன்னணி அணி வெற்றிபெற்றது.
நானாட்டான் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இந்து முன்னனி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக குகன் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும், ரவி 25 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஜெறோன் 4 இலக்குகளையும், சுமித் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
130 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி 13 பந்துப்பரிமாற்றங்களில் 103 ஓட்டங்களுக்கு சகலஇலக்குகளையும்இழந்தது. இதையடுத்து 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இந்து முன்னணி அணி.
பந்துவீச்சில் ரவி 4 இலக்குகளையும், ஜெகன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்ட நாயனாக ரவி தெரிவானார். (ம-23)

## செந்தாரகை அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 19
கிராஞ்சி செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் செந்தாரகை அணி வெற்றிபெற்றது.
செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென். சேவியர் விளையாட்டுக் கழக பி அணி மோதியது.
இந்த ஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## அம்பாள் அபாரம்!

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணி வெற்றிபெற்றது.
சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. காளியம்பாள் அணி 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில வெற்றிபெற்றது. (ம-23)

# ஸ்ரார் ஈகிள்ஸ் அணி போராடி வென்றது



யாழ்ப்பாணம், ஒக். 19
தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் அணி ஓர் இலக்கால் வெற்றிபெற்றது.
நானாட்டன் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், சென். விக்டோரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரிஸ் விளையாட்டுக் கழக அணி 18 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஆனந் 22 ஓட்டங்களையும், சிந்துஜன் 16 ஓட்டங்களையும், பிரதீப் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் சார்பில் மில்ரன் 3 இலக்குகளையும், டினேஸ்குமார், நாரத்தீபன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
120 பந்துகளில் 120 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் அணி 18.4 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. மயூரன் ஆட்டம் இழக்காமல் 38 ஓட்டங்களையும், ஜக்சன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சென். விக்டோறிஸ் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் பிரதீப் 3 இலக்குகளையும், மார்லின், தீலிபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்ட நாயனாக மயூரன் தெரிவானார். (ம-23)



## றோயர் பெடரர் காலிறுதியில்

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடர் என்று கருதப்படும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் றோயர் பெடரர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ள சுவிற்சர்லாந்து வீரர் பெடரரை எதிர்த்து ஆர்ஜென்ரீன வீரர் லியனார்டோ மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவில் கைப்பற்றினார் பெடரர். அவர் இரண்டாவது செற்றை போராட்டத்துக்கு மத்தியில் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியதை அடுத்து 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். பெடரரும் சுவிற்சர்லாந்தின் மற்றொரு வீரரான வாவ்ரிங்காவும் காலிறுதியில் மோதவுள்ளனர். (ம)

## வளர்மதிக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 19

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் வளர்மதி அணி மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது.


கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான இந்த ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

14:04 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வளர்மதி அணி வெற்றிபெற்று மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது. (ம-23)



# காயத்துடன் உள்ளபோதிலும் கோக்லி மிக ஆபத்தானவரே

## அச்சத்தில் பெய்லிஸ்



"இந்திய அணியின் தலைவர் கோக்லி காயத்துடன் உள்ள போதிலும் அவர் மிகவும் ஆபத்தானவர்" என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பெய்லிஸ்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லி ஒட்டுமொத்தமாக 200 ஓட்டங்களைக் குவித்தார்.

இரண்டாவது ஆட்டத்தில் முதுகு வலியால் அவதிப்பட்ட காரணத்தால் அவரால் பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் பெய்லிஸ். "கோக்லி காயமடைந்துள்ளமை துரதிஸ்ட வசமானது. இதனால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் நாங்கள் முழுமையான சவாலை விரும்புகிறோம். காயத்துடன் அல்லது வலியுடன் இருப்பதால் கோக்லி மீதான எமது பார்வை திரும்பப்போவதில்லை. அவர் எப்போதும் அபாயகரமான வீரரே" என்று பெய்லிஸ் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு டெஸ்ட் ஆட்டமும் ஆரம்பமாவதற்கு முன்னர் கோக்லி குறித்தும் அவரை வீழ்த்துவது குறித்தும் அதிக கவனத்துடன்தாம் உள்ளோம் என்பதை பெய்லிஸ் வெளிப்படுத்தி வருகிறார்.

கவனக் குவிவு தொடர்பில் வெளிப்படுத்தும் இந்தச் சமிக்ஞைகூட கோக்லிக்கு எதிரான வியூகம் என்கின்றனர் அவதானிகள். (ம)

## கெர்பர் தோல்வி

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறினார் ஏஞ்சலிக் கெர்பர்.

அமெரிக்கப் பகிரங்கத் தொடர் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான முன்னாயத்தத் தொடர்என்றுகருதப்படும்தொடர்களில் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரும் ஒன்று. இந்தத் தொடரின்பெண்கள்ஒற்றையர்பிரிவு காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் கெர்பரை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை மெடிசன் கீஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:2, 6:7, 4:6 என்ற செற் கணக்கில் போராடித் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறினார் கெர்பர். (ம)



## காலிறுதிக்கு கேலப் தகுதி

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடர் என்று கருதப்படும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.

பன்னாட்டுத்தரப்படுத்தலில்முதலிடத்தில்உள்ளவரான கேலப்பை எதிர்த்து ஆஸ்திரேலிய வீராங்கனை அஜ்லா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாகஆட்டம்அமைந்தது. முதலாவது செற்றை 4:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் கேலப். எனினும் அவர் சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரண்டுசெற்களையும் 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)



# ஓய்வு பெற்றதில் மிகவும் மகிழ்ச்சி இப்படிச் சொல்கிறார் வில்லியர்ஸ்

"பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெற்றதில் எந்த வருத்தமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்" என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் வில்லியர்ஸ்.

இந்த வருடம் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடின. இந்தத் தொடர்களை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது. அதற்கு முக்கிய காரணமாக வில்லியர்ஸ் இருந்தார்.

அணிக்குள்ளும் ரசிகர்கள் மத்தியிலும் உச்சக் கட்டப் புகழில் இருக்கும்போதே அவர் பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வு பெற்றார். இது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதிலும் குறிப்பாக தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வட்டாரத்தில் பேரலையை உண்டுபண்ணியது. வில்லியர்ஸ் தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர்.

எனினும் அவ்வாறு எழுந்த கோரிக்கைகளை வில்லியர்ஸ் நிராகரித்து ஓய்வு முடிவில் உறுதியாக இருந்தார். இதையடுத்து தென்னாபிரிக்க ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே "ஓய்வு பெற்றமை மகிழ்ச்சி" என்று குறிப்பிட்டார் அவர்.




"ரசிகர்கள் என்மீது வைத்திருக்கும் அதிகப்படியான எதிர்பார்ப்பால், தாங்க முடியாத நெருக்கடிக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும். தங்களுக்குள்ளாகவும், ரசிகர்கள் மூலமாகவும், நாட்டின் மூலமாகவும், பயிற்சியாளர் கள் மூலமாகவும் ஒவ்வொரு வீரர் மீதும் எதிர்பார்ப்பு அதிகரிக்கும். இது மிகப்பெரிய அளவில் வீரர்களின் மன நிலையில் மாற்றத்தை உண்டு பண்ணும்.

மிகப்பெரிய ஆட்டத்தில் சதம் அடித்த உணர்வை வேறு எதனுடனும் ஒப்பிட ஒன்றுமில்லை என்பது எனக்குத் தெரியும். எனினும் ஓய்வு பெற்றதில் மகிழ்ச்சியே. உண்மையில் வருத்தப்படவில்லை" என்று வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## விற்பனைக்கு

அதி உயர்தரம் மிக்க
செவன் ஸ்டார் ஓடு விற்பனைக்கு
உண்டு.
விற்பனையாளரும் ஏகவிநியோகஸ்தரும்
1075, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
077 651 3299

அருள் கல்வி நிலையத்தின் அதிபர்
உயர்திரு. இரா. அருட்செல்வம்
அவர்களின்
# மணி விழா மற்றும்



ATC கல்வி நிலையம்
40 ஆவது ஆண்டு
நிறைவும்
காலம் - இன்று (19.08.2018)
ஞாயிற்றுக்கிழமை
நேரம் - பி.ப. 2.00 மணி
இடம் - இணுவில்
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார்
கோவில் கல்யாணமண்டபம்.
Best Wishes
தலைமை - பேராசிரியர் க. தேவராஜா
பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மணிவிழாச்சபை.

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

இலங்கையில் முதன்மையான உணவு உற்பத்தி
நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை

MAHARAJA LION



தகைமைகள்
இதே மாவட்டத்தில் 2 வருட விற்பனை
அனுபவம் உள்ள பிரதிநிதிகள் தேவை
[FMCG]
மாவட்டம்
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு : பி. ஞானகுமார் (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)
Tel: 0766 908994
Email -gk@maraja.org
Maharaja Foods [Pvt]Ltd.
No: 18/3 Dr. E.A Cooray Mawatha, Colombo-06
www.maharajafoodproducts.com

## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலி ஆடியபாதம் பிரதான
வீதியில் சகல வசதிகளுடன் கூடிய
வீடு ஒன்று வாடகைக்குண்டு.
(நிறுவனங்கள் மட்டும் விரும்பத்தக்கது)
077 480 9805/ 077 918 2733

## சிறுநீரகம் தேவை

யாழ். நகரைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி
ஒருவருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு O +
இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன்
தேவை. (இருபாலாரும் விரும்பத்தக்கது)
தொடர்பு - 076 468 1413

## உடன் தேவை

பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்கும் போட்டோப் பிரதி செய்யும் கடையொன்றுக்கு விரைவான தமிழ், ஆங்கில கணினி தட்டச்சு தெரிந்திருப்பதுடன் போட்டோப் பிரதி செய்வதில் அனுபவமுள்ள பழக ஆர்வமுள்ள நேர்மையும் கடமையுணர்வுமிக்க பெண் ஊழியர் தேவை.
077 356 2043

## வீடு வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்
கில்னர் வீதியில் மூன்று அறைகளுடன்
கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(மாத வாடகை - 22,000/-)
076 745 5282

## வேலையாள் தேவை

உணவகம் ஒன்றுக்கு
சமையல் உதவியாளர், ரொட்டி, றைஸ்
போடத் தெரிந்தவர் மற்றும்
வடை வண்டிக்கு தங்கி நின்று
செய்யக்கூடியவர்கள் உடன்தேவை.
077 361 7645

## வீடு விற்பனைக்கு

K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கில் தபாற்கந்தோருக்கு முன் ஒழுங்கையில் 100 M. தூரத்தில் 1600 சதுர அடி விஸ்தீரணமுள்ள 4 ¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் வீட்டினை பார்வையிட்டபின் தொடர்பு கொள்ளவும்.
077 854 3441

## வேலையாள்கள் உடன் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம்
ஒன்றுக்கு
- உணவு பரிமாறுபவர்கள்,
- ரொட்டி வேலை மற்றும்

சமையல் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.
077 856 0455

FLC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியாலை, 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி, 021 320 2973 ஆரம்பம்: 03.09.18 [illegible] 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1,
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.


# மூன்று தமிழர்கள் கூட்டணி உடைந்தது



இந்திய கிரிக்கெட் அணிக்குள் திடீரென உருவான மூன்று தமிழர்கள் என்ற கூட்டணி நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்திய டெஸ்ட் அணியின் இலக்குக் காப்பாளர் சகா காயமடைந்ததை அடுத்து பதில் வீரராக அணிக்குள் சேர்க்கப்பட்டார் டினேஸ் கார்த்திக். அஸ்வின், முரளி விஜய் என்று இரு தமிழ் வீரர்கள் ஏற்கனவே அணிக்குள் விளையாடிவந்த நிலையில் அவர்களுடன் டினேஸ் கார்த்திக்கும் இணைந்ததால் இந்திய அணிக்குள் அதுவும் டெஸ்ட் அணிக்குள் மூன்று தமிழ் வீரர்கள் கொண்ட 'அரிய' கூட்டணி உதயமானது. எனினும் இந்தத் தொடர் முழுவதும் படுமோசமான பெறுபேற்றையே டினேஸ் கார்த்திக் வெளிப்படுத்தி வந்தார். இங்கிலாந்துக்கு எதிரான இந்தத் தொடரில் நான்கு இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவர் ஒரேயொரு தடவையே பத்து ஓட்டங்களைத் தாண்டினார். இரண்டு தடவைகள் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். அத்துடன் கடந்த ஆட்டத்தில் முரளி விஜய்கூட மோசமான பெறுபேற்றையே வெளிப்படுத்தினார். இதையடுத்து அவர்கள் இருவரும் நீக்கப்பட்டு பதில் வீரர்களாக தவான், பன்ட் ஆகியோர் நேற்று ஆரம்பமான மூன்றாவது ஆட்டத்துக்காகச் சேர்க்கப்பட்டனர். மூன்று வீரர்கள் கொண்ட இந்தக் கூட்டணியில் தற்போது எஞ்சியிருப்பது அஸ்வின் மட்டுமே. (ம)


## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை

0768226240
V2 TRAVELS

## விசேட கருத்தரங்குகள்

26ஆம் திகதி
நடைபெறவுள்ள
விவசாய டிப்ளோமா
தெரிவு
28ஆம் திகதி
நடைபெறவுள்ள
தகவல் தொடர்பாடல்
அலுவலர்தெரிவு
சுகாதார போசனை
அமைச்சின்
முகாமைத்துவ
உதவியாளர் தெரிவு
அனைத்துப்
பரீட்சைகளுக்கும்
ஞாயிறு (இன்று)
மு.ப. 10.00 மணிக்கு
ஆரம்பமாகிறது.
கிழமை நாள்களிலும்
வகுப்பு நடைபெறும்.
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். நகர்.

## காணி விற்பனைக்கு

தையிட்டி கிழக்கு காங்கேசன்துறையில்
விக்னேஸ்வரா வீதிக்கு அண்மையில்
20 பரப்புக்காணி
உடன் விற்பனைக்குண்டு.
077 601 3623

## காணி / வீடு விற்பனை

வவுனியா உக்குளான்குளம் பகுதியில்
2.2 பரப்புக்காணியுள் சுற்றுமதில், கிணறு
மற்றும் சகல வசதிகளுடன் அமைக்கப்
பட்ட புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.
077 374 7825/ 077 615 2992

## வீடு விற்பனைக்கு

17, சங்கரப்பிள்ளை றோட், மானிப்பாயில்
அமைந்துள்ள 3 பரப்பு 5 குழி
காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு
உண்டு. (கிணற்றுப்பங்குடன்)
077 087 7938


## மரண அறிவித்தல்

# திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை



பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும் செம்பியன்பற்று தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை கடந்த (17.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திய லிங்கம் - சேமாலையம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் தங்கராசா (டென்மார்க்), சுந்தரலிங்கம், தெய்வேந்திரா (நோர்வே), ரவீந்திரராசா (ஜேர்மனி), மகேந்திரராசா (டென்மார்க்), செல்வஇந்திராதேவி, உதயகுமார் (பிரான்ஸ்), சசிகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பியன்பற்று இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பியன்பற்று தெற்கு,
செம்பியன்பற்று.

தகவல்: குடும்பத்தினர்.
077 906 3037

## Calling for tenders for Cleaning Service Northern Central Hospital, Jaffna.

Tenders are hereby called from suitable contractors to provide cleaning service to Northern Central Hospital Jaffna who possess the following requirements.

01. Should have registered with the Government Agent for such services
02. Should have past experience in cleaning service at Large institutions

The tenders will be accepted before 10.00 am.On 31.08.2018 The application forms will be issued on payment of Rs. 500/= at the office at No. 342, Palaly Road, Jaffna up to 23.08.2018

The tender application received after 10.00 am on 31.08.2018 will be rejected.

Managing Director,
Northern Central Hospital, Jaffna.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.